# சிந்தனைச் செம்மலர்கள்



த.கோவேந்தன்

1

RADIATE

# சிந்தனைச் செம்மலர்கள்

—முதல் தொகுதி—

தமிழாக்கம்

புலவர் **த. கோவேந்தன்,** டி. லிட்.

**தனலெட்சுமி பதிப்பகம்**
S-17, அரவிந்த் நரேன் என்கிளேவ்
8, மாசிலாமணி தெரு,
தி. நகர் :: சென்னை—600 017.

# நூல் விவரம்


- நூல் பெயர் : சிந்தனைச் செம்மலர்கள் (முதல் தொகுதி)
- ஆசிரியர்கள் : சோவியத்து அறிஞர்கள்
- தமிழாக்கம் : புலவர் த. கோவேந்தன், டி. லிட்.
- உரிமை : பதிவு
- மொழி : தமிழ்
- நூல் அளவு : கிரவுன் 1 × 8
- தாள் : 11.6 கி.கி கிரீம்வோவ்–சேசசாயி
- எழுத்தளவு : 12 புள்ளி
- பக்கங்கள் : 234
- முதற் பதிப்பு : நவம்பர், 2001

- வெளியீடு : தனலெட்சுமி பதிப்பகம்
  S-17, அரவிந்த் நரேன் என்கிளேவ்,
  8, மாசிலாமணி தெரு,
  தி. நகர், சென்னை–600 017.

---

விலை : ரூ. 75–00

---

- ஒளியச்சு : வெல்கின் கணினி மையம்
  சென்னை – 600 041.
- அச்சிட்டோர் : மணி ஆப்செட்,
  சென்னை – 600 005.

# முன்னோட்டம்

சங்கச் சான்றோர்களுக்குப் பிறகு வாழ்வியக்கத்தை மேலும் மேலும் உயர்த்தும் புத்தெண்ணங்கள் மலரும் மாந்தர் மனங்கள் தமிழகத்தில் வள்ளுவரைத் தவிர வேறு எவரிடத்தும் தோன்றவே இல்லை.

வந்தேறிகளின் தப்பான – இழிவான – மடமையான மாந் தன்மைக்கு முட்டுக்கட்டையான விலங்காண்டித்தனமான வைதீக மூட நம்பிக்கைகளின் சமய எண்ணங்களே மண்டின. புத்தரின் புது மலர்ச்சி எண்ணங்களைப் புறக்கணிக்கும் அளவுக்குப் பொய்யும் புரட்டும் கையோங்கி நின்றன. மன்னர்களை மாய்த்து மக்களையும் மறுமலர்ச்சிக்கோ, புதுமலர்ச்சிக்கோ ஊக்குவிக்கும் பண்படுத்தும் உந்தாற்றலான உயர் எண்ணங்கள் சிறிதும் மலரவேயில்லை.

சமயக் குட்டையில் திருமூலர், அப்பர், மணிவாசகர், சில சித்தர்கள், தாயுமானவர், வள்ளலார் போன்றோர் சேற்றில் முளைத்த செந்தாமரையாகவும், அங்கும் இங்கும் குட்டையில் அலர்ந்த அல்லியாகவும் குவளைப் பூக்களாகவும் மலர்ந்தனரே அன்றி அவர்களின் வாக்கும் செயற்பாடும் வாழ்வியக்கத்தின் உற்ற நோய்க்கு மேற்பூச்சு மருந்தாயிற்றே அன்றி சமூக உடலின் உள் மருந்தாகவும் இல்லை; மனக்கவலையை மாற்றவும் இல்லை. வாழ்வியக்கத்தை ஏற்றவும் இல்லை.

வள்ளுவருக்குப்பின் பெரியார் ஈ.வே.ரா. தாம் தம்மை, தம் சமுதாயத்தை, தம் காலத்தை, தாம் வாழும் உலகத்தை நன்கு அறிந்திருந்தார். அதனால்தான் உலகின் எந்த மெய்ப்பொருளையும் கற்றறியாமலே தம் பட்டறிவாலும் நுகர்வறிவாலும் அரிய உயரிய சீர்திருத்தக்காரராகப் போராடுபவராகப் புரட்சிப் புயலாக 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தம்மைச் சூழ்ந்த தென்னகம்

பாழ்பட்டுச் சீர்கெட்டு எல்லா நிலையிலும் அடிமைப்பட்டு விலங்கோடு விலங்காக மாந்தர் வாழ்வதை முற்றுணர்ந்து கிளர்ச்சிக்காரரானார். எந்த இடர்பாட்டையும் தொல்லையையும் எதிர்கொள்ளாமல் இந்த நாட்டில் – இந்த உலகத்தில் எந்த ஓர் உள்ளது சிறத்தலும் (evolution) ஏற்படாது என்பதை அறிந்தார். வாழும் தன்மையுள்ள ஒரு முழுமையான உயிர்த்தன்மையான புதுமலர்ச்சியே பேருண்மை என்பதை அறிந்து சொல்லாலும் எழுத்தாலும் செயலாலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

உலகின் அனைத்துச் சமயங் (மதங்)களும் அன்பை – உண்மையை – ஒழுக்கத்தை மேலுக்குப் பேசுகின்றனவே தவிர எவையும் இம் மூன்றையும் கடைப்பிடிப்பதில்லை. இம் மூன்றும் சமயத்தை உண்டாக்காத முன்னோடிகளோடு சரி.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்ற உண்மையை உணர்ந்தவர்கள் கோடியில் ஒருவர் கூட இல்லை.

உயிர் வாழ்வதும் செயல்புரிவதும் ஒன்றோடொன்று தொடர்புடையவை என்ற அடிப்படை உண்மையை மாந்தன் மறக்கவே கூடாது. உண்மையை அடைய மனம் இம்மியளவுகூட உருக்குலையாமல் முற்றும் விடுதலை பெற்ற நிலையில் இருந்தாக வேண்டும். விடுதலை என்பது மனநிலை. அன்பின் உயிர்நிலை. உண்மையின் உயர்நிலை. ஒவ்வொரு நாளும் சீரான வாழ்வு வாழும் பேருணர்வு நிலை. சார்ந்து வாழ்தல் – பின்பற்றுதல் – கொள்கை – குறிக்கோள் – கோட்பாட்டின் வீட்டில் வாடகை இருத்தல் எல்லாம் நம்மை ஓர் எல்லைக்குள் வைத்துப் பூட்டிவிடுகின்றன. நம் உள்ளத்தை வற்றல் மரமாக்கி மடமையில் ஆழ்த்திவிடுகின்றன.

கடுமையான எளிமை என்பது நம் வாழ்வில் இணையவிடுவ தில்லை. இயற்கையைக் கண்டும் நாம் திருந்துவதில்லை. உடலும் உள்ளமும் ஒன்றாக இயங்கும் முழு இயக்கமே வாழ்வியக்கம். இவ் உண்மையை உணராவிட்டால் வாழ்வே பெருஞ்சுமையாகி நம்மை அழுத்துகிறது.

இயற்கையும் உண்மையும் வேறுவேறு அல்ல. இதனை உணரவே, உணர்த்தவே மாந்தன் மண்ணில் பிறந்துள்ளான். ஆனால் இப்பேருணர்வை – உண்மையை அறியாமலே 90 விழுக்காட்டினர்

"தேடிச் சோறு நிதம் தின்று – தினம்
சின்னஞ் சிறு கதைகள் பேசி
வேடிக்கை மனிதராய்"

வாழ்ந்து மடிகின்றனர்.

ஊழலும் மடமையும் நிறைந்த இந்தச் சமுதாயத்தை உண்டாக்கியவர்கள் நாமே. போட்டியை ஊட்டி அச்சத்தை உண்டாக்கும் கல்வியைப் பெற்றவர்களும் நாமே. அறிவியல் வாழ்க்கை வாழும் நாம் இவற்றை எல்லாம் கடந்து உணர்வு நிலை யில் உயர்ந்து, வாழ்க்கையின் முழுமையைப் புரிந்து, அறிவென்னும் அன்பு வாழ்வில் திளைப்பதற்கு முயல்வதில்லை. காரணம் பெரியாருக்கு அடுத்துப் பொது மக்கள் நலன்நாடிப் புதுக் கருத்தைத் தருவதில், கருத்தூற்றை மலையூற்றாய்ப் பெருக் கெடுக்கச் செய்யும் தோழர் ம. இலெ. தங்கப்பா கூறுவது போல்

- "மற்றவர்களோடு இணங்கி வாழ்வதற்குரிய அடிப்படைத் தன்மைகள் குறைந்த அளவு கூட இல்லாமல் மக்கள் உள்ளனர்; இதனாலேயே அவர்களுக்குள் பூசல் நிகழ்கின்றது. இதை

அறியாமல் அவர்கள் ஏதோ தீய ஆற்றல் தங்களைக் கெடுப்பதாக எண்ணுகின்றனர். அவர்களைக் கெடுக்கும் தீய ஆற்றல் அவர்களே.

- அன்பைப் பெறுவதற்கு ஏற்றவர்களாக மக்கள் தங்களை வைத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் யாரும் அவர்கள் மேல் அன்பு செலுத்தார். உறவு நிலையில் முதன்மையானது, உறவுக்கு உகந்தவராக ஒவ்வொருவரும் தம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான்."

அதாவது அனைத்துயிரிலும் தாம் இருப்பதை உணர்ந்தவரே உண்மையை உணர்ந்தவராவார். தீயை நன்றாக மூட்டிவிட்டால் புகை போய்விடுவதைப் போல அன்புப் பெருக்கை நானிலத்தின் நான்கு புறத்தும் பாயவிட்டால் வாழ்க்கைப் பயிர் செழிக்கும்; வளம் கொழிக்கும்.

மையம் இன்றி ஒரு வட்டம் இருக்க முடியாது. அதுபோலவே ஒரு வட்டமின்றி ஒரு மையம் இருக்க முடியாது. இஃதோர் எளிய உண்மை. அன்பில்லையேல் உலகினைச் சீர்திருத்தவோ, போராடவோ, புரட்சி செய்யவோ, புதிய சமுதாயம் ஒன்றினை உருவாக்கவோ எவ்வளவு வருந்தி முயன்றாலும் முடியவே முடியாது. அன்பும் உண்மையும் வாழ்க்கைப் பறவையின் இரு சிறகுகள்.

வாழ்க்கையில் போராடி வெல்வது ஒருவகை இன்பம். அதைவிட்ப் புரட்சியின் வெற்றியில் வாழ்க்கையைக் கொண்டாடி மகிழ்வதே பேரின்பம்.

அறிதொறும் அறியாமையை வாழ்ந்து கற்றோம்; கற்றனைத் தூறும் அறிவு என்பதைக் கல்வியால் பெற்றோம்; அன்பின் வழியது உயிர்நிலை என்பதைப் பட்டறிவால் உற்றோம். இந்த மெய்மைகளை

எல்லாம் சங்கச் சான்றோரிடமும் வள்ளுவரிடமும் கொண்டோம், உயர்ந்தோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் பெரியாரால் விழிப்புற்றோம். தங்கப்பாவைக் கண்டு கொள்ளாமலேயே காரிருளில் மீண்டும் புதைகிறோம்.

ஒரு நூற்றாண்டுக் காலம் சாக்ரடீசு முதல் இரசல் வரை ஏதோ நல்லெண்ணப் பலகணி வழிப் புத்தெண்ணங்களின் ஒளி சில அறிஞர்களால் கிடைத்தது. எனினும் நம் தன்முனைப்புகள், வாழ்வைத் தப்புத் தாளங்கள் ஆக்கும்; தாறுமாறாக இசைக்கும் போலிமைக்கும் முதன்மை தந்து வெற்றாரவாரக் கொக்குக் காலிகள் கூட்டத்தில் மீண்டும் விலங்காண்டிகளானோம்.

உலக வாழ்க்கையின் திருப்பு முனையாகச் செருமானிய காரல் மார்க்சின் எண்ணங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழப் பல துறைகளிலும் புதிய வித்துகள் தூவி விழிப்புணர்வைத் தந்தன. 'மாந்தனுக்குரிய அனைத்தும் எனக்குரியன' என்றவர் மேலை நாட்டு முதல் மாந்தர் மார்க்சு ஒருவரே. மாந்த இனத்தின் விடுதலை வாழ்வியக்கத் தலைமை மெய்ப்பொருள், அதன் நெஞ்சத் துடிப்பு, பாட்டாளி இனமே என்று காட்டியவரும் மார்க்சே. ஏட்டுப் புலமை யாளராகவும் வாழ்க்கைப் புலமையராகவும் வாழ்ந்தவர் அவர். அதனால்தான் ஒவ்வொரு மாந்தனும் மானுடத்துக்குப் பாடுபட வேண்டும்; அதுவே வாழ்க்கை அறிவியல் வளர்ச்சி என்றார். 'மக்கள் தங்களைப் பற்றியே அச்சமடையும்படி கற்பித்தால்தான் அவர் களுக்குத் துணிவு ஏற்படும்', என்றவர் அறிவால் உலகை அறிந்ததைவிட, அன்பால் உலகை அறிந்து அன்பே மாற்றத்தை உண்டாக்கும் என்று தம் பன்முகச் சிந்தனையால் பாரறியச் செய்தார்.

“அறிவு கரடு முரடுகளைச் சமன்படுத்துகிறது; தடைகளை நீக்கிப் பாதையை ஆற்றொழுக்காக்குகிறது. வழியில் கிடக்கும் முட்களை அகற்றுகிறது. அன்பில்லாவிட்டால் வாழ்க்கையில்

மிகவும் தொல்லைப்படவேண்டியிருக்கும். அன்பிருக்கும் போது வாழ்க்கை எளிதாகிறது" என்ற தங்கப்பாவின் மொழிக்கேற்ற பேரெண்ணங்கள் மலரும் பயன் மரமாக ஓங்கி உயர்ந்தவர் மார்க்சு.

மார்க்சின் எண்ணத் தாக்கம் நானிலம் எங்கும் பரவியதென்றாலும் சோவியத்து நாட்டில் புதியதோர் உலகைப் படைத்தது. பொது உடைமைக் கொள்கையைத் திசை எட்டும் பரப்பியது. மானுடத்திற்குப் புதிய வாழ்வும், புதிய நோக்கும் போக்கும் கிட்டின. எண்ணத் தெரிந்த மாந்தர்க்குப் புத்தம் புதிய சிந்தனை மலர்களில் தேனருவி கொட்டியது. மாந்த வாழ்வை நலப்படுத்தும் நறுமணம் முட்டியது. அவற்றின் தொகுப்பே நுண்மதியாளரின் பொன்மொழிகள் (words of the wise) என்ற நூல். 20 ஆண்டுகளுக்கு முன் நான் புது நூற்றாண்டுப் புத்தகக் கடையில் (NCBH) பணிபுரிந்த போது கிடைத்தது.

அந்நூலால் மன வானின் எண்ண வைகறையில் வண்ண வண்ணக் கோலம் கொண்டு மகிழ்ந்தெழும் ஞாயிற்றைப் போல் அறிவிலே தெளிவும் ஆற்றலிலே புதிய வலிமையும் வாழ்வு நோக்கத்தில் புதிய பொலிவையும் பெற்றேன். முன்னமே பெற்றிருந்த பொது உடைமைச் சிந்தனைகளுக்கு மேலும் எண்ணற்ற புதிய எல்லைகள் தோன்றின.

இந் நூலின் மூலத்தைப் படித்தத் தோழர் ம. இலெ. தங்கப்பா "இதைத் தமிழ்ப் படுத்துங்களேன்" என்றார். அவர் கூறியதற்கு முன்னரே பொதுவுடைமை நாட்டைப் படைக்க முடியும் என்று செயல்படுத்திய உயர்தனிச் செம்மல் வி.இ.இலெனின் மொழிகளை மட்டும் 'சனசக்தி' வார ஏட்டில் வெளியிட்டேன். புதுக்கவிதைப் புல்லுருவிப் பூண்டுகள் முளைக்கத் தொடங்கிய காலம் அது. அதனாலே அதனை – என் பா வடிவத்தைப் புறக்கணித்தனர்.

பொன் வண்டாய் இருந்த நான் புற்றீசல்களின் இடையே உலவிட மறுத்தேன். அதனால் மேற்கண்ட நூலின் மொழி பெயர்ப்பும் விடுபட்டது. என்றாலும் அச் சிந்தனைச் செம்மலர்களை எனக்குத் தேவையான போது என் பிற நூல்களில் அங்கும் இங்குமாக மொழிப் பெயர்த்து இணைத்தேன்.

இந் நூலின் புத்தெண்ணக் கருத்துகளை நம்ப வேண்டும் என்று நான் வற்புறுத்தவில்லை. தன்னையே அறிந்து கொள்ளும் அறிவியல் உலகத்தில் ஓர் அறிவியல் வாணன் இந்த வெளி உலகத்துப் பொருள்களில் ஒவ்வொன்றையும் ஆய்ந்து ஆழ்ந்து அறிந்து கொள்ளும் அறிவியல்வாணனாக இருக் கிறானோ அவ்வாறே அறவியல் அறிஞர்களாகவும் நாம் மாற வேண்டும் என விரும்புகிறோம். அப்போதே பூங்குன்றனை, வள்ளுவனை, மார்க்சை, இலெனினை, தோல்சுதாயை, மார்க்சிம் கோர்க்கியையும் மற்றவர்களையும் தேடுதலைவிட்டு மெய்யறிவு இன்பத்தை அடையக்கூடும். வாழ்வியக்கம் மீமிசை மாந்தரைப் பெற்றெடுத்து உவக்கும் என்ற எண்ணத்தாலேயே இந் நூலை முற்றுமாக மொழி யாக்கம் செய்தேன். இம் மொழி பெயர்ப்பில் என்னை ஊக்குவித்த என் மகள் த. சித்திராவிற்கும் நூற்படியினை ஆங்கில மூலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்துச் செம்மை செய்து தந்த ஆங்கிலப் பேரறிஞர் புத்துலகச் சிந்தனையின் பண்பாளர் திரு.த.க. பாலகிருட்டிணன் அவர்களுக்கும் என் நெஞ்சுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் புதியதோர் உலகைக் கட்டி வருகிறோம். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலகிற்கான புதிய சமுதாயத்தைக் கட்டி வருகிறோம். வி.இ.இலெனின் அவர்களின் இடிமுழக்கம் போன்ற உறுதிப்பாடுடைய சிந்தனைகளும் உண்டு; வாழ்க்கை புத்துயிர் அடைவது என்ற கருத்தையும், மானுடத்தின் நன்மைக்காக

மேன்மைக்காக அதைச் சீரமைக்கும் செம்மாந்த மார்க்சின் கோர்க்கியின் சிந்தனைகளும் உண்டு; மனிதர்கள் நல்லவர்களாக வளர்வதற்கும் மனத் தூய்மையுடன் வாழ்வதற்கும் துணைபுரியும் பேரன்புப் பிணைப்பை அங்கிங்கெனாதபடி அனைவரிடத்தும் தோற்றுவித்துத் தோழமையுடன் வாழ வற்புறுத்திடும் இலியோ தோல்சுதாய் எண்ணங்களும் உண்டு. மாந்த இனத்தின் வளரும் குறிக்கோள்களுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் சுறுசுறுப்பாகப் போராடும் கிளர்ச்சி செய்யும் உந்தாற்றலான உயரிய விருப்பாற்றல் களும், கலையின் வாழ்வு மாந்த இனத்தின் வாழ்வுடன் இணைந்து பிணைந்து நிற்கிறது என்ற பேருண்மையும், நாம் அனைவரும் உலகத்தின் முன் ஒன்றிணைந்த மக்களாவோம் என்ற பூங்குன்றனின் வாழ்வுண்மையும் புத்துயிர்ப்புடைய சிந்தனைச் செம்மலர்களாக பல்வேறு அறிஞர்களின் மொழிகளில் நூலில் மணப்பதை நுகர்வீர்களாக.

அன்பன்,

**த. கோவேந்தன்**

• • •

# தேன்கூடு


1. அரசியலும் தலைமைப் பண்பும்

| | |
|---|---|
| அ. அரசியல் | 15 |
| ஆ. சிவப்பு நாடாவும் அதிகார வகுப்பும் | 17 |
| இ. தலைமைப் பண்பெனும் கலை | 20 |
| ஈ. தலைவர்களும் தொண்டர்களும் | 23 |
| உ. தலைவரின் அதிகாரம் | 25 |
| ஊ. புகழ் - உண்மையும் போலியும் | 28 |
| எ. மக்களின் பங்கு | 29 |
| ஏ. மக்களுக்கான வேண்டுகோள் | 34 |

2. அறிவு, வளர்ப்பு, கல்வி

| | |
|---|---|
| அ. அதிக அறிவின் பயனின்மை | 39 |
| ஆ. அறியாமை | 41 |
| இ. அறிவு | 42 |
| ஈ. ஒழுக்கமும் அறிவு வளர்ச்சியும் | 45 |
| உ. தன் முன்னேற்றம் | 50 |
| ஊ. பள்ளி, ஆசிரியர், கற்பவர் | 53 |

3. இசை, கவிதை, கட்டிடவியல், கலை, அரங்கம்

| | |
|---|---|
| அ. அரங்கம் | 64 |
| ஆ. இசை | 66 |
| இ. ஒவியம் | 68 |
| ஈ. கட்டிடக்கலை | 70 |
| உ. கவிதை | 70 |

4. இலக்கியத் திறனாய்வு 74

5. இளமை, முதுமை, அழியாமை
அ. அழியாமை 78
ஆ. இளமை 83
இ. முதுமை 88

6. உழைப்பு
அ. உழைப்பும் பொது அறமும் 90
ஆ. கடமை யுணர்வு 95
இ. சுறுசுறுப்பாயிருத்தல் 97
ஈ. மனிதனின் இன்றியமையாத சூழ்நிலை 99
உ. மனிதனும் செயல்பாடும் 104
ஊ.வேலை இளமையைக் கூட்டுகிறது 107
எ. வேலையே இன்பமும் மகிழ்வுமாகும் 109

7. எழுத்தாளனும் கலைஞனும் 111

8. எள்ளல் 119

9. ஒழுக்க விதிகள்
அ. செயல்படுதலும், செயல்பாடுகளும் 124
ஆ. பணிவு, புண்பாடு, பாராட்டு, நன்றியுணர்வு 126
இ. பெருந்தன்மை உணர்வு 127
ஈ. பேசும் கலை 130
உ. வழிகாட்டி, ஆலோசனை, புகழுரை 131

10. கலையும் வாழ்வும்
அ. உண்மையும் கதையும் 132
ஆ. கலையின் பொருளும் நோக்கமும் 140
இ. நிறைமனம், தகுதியுடமை இடையேயான ஒத்திசைவு 150
ஈ. மக்கள் பால் கலையின் பரிவும் குறிக்கோள் பொறுப்பும் 159

11. குடும்பம், பெற்றோர், குழந்தைகள்

அ. குடும்பமும் சமூகமும் 167
ஆ. குழந்தை வளர்ப்பு 168
இ. திருமணம் 178
ஈ. பெற்றோரும், குழந்தைகளும் - ஒருவர் மீது மற்றவரின் பரிவு 183

12. குப்பை, கூளப் புத்தகங்கள் 187

13. கோட்பாடு, திறனாய்வு, தவறு

அ. தவறான மதிப்பீடும், புறங்கூறலும் 189
ஆ. தவறு பற்றிய மனநிலை 190
இ. நோக்கமும், கருத்தும் 193
ஈ. புறக்கணிப்பு 196
உ. ஆர்வமும் ஊக்கமும் 197
ஊ. குற்றங்காணல் 198
எ. கோட்பாடுகளும் குறிக்கோள்களும் 204

14. சட்டமும் தன்னுரிமையும்

அ. சட்டம் 209
ஆ. தவறிழைத்தலும் குற்றங்களும் 210
இ. தன்னுரிமையும், கட்டுப்பாடும் 210

15. தவறுகள், வலிமைக் குறைகள், தோல்விகள்

அ. இழிமையும் கொடுமையும் 213
ஆ. இறுமாப்பு, சீற்றம், பொய்யுரைத்தல் 214
இ. குடிப்பழக்கம் 216
ஈ. கோழைத் தன்மையும், வலிவற்ற நெஞ்சும் 222
உ. சிடுசிடுப்பும், நற்சமூக உறவின்மை, முரண்படுதல் 223

ஊ. செயல்படாமை 224
எ. தற்பெருமை, அகந்தை, தற்புகழ்ச்சி 226
ஏ. தன்னலம் 228
ஐ. பிதற்றல் 230
ஒ. பொறாமையும் பேராசையும் 231
ஓ. போலித்தனம், அடிமைத்தனம், காலத்திற்கேற்ப மாறுதல் 233

★ ★ ★

# அரசியலும், தலைமைப் பண்பும்

## அரசியல்

★ அரசியல் கோடிக்கணக்கான மக்களின் உண்மையான எதிர் காலத்தை உள்ளடக்கியது.
வி.இ.இலெனின்

★ அரசியல் என்பது பொருளாதாரத்தைப் பற்றி மிகக் கவனமாகக் கருத்தளிப்பதாகும்.
வி.இ.இலெனின்

★ அரசியல் என்பது வானத்திலிருந்து விழுவதோ இலவசமாக வருவதோ அன்று; அது ஓர் அறிவியலும், ஒரு நுண் கலையுமாகும்.
வி.இ.இலெனின்

★ ஒழுங்குமுறைகளைக் கொண்ட ஒரு கொள்கையே மிகவும் நடைமுறைக்கேற்ற கொள்கையாகும். அத்தகைய ஒரு கொள்கையினால் மட்டுமே பொதுமக்களின் நீடித்தப் பரிவுடனும் நம்பிக்கையுடனும் வெற்றி பெற இயலும்.
வி.இ.இலெனின்

★ போராட்டவாதிகளும், பொதுமையாளர்களும் போராட்டத்தில் உள்ள இடுக்கண்களையும் இடையூறுகளையும் மறுக்கக் கூடாது.
வி.இ.இலெனின்

★ ஒரு புதிய அரசியல் கருத்தினை (அரசியலை மட்டுமில்லை) மதிப்பிழக்கச் செய்யவும், பலவீனப்படுத்தவும் உறுதியான வழி என்பது, அதனைப் பாதுகாப்பது என்ற போக்கில் அதனை முட்டாள்தனமான நிலைக்குக் கீழிறக்குவதேயாகும்.
வி.இ.இலெனின்

★ அனைத்து மிகைப்படுத்தப்பட்ட நிலைகளும் கேடு விளைவிப்பவையே. நல்லவையும், பயன் நிறைந்த அனைத்தும் மிகைப் படுத்தப்பட்ட எல்லைக்கு எடுத்துச் செல்லப்பட்டால், ஒரு குறிப்பிட்ட

அளவிற்குப் பின் கெட்டவையாகவும், ஊறு விளைவிப்பவை யாகவும் மாறக்கூடும் மாறத்தான் செய்யும். வி.இ.இலெனின்

★ உண்மையை நேரடியாக நேர்மையாகச் சந்திக்கவும். அரசியலில் அது எப்போதுமே மிகச் சிறந்ததும், சரியான ஒரே மனப்பாங்கும் ஆகும். வி.இ.இலெனின்

★ தவறான பேச்சுத் திறனும், தவறான தற்பெருமையும் ஒழுக்கச் சிதைவுக்கு வழி வகுப்பதுடன், அரசியல் அழிவுக்குத் தவறாமல் அழைத்துச் செல்வதாகவே அமையும். வி.இ.இலெனின்

★ அரசியலில் நேர்மை என்பது வலிமையின் விளைவாகும், வெளி வேடமென்பது வலிமையின்மையின் விளைவாகும்.
வி.இ.இலெனின்

★ அரசியலை மலிவான தந்திரங்களின் ஒரு தொடர் என எவர் கருதுகிறார்களோ, ஏமாற்றுதல் என்பதன் விளிம்பிற்கு அடிக்கடிச் சென்று கொண்டிருப்பதால், நாம் மிகுந்த தீர்மானத்துடன் அவர்களைக் கண்டிக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ உழைக்கும் பிரிவு மக்களின் தலைவர்கள் தேவதைகளோ, துறவி களோ, வீரர்களோ அல்லர் என்பதுடன், வேறு எவர் ஒருவரை யும் போன்ற மக்களே ஆவர். அவர்கள் தவறுகள் செய்யலாம். ஆனால் கட்சி அவர்களை உரிய பாதையில் செலுத்தும்.
வி.இ.இலெனின்

★ தனிப்பட்டவர்களை அல்லாமல் கோடிக் கணக்கானவர்களின் மனித உறவு என்னும் பகுதியில், அரசியலில் உண்மையாக இருப்பது என்பது ஆய்வுக்குட்பட்ட சொல்லுக்கும் செயலுக்கும் இடையேயான ஒரு தொடர்பாகவே உள்ளது ஆகும்.
வி.இ.இலெனின்

★ அரசியலுக்கு வளைந்து கொடுக்கும் ஒரு மனம் வேண்டும். ஏனெனில் மாற்ற இயலாத அல்லது நிலையான விதிகளை

அது பெற்றிருக்கவில்லை. அரசியலில் மாற்ற இயலாத அல்லது நிலையான விதிகள் பின்பற்றப்படுவது தவிர்க்க இயலாத விரைந்த தோல்விக்கே வழி கோலும். ஜி.வி.பிளக்கனோவ்

★ சிக்கல்களைத் தவிர்க்காமல் எதிர்கொள்பவனாலும், சமூக முன்னேற்றத்திற்கு இணையாகத் தனது முயற்சிகளைச் செலவிடுபவனாலும் மட்டுமே ஆற்றல் நிறைந்த ஒரு தலைவனாக விளங்க இயலும். ஜி.வி.பிளக்கனோவ்

★ மனித வாழ்க்கைப் பாதையில் எந்தவொரு நடவடிக்கையினை ஒருவர் மேற்கொண்டாலும், சமூகத் தேவைகளுக்கு உடன்பாடான நிலைப்பாடுகளினால் மட்டுமே விரைவான வளர்ச்சியினைக் காட்ட இயலும். நிகிலாய் செரன்சேவ்ஸ்கி

## சிவப்பு நாடாவும், அதிகார வகுப்பும்

★ மிகக் கேடான நமது உள்நாட்டு எதிரி அதிகார வகுப்பினரே.
வி.இ.இலெனின்

★ சிவப்பு நாடா பற்றி எந்த ஒரு சிறு மனப்பாங்கும், இரக்கமற்ற வகையில் தண்டிக்கப்பட வேண்டும். வி.இ.இலெனின்

★ அதிகார வகுப்பின் கொடுமைகளுக்கு எதிரான போராட்டம் முழுமையாகத் தவிர்க்க இயலாதது என்பதை நாம் உணர்ந்து கொள்வது இன்றியமையாதது, அது போன்றே சிறு உடமையாளர்களுக்கு எதிரான போராட்டமும் சிக்கல் நிறைந்தது.
வி.இ.இலெனின்

★ அதிகார வகுப்பு நடைமுறைகளை நாம் போரிட்டு வீழ்த்த விரும்பினால், இப் பணிக்கு அடிமட்டத்திலுள்ள மக்களை அழைத்து வந்து நாம் ஈடுபடுத்த வேண்டும். வி.இ.இலெனின்

★ சோவியத்து அமைப்பு வடிவத்தை அதிகார வகுப்பத் திரித்துக் கூறுவதற்கெதிராக மேற்கொள்ளப்படும் போர், சோவியத்து களுக்கும் அதன் மக்களுக்குமிடையே உள்ள உறுதியான தொடர் பினால் உறுதியளிக்கப்படுகிறது. இதன் பொருள் என்னவென் றால், ஏமாற்றப்பட்ட உழைக்கும் மக்களாலும், இந்தத் தொடர்பின் வளைந்து கொடுக்கும் தன்மை, விரிவடையும் தன்மையாலும் உறுதியளிக்கப்படுகிறது என்பதுதான். வி.இ.இலெனின்

★ சோவியத்துப் பொறுப்பு இயந்திரம், மிகச் சரியாகவும், மென்மை யுடனும், விரைவாகவும் செயல்பட வேண்டும். வி.இ.இலெனின்

★ ஒரு துணையைப் போன்று இயந்திரம் வலிவு மிகுந்திருப்பது தான் திட்டமிட்டுச் செயல்படுவதற்குப் பொருத்தமானதும் சிறந்த துமாகும். வி.இ.இலெனின்

★ நமது அரசு இயந்திரத்தை மிகமிகச் சிக்கனமான நிலைக்குக் குறைக்க வேண்டும். அதிலிருந்து ஊதாரித்தனம் என்பதன் அனைத்து அடையாளங்களையும் நாம் நீக்க வேண்டும்.
வி.இ.இலெனின்

★ குழு கலந்துரையாடல் என்பது தேவையான ஒரு குறைந்த அளவுக்குக் குறைக்கப்படுவதுடன், முடிவுகளின் விரைவிலும், உறுதியிலும் தலையிடவோ ஒவ்வொரு உழைப்பாளியின் பொறுப்பைக் குறைக்கவோ ஒரு போதும் ஒப்புக்கொள்ளக் கூடாது. வி.இ.இலெனின்

★ கூட்டுக் கலந்துரையாடல் இருக்க வேண்டுமென்றாலும், தனிப் பட்டவர்க்ளின் பொறுப்பும் கட்டாயம் இருக்க வேண்டும்.
வி.இ.இலெனின்

★ பொறுப்பற்ற தன்மைக்குக் கல்லூரி நடைமுறைகளை அமைதி யாக சுட்டிக்காட்டுவது இடர்பாடு நிறைந்த ஒரு கேடாகும்.
வி.இ.இலெனின்

★ சோவியத்து நிறுவனங்களின் பொறுப்பு பற்றிய கேள்விகள் அனைத்துக்கும் கூட்டுக் கலந்துரையாடல், மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் பற்றி, சோவியத்துப் பதவியில் இருக்கும் ஒவ்வோர் ஆளும் ஆற்றி முடிக்க வேண்டிய குறிப்பிடப்பட்ட செயல்கள், நடைமுறை வேலைகள் பற்றித் தெளிவாகவும், குறிப்பாகவும் தெரிவித்து, அவர்களது பொறுப்பை வரையறுக்கும் முறையும் இணைந்தே செயல்படுத்தப்பட வேண்டும். வி.இ.இலெனின்

★ நமது கவனத்தையெல்லாம் நாம் ஆற்றி முடிக்க வேண்டிய பணிகளில் செலுத்த வேண்டுமேயன்றி, தீர்மானங்களில் செலுத்தக் கூடாது. வி.இ.இலெனின்

★ மனிதர்களை நன்காய்ந்து, உண்மையிலேயே என்ன செய்யப்பட்டுள்ளது என்பதைச் சரி பார்ப்பது என்பது, ஒன்று மட்டுமே நமது முழுமையான கொள்கை, நமது அனைத்து நடவடிக்கைகளின் இன்றியமையாத பகுதியாக அது இப்போதிருக்கிறது. இது ஏதோ ஒரு சில மாதங்களுக்கான அல்லது ஒரு சில ஆண்டுக்கான பணியல்ல பல ஆண்டுகளுக்கானதாகும். வி.இ.இலெனின்

★ அதிகார வகுப்பின் கேடுகளை நீக்கி மீள்வது என்பதற்குப் பல பத்தாண்டுகள் பிடிக்கும். அது கடினம் மிகுந்த ஒரு போராட்டம். அதிகார வகுப்பிற்கெதிரான மேடை மூலம், அதிகார வகுப்பு நடைமுறைகளை இரவோடு இரவாகக் களைந்துவிட நம்மால் இயலுமென எவர் ஒருவராது சொல்வாரேயானால், அலங்காரச் சொற்களில் நாட்டம் கொண்ட போலியான தற்பெருமைக்காரராகத்தான் அவர் இருப்பார். வி.இ.இலெனின்

★ விதிக்கடுமை (சிவப்பு நாடா) என்பது சிக்கலின் தன்மையினை நீ புறக்கணித்து விட்டு உனது கவனமெல்லாம் தாளின் மீதும், படிவத்தின் மீதும் வைத்து இருப்பதுதான்.

என்.கே.குருப்சுகயா

★ மடலெழுதி உறுதி செய்வது என்பது உணர்ந்து, நிறைவேற்று வது என்பதைக் குறிக்காது. காான்ஸ்டின்டின் உசின்ஸ்கி

★ அதிகார வகுப்பின் ஆளுமை பற்றிய வழக்கமான நடைமுறை களை நாம் நீக்குவதுடன், அனைத்து வடிவங்களிலும், உருவங் களிலுமுள்ள விதிக்கடுமையின் மீது போர் தொடுக்க வேண்டும். செர்ஜி கிரோவ்

## தலைமைப் பண்பெனும் கலை

★ மனிதனின் நடவடிக்கையின் ஒவ்வொரு பகுதியிலும், மனித அதிகார அமைப்பில் ஒவ்வொரு பதவியிலும், மனிதனின் தேவை யான கடமையென்பது மனிதத்தன்மையுடன் இருப்பது என்பதே. விசாரியோன் பெலின்ஸ்கி

★ மற்ற மனிதர்களின் வெற்றியைக கண்டு மகிழ்ந்து கொண்டா டாதவன் சமூக நலன்களில் அக்கறையற்றவனாவான்; பொறுப் புள்ள எந்தப் பொதுப் பதவியையும் அவனை நம்பி ஒப்படைக்கக் கூடாது. ஆன்டன் செகாவ்

★ மற்ற ஒவ்வொரு தனிப்பட்டவரின் இழப்புக்கேட்டுக்கும் பரிவு காட்டு பவனால் மட்டுமே, ஒரு பொதுவான இழப்புக்கேட்டுக்கும் பரிவு காட்ட முடியும். பெலிக்ஸ் செர்செனஸ்கி

★ ஒரு நாட்டு நிறுவனத்தின் தலைவராக இருப்பவர் ஓர் உயர்ந்த அளவிலான தனிமனிதக் கவர்ச்சியையும், போதுமான அளவி லான வலுவான அறிவியல், தொழில் நுட்ப அறிவினையும் பெற்றிருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ ஆளுமை என்பது திறமை பெற்றிருப்பதைக் கட்டாயமாக வலி யுறுத்துவதாகும். விளைவாக்கம் பற்றி அதனுடைய இறுதி விளக்கம் வரை அனைத்துச் சூழ்நிலைகளையும், உனது ஆக்கத்

துறையைப் பற்றிய அண்மைக்கால தொழில் நுட்பங்களையும் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதுடன், ஒரு குறிப்பிட்ட அறிவியல் பயிற்சியையும் நீ பெற்றிருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ அறிவார்ந்து, செல்வச் செருக்கற்று, சோம்பலின்றி அனைத்து நிலைகளிலும் பெறும் பட்டறிவு, அறிவியல் ஆக்கம் பற்றிய ஆழ்ந்த ஆய்வை மேற்கொள்வோம். வி.இ.இலெனின்

★ அனைத்துச் செயலாட்சிப் பணிகளுக்கும் சிறப்பான தகுதிகள் தேவைப்படுகிறது. புரட்சியாளர்களில், கொள்கைப் பரப்புகளில் நீ மிகச் சிறந்தவனாக இருந்தாலும், ஒரு பொறுப்பாளியாக நீ எந்தவகையான பயனும் அற்றவனாகவும் இருக்கக்கூடும்.
வி.இ.இலெனின்

★ எந்த ஓர் அரசியல் தலைவரும் தோல்வியேயற்ற அரசியல் வாழ்க்கையைப் பெற்றிருக்கவில்லை. வி.இ.இலெனின்

★ தோல்வியை ஒப்புக் கொள்ள அஞ்சாதே. தோல்வியிலிருந்து படிப்பினைகளைக் கற்றறிந்து கொள். தவறாக எதனை நீ செய்தாயோ அதனை முழுமையாகவும், நிறைந்த கவனத்துடனும், நிறைந்த ஒழுங்குமுறையுடனும் மறுபடியும் செய்.
வி.இ.இலெனின்

★ தற்புகழ்ச்சியால் அழிவைத் தரும் தோல்வியைத் தழுவியவனோ சோர்வுக்கு இடம் கொடுப்பவனோ ஓர் உண்மையான சமநயன்மை வாதியாக இருக்கத் தகுதியற்றவன். வி.இ.இலெனின்

★ தோல்வியை அதன் முகத்தின் நேருக்கு நேர் சந்திக்க இயன்றவர்களாக நாமிருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ தீயவற்றின் காரணங்களைப் புரிந்து கொள்ள இயலாமல், அதனின்றும் வெளியேறும் அல்லது அதனைக் கடக்கும் வழி அறியாமல், போராடும் ஆற்றல் இருப்பவர்களுக்கே உரியன ஏமாற்றமும் சோர்வும். வி.இ.இலெனின்

★ சூழ்நிலைகளின் மாற்றங்களுக்கு ஏற்றபடி பகைவனுடன் போரிடும் வழிமுறைகளை எவ்வாறு மாற்றிக் கொள்வது என்பதை நாம் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும்.
வி.இ.இலெனின்

★ சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அவற்றுக் கேற்றவாறு முடிவுகளை மேற்கொள்ளும் துணிவு பெற இயன்ற வர்களாக நாமிருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ மிகுந்த தீவிரத்துடன் வணங்கப்படுவது ஐயத்திற்கே வழி வகுக்கும்; அத்தகைய வலிவான மாற்றத்துக்குத் - தேவைப் படுவது எதுவாக இருப்பினும் அதன் தகுதியைப் பற்றி ஐயம் கொள். வி.இ.இலெனின்

★ ஆழ்ந்து சிந்திக்காமல் விரைவாக எந்த முடிவையும் எடுக்காதே. சிந்தித்துப் பார்க்குமுன் எந்தச் செயலையும் செய்யாதே.
அபுல் காசிம் பர்தோசி

★ போர் தொடங்கும் முன்பே தனது தோல்வியை எவன் ஒப்புக் கொள்கிறானோ, அவன் முன்னதாகவே பாதி தோற்கடிக்கப்பட்ட வனாக ஆகிவிடுகிறான். திமிட்ரி பிசரேவ்

★ எந்தத் தடையையும் மிகப் பெரிதாக, எந்த இடையூற்றையும் வலிமை மிக்கதாகக் கருதாமல், உனது குறிக்கோளை நோக்கி வீரநடை போடு ; நீ ஏற்படுத்திக் கொண்டிருக்கும் பணியைச் செய்து முடிக்கத் தேவைப்படும் ஈகத்தைச் செய்து காட்டு.
ஏ.வி. சுவரோவ்

★ நண்பர்களை வெறுப்பூட்டிக் கொண்டும் பகைவர்களுக்கு அஞ்சிக் கொண்டும் தெளிவான முடிவெடுக்காமல் செயல்படுவதைவிடப் பொது வாழ்விலோ தனிப்பட்ட வாழ்விலோ இடர்ப்பாடானது வேறெதுமில்லை. நிகிலேய் செர்னிசேப்ஸ்கி

# தலைவர்களும் தொண்டர்களும்

★ ஓர் அரசியல் தலைவர் தமது தலைமையின் தரத்திற்கு மட்டுமே பொறுப்பானவர் அல்லர், அவர் வழி நடத்திச் செல்பவர்களின் செயல்களுக்கும் பொறுப்பாவார். அவ்வப்போது அவர்கள் செய்வது எது பற்றியது என்று அவர் அறியாமலிருக்கலாம், அவர்கள் ஏதோவொன்றைச் செய்திருக்கவேண்டாமென அடிக்கடி அவர் விரும்பக்கூடும் என்றாலும் அவற்றின் பொறுப்பு அவர் மீதே விழும். வி.இ.இலெனின்

★ உணர்ச்சி வயப்பட்டுச் சீற்றப்படத் தலைவர்கள் உரிமை பெற்றிருக்கவில்லை. வி.இ.இலெனின்

★ அரசியலில் வெறுப்பு என்பது பொதுவாக அடிப்படை மிகுந்த பண்புருக்களிலேயே செயல்படுகிறது. வி.இ.இலெனின்

★ ஒரு கடமையைப் பொதுவாகக் கருதி ஏற்றுக் கொள்பவர்கள் அதனைக் கைவிட்டு விடுவதையும் ஏதுமற்றதாகவே உணர்வர். ஜேனிஸ் ரெய்னின்

★ மக்கள் பலரிடம் உள்ள தொல்லை என்னவென்றால், உண்மையில் எதனை அவர்களால் செய்ய இயலாதோ, அதனைத் தங்களால் செய்ய இயலும் என்று நினைப்பதுதான். மாக்சிம் கோர்கி

★ நாம் எந்த இடத்தில் இருக்கிறோம் என்பது சிறப்பில்லை, ஆனால் எந்த இலக்கை நோக்கி நாம் எந்தத் திசையில் செல்கிறோம் என்பதே இன்றியமையாதது. லியோ தோல்சுதாய்

★ ஒவ்வொருவரும் முன்னணியில் இருப்பது என்பது இயலாதது மட்டுமில்லை, அவசியமற்றதும்கூட. உனக்குரிய வட்டத்தில் உன்னால் இயன்றதைச் செய், அனைவருக்கும் செய்வதற்கான வேலை போதுமான அளவு இருக்கின்றது.

அலெக்சாண்டர் எர்சன்

★ ஓர் அதிகாரியின் நெஞ்சம் அவரது மனத்திற்கு முன் அணிய மான நிலையில் நிற்க வேண்டும்.

ஏ.ஏ.பெண்டுசேவ் - மார்லின்ஸ்கி

★ தலைமையை ஒப்புக் கொள்ளத் தயங்குபவர்கள் மிகப் பலர் உள்ள போதும், அறிவுள்ள மனிதர்களைப் புறக்கணித்துவிட்டு, அதனை விட முட்டாள்களுடன் துன்புறலாம். இவான் ரைலாவ்

★ உயர்நிலையில் இருப்பதும், சோம்பேறித்தனமாக இருப்பதும் இடுக்கண் மிகுந்த எதிரிகளாகும். ஆன்ரேஜ் உபிட்ஸ்

★ வினா எதுவும் வினவாமலும், அதில் உள்ள உண்மை, நன்மை பற்றி நம்பிக்கையில்லாமலும், ஆணைக்குக் கீழ்படிதல் என்பதற் காகவே அனைத்தையும் செய்து பழக்கப்பட்டவர்கள் நல்ல தற்கும், கெட்டதற்கும் வேறுபாடு தெரியாதவர்களாகவே ஆகிவிடு வதுடன், "அவைதாம் இடப்பட்ட கட்டளைகள்" என்ற போக்கில் ஒழுக்கம், அறம் ஆகியவற்றுக்கு எதிராக செயல்படவும் மன உறுத்தல்கூட பெறாதவர்களாக இருப்பார்கள்.

நிகிலோய் தோப்ரோலியுமோவ்

★ ஒரு தனிப்பட்டவன் அனைவரது கருத்துகளையும் ஏற்றுக்கொள் பவனாக இருந்தால், அவனுக்கென உரிய கருத்து எதுவும் இருக்க முடியாது. அனைவரையும் அவன் விரும்புபவனாகவும், அனை வரது நண்பனாகவும் இருந்தால், அவன் ஒன்றைப் போல் அனை வரிடமுமே ஈடுபாடற்றவனாகவும் இருப்பான்.

நிகிலோய் தோப்ரோலியுமோவ்

★ தனது மேல் அலுவலர்களிடம் இறைஞ்சுபவனைப் போல, தன்கீழ் பணியாற்றுபவர்களிடம் வேறு எவருமே கடுமையாக நடந்து கொள்வதில்லை. நிகிலோய் தோப்ரோலியுமோவ்

★ ஒவ்வொருவரது உணர்ச்சிகளையும் மதியாது ஒதுக்குபவன் எவரையுமே விரும்புபவனல்லன்; எதுவுமே அவனை அவனிட

மிருந்து காப்பாற்றாது. ஒவ்வொருவரையும் மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருப்பவனால், எதனையும் சரியாகச் செய்ய இயலாது. ஏனெனில் கெட்டதைத் தவிர்த்துச் சரியாகச் செய்வது என்பது அவனால் இயலாதது. நிகலாய் செரன்சேவ்ஸ்கி

★ தன் கீழ்ப் பணியாற்றுபவர்களிடையே இருக்கும் போது கவனக் குறைவாக இருப்பவன் - தனது மேல் அலுவலர்களிடையே இருக்கும்போது எப்போதுமே கவனக் குறைவாக இருந்ததில்லை என்பதை எப்போதாவது நீ கவனித்திருக்கிறாயா?
இவான் துர்கனேவ்

நரியைப் போன்றவன் தனது பதவியைப் பெறுகிறான்
ஆனால் அப் பதவியில் அவன் ஒநாயைப்போல் இருக்கிறான்.
வி.ஏ.சுகோவ்ஸ்கி

# தலைவரின் அதிகாரம்

★ தன் அரசியல் தலைவர்களை உருவாக்காமல், அதனுடைய தேவையான தலைவர்கள் ஓர் இயக்கத்தை அமைத்து அதனை வழிநடத்திச் செல்ல இயலாத வரையில், வரலாற்றில் எந்த ஒரு பிரிவும் அதிகாரத்தைப் பெற்றதில்லை. வி.இ.இலெனின்

★ தனது போராட்ட காலத்தில் மாபெரும் புரட்சிகள் மாபெரும் மனிதர் களை முன்னிலைக்குக் கொண்டு, இதற்கு முன் இயலாததெனக் காணப்பட்ட ஆற்றல்களை உண்டாக்கி அதிகரிக்கச் செய்யும் என்பதை வெகு காலத்துக்கு முன்பே வரலாறு மெய்பித்துள்ளது.
வி.இ.இலெனின்

★ அரசாட்சி செய்ய இரும்பு போன்று உறுதி படைத்த புரட்சிகர மான பொதுமையர்கள் நமக்குத் தேவை; நாம் அவர்களைப் பெற்றிருக்கிறோம். அதுதான் கட்சி என்று அழைக்கப்படுவது.
வி.இ.இலெனின்

★ ஒரு பொது விதியாக, அரசியல் கட்சிகள், மிகுந்த பொறுப்பான பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட, மிகுந்த அறிவுத் திறன், செல்வாக்கு, பட்டறிவு கொண்ட தலைவர்கள் என்றழைக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட சற்றேறக் குறைய நிலையான குழுக் களாக நடத்திச் செல்லப்படுகின்றன. வி.இ.இலெனின்

★ ஆய்வுக்குட்படுத்தப்பட்ட, ஆற்றல் நிறைந்த தலைவர்கள், (ஆற்றல் நிறைந்த மக்கள் நூற்றுக்கணக்கில் பிறப்பது இல்லை) தொழில் முறையாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்கள், நீண்ட பட்டறிவு என்ற பள்ளியில் பயின்றவர்கள், முழுமையான உடன்பாட்டுடன் பணி யாற்றுபவர்கள், பத்து பேர் இல்லாமல் இக்கால சமூகத்தில் எந்த ஒரு பிரிவினரும் ஒரு முடிவு செய்யப்பட்ட போராட்டத்தை மேற் கொள்ள இயலாது. வி.இ.இலெனின்

★ பேரறிவு பெற்ற அரசியல்வாதி வருங்கால நிகழ்வுகளை முன் கூட்டியே ஊகித்து உணர்பவராக இருப்பார்; அத்தகைய அறி வற்றவர்களோ நிகழ்வுகளால் நடத்திச் செல்லப்படுபவர்கள் ஆவர். வி.இ.இலெனின்

★ புரட்சிகரமான கோட்பாடு எதுவுமின்றி, எந்த ஒரு புரட்சிகரமான இயக்கமும் தோன்றி இருக்க இயலாது. வி.இ.இலெனின்

★ பொதுவுடமைப் பொறுப்பினரின் முதன்மையான கடமை, ஆணை கள் பிறப்பித்துக் கொண்டிருப்பதில் மூழ்கிவிடாமல் பார்த்துக் கொள்வதேயாகும். அறிவியல் செயல் வெற்றிகளைக் காணத் தொடங்கக் கற்றுக் கொள்வதோடு, உண்மைகளைச் சரி பார்ப் பதை வலியுறுத்துபவனாகவும், தவறுகளை ஆய்ந்து அறிபவ னாகவும் இருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ கடுமையாக ஒருவர் இருக்க வேண்டுமெனில் அவர் அதற்கான உரிமையைப் பெற்றிருக்க வேண்டும்; அவ்வாறு கடினமாக இருப்பதற்கான உரிமை, அவர் தமது சொற்களிலும், செயலிலும் மாறுபடாமல் இருப்பதற்காக அளிக்கப்படுவதாகும். வி.இ.இலெனின்

★ தீர்மானங்களின் வாய்ப்பு என்பது எதிர்காலத்தைப் பற்றிய தொலை நோக்குப் பார்வையென்னும் வாய்ப்பைச் சார்ந்ததே யாகும். நிகிலாய் செர்னிசேவ்ஸ்கி

★ பயனற்றவர்கள் எந்தவிதமான மதிப்புரிமையையும் கோரிப் பெறும் தகுதியற்றவர்கள். நிகிலாய் செர்னிசேவ்ஸ்கி

★ மாபெரும் சீர்திருத்தவாதிகள் என்பவர்கள் எதனையும் அழிப்ப தற்காக வருவதில்லை, ஆனால் எந்த ஓர் அழிவினின்றும் எதனை யாவது நிறுவுவதற்காகவே வருகின்றனர்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ அனைத்து மனித உணர்வுகளிலும், தற்பெருமைக்கு அடுத்தபடி யாக வலிமை நிறைந்ததும் மிகுந்த நாகரிகமற்றதுமானது அதி காரத்துக்கான பேராசையாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ பெருமையான வழிபாட்டுக்கும், அதிகார பயன்களுக்காகவும் அடக்க இயலாத ஆசையிலிருந்து பிறக்கும் அதிகாரத்திற்கான பேராசையை மக்கள் வெறுக்கவே செய்வர்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ வலுவற்ற மனிதர்கள் மிக எளிதாக உயர்நிலைகளில் வைக்கப் பட்டால் அவர்கள் நேர்மையற்ற கயவர்களாக மாறிவிடு கின்றனர். திமிட்ரி பிசரேவ்

★ அதிகாரத்திலிருக்கும்போது ஒரு முட்டாளானவன் தொல்லை நிறைந்தவனாகவும் இருக்கிறான். தெனிஸ் போன்விஜின்

★ மனிதர்களை ஆட்சி செய்ய நீ அழைக்கப்பட்டால், அவர்களை அருளன்புடன் நடத்து. மிகிலாய் காலினின்

★ உனது உள்ளார்ந்த நோக்கங்களிலிந்து உனக்கான வழிகாட்டு தலை எப்போதுமே எடுத்துக் கொள்வதுடன், மக்களை நேர்மை யாகவும் நடத்து. மைக்கேல் காலினின்

★ நீ செய்யும் ஒவ்வொரு செயலிலும் நீ உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்கிறாய் என்பதை மக்கள் உணரவேண்டும். மக்களிடமிருந்து உனது நேர்மையின்மையை மறைப்பதில் எப்போதுமே நீ வெற்றி பெற முடியாது. உன்னால் இயன்றவரை அதற்காக வெட்கப்பட்டு அதிலிருந்து விலகியே இரு.

மைக்கேல் காலினின்

## புகழ் - உண்மையும், போலியும்

★ அனைத்துப் பெரிய மனிதர்களும் மதிப்புயர்வையும், புகழ்ச்சியையும் விரும்புபவர்களே. இது இன்றி, எந்தப் பெரிய துணிவான செயலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க மாட்டாது; பெரிய செயல்கள் செய்து முடிக்கப்படாமலேயே இருந்திருக்கும்.

மைக்கேல் லோமனோசோவ்

★ உண்மையான புகழ் என்பது காண இயலாதது; பொது நலத்திற்காகத் தன்னையே அளித்துக் கொள்வதிலிருந்து பொங்கி வழிவது அது.

ஏ.வி. சுவரோவ்

★ அனைத்து வகையான பெருமைகளிலும் மிகுந்த புகழ் பெற்றதும், விலைகொடுத்து வாங்க முடியாததுமான பெருமை மக்களால் அளிக்கப்படுவதேயாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ காலம் என்பதுவே மாபெரும், மதி நிறைந்த, தவறில்லாத திறனியாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ இக்காலத் தேவைகள் பற்றி வரலாற்று மாமனிதர்கள் பங்களிக்காததைக் கொண்டு வரலாற்றுத் தொண்டு மதிப்பிடப்படுவதில்லை. ஆனால் அவர்களது முன்னோர்களுடன் ஒப்பிடப்படும் போது அவர்கள் அளித்த அந்தந்த புதிய பங்களிப்புகளைக் கொண்டே அது மதிப்பிடப்படுகிறது.

வி.இ. இலெனின்

★ பேரறிவு என்பதும் கயமை என்பதும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை.

அலெக்சாண்டர் பூஷ்கின்

★ தகுதியின்றி மதிக்கப்படுவதைவிடத் தகுதியிருந்தும் மதிக்காமல் விடப்படுவது மிக நேர்மையானது. தெனிஸ் போவின்சின்

★ புகழின் உச்சியை அடையும்போது வஞ்சகமும், இறப்பும் எப்போதும் அங்குக் காத்திருக்கின்றன. ஏ.எப். பிசெம்ஸ்கி

## மக்களின் பங்கு

★ ஆக்க நடைமுறைச் செயல்திட்டம் என்பது இந்தப் புதிய பொது வாழ்வின் அடிப்படை உண்மையாகும். சமன்மையம் (சோஷலிசம்) என்பது மேலிருந்து கட்டளையிட்டு நடைமுறைப்படுத்தப்பட இயலாதது. அதனுடைய ஆர்வம் இயந்திரத்தனமான முதலாளிய அணுகு முறையினை ஏற்க மறுக்கிறது. வாழ்ந்து கொண்டிருக்கும், ஆக்கச் சமன்மையம் என்பது பொதுமக்கள் தங்களுக்குள்ளாகவே படைத்துக் கொள்வதாகும். வி.இ. இலெனின்

★ இலக்கக் கணக்கான, கோடிக்கணக்கான மக்களால் இப்போது உரிமையுடன் தனிப்பட்ட முறையில் வரலாறு படைக்கப்படுகின்றது. வி.இ. இலெனின்

★ சிறுபான்மையினரால், இந்தக் கட்சியினால் சமன்மையம் என்பது நடைமுறைப்படுத்தப்பட இயலாது. பல கோடிக்கணக்கான மக்கள், தாங்களாகவே அவ்வாறு செய்யக் கற்றறிந்து கொள்ளும் போது, அவர்களால் மட்டுமே அது நடைமுறைப்படுத்தப்பட இயலும். வி.இ. இலெனின்

★ உழைக்கும் மக்களின் கூட்டங்களிலிருந்தே, நமது படைகளை நாம் ஒன்று திரட்ட வேண்டும். வி.இ. இலெனின்

★ மார்க்சிசத்தைப் பின்பற்றும் உருசியப் பொதுமையர், குடியாட்சியின் மேன்மையான இன்றியமையாமையை, அவர்களது செயற்பாடுகளில் எப்போதும் மறந்துவிடலாகாது. வி.இ. இலெனின்

★ வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்வுகளின் நோக்கமும், பரப்பும் மிகப் பெரியதாக இருக்கும்போது, அவற்றில் பங்கேற்றுக் கொள்ளும் மக்களின் எண்ணிக்கையும் அதே போன்று மிகப் பெரியதாகவே இருக்கும். வி.இ.இலெனின்

★ மனிதனின் வரலாறு படைக்கும் நடவடிக்கை அகன்றும், ஆழமாக வும் வளரும்போது, அந்த வரலாற்றைப் படைக்கும் மக்கள் வெள்ளத்தின் அளவும் அதிகரிக்கவே செய்யும்.
வி.இ.இலெனின்

★ குடியாட்சியை முழுமையாகப் பின்பற்றாத சமன்மையம் வெற்றி பெற்றதாக இருக்க முடியாது. வி.இ.இலெனின்

★ உழைக்கும் மக்கள் குடியாட்சி மூலமன்றி வெற்றி பெற்றவர்களாக இருக்க இயலாது. அதாவது குடியாட்சிக்கு முழுமையான பயன் அளித்து, அதனுடைய போராட்டத்தின் ஒவ்வொரு நிலையுட னும் உறுதி நிறைந்த சொற்களினால் உருவாக்கப்பட்ட மக்களாட்சி கோரிக்கைகளை இணைக்கச் செய்தல் வேண்டும்.
வி.இ.இலெனின்

★ நாட்டுச் சட்டங்கள் பற்றிய கலந்துரையாடலில் பங்கேற்கும், தனது முகவாண்மையைத் தேர்ந்தெடுக்கும் உரிமையுடன், நாட்டுச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் ஒரு சூழ்நிலையில் ஒவ்வொரு குடிமகனும் வைக்கப்பட வேண்டும்.
வி.இ.இலெனின்

★ மக்களின் வாழ்வுரிமைக்காகப் போராடும் எவர் ஒருவரும், நாட்டு மக்களின் தனி ஆள் உரிமைக்காகவும் மேன்மைக்காகவும் போராட வில்லையெனில், அவர்களது போராட்டம் ஒன்று தொடர்ச்சி யற்று இருக்கும் அல்லது உண்மையற்றதாக இருக்கும்.
வி.இ.இலெனின்

★ விளையாட்டல்லாத தீவிரமான அரசியல், எளிய மக்கள் வெள்ளத் தினால் மட்டுமே உருவாக்கப்பட இயலும். வி.இ.இலெனின்

★ நமது புரட்சி, மற்ற அனைத்து இதர புரட்சிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டதற்கான காரணத்தை முடிவில் ஆராய்ந்து பார்த்தால், சோவியத்து அரசு போன்ற அமைப்பின் மூலம் நாட்டு முன்னேற்றத்தில் அதற்குமுன் ஆர்வமற்று இருந்த கோடிக்கணக்கான மக்களை அது தட்டியெழுப்பியதுடன், நாட்டுக் கட்டமைப்புப் பணியின் ஓர் ஆக்கமான பங்கினை ஏற்றுக் கொள்ளவும் செய்தது என்பது வுமேயாகும்.

வி.இ.இலெனின்

★ சமன்மைப் புரட்சியென்பது, நாட்டுச் செயலாட்சியில் கோடிக்கணக்கான மக்கள் நேரடியாகவும் ஆக்கநிலையாகவும் பங்கேற்றுக் கொள்வதன் மூலம் மட்டுமே செய்யப்பட இயல்வதாகும்.

வி.இ.இலெனின்

★ உழைப்பாளிகள், உழவர்களின் சோவியத்துகள் என்பது ஒரு புது வகையான அரசு, ஒரு புதிய, உயர்ந்த வகையான குடியாட்சி, ஒரு வகையான உழைப்பாளிகளின் வல்லாண்மை உடமையாளர்களின்றி, உடமையர்களுக்கு எதிராக அரசைச் செயல்படுத்தும் ஒரு வழி.

வி.இ.இலெனின்

★ சோவியத்து ஆற்றல் என்பது ஒரு புதிய குடியரசு நிலைக்கு உயர்ந்ததுடன், அரசு செயலாட்சியில் கோடிக்கணக்கான உழைக்கும் மக்கள் உரிமையுடன் பங்கேற்றுக் கொள்ளவும் செய்தது.

வி.இ.இலெனின்

★ சோவியத்து ஆட்சியின் அதிகாரம் உண்மையில் பெரும்பான்மையான மக்களால் செலுத்தப்பட்டதைப் போன்று, பெரும்பான்மையான மக்களால் அரசியல் அதிகாரம் செலுத்தப்பட்டதை இவ்வுலகம் இதற்கு முன் எப்போதுமே கண்டதில்லை.

வி.இ.இலெனின்

★ சோவியத்து அல்லது உழைக்கும் வகுப்பின் குடியாட்சி உலகில் முதல்முறையாகப் பொதுமக்களுக்கான, உழைக்கும் மக்களுக்கான குடியாட்சியை உருவாக்கியது. வி.இ.இலெனின்

★ உடைமையாளர்களின் நாடாளுமன்ற நடைமுறையுடன் ஒப்பிடும் போது, குடியாட்சி முன்னேற்றத்தில் சோவியத்துகள் ஒரு முன்னோடியாக விளங்கியது உலகளாவிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். வி. இ. இலெனின்

★ சோவியத்துகள் ஒரு வகையில் உயர்ந்தவர்கள், ஏதோ ஒரு வகையில் புதுமையானவர்கள்; உலகப் புரட்சியென்னும் வரலாற்றின் முன் எப்போதும் நிகழாதவற்றை நிகழ்த்தியவர்கள்.

வி. இ. இலெனின்

★ புரட்சிகரமான மக்களிடமிருந்து நம்மை நாமே மறைத்துக் கொள்ளவில்லை; என்றாலும், ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும், ஒவ்வொரு முடிவினை நாம் மேற்கொள்ளும் போதும் அவர்களது தீர்ப்புக்காகக் காத்திருப்பது என்பது ஏற்புடையதன்று. உழைக்கும் மக்கள் கூட்டம் தங்களது கட்டற்ற முயற்சிகளை மேற்கொள்வதையே உறுதியாகவும், திடமாகவும் நாம் நம்பியிருக்கிறோம்.

வி. இ. இலெனின்

★ மக்கள் எதனைக் கருத்தினில் கொண்டுள்ளனர் என்பதைச் சரியாக உணர்ந்தறிந்து வெளியிடும்போது மட்டுமே நம்மால் ஆட்சிப் பொறுப்பு செய்ய இயலும். வி. இ. இலெனின்

★ கூட்டுடமை என்பது ஓர் அரசியல் அமைப்பாக சோவியத்தின் அதிகாரத்தைக் குறிக்கிறது. அது ஒடுக்கப்பட்ட மக்கள் வெள்ளம் நாட்டின் அரசின் அனைத்து வேலைகளையும் நடத்திச் செல்ல வகை செய்கிறது; அதுவன்றி, பொதுவுடமை என்பது நினைத்துப் பார்க்கவும் இயலாதது. வி. இ. இலெனின்

★ சமன்மைக்கான பாதையை அதன் இறுதி விளக்க வரை மார்க்சு அறிந்திருந்தாரென்றோ மார்ச்சியவாதிகள் அறிந்திருக்கிறார்கள் என்றோ நாங்கள் உரிமை கோரவில்லை. அது போன்ற எந்த ஓர் உரிமையினையும் கோருவதென்பதே அறிவற்ற செயலாகும். நாம் அறிந்திருப்பதெல்லாம் இந்தப் பாதை எந்தத் திசையில்

செல்கிறது என்பதையும், உழைக்கும் மக்கள் படை அவ் வழியைப் பின்பற்றிச் செல்கிறது என்பதை மட்டும்தான், கோடிக்கணக்கானவர்கள் அவர்களின் உரிய கைகளில் பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும்போது அவர்கள் பெறவுள்ள பட்டறிவின் மூலம் மட்டுமே நடைமுறை விளக்கங்கள் வெளிச்சத்திற்கு வரக்கூடும்.

வி.இ.இலெனின்

★ அரசு எப்போதுமே நாட்டு மக்களின் கருத்து என்பதன் மேற்பார்வையின் கீழேயே இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். வி.இ.இலெனின்

★ பொறுப்பான தலைவர்களைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பொதுமக்கள் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அவர்களை மாற்றி அமைக்கும் உரிமையினையும், அவர்களின் நடவடிக்கையின் ஒவ்வொரு சிறு அடியினையும் அறிந்து, சரி பார்க்கும் உரிமையினையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

வி.இ.இலெனின்

★ உழைக்கும் மக்களால், அவர்களது புரட்சிகரமான ஆற்றலினாலும், முயற்சியினாலும், உருவாக்கப்பட்ட சோவியத்துகள் என்பது ஒன்று மட்டுமே. மக்களின் நலன்களை முன்னேற்றமடையச் செய்வதற்காக அவர்களின் முழு உழைப்பிற்கான உறுதிப்பாடாகும். வி.இ.இலெனின்

★ மக்கள் வெள்ளத்தினால் ஆதரிக்கப்பட்ட நோக்கங்கள் மட்டுமே வலிவுடையனவாயிருக்கும்; அத்தகைய அமைப்புகளே கால வெள்ளத்தில் நீடித்திருக்கும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ இயன்றதைத் தேவையாகவும், கனவுகளை நடைமுறையாகவும் மாற்றவல்ல ஒரே, குறைவேபடாத ஆற்றலின் ஊற்றுக்கண் மக்களே.

மாக்சிம் கோர்க்கி

★ ஒவ்வொரு மக்கள் கூட்டமும் வியத்தகு பணியாற்றும் வாய்ப்புகளுக்கான ஓர் ஊற்றுக் கண்ணாகும். மாக்சிம் கோர்க்கி

★ முன்னேற்றத்தின் குருதி ஓட்டத்தைப் பாதுகாக்கும் நிலம் மக்களே யாவர். விசாரியோன் பெலன்ஸ்கி

★ மக்களோ சமுதாயமோ தவறிழைக்காத சரியான, மிகச் சிறந்த ஆய்வுரைஞர்கள் என்பதைப் பற்றி நான் உறுதியுடன் நிறைவு அடைந்துள்ளேன். விசாரியோன் பெலன்ஸ்கி

★ தனிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ள இயலும்; ஆனால் சமுதாயத்தினால் அவ்வாறு செய்ய இயலாது ஒரு வேளை சமுதாயம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டாலும் கூட, இது நீண்ட காலத்திற்கு நீடிக்க இயலாது. அதனுடைய ஆளுமை எவ்வளவு தீவிரமானதாக இருக்கிறதோ, அதனுடைய பழிவாங்கும் தன்மையும் அவ்வளவு இரக்க மற்றதாக இருப்ப துடன், அதனுடைய சுருக்கமான பாராட்டுதலும் ஒளிமிக்கதா யிருக்கும், அதனுடைய ஏளனம் இகழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். விசாரியோன் பெலன்ஸ்கி

★ மக்கள் எப்போதுமே உண்மையை வெளிப்படுத்துபவர்களாக இருப்பர். மக்களின் வாழ்க்கை எப்போதுமே பொய்யானதாக இருக்க இயலாது. அலெக்சாண்டர் எர்சன்

★ மக்கள் எவ்வாறு ஒரு கருத்தை ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதே அதனுடைய செயல்படுதிறனை அளவிடும் ஒரே கருவியாகும். எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ ஒரு நாடு, ஒரு முறை வரலாற்று மேடையில் தோன்றிவிட்டதென் றால், தடைசெய்ய இயலாத வண்ணம் அது முன்னேற்றமடையும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

## மக்களுக்கான வேண்டுகோள்

★ மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாக உள்ளபோது ஒரு நாடு வலிமையுடையதாகும் என்பது நமது கருத்து. மக்கள்

அனைத்தைப் பற்றியும் அறிந்திருக்கும்போதும், அனைத்தைப் பற்றியும் ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ள இயன்றவராக இருக்கும் போதும், அனைத்தையும் கவனத்துடன் செய்யும் போதும், அது வலிவுடன் விளங்குகிறது. வி.இ.இலெனின்

★ வகுப்பு உணர்வும், உழைப்பாளிகளின் வீரப் பண்பும் நமது வலு வின் முதன்மையான காரணங்களாகும். வி.இ.இலெனின்

★ ஒடுக்கப்படுவது மற்றும் கொடுங்கோன்மையிலிருந்து எளிய மக்கள் உண்மையிலேயே விடுவிக்கப்பட்டது என்பது உலகில் எவ்விடத்திலும் எப்போதும் கட்டற்ற, வீரமான கவனமான மக்களின் போராட்டத்தினாலன்றி வேறு எந்த வழியினாலும் செய்து முடிக்கப்படவில்லை. வி.இ.இலெனின்

★ எதிர்காலத்தில் ஒவ்வொரு கட்சியின் முதன்மையான பணி அதனுடைய செயல்திட்டங்களும், அவற்றை நிறைவேற்றுவதற் கான நடைமுறைகளும், சரியானவை என்பதை மக்களின் பெரும் பான்மையினருக்கு விளக்கி ஏற்கச் செய்வதாகும்.
வி.இ.இலெனின்

★ அனைத்துப் பக்கங்களிலும் மேற்கொள்ளப்படும் அரசியல் போராட்டம் என்பது உழைப்பாளிகளது அரசியல் கல்வியின் தன்மை நலன்களில் ஒரு கருத்துக் குவிப்பு; அது அனைத்து மக்களின் ஒட்டு மொத்த சமூக முன்னேற்றத்தின் சிறப்பு நலன் களுடன் இயைந்ததாக இருப்பதாகும். வி.இ.இலெனின்

★ தனிப்பட்ட செல்வாக்கும், கூட்டங்களில் பேசுவதும் அரசியலில், அனைத்து வேறுபாடுகளையும் ஏற்படுத்துகிறது. அவையின்றி எந்த அரசியல் நடவடிக்கையும் இருக்க இயலாது.
வி.இ.இலெனின்

★ அரசியல் போராட்டத்தின் உழைப்பு எப்போதுமே வீணாவதில்லை.
வி.இ.இலெனின்

★ போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு நடத்திச் செல்ல நீ கற்றுக் கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் உனது பொருளாதார திட்டங்களினால் எவ்விதப் பயனும் விளையாது.

வி.இ.இலெனின்

★ ஒவ்வொரு போராட்டவாதியும் ஒரு தலைவராக, பொருளாதார முன்னேற்றப் பணிகளில் உழவர்கள், உழைப்பாளிகளின் தலைவராக இருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ ஒவ்வொரு போராளியும், கொள்கைப் பரப்பினரும் நமக்குத் தேவை. சரியாகக் கட்சி உணர்வின் அடிப்படையில் அவரது கடமையை ஆற்றுவாரேயானால், அவரது பணியைச் செம்மையாகச் செய்தவர் ஆவார். வி.இ.இலெனின்

★ ஒரு தெளிவான, நன்கு சிந்தித்து முடிவு செய்யப்பட்ட கொள்கை முடிவு இன்றி மேற்கொள்ளப்படும் எந்த ஒரு போராட்டமும் வெறும் முழக்கத்தைப் பயன்படுத்தும் நிலைக்கே கீழே தள்ளப்படுகிறது.

வி.இ.இலெனின்

★ வகுப்புப் பிரிவினைக்கு அப்பாற்பட்ட சிற்றுடைமை அறிவாளிகள் குணநலனென்பது, உயர்ந்து ஒலிக்கும் சொற்றொடர்களை அள்ளி வீசுவதேயாகும். இந்தக் கசப்பான உண்மை எளிமையாகவும், தெளிவாகவும், ஒரு நேரடியான முறையிலும் மக்களுக்குச் சொல்லப்பட வேண்டும். வி.இ.இலெனின்

★ பேச்சு வல்லமை பெற்றவர் என்பவர்களே உழைக்கும் மக்களின் இழிவான எதிரிகள் என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்ல நான் சோர்வடையவே மாட்டேன். வி.இ.இலெனின்

★ இந்தப் பொதுமக்களின் ஒவ்வொரு சிந்தனை, பேச்சு முதலியவற்றின் மனநிலையில் உள்ள வேறுபட்ட தன்மைகளை அறிந்து கொள்ள இயலும் அளவுக்குக் குறிப்பிட்ட பொறுமையுடனும், எச்சரிக்கையுடனும் பொதுமக்களை அணுக நாம் கற்றுக் கொள்ளவேண்டும்.

வி.இ.இலெனின்

★ பொதுமக்களுக்கு இன்னமும் அறிமுகமில்லாத, அவர்களால் எளிதில் புரிந்து கொள்ள இயலாத கனத்த சொற்படை பயன்பாட்டையும், அயன்மொழிச் சொற்களையும், கைவயமுள்ள முழக்கங்களையும், விளக்கங்களையும், முடிவுகளையும் முழுவதுமாக தவிர்த்துவிட்டு, மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மொழியில் எளிமையாகவும், தெளிவாகவும் பேசுக. வி.இ.இலெனின்

★ கொள்கைப் பரப்பிலும், போராட்டத்திலும் தெளிவு பெற்றிருப்பது என்பது ஓர் அடிப்படைத் தேவையாகும். வி.இ.இலெனின்

★ முன்னேற்றம் பற்றி விளக்கம் மேற்கொள்பவர்கள் உருசியப் பேச்சு, சிந்தனையின் இன்றியமையாத கருப் பொருள்களைக் கண்டு கொண்டு அவற்றை மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.
வி.இ.இலெனின்

★ கொள்கைப் பரப்பு முழக்கங்களைக் கூவுவதன் மூலம் சிக்கல்களைச் சந்திப்பதை ஒருபோதும் தவிர்க்கக் கூடாது.
வி.இ.இலெனின்

★ ஒவ்வொரு கருத்துப் பரப்புபவரின், ஒவ்வொரு போராளியின் கலை நுணுக்கம் என்பது கேட்பவர்களைப் பிணைக்கும் ஆற்றல் பெற்றதாகவும், தெரிந்த ஓர் உண்மையினை எந்த அளவுக்கு நிறைவாகச் சொல்ல இயலுமோ, எந்த அளவுக்கு எளிமையாகப் புரிந்து கொள்ள வைக்க இயலுமோ, படம் பிடித்தது போன்ற-நினைவில் வைத்திருக்கும் அளவுக்கு செல்வாக்கு ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும். வி.இ.இலெனின்

★ கருத்துரை முழக்கங்களை முழக்குவதன் மூலம் சிக்கல்களை நாம் சந்திக்காமல் தட்டிக் கழிக்கக் கூடாது. வி.இ.இலெனின்

★ சொற்களே மக்களை ஒன்றாகக் கொண்டு வந்து சேர்ப்பவை. எனவே ஒவ்வொருவராலும் நாம் புரிந்து கொள்ளப்படச் செய்ய முயல்வதுடன், உண்மையைத் தவிர வேறெதனையும் பேசாமலும் இருக்க வேண்டும். இலியோ தோல்சுதாய்

★ முன்னேற்றத்தைப் பற்றிக் கருத்துரை செய்வோர் உருசிய சிந்தனைப் பேச்சின் இன்றியமையாத தன்மைகளைக் கண்டு கொள்வதுடன், அதனை மக்களிடம் எடுத்துச் செல்லவும் வேண்டும்.

**மைக்கேல் கால்னின்**

★ பொது மக்களிடம் பேசுவதற்கான ஒரே வழி, வெளிப்படையாகவும் நேரிடையாகவும் பேசுவதேயாகும். **மைக்கேல் கால்னின்**

★ நெருக்கடி ஏற்படும் போதோ, இக்கட்டான வினாக்களைத் தவிர்க்கவோ பொதுப் பேச்சாளர் ஓடிவிடக் கூடாது.

**மைக்கேல் கால்னின்**

★ பொதுமக்களை வழி நடத்திச் செல்ல, நீ அவர்களுடன் தீச்சுடரை ஏந்திச் செல்ல வேண்டும். **மைக்கேல் கால்னின்**

★ ★ ★

# அறிவு, வளர்ப்பு, கல்வி

## அதிக அறிவின் பயனின்மை

★ மனித அறிவு எல்லையற்றது. ஆனால் மனிதன் அறிந்து கொள்ள வேண்டியது தேவையற்றதாகும். மனித அறிவெனும் பேராழியில், மிகவும் இன்றியமையாதவை, மனிதரை வலிவுள்ள வர்களாக்கும், இயற்கையின் மீதும், நிகழ்வுகள் மீதும் அவர் களுக்கு ஆற்றலளிக்கும், இயற்கை ஆற்றல்களையும், வளத்தை யும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும், மனித சமூகத்தின் வாழ்க்கையினை எவ்வாறு மாற்றுவது என்பதையும் கற்பிக்கும் அறிவை மட்டுமே அவன் பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும்.
என்.கே.குருப்ஸ்கயா

★ அதிக அறிவு பெற்றிருப்பது என்பது ஒரு திறமை என நினைப் பது தவறான ஒன்றாகும். அதனுடைய படிநிலையன்றி, அதன் அளவு இன்றியமையாததில்லை.
இலியோ தோல்சுதாய்

★ பேரறிவு என்பது அதிகமானவற்றை அறிந்திருப்பதில் இருப்ப தில்லை. நாம் அனைத்தையும் அறிந்திருப்பதென்பது கற்பனை செய்தும் காண இயலாது. பேரறிவு என்பது, இயன்ற அளவு அதிகமானவற்றை அறிந்திருப்பதில் இல்லை. ஆனால் எந்த அறிவு பயன் நிறைந்தது, எது பயன் குறைந்தது, எது இன்னமும் பயன் குறைந்தது என்பதை அறிந்து கொள்வது என்பதிலேயே உள்ளது.
இலியோ தோல்சுதாய்

★ அறிவு பெறாமல் இருப்பது என்பதற்காக அஞ்சாதே. ஆனால் தவறான அறிவைப் பெற்றிருப்பதற்கு அச்சம் கொள். ஏனெனில் உலகின் அனைத்துக் கேடுகளுக்கும் அதுவே காரணமாகும்.
இலியோ தோல்சுதாய்

★ ஒன்றை அறிந்திருக்காதது என்பது இழிவானதோ, தீங்கானதோ அன்று. எந்த மனிதனாலும் அனைத்தையும் அறிந்து இருக்க இயலாது. தான் அறிந்திராததை அறிந்திருப்பது போல் போலி யாகக் காட்டிக் கொள்வதுதான் இழிவானதும், தீங்கானதுமாகும்.
இலியோ தோல்சுதாய்

★ துண்டு துண்டான, ஒன்றுக்கொன்று இணைப்பற்ற அறிவினை நிரம்பப் பெற்றுள்ள தலை, ஒரு காப்பாளி தனக்கு வேண்டுவதை எப்போதுமே காண இயலாதவண்ணம் ஒழுங்கற்ற முறையில் அமைந்துள்ள ஒரு கிடங்கினைப் போன்றதாகும். அறிவின்றி அனைத்து நடைமுறைகளையும் பெற்றுள்ள தலையானது, அனைத்துப் பெட்டிகள் மீதும் சீட்டு ஒட்டப்பட்டிருந்தும், அனைத்துப் பெட்டிகளும் வெறுமையாகவுள்ள ஒரு கடையைப் போன்றதாகும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ பயிலும் பாடத்தில் கவனத்தைக் குவிக்கும் மேலான ஆற்றலே பேரறிவாகும். இவான் பவ்லோவ்

★ அனைத்தைப் பற்றிச் சிறிதேனும், அதே போல் ஒரு சிலவற்றைப் பற்றி அனைத்தையும் அறிந்திருப்பது நன்றே.
கே.ஏ. திமிரியாசேவ்

★ கடினமான பாடங்கள் என்று எதுவுமே இல்லை, ஆனால் எண்ணற்றவைப் பற்றி நாம் ஏதும் அறியாமலும், அதனைவிட அதிகமானவற்றைப் பற்றி மோசமாகவும், தெளிவற்றும் பகுதி பகுதியாகவும், தவறாகவும் கூட நாம் அறிந்திருக்கிறோம். இந்தத் தவறான அறிவு, நாம் பெற்றிராதவற்றைவிட அதிகமாக நம்மைக் குழப்பித் தடுத்துப் பின்னோக்கிச் செலுத்துகிறது.
அலெக்சாண்டர் எர்சன்

★ என்னைப் பொறுத்தவரை, எது ஒன்றினைப் பற்றி அறியாம லிருப்பதுவோ, எதுவும் சொல்ல இயலாமல் இருப்பதுவோ அறி யாமையில்லை; தான் அறியாதவற்றைப் பற்றிப் பேசுபவனே அறியாமை மிகுந்தவனாவான். எம்.எம்.பிரிஷ்வின்

★ மிகச் சிலரால், அதிலும் மிகச் சிறந்த மனிதர்களால் மட்டுமே 'எனக்கு அது தெரியாது' என்பதை எளிமையாகவும் வெளிப்படையாகவும் சொல்ல இயலும். திமிட்ரி பிசரேவ்

## அறியாமை

★ மனித இனத்தில் அறியாமை என்ற ஒரே ஒரு கொடியதுதான் உள்ளது. அதே போன்று, கற்றறிதல் என்ற ஒரே ஒரு தீர்வுதான் அதற்கெதிராக உள்ளது. திமிட்ரி பிசரேவ்

★ இந் நாள்களில், அறியாமையும் மன உணர்வுகளும் அற்று இருப்பன ஓர் ஒழுக்கக் கேடாகவே ஆகிவிட்டது.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ எங்குச் சரியான உண்மை என்பது இல்லாமல் உள்ளதோ, அங்கு ஊகங்கள் இடம் பெறுகின்றன. ஆனால் பத்து ஊகங்களில் ஒன்பது தவறானவையாக இருக்கின்றன. மாக்சிம் கோர்கி

★ மனிதனின் அற உணர்வுகளின் மீதான தளைகளைத் தகர்த்தெறிகிறார்களோ, அவர்களே உண்மையான மக்களாவர்.
மாக்சிம் கோர்கி

★ தவறான எண்ணங்கள் என்பவை, காலம் கடந்து போன உண்மைகளின் இடிபாடுகளாகும். மாக்சிம் கோர்கி

★ அறியாமை என்பது மனிதனை உலகைப் பற்றி அக்கறையற்றவனாக ஆக்குகிறது. இந்த அக்கறையின்மை, மெதுவாக ஆனால் உடனடியாகத் தீங்கு விளைவிக்கும் ஒரு புற்று நோய் போல் வளர்கிறது. கான்ஸ்டான்டின் பவ்ஸ்தோவ்ஸ்கி

# அறிவு

★ உழைக்கும் மக்கள், அறிவிற்காக, அதனை அவர்கள் வென்றடைய வேண்டியிருப்பதால், ஏங்கித் தவிக்கின்றனர்.

வி.இ.இலெனின்

★ அறிவற்ற உழைப்பாளிகள், பாதுகாப்பு அற்று உள்ளனர்; அறிவுடன் ஓர் ஆற்றலாகவே அவர்கள் விளங்குகின்றனர்.

வி.இ.இலெனின்

★ புரட்சியில் வெற்றி பெற அறிவுக் கூர்மையுடனும், நல்நோக்கத்துடனும், பங்கேற்றுக் கொள்ள, மெய்யறிவு தேவைப்படுகிறது.

வி.இ.இலெனின்

★ சமன்மையம் என்பது அறிவியல், பண்பாட்டின் ஒரு கூட்டமைப்பாகும். சமன்மைச் சமுதாயத்தின் ஒரு தகுதி படைத்த உறுப்பினராக இருக்கக் கடினமாகவும், நன்கும் கற்றறிந்தும், அறிவு என்னும் பெருஞ்செல்வத்தினைக் கவர்ந்து கொள்ள வேண்டும்.

மைக்கேல் கால்னின்

★ தனது விடுதலையை வென்று பெற்ற ஒரு நாட்டின், ஒரு மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலத்திற்கான பாதைக்கு, அறிவினாலன்றி வேறு எதனாலும் ஒளியூட்ட இயலாது. த.ஐ.பிரஸ்னேவ்

★ தங்களது தாய், தந்தையர்களைத் தொடர்ந்து தாங்களும் வாழ்வில் வெற்றி பெறவும், தங்களது மூத்த உடன் பிறந்தோர்கள் மேற்கொண்டுள்ள மாபெரும் முயற்சிகளில் உதவவும், இளைஞர்கள் தங்களை அறிவினால் நிரப்பிக் கொள்ளவேண்டும்.

மாக்சிம் கோர்கி

★ நன்கு வாழ, நன்கு உழைக்க வேண்டும்; நிலையாகக் காலூன்றி நிற்க, அறிவினைத் திரட்டிப் பெற வேண்டும். மாக்சிம் கோர்கி

★ அறிவைவிட ஆற்றல் மிக்கது வேறொன்றுமில்லை; அறிவு நிறைந்த மனிதன் வெற்றி கொள்ளப்பட இயலாதவன். மாக்சிம் கோர்கி

★ ஒருவன் எவ்வளவு அதிகமான அறிவு பெற்றுள்ளானோ, அவ்வளவு அதிகமாக அவன் வலிமை பெற்றவனாக இருப்பான்.
மாக்சிம் கோர்கி

★ ஆண்களின் உழைப்பால் உருவாக்கப்பட்டு, அறிவியலால் கவர்ந்து கொள்ளப்பட்ட அறிவானது திரண்டு கொண்டும், ஆழமாகவும், அகலமாகவும், கூர்மையாகவும் வளர்ந்து கொண்டுள்ளது; நமது எண்ணற்ற கலைகளின், படைப்பு ஆற்றல்களின் முடிவற்ற முன்னேற்றத்திற்கு இதுதான் அடித்தளமாக உள்ளது.
மாக்சிம் கோர்கி

★ கற்றறிதலுக்கான தேவையைப் பற்றி நிலைநாட்டுதல் என்பது கண்பார்வையின் பயனைப் பற்றி விளக்குவது போலாகும்.
மாக்சிம் கோர்கி

★ அறிவு என்பது நமது உலகின் முழுமையான மதிப்பு வாய்ந்ததாகும். நாம் கற்றறிய வேண்டும். அறிவுத் தாகம் கொண்டவர்களாக நாம் இருக்க வேண்டும். சில பொருள்கள் இன்னமும் அறிந்து கொள்ளப்படாமல் உள்ளபோதும், அறிந்து கொள்ள இயலாதது என்று எதுவுமே இருப்பதில்லை. மாக்சிம் கோர்கி

★ முன்னேற்றமற்று இருப்பதற்கும், இயக்கம் அற்று இருப்பதற்கும் தலையாய காரணமாக இருப்பது அறியாமையே ஆகும்.
மாக்சிம் கோர்கி

★ அடிக்கடி சொல்லப்படுவது போல், நம்பிக்கை இன்றி எந்த மனிதனும் வாழ இயலாது என்பது உண்மையானால், பின்னர் அறிவினைப் போன்ற அனைத்து வல்லமை படைத்த நம்பிக்கையினைத் தவிர வேறு எந்த நம்பிக்கையும் இருக்க முடியாது.
இலியா மெச்சின்கோவ்

★ அறிவே, அறிவைத் தவிர வேறு எந்த ஒன்றினாலும், மனிதனை விடுதலை பெற்றவனாகவும், மிக உயர்ந்தவனாகவும் ஆக்க இயலாது.
திமிட்ரி பிஸரேவ்

★ நமது நோக்கம் கற்றறிவது, மேலும் கற்பது அதன் மூலம் எவ்வளவு இயலுமோ அவ்வளவு அறிவினைத் திரட்டுவது என்பதே ஆகும். ஏனெனில், தீவிரமான சமூக எண்ணங்களும், நடைமுறைகளும் அறிவின் மீதே செழிக்கின்றன என்பதாலும், மனித இனத்தின் எதிர்கால மகிழ்ச்சி என்பது அறிவில் இருந்தே வளர்கிறது என்ப தாலுமே. ஆன்டன் செகாவ்

★ நமக்குத் தேவைப்படுவது அறிவார்ந்த, கல்வியறிவு பெற்ற மக்களே. மனித இனம் ஒரு மகிழ்ச்சியான வாழ்விற்கு அருகில் ஈர்க்கப்படும் போது, பின் ஒரு நாளில் அவர்கள் பெரும்பான்மையானவர் களாக இருக்கும் வண்ணம், அவர்கள் எண்ணிக்கை பெருகவே செய்யும். ஆன்டன் செகாவ்

★ நமது குறிக்கோள் என்னவென்றால், ஒவ்வொருவரும், அவர் களின் தந்தைகளும், முன்னோர்களும் கண்டும், கேட்டும் அறிந்ததை விட அதிகமாகக் கண்டும், கேட்டும், கற்றும் அறிய வேண்டும் என்பது தான். ஆன்டன் செகாவ்

★ இளைஞனே, கற்றறியும்போது ஒரு மனிதனைப் போல இரு! உன்னால் இயன்ற அளவு மிகச் சிறந்த முறையில் கற்று அறி வது என்பதிலேயே உனது திறமை உள்ளது. நீ ஒரு ஒட்டுண்ணி யாகவோ, உறிஞ்சியாகவோ இல்லாமல் இருக்கவேண்டு மென்பது உனது ஆண்மையின் பெருமையினால் எதிர்பார்க் கப்படுவது. மனச் சோர்வுக்கு இடமளிக்காதே.
வாசிலோ சுகோம்லின்ஸ்கி

★ அறிவு என்பது உன்மீது தொடுக்கப்படும் தாக்குதல்களில் இருந்து உன்னைக் காக்கும் கவசமாகும். ரூடாகி

★ அறிவு என்பதே வலிமை. சூழ்ந்துள்ள இயற்கையின் செயலற்ற தன்மையைவிட எந்த அச்சமூட்டும் தப்பெண்ணம் எதனாலும் அதனைத் தடுக்க இயலாது. அலெக்சாண்டர் எர்சன்

★ *அறிவென்னும் ஊற்று எப்போதுமே வற்றிப் போவதில்லை. மனிதன் எத்தகைய் வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், தேடிப் பெறவும், கண்டு கொள்ளவும், கற்றறியவும் இன்னமும் சில பொருள்கள் எஞ்சி இருக்கத்தான் செய்கின்றன.* இவான் கோன்சரோவ்

★ *அறியாமையைப் பற்றி எப்போதும் தற்பெருமையாகப் பேசாதே; அறியாமை என்பது ஆண்மையற்றதாகும்.*
நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ *ஒருவனது வாழ்க்கையினை முன்னேறச் செய்ய வேண்டியதன் தேவையானது, மனத்தில் முயற்சியின் தேவையினைத் தவிர்க்க இயலாதபடி உருவாக்குகிறது.* நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ *மனிதன் எங்கே சென்றாலும் அவனது துணைவனாக இருப்பது அறிவே ஆகும்.* தேவிட் குராமிச்விலி

## ஒழுக்கமும் அறிவு வளர்ச்சியும்

★ *மனிதனின் தனித்தன்மையைவிட மதிப்பு மிகுந்ததும், குழப்பம் நிறைந்ததும் வேறெதுவுமில்லை. அதனுடைய அனைத்துப் பக்க முன்னேற்றமும், ஒழுக்கத் தூய்மையும் பொதுவுடைமைக் கல்வியின் முடிவான நோக்கமாகும்.* வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ *நாம் வளர்க்கும் ஒரு மனிதன், தூய ஒழுக்கம், உள்ளுயிர்ச் செல்வம், நல்ல உடல்நிலை ஆகியவற்றின் கலவையாக இருக்க வேண்டும்.*
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ *இன்றைய இளைஞனைப் பயிற்றுவிப்பது, கல்வியளிப்பது, கற்றுத் தருவது ஆகியவற்றின் முழு நோக்கமும், பொதுவுடைமை மெய்மைகளை அவர்களில் விதைப்பதாகவே இருக்க வேண்டும்.*
வி.இ. இலெனின்

★ ஒரு கல்விக்கான ஏக்கம் ஒவ்வொரு மனிதனுள்ளும் அமர்ந்து உள்ளது; அவர்கள் மூச்சுவிடும் காற்றுக்காக ஏங்குவது போல மக்கள் ஒரு கல்விக்காக ஏங்கி அதனைப் பெறுகிறார்கள்.

இலியோ தோல்சுதாய்

★ அனைத்து மக்களுடைய நல்வாழ்வு அல்லது இழப்புக்கேடு என்பது கல்வி என்பதன் வழியாகவே வந்தடைவதாகும்.

என்.ஐ.நோவிகோவ்

★ ஒரு மாநிலத்தின் வளமையும், நாட்டின் நலனும் தவிர்க்க இயலாத வண்ணம் நல்லொழுக்கங்களையே சார்ந்துள்ளன; நல்லொழுக்கங்களும் நல் வளர்ப்பையே சார்ந்துள்ளன. என்.ஐ.நோவிகோவ்

★ தொடர்ந்து அதிகரித்து வரும் தலைமுறைகளை முழுமையான நன்மை எனப்படும் மனித இனத்தின் பொதுவான, முடிவற்ற தொடர்தலுக்குக் கொணர்வது என்பதுவே அனைத்து வகையான கல்வியின் இன்றியமையாத நோக்கங்களின் ஒன்றாகும்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ மனத்தை முன்னேற்றமடையச் செய்வதுடன்கூட, ஒரு குறிப்பிட்ட அளவு தகவல்களை அளிப்பதுடனும், தீவிரமான பணிக்கான ஒரு தாகத்தைத் தூண்டுவதாகவும் கல்வி இருக்க வேண்டும்; இதுவன்றி வாழ்க்கை என்பது பயன் நிறைந்ததாகவோ, நிறைவு அளிப்பதாகவோ இருக்காது. கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ ஒரு குழந்தையை வளர்ப்பது என்பது பணி செய்யும் பழக்கத்தை அவர்களிடையே உருவாக்கும். அதன்பால் ஒரு விருப்பத்தை உண்டாக்கித் தனது தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உதவி செய்வதாக இருக்க வேண்டும்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ மனிதனின் படைப்பு நோக்கங்களை நிறைவேற்றுவதாகவே கல்வி இருக்கவேண்டும். அறிவினைத் திரட்டுவது மட்டுமே போதுமானதன்று; அது எவ்வளவு இயலுமோ அவ்வளவு அகன்ற

தாக விரிக்கப்பட்டு, நடைமுறையில் செயல்படுத்தப்படவும் வேண்டும்.
என்.ஏ.ரூபாகின்

★ உலகைச் சூழ்ந்துள்ள அனைத்து நிலைகள், எல்லைகள் பற்றி தன் நேருரிமை நோக்கத்தையும், தன் நேருரிமைக் கருத்தையும் பெற்றுள்ள ஒரு மனிதனே ஒரு கற்றறிந்த மனிதன் ஆவான்.
என்.ஏ.ரூபாகின்

★ கற்றறிந்தவனாக, அறிவு நிறைந்தவனாக, பண்பட்டவனாக நீ இருக்க வேண்டுமானால், நாளையும், உன் நாள் முழுவதும் உனது கல்வி, நுண்ணறிவு, பண்பாட்டினைச் சிறு செய்திகளிலும், பெரிய செய்திகளிலும் வெளிப்படுத்துபவனாக இருக்க வேண்டும்.
என்.ஏ.ரூபாகின்

★ அறியாதவன் ஒரே ஒரு பக்கத்தைப் மட்டும் பார்த்து அதனிலிருந்து மற்ற அனைத்துப் பக்கங்களையும் மதிப்பீடு செய்கிறான், ஆனால் கற்றறிந்தவனோ பல மாறுபட்ட பக்கங்களைப் பார்க்கிறான்.
என்.ஏ.ரூபாகின்

★ தனிப்பட்ட மனிதனுக்கும், மனித இனத்துக்கும் இடையே உள்ள இயல்பான தொடர்பை வீட்டுக்குக் கொண்டு வரும் இணைப்பாகவும், வழியாகவும் பொதுக் கல்வி என்பது உள்ளது.
திமிட்ரி பிஸரேவ்

★ சிந்தனை! ஒரு மிகப் பெரிய பொருண்மை! சிந்தனையைத் தவிர வேறு எது மனிதனை உயர்ந்தவனாக்குகிறது?
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ பலவகையான கல்வியும், முன்னேற்றமும் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இன்றியமையாதவை என்றாலும் முதல் இடம் கோட்பாட்டுக் கல்விக்கே கொடுக்கப்பட வேண்டும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ கல்வி என்பது ஒரு மிகப் பெரிய ஒன்று; ஒவ்வொரு மனிதனின் அனைத்து முன்னேற்றமுமே அதனையே சார்ந்துள்ளது.

**விசாரியோன் பெலின்ஸ்கி**

★ பயன்படுத்தி முடிக்கப்பட இயலாத படைப்பு ஊற்றுகள் மனிதனுள் அடைக்கப்பட்டுள்ளன. இல்லாவிட்டால் அவன் மனிதனாகவே ஆகியிருக்கமாட்டான். அவை அடைப்பு நீக்கப்பட்டு, விடுவிக்கப் படவேண்டும். அறம் வேண்டும் என்ற கோரிக்கைகள் மூலம் இது செய்யப்படக் கூடாது; ஆனால் மனிதனை முறையான சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளில் வைத்திருப்பதன் மூலமே செய்யப் பட வேண்டும்.

**ஏ.என்.பில்ஸ்டாய்**

★ கல்வி என்பது கல்வியறிவு பெற்ற மனிதர்களை உருவாக்குவது என்பதில் மட்டுமே நின்றுவிடுவதாக இருக்கக் கூடாது. பள்ளி யுடன் முடிவடைந்து விடாமல், பொது வாழ்விலும் தொடரும் கல்வி, தனிப்பட்ட மனிதனின் படைப்புக் கலைகள், ஆற்றல், தன்னார்வம் ஆகியவற்றைப் பயன்படுத்தவும், முன்னேற்றம் பெறச் செய்யவும் உதவத் தேவையான ஆற்றலையும் வழிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

**என்.ஏ. உமோவ்**

★ தங்களது நுகரறிவுகளையும், போராட்டங்களையும், கோட்பாடு களையும் இளைய தலைமுறைக்கு வளர்ந்தவர்களின் தலைமுறை விட்டுச் செல்வது என்பதை உள்ளடக்கியதே கல்வி எனப்படுவது.

**ஆண்டன் மக்ரென்கோ**

★ எவ்வளவு அதிகமாக ஒருவன் தெளிவு பெற்றவனாக இருக்கிறானோ, அந்த அளவுக்குத் தனது தாய்நாட்டுக்குப் பயன் நிறைந்தவனாக அவன் இருப்பான்.

**அலெக்சாண்டர் கிரிபோயென்டோவ்**

★ ஒரு சமன்மைய நாட்டின் மக்கள் ஓர் உயர்ந்த அழகு நிறைந்த உணர்வைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும்.

**மைக்கேல் கால்னின்**

★ *அழகு நிறைந்த, படைப்பாற்றல் மிக்க அடிப்படைகளைப் பெறாமல் எந்த மனிதனும் குழந்தைப் பருவத்தைக் கடக்கக் கூடாது; இவையின்றி எந்த ஒரு தலைமுறையும் தனது பயணத்தை மேற்கொள்ளவும் கூடாது.* பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ *உண்மையான மக்களின் வாழ்க்கையைப் பற்றிய உள்ளுறையைப் புரிந்து கொள்ள, அழகுணர்ச்சி மிக்க ஒருவனால் மட்டுமே இயலும்.* பெலிக்ஸ் செர்ஸின்ஸ்கி

★ *பண்பாட்டின் வரலாற்றை அறிந்திராத எந்த ஒரு மனிதனும் நாகரிகமானவனாக ஆக இயலாது.* மாக்சிம் கோர்கி

★ *பண்பாட்டில் ஒரு நெடிய உயர்வு ஏற்படாமல், சமன்மைச் சமுதாயம் என்பது ஏற்பட இயலாது. அது அனைத்து வெற்றிகளையும் ஒருங்கிணைந்து உறுதிப்படுத்தும் பைஞ்சுதையாக விளங்குகிறது.*
என்.கே.குருப்ஸ்கயா

★ *மிக உயர்ந்த கொடைகளில் கல்வியும் ஒன்று என்பது மெய்ப்பிக்கப் படவேண்டுமா? கல்வியற்ற மக்கள் முரடர்களாகவும், வறியவர்களாகவும், துன்பம் சூழ்ந்தவர்களாகவும் உள்ளனர்.*
நிகலோய் செர்னிசேவ்ஸ்கி

★ *முழு அளவில் கல்வி கற்பிக்கப்படுவதற்கு, ஒரு தனி மனிதன் மூன்றினைப் பெற்றிருக்க வேண்டும் - பரந்த அறிவு, சிந்திக்கும் பழக்கம், உணர்வுகளைப் பற்றிய பெருந்தன்மையான எண்ணம். சிறிதளவே அறிவு பெற்றுள்ளவர் ஓர் அறிவிலியாவர்; பழக்கப் படுத்திக் கொள்ளாதவரின் மனம் தூய்மையற்றது அல்லது நகைச் சுவை உணர்வற்றது. பெருந்தன்மையான உணர்வுகளைப் பெற்றிராதவர் கொடுமனம் படைத்தவர்.*
நிகலோய் செர்னிசேவ்ஸ்கி

# தன் முன்னேற்றம்

★ கல்வியென்பது பள்ளியினால் மட்டுமே தனியாகச் செய்யப்படும் ஒரு கடமையன்று. பள்ளி, அறிவிற்கான திறவுகோலை மட்டுமே உனக்களிக்கிறது. உனது வாழ்க்கை முழுவதும் பள்ளிக் கல்விக்கு வெளியிலேயே இருக்க வேண்டும். ஒருவன் தன் வாழ் நாள் முழுவதும் தனக்குத் தானே கற்பித்துக் கொள்ள வேண்டும்.
ஏ.வி.லுனாசர்ஸ்கி

★ மனிதன் உயிர் வாழ்ந்திருக்கும் வரை, அவன் தலை நரைத்து விட்ட போதும் கூட, அறிவைத் திரட்ட இயலும், திரட்ட வேண்டும், திரட்ட விரும்ப வேண்டும். எனவே, வாழ்க்கை என்பது பள்ளியெனும் சட்டத்தில் குறுக்கிப் பொருத்தப்பட இயலாதென்பதால், பள்ளிக்கு வெளியே பெறப்படும் அனைத்துக் கற்றறிதலும், பள்ளிக் கல்விக்கு வெளியே மேற்கொள்ளப்படும் ஒரு நடைமுறையேயாகும்.
ஏ.வி.லுனாசர்ஸ்கி

★ எந்த ஒரு மனிதனும் உலகில், ஏற்பு நிலையில், அதாவது முழு வளர்ச்சி பெற்றவனாகப் பிறப்பதில்லை. அவனது வாழ்க்கை எவ்விதமானதாயிருந்தாலும், அது இடையறாத முன்னேற்ற மாகவும், முடிவடையாத வடிவமைப்பாகவும் இருக்கக்கூடும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ நீ பள்ளியில் கற்றறிந்து கொள்ள வேண்டுமானாலும், பள்ளியை விட்டு நீங்கியபின் இன்னமும் அதிகமாக நீ கற்றறிதல் கொள்ள வேண்டும்; இந்த இரண்டாவது கற்றறிதல், உனது தனித் தன்மை மீதும், சமூகத்தின் மீதும் கொண்டிருக்கும் செல்வாக்கும், ஏற்படுத்தும் விளைவுகளும், அளவிட இயலாதபடி மிகவும் இன்றி யாதவையாம்.
திமிட்ரி பிசரேவ்

★ ஏற்பு நிலையில் உள்ள கோட்பாடுகள் நல்ல நண்பர்களிட மிருந்தோ, ஒரு புத்தகக் கடையிலிருந்தோ வாங்கப்பட இயலாது. நம்முடைய கலைகளில் தனிப்பட்ட மனச் சிந்தனை நடைமுறை யின் விளைவாக ஏற்படுபவையாகும் அவை.
திமிட்ரி பிசரேவ்

★ ஒவ்வொரு நாளின் பட்டறிவிலிருந்தும் சிறு சிறு மணிகளாகத் திரட்டப்படுவதென்பதே அறிவாகும். திமிட்ரி பிசரேவ்

★ குனிந்து வணங்கிச் சுரண்டிப் பெறப்படும் அல்லது செல்வாக்கு மிக்க ஓர் உறவினரின் உதவியுடன் பெறப்படும் ஒரு பணிவாய்ப்பினை விட, ஒருவரது தன் முயற்சியினால் பெறும் பணிவாய்ப்பே எப்போதுமே நம்பத் தகுந்ததாகவும், அகண்ட பயனளிப்பதுவும் ஆகும். திமிட்ரி பிசரேவ்

★ அனைத்து உண்மையான கல்வியும் முழுவதுமான தன் முயற்சியால் பெறப்பட்டவையே. என்.ஏ.ரூபாகின்

★ மனிதனை எது கல்வி கற்றவனாக ஆக்குகிறதென்றால், அவன் என்ன சிந்திக்கிறான், என்ன பட்டறிகிறான், மற்ற மக்களிடமிருந்தோ, புத்தகங்களிலிருந்தோ கற்றவற்றை ஏற்றுக் கொள்வது பற்றி என்ன உணர்கிறான் என்பது போன்ற அவன் உள்ளுறைப் பணிகள்தாம். என்.ஏ.ரூபாகின்

★ மற்றொருவருடைய அறிவுரைகள் ஒரு கலந்தாய்வுக் கருத்தேயன்றி வேறெதுமில்லை. என்.ஏ.ரூபாகின்

★ நீயாகக் கற்பதை எப்போதும் நிறுத்திவிடாதே, நீ எவ்வளவு கற்றிருந்தாலும், நீ எவ்வளவு அறிந்திருந்தாலும், கல்விக்கு வரையறைகளோ எல்லைகளோ இல்லையென்பதை எப்போதும் நீ மறந்து விடாதே. என்.ஏ.ரூபாகின்

★ தனது முயற்சியின்றி எவரும் தனது குறிக்கோள்களை அடைந்ததில்லை. வெளியிலிருந்து பெறப்படும் உதவி உனக்குரிய முயற்சிகளுக்கான மாற்றாக இருக்க இயலாது. என்.ஏ.ரூபாகின்

★ உனது சிந்தனைகளைச் சொல்லாற்றலுடன் வெளிப்படுத்த இயலாமல் இருப்பது ஒரு தவறேயானாலும், உனக்குரிய

சிந்தனைகள் எதனையும் பெறாதவராக இருப்பதென்பது, அதைவிடப் பெரியதொரு தவறாகும். என்றாலும், உனக்குரிய முயற்சியினால் பெறப்பட்ட அறிவிலிருந்து மட்டுமே உனக்குரிய சிந்தனைகள் வரும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ உனது அறியாமையை அதன் கண்களில் நேரடியாகக் காணாத வரை, உனது அறிவை வளர்த்துக் கொள்ள எப்போதுமே உன்னால் இயலாது. கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ அறிவியலின் கொடுமுடியை அடைய முயலுமுன், அதன் அடிப் படைகளைக் கற்றறிந்து கொள்; முதலடியை முடிக்கும் முன், எப்போதுமே இரண்டாவது அடியை எடுத்து வைக்காதே. உனது அறிவில் உள்ள இடைவெளிகளைத் துணிவான ஊகங் களாலும், கற்பனைகளாலும் மறைத்துக் கொள்ள எப்போதும் முயலாதே. அறிவியலைக் கற்றறிய அடிப்படைப் பணியை செய்யக் கற்றுக் கொள். இவான் பலலோவ்

★ உன் குழந்தைகள் உண்மையிலேயே கற்றறிந்த மக்களாக இருக்க விரும்பினால், அவர்கள் தம் முயற்சியால் கற்றறியும் கல்வியைப் பெற வேண்டும். நிகலாய் செரன்சேவ்ஸ்கி

★ ஒரு வெளிப்படையாகத் தோன்றும் வியக்க வைக்கும் தனியா ஆர்வ மின்றி, திறமையென்பதோ பேரறிவென்பதோ இருக்க இயலாது. திமிட்ரி மெண்டலேயேவ்

★ நீ அனைத்தையும் அறிந்திருப்பதாகவும், கற்றறிவதற்காக எஞ்சி யவை எதுவுமேயில்லை என்றும் சிந்திப்பதைப் பற்றி எச்சரிக்கை யாக இரு. என்.டி.ஜெலின்ஸ்கி

★ உனது வேலையை நீ விரும்புவதிலிருந்து திறமை என்பது துள்ளி எழுவதாகும். சுருங்கச் சொன்னால், ஒருவரது வேலையின் மீதான, வேலையின் நடைமுறை மீதான ஒரு விருப்பத்தை விட மேலான திறமையென்பது ஒன்று இருக்க இயலாமலும் கூடப் போகலாம். மாக்சிம் கார்கி

★ எப்போதுமே கற்றறிந்து கொண்டு, அனைத்தையும் தெரிந்து கொள்! எவ்வளவு அதிகமாக நீ கற்றறிந்து கொள்கிறாயோ, அவ்வளவு வலிமை மிகுந்தவனாக நீ இருப்பாய்.

மாக்சிம் கார்கி

★ நீ அடைய விரும்பும் எதனையும், கடினமான பட்டறிவின் மூலம் நீயாகவே அடைய வேண்டும். அலெக்சாண்டர் செரேவ்

★ பட்டறிவுக்கு மேலாக வேறெதெனாலும் கற்பிக்க இயலாது.

ஆன்டன் மெகரன்கோ

★ தசையைப் போலவே திறமையென்பதும் பயிற்சியினாலேயே வளர்ச்சியடைகிறது. விளாடிமிர் ஒப்புருசேவ்

★ இயற்கையின் முதலாளியாகவும், ஆசானாகவும் இருக்க மனிதன் பிறந்துள்ளான். ஆனால் அவனது ஆளுகைக்கான விளக்கவுரையெனும் பேரறிவென்பது அவனுடன் பிறந்ததன்று, அதைக் கற்றறிவதன் மூலமே அடையப்பட வேண்டும்.

என்.ஐ. லோபாசேவ்ஸ்கி

★ கற்றறிந்து, படித்துச், சிந்தித்து அனைத்திலிருந்தும் பயன் நிறைந்தவற்றையே எடுத்துக் கொள். நிகலாய் பிராகோவ்

## பள்ளி, ஆசிரியர், மாணவர்

★ பள்ளிகளின் இன்றியமையாத பாடங்கள், கல்வி முறையின் கொள்கைகளைச் சார்ந்து, நாடுகள் அரசுகளின் வாழ்வையும் எதிர்காலத்தையும் வடிவமைக்கும் ஒரு வியத்தகு கற்றலாக விளங்குவது பள்ளியாகும். திமிட்ரி மென்டலேயேவ்

★ ஓர் ஆசிரியர் அனைத்து மாணவர்களிடமும் அவர் விதைத்த விதைகளிலிருந்து பெற்ற வளர்ச்சிலேயே, அவரது பெருமை அடங்கியிருக்கிறது. திமிட்ரி மென்டலேயேவ்

★ ஆசிரியர் தன் மாணவர்களின் நம்பிக்கையினை வென்றடையாத வரை, கற்பது என்பது எந்தப் பயனையும் விளைவிக்காது.
திமிட்ரி மெண்டலேயேவ்

★ உள்ளூர் அறிவியல் கலங்கரை விளக்காகத் திகழும் ஆசிரியர்கள், அவர்களுக்குத் தொடர்புடைய துறைகளில், இக்கால அறிவிற்கு முற்றிலும் இணைந்தவர்களாகத் திகழ வேண்டும்.
திமிட்ரி மெண்டலேயேவ்

★ முழு மாணவர் கூட்டம் பயன் பெற்றவர்களாயிருக்கத் தேவை யான செல்வாக்கைப் பயன்படுத்த, ஆசிரியரும் அறிவியலில் திறன்படைத்தவராகவும் கற்றறிவைப் பெற்றவராகவும் அதனை விரும்புபவராகவும் இருக்க வேண்டும். திமிட்ரி மெண்டலேயேவ்

★ நமது பள்ளிகள் அறிவின் அடிப்படைகளை இளைஞர்களுக்கு அளிப்பவையாகவும், தன்னிச்சையாகப் பொதுவுடமைக் கருத்து களை உருவாக்கிக்கொள்ள உதவுபவையாகவும் இருக்க வேண்டும். அவை இளைஞர்களைக் கல்வியறிவு பெற்ற மக்களாக்க வேண்டும்.
வி.இ. இலெனின்

★ கற்பித்தல், பயிற்சி, கல்வி ஆகியவை வகுப்பறைக்குள் கட்டுப் படுத்தப்பட்டதாகவும், வாழ்வின் ஒளிப் பிழம்பிலிருந்து விலக்கி வைப்பதாகவும் இருந்தால், அவற்றில் நம்பிக்கை கொள்ள நம்மால் இயலாது. வி.இ. இலெனின்

★ வாழ்விலிருந்தும் அரசியலிலிருந்தும் விலக்கி வைக்கப்பட்ட கல்வி பொய்யானதும் போலித்தனமானதுமாகும். வி.இ. இலெனின்

★ இளைய தலைமுறையின் படைப்பு உழைப்புடன் இணைக்கப் படாத கல்வியினால் ஒர் எடுத்துக்காட்டான எதிர்காலச் சமூகத்தை உருவாக்க இயலாது. வி.இ. இலெனின்

★ திணித்துக்கொள்வதென்பது நமக்குத் தேவையற்றது என்றாலும், ஒவ்வொரு மாணவனின் மனத்தையும் அடிப்படை உண்மைகள்

பற்றிய பல அறிவுடன் ஒழுங்குபடுத்தி முன்னேற்றமடையச் செய்வது நமக்குத் தேவையானதே. வி.இ. இலெனின்

★ நமது சமூகத்தின் இதர பகுதி மக்களைப் போன்று அதே மன உறுதியுடனும், அதே வீரத்துடனும், அதே உறுதியான முடிவுடனும், அதே ஆர்வத்துடனும் பள்ளியும் பொதுவுடமைக்காகப் போரிட வேண்டும். ஆன்டன் மக்ரென்கோ

★ பொதுவறச் சமூகம் கூட்டமைப்புக் கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. ஒரு முகப் பருவைப் போன்று வடிவில் துருத்திக் கொண்டிருக்கும் அல்லது சாலையோரப் புழுதியில் சுருண்டு விழுந்திருக்கும் தனிமையானவர் என்று எவருமே அங்கு இருக்கக் கூடாது. ஆன்டன் மக்ரென்கோ

★ எளிமை மிகுந்ததாகவும், விலை குறைந்ததாகவும், மிகுந்த சோர் வளிக்கக் கூடியதாகவும் இருந்தாலும் பள்ளியில் பயன் வளம் செய்யப்படுவதை நான் ஆதரிக்கவே செய்கிறேன். ஏனெனில், பயன் வளம் என்னும் நடைமுறையினால் மட்டுமே, மனித குண நலனை வடிவமைக்கவும், பயன்வளக் குழுவின் ஒரு நல்ல உறுப்பினராகத் தனிப்பட்டவரை உருவாக்கவும் இயலும் என்பதால்.
ஆன்டன் மக்ரென்கோ

★ நமது கல்வியின் நடைமுறை மாபெரும் நம்பிக்கை, மாபெரும் உரிமை, பெருந்தன்மை ஆகியவற்றின் கலவையேயாகும்.
ஆன்டன் மக்ரென்கோ

★ உனது மாணவர்களிடமிருந்து நீ அதிகப்படியாகக் கோர வில்லையெனில், அவர்களிடமிருந்து நீ அதிகப்படியாக எதனையும் பெறவும் மாட்டாய். ஆன்டன் மக்ரென்கோ

★ வாழும் எடுத்துக் காட்டுகளே குழந்தைக்குக் கற்பிப்பவையாம், சொற்களல்ல; அவை எவ்வளவு அதிகத் தகுதி படைத்தவையாக இருப்பினும், செயல்களால் ஆதரிக்கப்படாவிடில் பயனற்றவை.
ஆன்டன் மக்ரென்கோ

★ ஒரு மனிதனைக் கட்டுப்பாட்டின் மூலமோ, தன் விருப்புடனோ, நேர்மையான உறுதியான பேச்சு, சிறிது தனிமை, அமைதி அல்லது வீரம் மூலம் தனது வீரத்தை வெளிக்காட்ட இயன்ற சூழ்நிலைகளில் நீ வைக்காத வரையில், அவனை வீரமுள்ளவனாக வளர்க்க உன்னால் இயலாது. ஆன்டன் மக்ரென்கோ

★ என்ன செய்யப்பட வேண்டுமென மிகப்பல நற் கருத்துகளை நீ விதைத்த போதும், நீண்ட துன்பங்களை வெற்றி கொள்ளும் பழக்கத்தை நீ கற்றுத் தரத் தவறினால், நீ எதனையுமே கற்றுத் தரவில்லை என்பதைக் கூறும் எனது உரிமையை நான் பெற்றிருக்கவே செய்வேன். ஆன்டன் மக்ரென்கோ

★ ஒரு மனிதனிடமுள்ள நல்லதைக் கண்டுபிடிப்பதென்பது எப்போதும் கடினமானதே. ஒரு மனிதனில் இருக்கும் நல்லவை எப்போதுமே வெளியே எடுத்துக் காட்டப்பட வேண்டும். அவ்வாறு செய்வது ஆசிரியரின் கடமை. சில நேரங்களில் தவறு ஏற்பட்டு விடுவதற்கான வாய்ப்பு உள்ள போதும், ஆக்க நிலையான ஒரு மன நிலையுடன் அவர் ஒவ்வொரு மனிதரையும் அணுக வேண்டும்.
ஆன்டன் மக்ரென்கோ

★ நமது சோவியத்துப் பள்ளியின் நோக்கம், அறிவின் ஒரு குறிப்பிட்ட பகுதியை அளிப்பது என்பது மட்டுமன்று; இந்த அறிவு அன்றாட வாழ்வை மாற்ற இயன்றவாறு அதனுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதுமாகும்.
என்.ஏ. குருப்ஸ்கயா

★ வேலையைக் கற்பிக்கும் ஒரு பள்ளியை, நமது வேலையை எவ்வாறு கூட்டாகச் செய்வது என்றும், புதிய அறிவியல் வெற்றிகளிலிருந்து நமது வேலையைக் கற்றுக் கொள்வது எவ்வாறு என்றும் காட்டும் ஒரு பள்ளியை நாம் உருவாக்க வேண்டும்.
என்.ஏ. குருப்ஸ்கயா

★ புதிய கல்வியின் இந்த வினாடி வரையிலான நோக்கங்களில் ஒன்று, எவ்வாறு கூட்டமைப்பாகப் பணியாற்றி வாழ்வது என்பதைக் குழந்தைகளுக்குக் கற்பிப்பது என்பதாகும்.
என்.ஏ. குருப்ஸ்கயா

★ அறிவியலால் ஒளியூட்டப்பட்ட கூட்டமைப்பின் பல்வேறுபட்ட பணிகளின் அடிப்படையில் நமது குழந்தைகளின் வாழ்வினை அமைப்பதாக்க் கல்வி இருக்க வேண்டும். என்.ஏ. குருப்ஸ்கயா

★ முறையான கல்வியுடன் குழந்தைகளுக்குப் பயன் விளைவுப் பணியை அறிமுகப்படுத்துவது, வகுப்புகளை ஒரு நூறு மடங்கு கவர்ச்சியானதாகவும், செயல்பாடு நிறைந்ததாகவும் ஆக்கி விடும். என்.ஏ. குருப்ஸ்கயா

★ குழந்தைகளை மதிப்பதென்பது அலட்சியமாக இருந்து அவர்களது வழியில் அவர்கள் செல்ல விடுப்பதென்ற பொருள் தராது. குழந்தைகளிடம் தாம் எதிர்பார்க்கும் கல்விக் கோரிக்கைகளில் நிலையாக நிற்கும் ஆசிரியரையே குழந்தைகள் மதிக்கின்றனர். என்.ஏ. குருப்ஸ்கயா

★ மாணவர்களின் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பணிகள் நேர்மையற்றவர்களாக ஆக்குபவை, ஏனெனில் அது அவனிடமிருந்து கற்றறிவது என்ற உள்ளுணர்வை அழித்து விடுகிறது என்பதால். என்.ஏ. குருப்ஸ்கயா

★ வேலை நடைமுறையில் ஒழுக்க நெறி கற்பிக்கப்படுமானால், நன்னடத்தை என்பது மேலோட்டமானதாக இருக்காது. என்.ஏ. குருப்ஸ்கயா

★ வேலையென்னும் நடைமுறையின் அடிப்படையிலான கல்வியினை விடக் கூர்மையான படை வேறெதுவுமில்லை. மாக்சிம் கோர்கி

★ கைகள் தலைக்குக் கற்பித்து, அதனைப் போல தலை கைகளுக்குக் கற்பித்து, அதன் மூலம் மூளை இன்னமும் வளர்ச்சியடைய உதவாத நிலையில், மக்களிடையே சமூகப் பண்பாட்டு முன்னேற்றம் என்பது இயல்பானதாக இருக்க இயலாது. மாக்சிம் கோர்கி

★ ஆசிரியர் என்பவர் நேர்மையானவராக இருப்பவரானால், அவர் எப்போதும் கவனத்துடன் விழித்துக் காத்திருக்கும் ஒரு மாணவனாக இருக்க வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ மேலும் மேலும் கற்றறிந்து கொள்ளாத அல்லது சிறிதளவே கற்றறிந்து கொள்ளும் ஓர் ஆசிரியர் இரக்கத்திற்குரியவராவார்.
மாக்சிம் கோர்கி

★ ஆசிரியரே மிகவும் பொறுப்பு நிறைந்த பணியைத் - தனிப்பட்டவரை அவர் வடிவமைக்கிறார் - செய்பவராவார்.
மைக்கேல் கால்னின்

★ ஆசிரியர் என்பவர் மனித உயிர்களை வடிவமைக்கும் கலைஞராவார்.
மைக்கேல் கால்னின்

★ பழமையான மெய்யியலாளர்களின் நூல்களை இளைஞர்கள் படிக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். அவற்றிலிருந்து மாணவர்கள் ஆசிரியர்களிடம் எவ்வளவு மரியாதை நிறைந்தவர்களாகவும், அடக்கம் நிறைந்தவர்களாகவும் இருந்தார்கள் என்பதை அவர்கள் காணலாம்.
மைக்கேல் கால்னின்

★ கற்பிப்பவர் அறிவைக் கற்றுத் தருவதனால் மட்டுமின்றி, தனது பழக்க வழக்கங்களாலும், நடத்தையினாலும், தனது வாழ்க்கை முறையாலும், எளியவற்றைப் பற்றிய தனது மன நிலையாலும் கூட தன் மாணவரைக் கவர்கிறார்.
மைக்கேல் கால்னின்

★ நல்லாசிரியர்கள் நல் மாணவர்களை உருவாக்குகின்றனர்.
எம்.வி.ஒஸ்ட்ரோக்ரேட்ஸ்கி

★ ஆசிரியர் தன்னுள்ளேயே ஆழ்ந்த அறிவு, மிகுந்த கட்டுப்பாடு, கருணை, உயர்ந்த ஒழுக்க நெறி ஆகியவற்றைப் பெற்றிருக்க வேண்டும்.
எம்.ஐ. டிராகோமனோவ்

★ *பள்ளிக் கல்வி பயில்வதென்பது, கல்வி என்னும் நல் மலரின் இதழ்களில் ஒன்றாக இருக்கும் என்பதைத் தவிர வேறில்லை.*
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ *உனக்குத் தேவையான அறிவைப் பெற நீயே தோண்டிக் கண்டு பிடி. உனது தோழர்களின் கடும் உழைப்பை நீ ஏமாற்றிப் பெறுவ தென்பது நேர்மையற்றது. கொறிப்பது என்பது ஓர் ஒட்டுண்ணி யாக ஆவதற்கான முதல்படியாகும்.* வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ *எங்கு மன முயற்சி எதிர்பார்க்கப்படுகிறதோ அங்கு அதுவன்றி பாடங்கள் கற்பதில் காலம் வீணாக்கப்படுவதே, ஓய்வான, விடுதலையான நேரமில்லாமல் இருப்பதற்கான இன்றியமை யாத காரணம்.* வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ *கடந்த நூற்றாண்டுகளின் மதிப்பு நிறைந்த செயலாக்கங்களைப் பற்றி ஓர் ஆசிரியர் வளரும் தலைமுறைக்குத் தெரிவிக்க வேண்டும், ஆனால் தவறுகளையும், தப்பெண்ணங்களையும், கெட்டவை களையும் தெரிவிக்காமல் நிறுத்திக் கொள்ளவேண்டும்.*
ஏ.வி. லுனாசால்ஸ்கி

★ *தன் மாணவனை என்னவாக ஆக்க வேண்டுமென ஆசிரியர் விரும்புகிறாரோ, அதனைப் போலவே அவர் இருக்க வேண்டும்.*
வி.ஐ.தல்

★ *தனது மாணவனைப் பயிற்றுவிக்க வேண்டி, ஆசிரியர் வாழ் வினை முழுவதுமாக அறிந்திருக்க வேண்டும்.*
இ.லியோ தோல்சுதாய்

★ *கல்வியில் உள்ளவை அனைத்துமே, கற்பிப்பவர் யார் என்பதி லேயே தொக்கி நிற்கிறது.* திமிட்ரி பிசரேவ்

★ *ஓர் ஆசிரியராக நீ இருப்பதற்கு இன்றியமையாதபடி முதலில் உனது மாணவனை உள்ளும் புறமும் நீ அறிந்திருக்க வேண்டும். இரண்டா வதாக உனக்கும் உனது மாணவனுக்குமிடையே முழுமையான நம்பிக்கையினை ஏற்படுத்த வேண்டும்.* திமிட்ரி பிசரேவ்

★ மனிதன் என்பவன், நீ விரும்பிய நீர்மத்தையெல்லாம் ஊற்றி வைக்க இயன்ற ஒரு வெற்றுக் குடுவையல்ல. திமிட்ரி பிசரேவ்

★ உன் ஆசிரியரின் சொற்களைத் திரும்பச் சொல்வதனால் மட்டுமே நீ அவரது கால்முளை ஆவாய் என்ற பொருள் அளிக்காது.
திமிட்ரி பிசரேவ்

★ கல்வியின் ஆற்றல் மாபெரும் சிறப்புடையது என்பதையும், அவை அனைத்தையும் தன்னால் மட்டுமே பெற்றடைய இயலாது என்பதையும் பற்றி நன்கு அறிந்து உறுதிப்படுத்திக் கொண்டவராகக் கற்பிப்பவர் என்பவர் எப்போதும் இருக்க வேண்டும்.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கற்பிப்பவர் என்பவர் ஓர் அலுவலரல்லர், ஆனால் அவர் அவ்வாறிருந்தால், அவர் ஒரு கற்பிப்பவராகவே இருக்க முடியாது.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கற்பிப்பவரின் முதன்மையான கடமை தன் பொறுப்பில் உள்ளவர்களுக்கு மனப் பயிற்சி அளிப்பதுதான் என்பதையும், இக்கடமை அவர்களுக்குத் தனது பாடத்தைக் கற்றுத் தருவதைவிட அதிக இன்றியமையாமை வாய்ந்தது என்பதையும் கற்பிப்பவர் எவரும் எப்போதும் மறந்துவிடலாகாது.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கல்வியின் மாபெரும் இன்றியமையாத பகுதி என்பது தனி மனிதனின் குணநலன்களை வடிவமைப்பது என்பதேயாம்.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ மக்களை அனைத்து வகைகளிலும் பயன்படுத்த ஆசிரியர்கள் விரும்பினால், முதலில் அவர்கள் மனித இயல்பின் அனைத்து வகைகளையும் அறிந்து கொள்ளவேண்டும்.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ மனிதக் கல்வியென்னும் ஆற்றின் இன்றியமையாத ஒட்டம் என்பது தூண்டுதலேயாகும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ குணநலன்கள் நிறைந்த தனிப்பட்ட ஒருவராலன்றி, வேறு எவராலும் இன்னொரு குணநலன் நிறைந்தவரைப் பயனுள்ள வகையில் வடிவமைக்க இயலாது. அதே போன்று ஒரு நல்லொழுக்கம் நிறைந்தவராலேயே மற்றொரு நல்லொழுக்கம் நிறைந்தவரை வடிவமைக்க இயலும். காான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கற்பிப்பவராலேயே கூட முழுமையாக அறிந்து கொள்ள இயலாதபடி கல்வியின் ஆற்றல் மிகப் பெரியது என்பதை எப்போதும் அவர் நினைவில் கொண்டிருக்க வேண்டும்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கற்பிப்பவர் என்பவர் அதிகாரப் பிரிவினர் அல்லர்; அவர் அதிகாரப் பிரிவினராக இருந்தால், அவர் கற்பிப்பவராக இருக்க மாட்டார்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ நமது அறிவில் வந்தடைய வேண்டிய ஒவ்வொன்றும் நமது உள்ளுயிரின் ஒரே கதவான கவனத்தின் மூலமே தவிர்க்க இயலாதபடி பயணம் செய்ய வேண்டும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ ஒரு துவைக்கும் கல்லையே கண்டறியாத, ஒரு துணியை, விரைவாக வெளுப்பதைவிட, ஒரு மனிதரை ஒரே இரவில் உன்னால் மாற்ற இயலாது. எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ ஒரு குறிப்பிட்ட வயது வரை அளிக்கப்பட இயலாதவை, அரசியல் உரிமைகள் போல, பலவகைப்பட்டவை உள்ளன.

அலெக்சாண்டர் எர்சன்

★ கடினமான பாடம் என்பது எதுவுமே இல்லை, ஆனால் புரிந்து கொள்ள இயலாத, செரிக்க இயலாத கற்பித்தல் என்பது மட்டும் இருக்கவே செய்கிறது. அலெக்சாண்டர் எர்சன்

★ கோட்பாடுகள் என்பவை கருத்துகளால் உருவாக்கப்படுகின்றன; அதே போன்று நன்னடத்தை என்பது முன்மாதிரியால் உருவாக்கப்படுகிறது. அலெக்சாண்டர் எர்சன்

★ கல்வியில் உள்ள இன்றியமையாத ஒன்று என்னவென்றால் குழந்தைக்கு என்ன கற்பிக்கப்படுகிறது என்பது மட்டுமில்லை, ஆனால் அது எவ்வாறு கற்பிக்கப்படுகிறது என்பதுதான். எளிமையான, சிக்கல் நிறைந்த பாடங்கள் திறமையுடன் கற்றுத் தரப்படுவது, குழந்தைகளின் அறிந்து கொள்ளுதலுக்குப் பொருத்தமற்ற வகையில் உயர்ந்த வகையான பாடங்களை மட்டமாகக் கற்பிப்பதைவிட, குழந்தையின் எதிர்காலத்துக்கு நூறு மடங்கு பயன் அளிப்பதாகும். நிகலாய் பிரோகோவ்

★ கல்வியறிவின் உண்மையான நோக்கம் என்னவென்றால், மனிதனை மனிதனாக இருக்கப் பயிற்றுவிப்பது என்பதேயாகும்.
நிகலாய் பிரோகோவ்

★ ஒரு நல்ல ஆசிரியராக இருப்பதற்கு, நீ கற்பிப்பதை நீ விரும்புவதுடன், நீ கற்பிப்பவர்களை அன்புடன் விரும்புபவனாகவும் இருக்க வேண்டும். வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ சொல்லே தொடர்பின் கருவியாக உள்ள அனைத்துச் செய்திகளிலும், குறிப்பாகக் கற்பிப்பதில், குறைத்துக் கூறுவதோ, மிகைப் படுத்திக் கூறுவதோ முறையானதில்லை. வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ ஆசிரியர் தமது சிந்தனைகளைச் சுமையாக்கிக் கொள்வதற்காக அல்லாமல், ஆனால் மற்றொருவருடைய சிந்தனைகளை விழிக்க வைக்கச் செய்வதற்காகவே, அவருக்குச் சொல் என்பது அளிக்கப் பட்டுள்ளது. வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ நம் மாணவரிடம் ஊக்கமும், தன்னையே சார்ந்திருப்பதும் வளர்க்கப் படாத வரை அறிவு என்பது இறந்தது போன்றதே; சிந்திக்கவும், சிந்திக்க விரும்பவும் மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.
என்.ஏ. உமோவ்

★ உனது மாணவனை இவ் உலகின் உண்மையான பொருளில் உருவாக்குவதென்பதே அனைத்திலும் இன்றியமையாதது என்பதை உனது கருத்தில் நீ கொள்வாயாக.
நிகலாய் செரன்சேவ்ஸ்கி

★ *கற்பித்தல் என்பது எடுத்துக்காட்டுகளினால் விளக்கப்படாமல், முழுச் சுற்றுச் சூழ்நிலைகளால் மாணவனின் கண்களில் முறைப் படுத்தப்படாமல் உள்ளபோது, அது எவ்வளவு மிகுந்த நல் நோக்கம் கொண்டதாயிருந்தாலும், அதனைவிடப் பயனற்றதும், ஏன் கெடுதல் நிறைந்ததும் வேறெதும் இல்லை.*

**விசாரியோன் பெலின்ஸ்கி**

★ *நல்ல கல்வி ஒரு மனிதனை மேலும் நல்லவனாக்க இயலாது என்னும் அளவு கெட்ட மனிதனாக எவருமே இருப்பதில்லை.*

**விசாரியோன் பெலின்ஸ்கி**

★ *சில கைத்தொழில், அறிவியல் அல்லது கலை போன்றவற்றின் நுணுக்கங்களை அறிந்து சிறந்தவனாக விளங்காத வனால் எப்போதும் தகுதி படைத்த எந்த ஒன்றினையும் உருவாக்க இயலாது.*

**இவான் மிச்சுரின்**

★ *தாங்களாகவே எதனையும் செய்து கொள்ள இயலாமல், அவர் களாகவே செல்லக் கூடிய இடங்களுக்கும் தங்கள் காதுகளைப் பிடித்து இழுத்துச் செல்ல வேண்டுமென்று எதிர்பார்ப்பவர்கள் மட்டுமே தங்கள் அறியாமைக்காக அவர்களது ஆசிரியர்களின் திறமையின்மைபற்றிக் குறை கூறுவார்கள்.*

**நிகலாய் தோப்ரோலியுபோவ்**

★ ★ ★

# இசை, கவிதை, கட்டிடவியல், கலை, அரங்கம்

## அரங்கம்

★ அரங்கம் என்பது பல திறமையான செயல்களை, நற்பேறான செய்திகளை உலகிற்குச் சொல்ல இயன்ற ஒரு மேடையாகும்.
நிகோலர் கோகோவ்

★ ஒவ்வொரு பெரிய கலைஞரைப் போலவே, அரங்கமும் தற்கால வாழ்க்கையில் உள்ள பெருந்தன்மையான சிந்தனை ஓட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும், இல்லையெனில் அது தகுதியற்ற, மதிப்பற்ற ஒரு நிறுவனமாக ஆகிவிடும்.
விளாடிமிர் நெமிரோவிச் டஞ்செங்கோ

★ வாழ்க்கைப் சிக்கல்களின் தீர்வுக்கான, மிக உயர்ந்த எடுத்துக் காட்டு அரங்கமே ஆகும். அலெக்சாண்டர் எர்சன்

★ அரங்கின் நோக்கம் என்பது, வெறும் பொழுதுபோக்கு என்ற நிலைக்குக் குறைக்கப்படுமானால், அதற்குக் குறைந்த அளவு முயற்சி மட்டுமே தேவைப்படுவதாக இருக்கக்கூடும். ஆனால் அரங்கம் என்பது வாழ்வை எதிரொலிக்கும் ஒரு கலையாகும்.
கான்ஸ்டான்டின் ஸ்டெயின்ஸ்லேவ்ஸ்கி

★ பார்வையாளரைத் தனது வரலாற்று நுகர்வின் மூலம் கட்டிப் போட்டு, வியப்படைய வைப்பவை எல்லாம் அழகு நிறைந்தவை அல்ல. ஆனால் மேடையிலும், மேடை மீதும் மனித வாழ்வின் ஆற்றலைச் சிறப்பாக்குவது. அதாவது, நடிகர், பார்வையாளர்களின் சிந்தனைகளையும், உணர்வுகளையும் பெருமை கொண்ட தாக்குவது என்பதே அழகு நிறைந்ததாகும்.
கான்ஸ்டான்டின் ஸ்டெயின்ஸ்லேவ்ஸ்கி

★ அனைத்துக்கும் மேலாக நடிகர் என்பவர் பண்பாட்டினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், இலக்கியத்தின் பேரறிவைப் புரிந்து கொள்பவராகவும், கற்றறிபவராகவும் கூட இருக்க வேண்டும்.
கான்ஸ்டான்டின் ஸ்டெயின்ஸ்லேவ்ஸ்கி

★ கடினமானதை வழக்கமானதாகவும், வழக்கமானதை எளிதான தாகவும், எளிதானதை அழகு நிறைந்ததாகவும் ஆக்கக் கலைஞன் கற்றுக் கொள்ள வேண்டும்.
கான்ஸ்டான்டின் ஸ்டெயின்ஸ்லேவ்ஸ்கி

★ அரங்கிற்குத் தேவைப்படுவது என்னவென்றால், எளிதானதாக வும், வலியுறுத்துவதாகவும், பாதிக்கப்படாததாகவும் அது இருக்க வேண்டும் என்பதுதான். இலியோ தோல்சுதாய்

## இசை

★ உலகில் உள்ள கலைகளிலெல்லாம் இசையென்பதே மிகவும் பெருமிதமானதாகும். இலியோ தோல்சுதாய்

★ மனித இனத்தின் தொட்டிலில் இருந்து, அவன் உயிர் வாழ்ந் திருக்கும் காலம் வரை, இசை என்பதும் இருக்கவே செய்யும்.
ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ இசை பல பொருள்களைக் கொண்டது. உனது உள்ளுயிரின் நடை முறையைச் சார்ந்து, பல்வேறுபட்ட பொருளடக்கத்தை அதற் களிக்க உன்னால் இயலும். ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ இசையென்பது சிறப்பு முறையில் தூய்மைப்படுத்தும், அழகு படுத்தும் ஆற்றல்களைப் பெற்றுள்ளதாகும்.
ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ இசையென்பது அழகு நிறைந்த ஒலிகளில் அறிவு உருக் கொள்ளச் செய்யப்பட்டதாகும். இவான் துர்கனேவ்

★ ஒரு பாட்டை விரும்பி நுகராதவர் என்று மண்ணில் எவர் ஒருவராவது, அவர் மனத்தளவில் செவிடராக இல்லாதவரை, இருக்கிறாரா?
முக்தார் அயுசோவ்

★ உருசியா உலகில் உள்ள மிகுந்த இசை உணர்வு கொண்ட நாடுகளில் ஒன்றாகும். பழங்காலம் முதல் அவர்கள் அவ்வாறே அறியப்பட்டுள்ளனர். இந்த வகையில் அசைக்க இயலாத, மாற்றமில்லாத உருசிய மக்கள், அவர்களது நாட்டுப்புறப் பாடல்களைக் காலம் காலமாகப் பெற்று வந்திருக்கின்றனர்.
வி.வி.ஸ்டாசோவ்

★ நம் நாட்டில் நாட்டுப்புறப் பாடல்கள் ஆற்றியது போன்ற பெரிய தொரு பங்கினை வேறெங்கும் ஆற்றவில்லை என்பதுடன், நம்மால் இத்தகைய பெரும் அளவிலும், கற்றலுடனும், பல்வேறுபட்ட தன்மைகளுடனும் பாதுகாக்கப்பட்டதுபோல் வேறெங்கும் அது பாதுகாக்கப்படவில்லை.
வி.வி.ஸ்டாசோவ்

★ ஒரு கருத்தற்ற கவிதை என்பதுமில்லை, ஓர் இனிமையற்ற இசையுமில்லை.
வி.வி.ஸ்டாசோவ்

★ இசையில் அழகு என்பது பாதிப்புகளின், இன்பத்தின் அறிதானவைகளின் ஒரு தொகுப்பின் மூலம் பெறப்படுவதல்ல; ஆனால் எளிமையினாலும், இயல்புத் தன்மையினாலும் பெறப்படுவதாகும்.
பியோடர் செய்கோவ்ஸ்கி

★ ஒலி முரண்பாடு என்பது இசையில் ஒரு பெரும் ஆற்றலாகும்.
பியோடர் செய்கோவ்ஸ்கி

★ பெரிய இசையமைப்பாளர்கள் பெரும்பாலும் அனைத்துக்கும் மேலாக இசையில் இனிமைக்கே கவனம் அளித்து வந்துள்ளனர். இன்னிசை என்பதும் அனைத்து இசையெனும் மெல்லிழைகளிலும் முதன்மையான இசையாகும்.
ஆன்டன் செகர்வ்

★ இன்னிசையைப் புறக்கணிப்பதென்பது, பெரிய உணர்வின், பொருளடக்க உண்மை நிலையின், உண்மை நிறைந்த வெளிப் பாட்டைத் துறப்பது போலாகும். திக்கோன் க்ரெனிகோவ்

★ இசையென்பதும், இலக்கியத்தைப் போல, குறிக்கோள் பொறுப் பேற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும்.
திக்கோன் க்ரெனிகோவ்

★ இன்னிசை என்பது ஓர் இசை அமைப்பின் சிந்தனையும் இயக்க மும் உள்ளுயிர்ப்பும் ஆனதாகும். திமிட்ரி சொஸ்டாகோவிச்

★ இசையை நேசிப்பவர்களும், உருவாக்குபவர்களும் அவ்வாறே பிறந்தவர்களல்லர், ஆனால் அவ்வாறு இருக்குமாறு முன்னேற் றப்பட்டவர்களே. இசையின் மேலுள்ள விருப்பத்தை வளர்த்துக் கொள்ள அனைத்திற்கும் முதலாக, ஒருவர் அதனைக் கேட்க வேண்டும். திமிட்ரி சொஸ்டாகோவிச்

★ நல்ல இசையென்பது எப்போதும், மக்களை ஒன்றுபடுத்து வதாகவும், அவர்களைத் தட்டி எழுப்புவதாகவும், முன்னேறிச் செல்ல அவர்களை வற்புறுத்துவதாகவும் உணர்வில் புரட்சிகர மானதாகவும் இருப்பதாகும். திமிட்ரி சொஸ்டாகோவிச்

★ நல்ல இசை என்பது முன்னேற்றக் கருத்துகள், மனித நேயக் கருத்துகள் மட்டும் கொண்ட மனித உணர்வுகளை மட்டுமே தட்டி எழுப்புவதாகும். திமிட்ரி சொஸ்டாகோவிச்

★ இதற்கு முன் நீ அறிந்திராத, உன்னுள் உள்ள புதிய ஆற்றல் களை, இசையின் மூலம் நீ கண்டு கொள்வாய்.
திமிட்ரி சொஸ்டாகோவிச்

★ இசையென்பது ஒலியென்னும் பொருளின் ஒளி பொருந்திய மகனாகும், இசையில், இசை ஒன்றினால் மட்டுமே, ஓர் உள்ளு யிரின் நெஞ்சத் துடிப்பினை இன்னொருவரின் உள்ளுயிர்க்குள்

கடத்தி செலுத்தவும், மகிழ்வு நிறைந்த காரணம் கூற இயலாத உணர்வுகளை வழங்கவும் இயலும்.

அலெக்சாண்டர் எர்சன்

★ இசை என்பது சிந்தனையைத் தூண்டும் ஆற்றல் நிறைந்தது. உண்மையான நெஞ்சுரமும் முன்னேற்றமும் ஓர் இசைப் பயிற்சி இன்றி இயலாது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உடற்பயிற்சி உடலை உறுதி செய்வது போன்றே, இசையும் உள்ளுயிரை செம்மைப்படுத்துகிறது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ இசை என்பது மக்களை அன்பு, அழகு, மனிதநேயம் ஆகியவற்றுடன் வாழ்க்கையில் இணைப்பதற்கான மிக வியத்தகு, மெல்லுணர்ச்சி மிக்க வழியாகும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உலகைச் சூழ்ந்தும், ஒவ்வொருவருக்குள்ளும் உறைந்துள்ள உயர்ந்த, பெருந்தன்மையான, அழகு நிறைந்தவற்றைப் பற்றிய ஓர் அறிதலை இசை மனிதனுள் விழிப்படையச் செய்கிறது.

நிகலோய் செர்னிசேவ்ஸ்கி

## ஓவியம்

★ மனித இனத்திற்கு இயற்கை அளித்துள்ள கொடைகள் அனைத்திலும், ஓவியம் என்பது மிகுந்த இன்பமளிப்பதாகவும், கண்ணையும் மனத்தையும் பயன் நிறைந்தவாறு ஈடுபடுத்துவதாகும்.

அலெக்சாண்டர் இவனோவ்

★ ஓவியம் என்பது, ஒரு தட்டையான பரப்பில் கண்ணுக்குப் புலனாகும் அனைத்துப் பொருள்களையும் கோடுகளாலும் வண்ணங்களாலும் எடுத்துக் காட்டும் ஒரு கலையாகும்.

அலெக்சாண்டர் இவனோவ்

★ ஓர் ஓவியருக்குத் தூரிகையைப் பயன்படுத்துவது என்பது மட்டுமே போதுமான ஒன்றாக இருப்பதில்லை. ஓர் ஓவியர் என்பவர்

கற்றறிந்தவராகவும் அறிவு நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.
அலெக்சாண்டர் இவனோவ்

★ ஒவியம் வரைவதும் வண்ணம் தீட்டுவதும், இலக்கியத்திற்கு உதவவும், அதன் விளைவாக மக்களை விழிப்படையச் செய்ய வும் உதவும் ஒரு கருவியேயன்றி, வேறொன்றுமில்லை.
ஏ.ஜி.வெனட்சியனோவ்

★ தோற்றங்கள் என்பவை திறமையின் ஒரு நீண்ட அறிவுரையாக வும், கடந்து போன நாள்களின் சாட்சியாகவும், முன்னர் வாழ்ந்திருந்த வர்களின் நினைவின் வாழ்க்கையாகவும், வலிமையைப் பற்றிய ஒரு வெளிப்பாடாகவும், இறந்தவர்களை உயிர்ப்பிப்பதாகவும், பாராட்டு, புகழின் அழியாத் தன்மை கொண்டதாகவும், கடந்தகால துணிவான செயல்களை நினைவூட்டுவது போன்ற வாழ்க்கை நினைவுகளைக் கொண்டதாகும். தோற்றங்கள் என்பவை நெடுந் தொலைவில் உள்ளவற்றைத் தெரியும்படி செய்வதும், பல்வேறு பட்ட இடங்களில் உள்ளவற்றை ஒன்றாக எடுத்துக் காட்டுவது மாகும்.
எஸ்.எப்.உசகோவ்

★ வண்ணத்தைத் தெளிப்பதும், கிறுக்குவதும், உன்னால் எவ்வளவு சிறப்பாகச் செய்ய முடிந்தாலும், கலையாகாது.
பி.பி.சிஸ்டியாகோவ்

★ கலைஞன் என்பவன் அவனது காலத்தில் மிக உயர்ந்த கற்ற றிந்த மக்களில் ஒருவனாக இருக்க வேண்டுமென்பது சரியான தாகவே எனக்குத் தோன்றுகிறது. இன்று எட்டப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றிய செய்திகளை அவன் அறிந்து கொள்ள வேண்டும், சமூகத்தின் மிகச் சிறந்த உறுப்பினர்களைக் கிளர்ச்சி யடையச் செய்யும் அனைத்துச் செய்திகளைப் பற்றியும் இந்த நேரத்தில் நிலவுவனவற்றைவிடத் தொலைதூரமும் ஆழமாகவும் செல்லக்கூடிய தனிப்பட்ட தனது கருத்துகளைக் கொண்டிருக்க வேண்டும்.
இவான் கிரம்சோகி

★ கலைஞன் என்பவன் வரலாற்றாசிரியனாகவும், கவிஞனாகவும், மெய்யியலறிஞனாகவும், உற்று நோக்குபவனாகவும், இவை அனைத்தும் ஒரு சேரப் பெற்றவனாகவும் இருக்க வேண்டும்.
ஏ.ஏ. பெஸ்டுகேவ் மார்லின்ஸ்கி

## கட்டிடக் கலை

★ ஒவ்வோர் இன்றியமையாத பெரிய காலமும், அதனுடைய பெரிய கட்டிடக் கலையைப் பெற்றிருக்கிறது. ஏ.வி. லூனாசர்ஸ்கி

★ கட்டிடக் கலையென்பது இவ் உலகின் இன்னுமோர் ஆண்டுக் கணிப்பாகும், பாடல்களும், தொல்மரபுகளும் முன்னரே அமைதியில் வீழ்ந்துவிட்டபோது, அது மட்டும் இன்னமும் பேசிக் கொண்டே இருக்கிறது. நிகலாய் கோகோல்

## கவிதை

★ இன்றைய கவிதை என்பது போராட்டத்தின் ஒரு கூறாகும். அதன் ஒவ்வொரு சொல்லும், ஒரு படையின் போர்வீரனைப் போல் இருக்க வேண்டும். விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ கவிதைக்கு ஒரு வடிவத்தையே நான் ஏற்றுக்கொள்கிறேன். கருத்துச் சுருக்கம் என்பதுவே அது. அது கணித சமன்பாட்டினைப் போல் நுட்பத்தைப் பெற்றுள்ளதாகும்.
விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ வீரம்'செறிந்த கவிதைகளைக் காலங்கள் யாவும் அழைக்கின்றன.
மாக்சிம் கோர்கி

★ மற்ற எது ஒன்றினையும் போலவே, கவிதையும் ஒரு வணிகமாக ஆகிவிடும் அந்தக் கணத்திலேயே, அதன் புனிதமான அழகினையும், இயல்புத் தன்மையையும் அது இழந்துவிடுகிறது.
மாக்சிம் கோர்கி

★ ஒரு கவிஞனாக நீ இருக்க, கவிதைத் தோற்றங்களில் நீ சிந்திக்க வேண்டுமேயன்றி, இனிமையான இன்னிசை ஒலிகளில் சிந்திக்கக் கூடாது. நீ ஒரு கவிஞனாக இருக்கச் சமகாலப் சிக்கல்களில் ஈடுபாடு கொண்ட ஓர் ஆற்றல் நிறைந்த உணர்வு உனக்குத் தேவையே யன்றி, புகழுடன் ஒளிர்வதற்கான ஓர் வியப்பான ஏக்கமும், ஒரு செயல்பாடற்ற, ஏறுமாறான க்ற்பனையில் ஆழ்ந்திருப்பதும், பாதிக் கப்பட்ட உணர்வுகளும், நன்கு அழகு செய்யப்பட்ட துன்பமும் உனக்குத் தேவையில்லை. விசாரியோன் பெலின்ஸ்கி

★ அனைத்துக் கவிதைகளும், வாழ்க்கை பற்றிய ஒரு வெளிப்பாடா கவே இருக்க வேண்டும். ஆனால் வாழ்க்கையைப் பற்றி விளக்க, கவிதை என்பது அனைத்துக்கும் முதலாவதாக, கவிதையாக இருக்க வேண்டும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ பாடல் எழுத இயன்றவனாய் இருப்பது என்பது ஒரு கவிஞனாக இருப்பதெனும் பொருளளிக்காது, இதற்கான சான்று புத்தகக் கடைகளில் மலைபோல் கவிதைகள் குவிந்து கிடப்பதேயாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ கட்டுக்கடங்கா உணர்ச்சிகளும், முரண்பாடுகளும் இல்லையெனில், அங்கு வாழ்வோ கவிதையோ இருக்க இயலாது. விசாரியோன் பெலின்ஸ்கி

★ கவிதை என்பது அனைத்துத் திறமைகளின் உள்ளுறையும் ஒளிப் பிழம்பாகும். பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ கவிதை என்பது அழகினை நற்பண்பாக மாற்றும்செயலின் உள்ளுயிர் ஆகும். எம்.எம்.பிரிஷ்வின்

★ கவிதை என்பது மனிதனின் உள்ளுயிரை ஒளிவிடச் செய்யும். ஒரு பிழம்பாகும். அது எரிந்து, வெம்மையை அளித்து, ஒளியூட்டு கிறது. ஓர் உண்மையான கவிஞன், தவிர்க்க இயலாத வண்ணம், எரிக்கும் வலியினால் தன்னையும் மற்றவர்களையும் உணர்ச்சி

யற்றுப் போகச் செய்கிறான் என்பதுதான், இன்றியமையாத முழுமையான செய்தியாகும். லியோ தோல்சுதாய்

★ கவிஞர்கள் என்பவர்கள் ஏதோ கடலுக்கப்பால் இருந்து வருபவர் களல்லர்; ஆனால் அவர்களும் மக்களிடையே இருந்து தோன்று பவர்களே. அவர்களது மக்களிலிருந்து வெளிவரும் ஒளி விளக்கு களாகவும், அதன் ஆற்றல்களின் மிகுந்த முன்னேற்றமடைந்த மரபு வழியினர்களாகவும் அவர்கள் விளங்குகின்றனர்.
நிகலாய் கோகோவ்

★ ஒரு கவிஞனுக்கு வயதென்பது எதுவும் கிடையாது. ஓர் உண்மை யான கவிஞன் அனைத்து வழித்தோன்றல்களுக்கும், அவனது பேரக் குழந்தைகளின் மரபினர்களுக்கும், சமகாலத்தவனாக இருப்பவன்.
அலெக்சாண்டர் தவார்டோவ்ஸ்கி

★ கவிதையிலும், உரைநடையைப் போலவே, சிந்தனைதான் முதலில் வருவது; அது இல்லாமல் இருப்பதைக் கற்பனை நிறைந்த பின்னல் வேலைகள் மறைத்தும், எதுகை மோனைகள் கொண்ட மென்மைத் தன்மையினாலும், நிறைந்த இசைத் தன்மை யினாலும் நீ குழப்பமடையச் செய்யக்கூடும் என்றாலும், சிந்தனை யற்ற ஒன்று நீடித்து நிற்கும் நல் எண்ணத்தை எப்போதுமே தோற்றுவிக்காது. திமிட்ரி பிசரேவ்

★ கவிஞர்களின் சில சிந்தனைகளை மட்டுமே கொண்டிருக்கும் பாடல்கள் அதிக இன்றியமையாத தன்மையை வென்றிடு மெனத் தோன்றவில்லை. நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ எதுகை மோனைகளைக் கொட்ட இயலுமென்பது மட்டுமே ஒரு கவிஞனை உருவாக்காது. அலெக்சாண்டர் பூஷ்கின்

★ கவிதை என்பது புதுமையானதாக இருக்க வேண்டும்; திரும்பச் சொல்வது போல் அதற்கு அழிவைத் தருவது வேறெதுமில்லை.
அபானசி பெட்

★ கவிதை என்பதும் சளசள எனப் பேசுவதும் மாறுபட்ட இரு துருவங்களில் உள்ளவையாகும். கவிதையின் சாரம் சுருங்க உரைக்கப்பட்ட பொருளில் இருப்பதாகும்; அதனை நீர்த்துப் போகச் செய்வது என்பது அதனைக் கொல்வதே ஆகும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ சொற்களை நாணயம் போல் அச்சிடும்.
கடினமானதாகவும், தெளிவானதாகவும், உண்மையானதாகவும்
இவ்விதியை எப்போதுமே மீறாதே.
சொற்கள் சிலவாக இருக்கும்போதும்
சிந்தனைகள் பலவாக இருக்கட்டும். நிகலாய் நெக்ரசோ

★ கவிஞனின் பெருமை ஒளிவிடும் ஒலியழகில் உள்ளது.
ஆனால் ஒலியழகு ஆழமற்ற சொல்லினை வெறுக்கிறது.

சுலைமான் ஸ்டால்ஸ்கி

★ குறிப்பாகப் பாடல்கள் எழுதுவதில், புதுமையானதென்பது தோன்றியவுடன் விரைவில் மறைந்துவிடுவதாகும். ஏ.என்.ராடிஷ்சேவ்

★ ஓர் உண்மையான கவிஞனை உருவாக்கும் இன்றியமையாத குணங்களில், புதுமை என்பதும் உறுதியாக இடம் பெற்றிருக்க வேண்டும். வேறு எவர் ஒருவரையும்விட, கவிஞன் என்பவன் தனது காலத்திய ஒரு மகனாக இருக்க வேண்டும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ கவிதையின் மொழி என்பது, துல்லியமானதாகவும், சுருக்கமானதாகவும், தெளிவாகக் காட்சியளிப்பதாகவும், இசைத் தன்மை கொண்டதாகவும் இருப்பதாகும். விளாடிமிர் கோரோலெங்கோ

★ ★ ★

# இலக்கியத் திறனாய்வு

★ நம்முன், குறிப்பாக உருசியாவில், இலக்கியத் திறனாய்வு என்பது மக்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்படவில்லை; பலருக்குத் திறனாய்வு செய்வது என்பது திட்டுவது என்ற பொருளையே அளிக்கிறது. இலக்கியத் திறனாய்வைச் சரியாகப் புரிந்து கொள்ளவது, குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப் படுவது, குற்றம் சாட்டுவது, தண்டனை அளிப்பது ஆகியவற்று டன் நீதியினைக் குழப்பிக் கொள்ளவது என்பதற்கு ஒப்பான தாகும். அகன்ற பொருளில், திறனாய்வு என்பதும் அற மன்றத் தீர்ப்பைப் போன்றதேயாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ திறனாய்வு என்பது கலைக்கும், அறிவியலுக்குமிடையே உள்ள இடைத் தரகரோ, இணக்கமாக்கும் தூதுவரோ அன்று. அது சிந்தனையை நடைமுறைப்படுத்தப் பயன்படுத்தும் ஒன்றாகும். அது கலையினால் உருவாக்கப்பட்ட, கலையை உருவாக்குவ தல்லாத, அவ்வாறிருக்க உரிமை பெற்ற ஒரு அறிவியலாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ இலக்கியத்திற்கு, மக்களே மிக உயர் அறமன்றமும், மிகவுயர்ந்த தீர்ப் பாயமும் ஆகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு திறனாய்வாளரின் கடுமையான திறனாய்வு உண்மையான திறமையைக் கொல்வதாக இருக்க முடியாது. அது போலவே ஒரு திறனாய்வாளரின் பாராட்டு, தகுதியற்ற ஒருவனை உயர்த்த வும் முடியாது. விசாரியோன் பெலின்ஸ்கி

★ திறனாய்வு செய்யப்படாத இலக்கியம், விளக்குகளற்ற ஒரு தெருவைப் போன்றதாகும். சாமுவேல் மார்சக்

★ எங்குக் கலையின் மீதான அன்பு இருக்கவில்லையோ, அங்குத் திறனாய்வு என்பதும் கூட இருக்க முடியாது.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ ஒரு கலைப் படைப்பின் அல்லது இலக்கியத்தின் அழகுகளையும் தவறுகளையும் கண்டுபிடிப்பதற்கான அறிவியலே திறனாய்வு எனப்படுவதாகும்.
**அலெக்சாண்டர் பூஷ்கின்**

★ திறனாய்வின் நோக்கம் என்பது, நல்ல எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு விளக்கம் அளிப்பது, பொருத்தத்தை வேறுபடுத்திக் காண்பது, நம் அனைவராலும் எழுதப்பட்ட பெரிய அளவிலான குப்பையிலிருந்து மிகச் சிறந்ததைத் தனிமைப்படுத்திக் காண்பது, என்பவையே ஆகும். திறனாய்வாளர்களைப் பொறுத்தவரை, அவர்களது திறனாய்வு முறை நல்ல எழுத்தாளர்களைக் கேடர்களாகவும், ஆழ்ந்த சிந்தனை கொண்டவர்களை ஆழ மற்றவர்களாகவும், அறிவாளிகளை முட்டாள்களாகவும் அடிக்கடி மாற்றிவிடுகின்றது.
**இலியோ தோல்சுதாய்**

★ திறனாய்வாளர்களால் புகழப்படும் ஒரு போலியான கலைப் படைப்பு என்பது, கலை பற்றி வெளி வேடம் பூண்டவர்கள் தப்பிச் செல்ல உதவும் ஒரு கதவாகும்.
**இலியோ தோல்சுதாய்**

★ இலக்கியத் திறனாய்வு என்பது புதினத்தின் ஒரு பகுதி. படிப்பவரை ஊக்கப்படுத்துகிறது என எண்ணும்படியாக மனத்தின் செயல்பாடுகளை நடத்திச் செல்வதாகவும், உற்சாகப்படுத்துவதாகவும், தீவிரப்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.
**திமிட்ரி பிசரேவ்**

★ திறனாய்வாளர் சல்லடையில் தண்ணீர் ஊற்றுவதைத் தவிர்க்க விரும்பினால், புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள இன்றியமையாத சிக்கல்களின் மீதான தனது கருத்துகளை அவர் அளிக்க வேண்டும்.
**திமிட்ரி பிசரேவ்**

★ ஒரு சாதாரண திறமை படைத்தவர், தம்மைத் தாமே அது போன்ற பொதுவானவராகக் காணாத காரணத்தினால் மட்டுமே, ஒரு திறனாய்வாளராக இருப்பதற்காக முடிவு செய்து குதித்துவிடுகிறார்.
**திமிட்ரி பிசரேவ்**

★ உருவாக்கும் பண்பாட்டுப் புரட்சி நடவடிக்கைகள் பற்றிய மக்களின் உறுதியினைத் தூண்டும் இலக்கியத்தின் ஆற்றல்களினாலேயே, நடைமுறை இலக்கியத்தைத் திறனாய்வாளர்கள் அளவிட வேண்டும்.

மாக்சிம் கோர்கி

★ இலக்கியத்தினால் மக்களின் மன நடவடிக்கையைத் தட்டி எழுப்ப இயலும்; என்றாலும் அது பொது மக்களுக்கான ஒரு மாற்றாக எப்போதுமே இருக்க இயலாது என்பதுடன், மக்களின் ஆதரவின்றி அது நிலைத்திருக்கவும் இயலாது.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ ஒரு புத்தகத்தை மதிப்பிடும்போது, அந்தப் புத்தகத்தைப் பற்றி நீ நினைக்கக் கூடாது; ஆனால் அது எதிரொலிக்கும், வெளிப்படுத்தும் வாழ்க்கையை முதன்மையானதாக நினைக்க வேண்டும்.

என்.ஏ.ரூபாகின்

★ ஓர் எழுத்தாளர் எழுதுவதைப் போலத் தங்களால் எழுத இயலவில்லை என்ற எளிய காரணத்துக்காகவே பெரும்பாலும் அவர்கள் அந்த எழுத்தாளரைத் திட்டுகின்றனர்.

வி.ஏ.குளுசேவ்ஸ்கி

★ மனித படைப்புகள் எப்போதுமே முழுமையான தவறற்ற நிலையைத், தன்மையை அடைய இயலாது, ஆனால் அங்குத் தவறான முழு நிலையற்ற படைப்புகளிலும் கூட அழகு இருக்க இயலும்.

ஆண்டன் ரூபின்ஸ்கின்

★ நல்லாய்வு மேற்கொள்ளவும், அதனுடன் செல்லும் தவறுகளைச் செய்யவும் எழுத்தாளர் உரிமை பெற்றுள்ளார் என்றே நான் உறுதிபடக் கூறுவேன். துணிவாக மேற்கொள்ளப்படும் முயற்சியின்றி கலை என்பதே இருக்க இயலாது என்பதால், ஓர் எழுத்தாளரின் ஆய்வு மதிக்கப்பட வேண்டும்.

ஏ.என்.தோல்சுதாய்

★ பெரும்பாலும் தண்டிக்கப்பட்டவர்கள் அறவாணர்களையும் அவர் களது தீர்பாயங்களையும் மீறி உயிர் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை இலக்கிய, கலை வரலாறு காட்டு கிறது என்ற காரணத் தினால், எனது மதிப்பீடுகளை மேற்கொள்வதில் எச்சரிக்கையுட னிருக்க நான் முயல்கிறேன். மாக்சிம் டாங்க்

★ ★ ★

# இளமை, முதுமை, அழியாமை

## அழியாமை

★ *வாழ்க்கை என்பது அழிந்துவிடாமல் இருப்பதற்கான ஒரு போராட்டமே ஆகும்.* எம்.எம்.பிரிஷ்வின்

★ *இறப்பு என்பது பார்ப்பவர்களையும், பக்கத்தில் உள்ள மக்களையும் மட்டுமே அச்சுறுத்துவதாகும்; ஆனால் தன் ஒருவனுக்கான சிறப்பு என்பது எதுவுமேயில்லை என்பதையும், தன்னைப் பொறுத்தவரை, ஒவ்வொருவரும் அழியாதவராகவே பிறந்து, அழியாதவராகவே புறப்பட்டுச் செல்கின்றனர் என்பதையும் பேரறிவாளர்கள் இறுதியில் புரிந்து கொண்டு விடுகின்றனர்.*

எம்.எம்.பிரிஷ்வின்

★ *இறப்புகளிலும் பலவகை உண்டு. நமது இன்றைய முன்னேற்றமடைந்த வாழ்வின் திசையைத் தீர்மானிக்க முயன்ற சிலர், கடந்த ஆயிரம் ஆண்டுகளாகவே நம் மனத்தின் ஆழத்தில் இறந்து போகாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.*

எம்.எம்.பிரிஷ்வின்

★ *வாழ்க்கையை விட்டுப் பிரிந்து செல்லும் இறப்பைப் பற்றிய அச்சமென்று எதுவுமே இருக்கவில்லை; ஆனால் அதனை மறுத்து, அதற்காக நடுங்குவது என்று ஏதேனும் இருந்தால், அது எளிதான இந்த உடலும், அரத்தமும்தான். அற உணர்வும், மனிதனின் உள்ளுணர்வில் அடங்கியிருக்கும் வேறு எது ஒன்றும் இறப்பின் போது ஒரு செயல்பாடற்ற, பாதிக்கப்படாதச் சாட்சியாக இருப்பவையேயாகும்.* பெண்டி கபியேவ்

★ *வேறு எவர் ஒருவர் மீதோ கொண்ட வெறுப்பினாலோ, தங்கள் மீதே அவர்கள் கொண்டுள்ள அதிகப்படியான பரிவிரக்கத்தாலும், அவர்களது ஆண்மையற்ற, தன்னம்பிக்கையற்ற,*

திறமையற்ற வாழ்வின் தோல்விகளினாலுமே, தற்கொலைகள் நடைபெறுகின்றன என நான் நினைக்கிறேன். ஒருவர் தம்மைப் பற்றியே பரிவு கொள்வது என்பது ஒரு கொடிய துன்பம் தரும் ஓர் உணர்வாகும். பெஸ்டி கபியேவ்

★ ஒரு மனிதன் எவ்வளவு சிறந்தவனாக இருக்கிறானோ, இறப்ப தற்கு அவ்வளவு அஞ்சாதவனாகவே அவன் இருக்கிறான். இலியோ தோல்சுதாய்

★ இறப்பு பற்றிய அச்சம் என்பது வாழ்வின் நற்தன்மையுடன் பிரிக்க இயலாதபடி, தவிர்க்க இயலாதபடி தொடர்புடையதாகும். இலியோ தோல்சுதாய்

★ வாழ்வதற்கு வெறுப்பு கொண்டிருக்க, ஒருவன் பரிவுக்கும், இரக்கத்திற்கும் உரிய ஒரு நிலையில் இருக்க வேண்டும். இலியோ தோல்சுதாய்

★ இறப்பைக் கண்டு அஞ்சாதபடியும், அதனை விரும்பாதபடியும் நீ வாழ வேண்டும். இலியோ தோல்சுதாய்

★ உறுதியாகச் சொல்வதானால், அழியாமை என்பது ஒருவரது வழித் தோன்றல்களின் மூலமாகவே அய்யமற்ற வகையில் வெளிப்படுத்தப்படுவதாகும். இலியோ தோல்சுதாய்

★ தன்மையே ஏமாற்றிக் கொள்ள எந்த முயற்சியும் செய்யாமல், இறுதி வரை தனக்குத் தானே உண்மையானவனாக இருந்து, அச்சமடையாமலும் வலிவிழக்காமலும் இருந்து, இறப்பின் வரவை எதிர் நோக்கியிருந்து, அதன் கண்களை நேருக்கு நேர் சந்திப்பது என்பது வலிமை மிக்க குணநலன்கள், பண்பாடு கொண்டவர்களால் மட்டுமே இயல்வதாகும். திமிட்ரி பிசரேவ்

★ மனித உள்ளுயிரினுள் எவ்வளவு ஆழமாக தனித்தன்மை ஊடுரு விச் செல்கிறதோ, அவ்வளவு ஆழம் நிறைந்ததாக இறப்பைப் பற்றிய அச்சம் வேர் கொண்டிருக்கும். ஜி.வி. பிளக்கனோவ்

★ வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், இறப்பைப் பற்றி சிந்திப்பது என்பது மடமையேயாகும். மாக்சிம் கோர்கி

★ மனித உயிர்கள் அழிபவையேயானாலும், மக்கள் அழிவின்றி மனித இன மனங்களில் நீடித்து வாழ்பவர்கள் ஆவர்.
மாக்சிம் கோர்கி

★ உனது வாழ்வின் நோக்கங்கள், உனது கடமைகள் அனைத்தையும் நிறைவேற்றி முடித்துவிட்டோமென்ற உனது அறிதலே, இறப்பைப் பற்றிய உனது அச்சத்தை அழிப்பதாகும்; நீ வாழ்ந்த ஒரு நேர்மையான வாழ்வு, அமைதி நிறைந்த ஓர் இறப்பிற்கு உனக்கு உறுதியளிப்பதாகும். மாக்சிம் கோர்கி

★ இறப்பு என்பது, வாழ்வின் ஒரு பகுதியாக இன்றியமையாத ஒன்றாக விளங்குவதாகும். எனவே இறக்கும்போது, நாம் பெருமையுடன் இறக்க வேண்டும். ஏ.வி.லூனாசாஸ்கி

★ வாழ்வென்பது நீண்டதாகவும், இறப்பென்பது கண நேரத்தில் நிகழ்வதாகவும் உள்ள போது, இறப்பைக் கண்டு ஏன் அஞ்சுகிறாய். பெலிக்ஸ் ஜெர்ஜேன்ஸ்கி

★ வாழ்வென்பது நீடித்து நிலைப்பதாகும், ஆனால் இறப்பென்பதோ பொதுவாக ஒரு கணத்தில் நிகழ்வதாகும்.
மிகலாய் லெர்மன்டோவ்

★ இறப்பைக் கண்டு நான் அஞ்சவில்லை, அஞ்சவேயில்லை; ஆனால் ஓர் அடையாளமுமின்றி மறைவதற்கே அஞ்சுகிறேன்.
மைக்கேல் லெர்மென்தோவ்

★ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டே அதனை திட்டிக் கொண்டு இருப்பதைவிட, அதனைப் புகழ்ந்து போற்றிக் கொண்டே வாழ்வது என்பது அதிக அறிவுடமை ஆகாதா?
லியோனிட் ஆன்ட்ரயேவ்

★ இறக்கும் போது தெரிவிக்கப்படும் விருப்பமானது, ஆன்மாவின் ஒரு தவறான, போலியான நிலையின் அடையாளமேயாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ உடல் நலமற்று இருப்பது என்பது நல்லதில்லை; இறப்பது என்பது அதனினும் இழிவானது. நீ எதனையுமே விட்டுச் செல்ல வில்லை என்ற சிந்தனையுடன் உடல் நலமற்று, இறப்பது என்பது அனைத்திலும் இழிவானது. விசாரியோன் பெலின்ஸ்கி

★ மக்கள் இறந்து போகலாம் என்றாலும், மனிதத் தன்மை என்பது நிலைத்து நீடித்து வாழவே வேண்டும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ வாழ்வின் நோக்கமே, இறப்பிற்குப் பின் மட்டுமே இறப்பது என்றில்லாதபடி, இறந்துவிட்டது போன்றதல்லாத வாழ்வை வாழ்வதேயாகும். முசா ஜலீல்

★ ஒரு தனிப்பட்டவன், பொதுக் குறிக்கோளினால் கவரப்பட்டுத் தூண்டப்பட்டுப் பொது நல நோக்கத்திற்காகப் பணியாற்றுப வனாக இருப்பின், அவனைப் பொறுத்தவரை, இறப்பு என்று ஒன்று இருப்பதே இல்லை. டி.எம்.மாமின்-சிபிர்யாக்

★ அழிவற்று, நிலைத்து, நீடித்து வாழ்வது என்பது மனிதனுக்கு அளிக்கப்படவில்லை, என்றாலும் தனது பெயரை நினைவில் கொள்ளப்படும் ஒருவன் மகிழ்ச்சி நிறைந்தவனாகவே இருக்கிறான்.
அலிசார் நவோய்

★ இந்த உலகில் வாழ்ந்திருந்து, ஒருவன் வாழ்ந்திருந்ததைப் பற்றிப் பேசும் எதனையும் விட்டுச் செல்லாமல் இருப்பது என்ற ஒன்றே என்னை அச்சுறுத்துவதாக நான் காண்கிறேன்.
நிகலாய் கோகோவ்

★ இலக்கிய உலகில், இறப்பென்று எதுவுமே இல்லை, ஏனெனில் இறந்து போனவர்களும், நமது சிக்கல்களில் தலையிடுவதுடன்,

*வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் போலவே அவர்களும் நம்முடன் இணைந்து செயல்படுபவர்களாக இருப்பதினால்தான்.*

நிகலாய் கோகோவ்

★ *காலத்தின் கோரிக்கைகள், தேவைகளுக்காகப் பாடுபடுபவன்*
*தனது வாழ்வையே அதற்காக அளித்துக் கொண்டவன்*
*உடன் பிறந்த, பிறவா மனிதனுக்கு நற்துணையானவனே*
*தனது காலத்தை மீறி நிலைத்து வாழ்பவன்.*

நிகலாய் நெக்ரகோவ்

★ *மனித இனம் என்று நாம் அழைக்கும் முழுவதிலும், வாழ்ந்து கொண்டிருப்பவர்களைவிட இறந்து போனவர் போன்றிருப்பவர்களே அதிகமாக உள்ளனர்.* கே.ஏ.திமிரியாசெவ்

★ *இயந்திரங்களால், மனிதர்களை அழிவற்றவர்களாக ஆக்க இயலாது. ஆனால் அறநெறிக் கோட்பாடு என்பது இத்துடன் உறவு கொண்டதாக இருக்கவில்லை. பெருமை, மனசாட்சி ஆகியவற்றின் விதிகளை ஏற்றுக் கொள்வதாக இருந்து, தவிர்க்க இயலாத முடிவை அமைதியுடனும், பெருந்தன்மையுடனும், எந்தவித அச்சமோ, வருத்தமோ இன்றிச் சந்திக்க நம்மை ஒப்புப் பவையாகவும் இருப்பதற்கு ஆன ஒரு பொதுவான வாழ்க்கை முறையினை உருவாக்குவதாக அது இருக்க வேண்டும்.*

என்.கே.மிகெய்லோவ்ஸ்கி

★ *உனது வாழ்வின் முடிவினை நீ நெருங்கிச் செல்லும் போது, உனக்கு முன், உனது ஆவலைத் தூண்டும் அடிவானம் விரிந்து இருப்பதைக் காண நீ விதிக்கப்பட்டிருக்கிறாயா என்று வருத்தத் துடன் உன்னை நீயே கேட்டுக் கொள். உன்னைத் தொடர்ந்து இளைஞர்களும், வலிவு படைத்த மக்களும் உள்ளனர் என்பதும், உண்மையைத் தேடும் இடைவிடாத முடிவற்ற இத் தேடுதலில், இளமையும், முதுமையும் ஒன்றுடன் ஒன்று கலந்து உறவாடுகிறது என்பதும் ஆற்றல் அளிப்பவையே ஆகும்.*

நிகலாய் சுகோவ்ஸ்கி

★ தன் பின்னே, குறைந்தது ஒரு தெளிவான, புதிய கருத்தை விட்டுச் செல்பவனும், மனித இனத்திற்கான ஒரு நற்செயலை விட்டுச் செல்பவனும், குழந்தைகளின்றி, சந்ததியினரின்றி இறந்து போகின்றவர்கள் ஆக மாட்டார்கள்.

ஏ.ஏ.பெஸ்டுகேவ் - மார்லின்ஸ்கி

## இளமை

★ வலிமை நிறைந்த எதிர்பார்ப்புகள், விழைவுகள் நிறைந்த அறிவு வேட்கை, போராட்டம், நம்பிக்கை, தன்னம்பிக்கை கொண்ட இளமை என்னும் விலைமதிப்பற்ற மாபெரும் பரிசு ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் அளிக்கப்பட்டுள்ளதாகும்.

நிகலாய் ஓஸ்ட்ரோவ்ஸ்கி

★ உழைக்கும் பிரிவின், பொதுவுடமைக் கட்சியின் உண்மை நிறைந்த ஒரு மகனாக இருப்பதைவிட மிகுந்த மகிழ்ச்சியை அளிப்பது வேறெதுமில்லை என்பதால், ஒவ்வோர் இளைய உழைப்பாளியும் ஒரு போராட்ட வீரராக இருக்க விரும்ப வேண்டுமென்பதையே நான் விரும்புகிறேன்.

நிகலாய் ஓஸ்ட்ரோவ்ஸ்கி

★ இளமை என்பது ஒரு மாபெரும் மந்திரவாதியாகும்.

அலெக்சாண்டர் பூஷ்கின்

★ அதனுடைய பெருந்தன்மையான ஆர்வத்தினாலும், நேர்மைக்கும் நியாயத்திற்கும் சமூக உண்மைக்குமான அதன் தெளிவற்ற விழைவுகளாலும், இளமை என்பது முன்னேற்றத்திற்காகப் பணிபுரியும் மாபெரும் ஆற்றல்களில் ஒன்றாக இருப்பதாகும்.

என்.வி.செல்குனோவ்

★ இளமை என்பது கனவு காண்பதாக இல்லையெனில், மனித வாழ்வு என்பது அந்த நிலையிலேயே உறைந்துவிடும்; இளமைக் கனவுகளின் நம்பிக்கை நிறைந்த சூழ்நிலையில் கண்ணுக்குத் தெரியாமலேயே, பல பெரிய கருத்துகளின் விதைகள் வளர்ந்து கனிந்துள்ளன.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ *இளமை என்பது ஓர் எதிர்காலத்தைப் பெற்றிருப்பதால் மகிழ்ச்சி யானதாகும்.* **நிகலாய் கோகோவ்**

★ *மென்மையான இளம் பருவத்திலிருந்து கடுமை நிறைந்த, கசப்பான முதிர்ந்த பருவத்தை நீ அடையும் போது, அனைத்து மனித இயக்கங்களையும் உன்னுடன் எடுத்துச் செல்; பின்னர் அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டி வழியிலேயே கிடக்கும்படி விட்டுவிட்டு நீ செல்லாதே.* **நிகலாய் கோகோவ்**

★ *எதிர்காலத்திற்கான விதைகள் விதைக்கப்படும் நேரத்தைப் போன்ற இளமைக்காலம் என்பது மக்களது வாழ்வின் இளவேனிற் காலமாகும்.* **ஒய்.பி.கினியாஜின்**

★ *இளமையே! இளமையே! உனது பெருமையின் மறைபொருள், எதனையும் செய்து முடிக்க இயலும் என்ற தன்மையில் இருப்பதன்று; ஆனால் எதனையும் உன்னால் செய்து முடிக்க இயலும் என்று சிந்திக்கும் ஆற்றலில்தான் உள்ளது.* **இவான் துர்கனேவ்**

★ *இளமைப் பருவமே பெருந்தன்மையான உணர்வுகள் புத்துணர் வுடன் விளங்கும் காலமாகும்.* **நிகலாய் செர்னசேவ்ஸ்கி**

★ *இளமை என்பது வாழ்வின் கவிதையாகும்; ஒவ்வொருவரும் அவரது இளமைப் பருவத்தில், அவர்களது வாழ்வின் மற்ற பருவங் களில் இருந்ததைவிடச் சிறந்தவர்களாகவே இருந்துள்ளனர்.* **விசாரியோன் பெலின்ஸ்கி**

★ *ஒரு மனித உயிரின் இளமைப் பருவம் என்பது, வலிமை நிரம்பித் ததும்புவதாகவும், செயல்பாட்டிற்கான ஒரு காலமாகவும் இருப்ப தனால், அழகு நிறைந்த, பசுமையான ஓர் இளவேனிற் கால மாகும். அது ஒவ்வொருவரின் வாழ்விலும் ஒரே ஒரு முறை வருவ தாகவும், எப்போதுமே திரும்பி வராததுமாகவும் இருப்பதாகும்.* **விசாரியோன் பெலின்ஸ்கி**

★ இளமை என்பது வாழ்நாள் காலத்தில் ஒரே ஒரு முறை வருவதாகும். மற்ற வயதுகளில் இருப்பதைவிட, பெரியதும், அழகு நிறைந்ததுமான அனைத்திற்கும் திறந்து வழிவிடுபவர்களாகவே ஒவ்வொரு வரும் அவரது இளமைக் காலத்தில் உள்ளனர். வயது ஏறிச் சென்ற பின்னும், தனது இளமையைத் தக்க வைத்துக் கொண்டு, தனது உள்ளுயிரைக் குளிர்ந்து போக, கசப்பானதாக, கடினமானதாக ஆக ஒப்பாமல் இருப்பவனே நற்பேறு விதிக்கப்பட்டவன் ஆவான். விசாரியோன் பெலின்ஸ்கி

★ துணிவு என்பது, குறிப்பாக இளமையில் துணிவு என்பது, வலிமை மிகுந்ததாகவும், எளிதில் எட்டக் கூடியதாகவும், உயிர்ப்பைத் திறந்து விடுவதாகவும் இருப்பது என்பதுடன், வழக்கமானதல்லாததைத் தவிர வேறெதற்காகவும் வேட்கை கொள்ளாததாகவும் இருப்பதாகும். நிகலாய் கோகோவ்

★ இளமை எப்போதும் தன்னலமற்று இருப்பதாகும்.
அலெக்சாண்டர் எர்சன்

★ ஒரு பொது நலத்திற்காக வலிவுடன் தட்டியெழுப்பப்படுவதைவிட அதிகமாக, விடலைப் பருவத்தைத் தூய்மைப்படுத்துவதும், பெருமைப்படுத்துவதுவும், பாதுகாப்பதும் இவ் உலகில் வேறெதுமில்லை. அலெக்சாண்டர் எர்சன்

★ எவராவது ஒருவரின் வரையறைகளைக் காண்பதைவிட வருந்தத் தகுந்தது வேறெதுவுமில்லை. அலெக்சாண்டர் எர்சன்

★ இளமை என்பது மனித இனத்தின் மாபெரும் அற்புதம் நிறைந்த நடமாடும் பகுதியாகும். மைக்கேல் கால்னின்

★ வாழ்க்கை என்பது அதிக ஆர்வம் அளிப்பதாகவும், மேற்கொள்ளப்படும் தொழில்கள் மிகப் பலவையாகவும் உள்ளன. பெரும் பயன் கொண்டதும், மனிதன் மகிழ்வுடன் முன்னேற்றமடைய உதவுவதுமான தொழில்கள் இளைஞர்களுக்கும் காட்டப்பட வேண்டும்.
மைக்கேல் கால்னின்

★ இளமை என்பது, எதிர்கால மனித இனத்திற்கான அடிப்படையான ஆணிவேர் போன்ற இன்றியமையாத ஓர் ஆற்றலாகும்.
ஏ.வி.லூனாசாஸ்கி

★ நம் இளைஞர்கள் இலிச்சின் இளைஞனைப் போல் இருக்க வேண்டும் (விளாடிமிர் இலிச் இலெனின்), அது அவனது தொடர்ந்துள்ள ஆர்வத்தை மற்றவருள் தொற்றுவிக்கும் இளமை நிறைந்த தன்மையை மட்டும் உள்ளடக்கியதாக இல்லாமல், அறிவுக் கூர்மை, விழிப்புடனிருத்தல், காலம் காலமாகத் திரட்டிப் பெறப்பட்டு வந்த பண்பாட்டிலிருந்து தேவையான முடிவுகளை மேற்கொள்ளும் ஆற்றலை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.
ஏ.வி.லூனாசாஸ்கி

★ ஒரு குறிப்பிட்ட, உறுதியான நோக்கம், தன் கட்டுப்பாடு, தனக்குத் தானே நேர்மையாக இருப்பது, இக்காலத்தில் மதிப்பு மிக்கதாகக் கருதப்படும் சோர்வில்லாமல் உழைக்கும் உணர்வு - இவற்றைத் தான் நம் இளைஞர்கள் ஏற்கும்படி நீ செய்ய வேண்டும்.
என்.பி.ஓகரேவ்

★ உனது இளமையைப் போற்றிப் பெருஞ்செல்வம் போல் பாது காத்துக் கொள்: அதைவிட சிறந்ததும், மதிப்பு மிகுந்ததும் இவ் உலகம் முழுவதிலும் வேறெதுவுமில்லை. மாக்சிம் கோர்கி

★ வாழ்க்கையின் நோக்கமே புரட்சிக்குப் பணியாற்றவது என்பது தான். நமது காலத்தில் வேறெந்த நோக்கமும் இருக்க இயலாது.
மாக்சிம் கோர்கி

★ சில மாபெரும் அற்புதமான நோக்கங்களுக்காக, நீடித்து நிற்கும் பிணைப்புகளை இளமையில் உருவாக்கிக் கொள்ளவோ, குறைந்தது சில எளிய ஆனால் நேர்மையான, பணிகளை மேற் கொள்ளவோ தவறியவன், அது எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்த தாக இருந்த போதும், அது எத்தனை இனிய நினைவுகளை விட்டுச் சென்றாலும் அடையாளமற்று அவனது இளமை இழந்துவிட்டதாகவே கருதிக் கொள்ளலாம். திமிட்ரி பிசரேவ்

★ வெறுமையான ஓர் இளமை என்பது ஓர் இயற்கை அழிவே ஆகும்.
அபல் குனான்பயேவ்

★ உனது சிறகுகளை விரித்து வைத்துக்கொண்டு வாழ். இது கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கு மட்டுமே பொருந்துவதன்று; ஆனால் எந்த ஓர் உழைக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் கூட பொருந்துவதாகும்.
செர்ஜி கொனங்கேவ்

★ நிறைந்த இளமையின் எதிர்மறை மனநிலை என்பது இளமையின் தீய எண்ணம் அன்றி வேறெதுவுமில்லை.
இலியா மெச்சின்கோ

★ கற்பதிலும், உழைப்பதிலும், அறிவியலிலும், பொது நலனுக்காக முழு மனத்துடன் பாடுபடுவதிலும் உனது மகிழ்வை நீ காண்பாய்.
என்.டி.செலின்ஸ்கி

★ உன்னால் இயன்றால், காலத்திற்கு மேம்பட்ட நிலையில் இரு, அவ்வாறு இயலாதெனின், காலத்தின் அடிச்சுவட்டை ஒட்டியேனும் செல். ஆனால் எப்போதுமே காலத்திற்குப் பின் தங்கியிராதே.
வலேரி பிரியுசோவ்

★ பொதுவுடைமை என்பது இவ் உலகின் இளமையாகும், அதனை உறுதிபடக் கட்டிப் பாதுகாப்பது இளைஞர்களைப் பொறுத்ததாகும்.
விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ கவலையற்ற மகிழ்வையே நாடுபவன் ஒரு மகிழ்ச்சிப் பூங்காவில் நுழைவதைப் போல், நீ வாழ்க்கையில் நுழையாதே, வாழ்க்கையும் அற்புதமும் நிறைந்த ஒரு தூய்மையான காட்டினுள் நீ நுழைவதைப் போல் அச்சம் கலந்த மதிப்புடன் வாழ்க்கையில் நீ நுழை.
விகன்டி வெரசயேவ்

★ வயது முதிர்ந்த மக்களின் மனித இயல்பான வலிவுக் குறைபாடுகளைப் பொறுத்துக் கொள்ளவும், அவற்றில் சிலவற்றைக் காணாமல் இருக்கவும் நீ கற்றுக் கொள்.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ கற்பிக்கவும் அறிவுரை வழங்கவும் ஆன உரிமைகளை வயது முதிர்ந்த மக்கள் ஈட்டிப் பெற்றுள்ளனர். இந்த அறமிகு உரிமையை மதிக்கவும் நீ கற்றுக் கொள்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ வயது முதிர்ந்தவரின் பேரறிவு இளமை நிறைந்தவர்களின் பெரு மகிழ்வையும் வலிமையையும் வழி நடத்திச் செல்லட்டும், இளமை நிறைந்தவர்களின் மனப்பூரிப்பும் வலிமையும் பேரறிவு படைத்த வயது முதிர்ந்தவர்க்கு ஆதரவாக இருக்கட்டும்.

கான்ஸ்டான்டின் ஸ்டேனிஸ்லேவ்ஸ்கி

★ ஒரு பொதுவுடைமை சமூகத்தை உருவாக்கும் உண்மையான பணியை எதிர்கொள்ள வேண்டியவர்கள் இளைஞர்களே.

வி.இ.இலெனின்

★ இளைஞரின் துடிப்பு, பழுத்த வயதின் பேரறிவு - இவையே உலகை உலுக்கும் மாபெரும் வெற்றிகளின் ஊன்றுக் கண்ணாம்.

ஜி.எம். கிரிஜிசானோவ்ஸ்கி

## முதுமை

★ முதுமையில், உனது கண்கள் முன்னேயிருந்து உனது தலையின் பின்னே மாறிச் சென்றுவிடுகின்றன; நீ உன் முன்னே எதனையும் காணாமல், பின்னோக்கிக் காணத் தொடங்கி, நம்பிக்கைகள் எதுவுமின்றி, கடந்த கால நினைவுகளிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவனாக ஆகிவிடுகிறாய்.

வி.ஏ.குளுசோவ்ஸ்கி

★ மனிதனுக்கு முதுமை என்பது, ஆடைகளில் படியும் தூசியைப் போன்றது; அது அவனது பண்பு நலன்களில் உள்ள அனைத்துப் புள்ளிகளையும், கறைகளையும் வெளிக்காட்டுவதாக உள்ளது.

வி.ஏ.குளுசோவ்ஸ்கி

★ முதுமைக் காலம் பற்றிய சிந்தனையே உனது வயதைக் கூட்டுவதாகும்.

எவ்டி கபியேவ்

★ முதுமைக் காலம் என்பதும், மருத்துவத்தால் நலமாக்கப்பட வேண்டிய எந்த ஒரு நோயினைப் போலவே, தீர்க்கப்பட வேண்டிய ஒரு நோயாகும். இனயா மெச்சின்கோ

★ ஆமாம். ஒரு மாபெரும் முதிய மனிதனாக இருப்பதென்பதே ஒரு பெரிய கலையாகும். புதியவையான அனைத்திற்கும் தனது உள்ளத்தைத் திறந்து வைத்திருப்பதும், வளரும் தலைமுறை யினரைப் போற்றிப் பாதுகாப்பதும், அதற்குத் தம் பட்டறிவைத் தாராளமாக அளிப்பதும் ஆன ஒரு பேரறிவு கொண்ட முதிய வரில் உள்ளதைப் போல் முழுமையான அளவில் மனித நேயம் எப்போதுமே விவரிக் கப்படவில்லை என்பது உண்மையானதே.
ஏ.வி.லுனாசர்ஸ்கி

★ முதுமைப் பருவம் என்பது விருப்பங்களை வெளிக் காட்டாமலும், ஆழ்ந்த உணர்வுகளை எதிரொலிக்காமலும், ஆனால் அமைதியும், நிறைவும் கொண்டதாக உள்ள தனக்கான நல்லழகைப் பெற்றி ருப்பதாகும். அலெக்சாண்டர் எர்சன்

★ முதுமைப் பருவம் என்பது மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்க இயலாது. 'மகிழ்ச்சியான முதுமைக் காலம்' என்ற சொற்கள் அறியாமை நிறைந்த மக்களிடமிருந்து வருபவையாகும். முதுமைக் காலம் என்பது ஒன்று அமைதியாக இருப்பது அல்லது வருத்தத்துடன் இருப்பதே ஆகும். மதிக்கப்பட்டால் அது அமைதியானதாகவும், புறக்கணிக்கப்படுத்தப்பட்டால் அது துயரமாகவும் இருக்கும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ சில நேரங்களில் முதுமை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. அது அதனில் உள்ள பழச்சாற்றைப் புளிக்க வைக்கும் நுண்ணுயிர்கள் வளரும் மதுக் குடுவையைப் போன்றுள்ளது.
மைக்கேல் லெர்மென்டோவ்

★ ★ ★

# உழைப்பு

## உழைப்பும் பொது அறமும்

★ தன்னிச்சையாக, பிரிவு உணர்வோடு, முன்னேற்றமடைந்துள்ள தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிக்கும் ஒற்றுமைப்படுத்தப்பட்ட உழைப்பாளிகள் பற்றி - இப்போதுள்ள முதலாளியத்தின் கீழுள்ள துடன் ஒப்பிடும்போது - உழைப்பாளியின் உயர்ந்த படைப்பாகப் பொதுவுடைமை உள்ளது. வி.இ.இலெனின்

★ அடிப்படைப் பணிகளில் ஒன்று, உழைப்பாளியின் உற்பத்தித் திறன் நிலையை உயர்த்துவது என்பது. ஏனெனில், இதுவன்றி, பொதுவுடைமைக்கான முழு மாற்றம் என்பது இயலாததேயாகும். வி.இ.இலெனின்

★ ஓர் புதிய உழைப்பாளிகளின் ஓர் ஒழுக்க நெறியையும், மக்களிடையேயான சமூகப் பிணைப்புகளின் புது வடிவங்களையும், மக்களை உழைப்பில் ஈடுபடுத்தும் புதிய வடிவங்களையும், நடைமுறைகளையும் உருவாக்க இன்னமும் பல ஆண்டுகளும், பத்தாண்டுகளும் பிடிக்கும். அது மிகுந்த நிறைவளிக்கும், பெருந்தன்மை மிக்க பணியாகும். வி.இ.இலெனின்

★ முதலாளியம் முற்றிலும் காணாமற் போகச் செய்யப்பட இயலும். சமன்மையால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய மிக அதிக விளைபயன் கொண்ட உழைப்பாளிகளால் முற்றிலும் காணாமற் போகும்படி செய்ய்ப்பட்டு விடும். வி.இ.இலெனின்

★ நமது பொருளாதாரக் கொள்கை மூலம் நமது முதன்மையான செல்வாக்கை அனைத்துலகப் புரட்சியின் மீது நாம் பயன்படுத்துகிறோம். அதனால்தான், நம்மைப் பொறுத்தவரை, பொருளாதார முன்னேற்றம் பற்றிய வினாக்கள் முழுமையான

தவிர்க்கப்பட இயலாத இன்றியமையாமை வாய்ந்தவையாக ஆகிவிட்டன. வி.இ.இலெனின்

★ பொதுவுடமையின் உயர்ந்த நிலை வரும் வரை, உழைப்பின் அளவு, நுகர்வதின் அளவு ஆகியவற்றின் மீது அரசாலும், சமூகத் தாலும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டுமென சமன்மையர்கள் கோருகின்றனர். வி.இ.இலெனின்

★ 'வேலை செய்யாதவன், உண்ணவும் கூடாது' - இதுதான் சமன் மையத்தின் நடைமுறையிலான ஆணையாகும். இவ்வாறுதான் அனைத்துச் செய்திகளும் நடைமுறையில் அமைக்கப்பட வேண்டும். வி.இ.இலெனின்

★ இந்த விதியை மக்களின் மனத்தில் பதிய வைக்கவும், அதனை ஒரு பழக்கமாக மாற்றவும், எளிய மக்களின் அன்றாட வாழ்வில் கொண்டு வரவும், நாம் பாடு பட வேண்டும்: "அனைத்தும் ஒவ்வொரு வருக்காக, ஒவ்வொன்றும் அனைவருக்காக" "அவனது ஆற்றலுக் கேற்றபடி ஒவ்வொருவரிடமிருந்தும், அவனது தேவைகளுக் கேற்றவாறு ஒவ்வொருவருக்கும்". பொதுமை ஒழுக்க நெறியும், பொதுமை உழைப்பும் படிப்படியாக, ஆனால் உறுதியாக, நடைமுறைப்படுத்தப் பட நாம் பணியாற்ற வேண்டும்.
வி.இ.இலெனின்

★ உழைப்பாளியின் விளைபயனை உயர்த்தவும், ஒவ்வொரு மணி தானியத்தையும், கரி, இரும்பு, மற்ற விளை பயன் பொருள் களைப் பாதுகாக்கவும், இடைவிடாத, கடுமையான உழைப்பைப் பற்றி ஆர்வம் மிக்க அக்கறையை உழைப்பாளிகளின் அனைத்து நிலையினரும் வெளிக் காட்டும்போது, பொதுவுடமை தொடங்குகிறது. வி.இ.இலெனின்

★ சமன்மை உழைப்பாளரின் பொதுவுடைமை அமைப்பின் முதல்படி யான பொதுவறம் என்பது உழைக்கும் மக்களின் விடுதலை

யான, உள்ளார்ந்த ஒழுக்கத்தையே சார்ந்திருக்கிறது, காலம் செல்லச் செல்ல அது இன்னமும் அதிகமாக அதனைச் சார்ந்திருக்கும்.
வி.இ.இலெனின்

★ அது எவ்வளவு கடினமாகவும், குழப்பமாகவும் இருந்த போதும் அனைத்து உழைப்பாளிகளையும் 'நான் இலவய உழைப்பு என்ற பெரிய படையின் ஒரு பகுதி' என்று சொல்லும் ஒரு வழியில் ஒவ்வோர் உழைப்பாளியையும், உழவராக நாம் அமைப்புக்குள் கொண்டு வர வேண்டும். வி.இ.இலெனின்

★ போட்டியைத் தவிர்ப்பதற்கு, அணைப்பதற்கு மாறாக, முதல்முறையாகச் சமன்மையம், உண்மையில் ஓர் அகண்டத்தின் மீதும், உண்மையில் ஒரு மாபெரும் அளவிலும், முதலாளியம் நசுக்கி, ஒடுக்கி, குரல் வளை நெரித்த ஆயிரக்கணக்கான, இலக்கக் கணக்கான மக்களிடை யே மிகுந்திருந்த ஆற்றல்களை வெளிப் படுத்தவும், அவர்களது திறமைகளை வெளிப்படுத்தி வளர்க்கவும் உழைப்பு என்னும் களத்தில் பணியாற்றும் மக்களில் பெரும் பாலானோரை உண்மையில் ஈர்க்கும் வாய்ப்பினை உருவாக்கியுள்ளது. வி.இ.இலெனின்

★ பொதுமை ஓர் ஆழ்ந்த கொள்கை பற்றிய பொருளை அளிப்பதால், மக்களிடையே மிகுந்த பெரும் மகிழ்ச்சியைத் தூண்டி உருவாக்கி, வளர்ப்பதுடன், சாதாரண உடல் உழைப்பிற்கான ஆர்வத்தையும் அளிக்கின்றது. மைக்கேல் காலினின்

★ இங்கிருப்பதைப் போல் உலகில் வேறெந்த நாட்டிலும், உழைப்பு மக்களை இதுபோல் அதிகளவில் கவர்வதாக இருக்க இயலவில்லை, இங்கு, நம் நாட்டில் உழைப்புப் பெற்றுள்ள அதே அளவு பெருமையையும், மரியாதையையும் உலகில் வேறெந்த நாட்டிலும் பெற்றிருக்கவில்லை. மைக்கேல் காலினின்

★ சோவியத்துக் கூட்டமைப்பில் - மிகச் சாதாரணமானதிலிருந்து மிக அதிக தொழிற் திறமை வரை பெற்றுள்ள - நகர்ப்புற, சிற்றூர்ப்புற

உழைப்பாளர்கள், ஆழ்ந்த பொருளைப் பெற்றவர்களாகவும், மா பெரும் சமன்மைக் கருத்து பதியப் பெற்றவர்களாகவும், இருந்த துடன், மக்களிடையே பொதுவுடைமை மெய்மையின் உணர்வை ஏற்படுத்தி அவர்களைப் புத்துணர்வு கொள்ளச் செய்யும் படைப் பாற்றல் மிக்க கொள்கை கொண்டவர்களாக ஆகிவிடுகின்றனர்.

மைக்கேல் காலினின்

★ நம் நாட்டில் அனைத்து வகையான உழைப்பும் மதிக்கப்படு கிறது. கீழ்த்தரமான அல்லது ஓர் உயர்ந்த வகை வேலை என்பவை எவையும் இங்கில்லை. கல்தச்சர், தச்சர், ஓவியர், பன்றி மேய்ப்பவர், நடிகை, பேருந்து ஓட்டுநர், வேளாண்மை அறிவி யலார், விற்பனைப் பணியாளர், மருத்துவர், இன்னும் இது போன்ற பலரின் வேலையும், அது எதுவாக இருந்தாலும், நமது நாட்டில் பெருமை, புகழ், வீரம், துணிவு, பெருமை கொண்டவை களே ஆகும்.

மைக்கேல் கால்னின்

★ உனது வேலையைத் திறம்படச் செய்ய வேண்டுமானால், அதனை விரும்பி செய்பவனாக நீ இருக்க வேண்டும். உனது வேலையை நீ விரும்பினால் தவிர, அதனைக் கற்றுக் கொள்ள உன்னால் இயலாது.

மைக்கேல் காலினின்

★ உடல் உழைப்பிற்கான மரியாதை என்பது உழைக்கும் மக்களின் நல்லொழுக்கம் என்பதின் வலிமை மிகுந்த தூண்களில் ஒன்றாகும்.

மைக்கேல் காலினின்

★ பொதுவுடைமை மெய்மையின் தன்மையான கோட்பாடுகளில் ஒன்று உழைப்பை விரும்பிச் செய்வதாகும்.

மைக்கேல் காலினின்

★ உனது வேலையை விரும்பு. நீ என்ன செய்கிறாய் என்பதில் மிகுந்த கவனத்துடன் இரு. ஒரு மனிதன் எந்த வேலையையும் செய்யாமல் மற்றவர் உதவியில் உண்டு கொண்டிருப்பானே யானால், அவன் எளிதாக மற்றவரது உழைப்பை விழுங்கு பவனாகவே இருப்பான்.

மைக்கேல் காலினின்

★ உழைப்பது என்பது புரட்சியின் சிவப்புக் கொடியில் பதிக்கப் பட்டுள்ளது. அது மக்களுக்கு வாழ்வளித்து, அவர்களின் மனம், உறுதி, நெஞ்சங்களை வளர்ப்பதால், அது தூய்மையானதாகும்.
மைக்கேல் காலினின்

★ புரட்சி என்னும் சிவப்புக் கொடியில் உழைப்பு என்பது பொறிக்கப் பட்டுள்ளது. மக்களுக்கு வாழ்வளித்து, அவர்களின் மனத்தை, உறுதியை, நெஞ்சத்தை வளர்ப்பதால், உழைப்பு என்பது புனிதமானது.
அலெக்சாண்டர் ப்ளோக்

★ நமது வேலை செய்வது என்பதற்கான உரிமை, நீ வாழ்வதற் காக பொருளீட்டுவது என்பதற்கான எளிய உரிமையன்று; முதன் முதலான படைப்பிற்கான ஓர் உரிமையாகும்.
ஆன்டன் மெக்ரன்கோ

★ வேலை செய்வது என்பதுதான் கடமை என்பது, வாழ்க்கையின் எதிர்மறைப் பகுதி என்ற அளவில் முன்னமேயே முற்றுப் பெற்று விட்டது. மனித பற்றுக்குத் தேவையான ஒரு கடுமையான வகை யினதாக இன்னமும் அது இருக்கவில்லை. நம்மைப் பொறுத்த வரை அது அனைத்திலும் முதலாகத் தனிப்பட்டவரின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்ற ஒரு திட்டத்துடன், வாழ்க்கை பற்றிய மகிழ்ச்சி நிறைந்த கண்ணோட்டங்களுடன் மிக நெருக்கமாகப் பிணைக்கப்பட்டதாகும்.
ஆன்டன் மெக்ரன்கோ

★ நமது சமூகத்தில் வேலை என்பது ஒரு பொதுவான பொருளா தாரக் கோட்பாடன்று; அது ஒரு மெய்மைக் கோட்பாடாகவும் ஆகும்.
ஆன்டன் மெக்ரன்கோ

★ தனது வேலையை செய்யாமல் தட்டிக் கழிப்பவன், மற்றவர்கள் வேலை செய்வதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருப்பவன், மற்றவர்களின் உழைப்பின் கனியைப் பயன்படுத்துபவன் சோவியத்துச் சமூகத்தில் உள்ள மிகுந்த ஒழுக்கங் கெட்டவன் ஆவான்.
ஆன்டன் மெக்ரன்கோ

★ நமது அனைத்துப் பெரிய நாடுகளும் வேலை செய்வதை விரும்பு கின்றன. புனிதங்களில் புனிதம் படைத்த ஒரு பண்பாடு; எங்கு பணியாற்றுதல் தவிர்க்கப்படுகிறதோ, அங்குப் பழத் தோட்டங்கள் வீழ்ந்துவிடுகின்றன. உழைப்பிற்கான விருப்பம் எங்கு இல்லை யோ, அது உலகின் பாலை நிலமாகும்.

செர்ஜி - செர்கபோவ் ஜென்ஸ்கி

## கடமையுணர்வு

★ உனது கடமையை நிறைவேற்ற நீ விரும்பினால், உனது தகுதி என்ன என்பதை அக் கணமே நீ அறிந்து கொள்வாய்.

இலியோ தோல்சுதாய்

★ உன்னுடையதாக இருப்பினும், மற்றவர்களுடையதாக இருப்பினும், சொற்களை எப்போதும் நம்பாதே; உன்னுடைய, மற்றொரு வருடைய செயல்களைத் தவிர வேறெதனையும் நம்பாதே.

இலியோ தோல்சுதாய்

★ நமது உயிரின் விருப்பங்கள் வெறும் விருப்பங்களாக இருக்கும் வரை, அந்தச் சிறந்த விருப்பங்களுக்கு நடைமுறையிலான தன்மைச் சிறப்பை நாம் அளிப்பதில்லை; மனிதர்களின் செயல் களினால் மட்டுமே உண்மைகளை நாம் மதிப்பிடுவதுடன், மனிதர் களின் தகுதி பற்றியும் நாம் தீர்மானிக்கிறோம்.

நிகிலாய் தோப்ரோலியூபோவ்

★ பழைய மனிதநேயநாட்டம் பறைசாற்றுகின்றது, "உனது தொழிலைப் பற்றி எனக்கு அக்கறையில்லை; நீ ஒரு மனித உயிராக இருப்பதென்பதே இன்றியமையாத செய்தியாகும்." சமன்மை மாந்தன்மை கூறுகிறது: நீ எப்போதுமே எதுவுமே செய்யவில்லையென்றால், இப்போதும் நீ எதுவும் செய்து கொண்டிருக்கவில்லையெனில், நீ எவ்வளவு அறிவும், கருணையும் படைத்தவனாக இருப்பினும், நீ ஒரு மனித உயிர் என்பதை ஒப்புக்கொள்ள நான் மறுக்கிறேன்.

அலெக்சாண்டர் பெடயேவ்

★ ஒரு மனிதன் தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் அல்லது என்ன சொல்கிறான் என்பவற்றால் அவன் மதிப்பிடப்படுவதில்லை; ஆனால் அவன் என்ன செய்கிறான் என்பதைப் பற்றியவற்றால் மட்டுமே மதிப்பிடப்படுகிறான். வி.இ.இலெனின்

★ உனது கடமையை எப்போதும் மறவாதே. அது ஒன்றுதான் வாழ்வின் இசையாகும். கடமை இல்லாமல் வாழ்க்கை என்பதுமில்லை, உணர்வு என்பதுமில்லை. அலெக்சாண்டர் பிளோக்

★ உனது கடமையின் மீதான விருப்பத்தை வளர்த்துக் கொள்ளாத வரை, அதனை நிறைவேற்ற உன்னால் இயலாது.
இவான் கொஞ்சரேவ்

★ உனது கடமையுணர்வை அடக்குவது, நீ ஆற்ற வேண்டிய கடமைகளைப் புறக்கணிப்பது என்பவற்றைச் செய்துவிட்டு, உனது அனைத்து உரிமைகளையும் கோருவது என்பது கயமை மிகுந்ததாகும். பியோடர் தோஸ்தோயேவ்ஸ்கி

★ உறுதியான கடமை உணர்வே, நல்லொழுக்கத்திற்கான அடையாளமாகும். என்.வி.செல்குளோவ்

★ நமது சமூகத்தில், நம்மிடம் எதிர்பார்க்கப்படும் கடமைகளைச் சரியாகச் செய்து முடிப்பதென்பது ஓர் ஒழுக்கநெறிக் கோட்பாடாகவே உள்ளது. ஆண்டன் மெகான்கோ

★ நம்மில் இருப்பதை நாமே பிளந்தழிக்காமல் இருந்தால், எப்போதுமே நமக்குத் தவறிழைக்காத ஒரு நங்கூரம் போன்ற நிலைத் தன்மையினை நாமனைவருமே பெற்றுள்ளோம். நமது கடமையைப் பற்றிய உணர்வு என்பதுதான் அது.
இவான் துர்கனேவ்

## சுறுசுறுப்பாயிருத்தல்

★ வாழ்க்கையும், செயல்பாடும் நெருப்பும், ஒளியும் போல நெருக்கம் மிக்கவை.

பியோடர் கிளிங்கா

★ செயல்படாமல் இருப்பது வாழாமல் இருப்பதாகும். வாழ்க்கையின் அடிப்படையைத் தன்னுடன் எடுத்துச் செல்லாதவன், வாழ்க்கை செயல்பாடுகளின் அடிப்படையை எடுத்துச் செல்லாதவன், தன்னையே சார்ந்திராதிருப்பவன், வெளியிலிருந்து, தற்செயலாக அனைத்தும் நடந்தேறும் என்று முடிவற்று எதிர்பார்ப்பவன் ஆவான்.

விசாரியோன் பெலன்ஸ்கி

★ செயல்படத் தொடங்கிவிட்டால், உண்மையில் செயல்படுபவன் தான் செய்வதற்குப் பல பணிகள் உள்ளன, உடனே காண்பதுடன், அவற்றைச் செய்யத் தனக்கொரு வாய்ப்பு அளிக்கப்படவில்லையென்று குறைபாடு கூறிக் கொண்டு எப்போதுமே செயலாற்றாமல் இருப்பதில்லை. அவன் எப்போதும் செய்வதற்கு ஏதோ ஒன்றினைக் காண்பதுடன், அதனின் ஒரு பகுதியையேனும் செய்து முடிக்கவே செய்கிறான்.

பியோடர் தோஸ்தோயேவஸ்கி

★ உண்மையான நடைமுறையின் பகுதி உழைப்பே, உண்மையான நடைமுறையின் உண்மையான அடையாளம் செயல்பாடே.

நிகிலாய் செர்னிசேவ்ஸ்கி

★ செயலற்ற தன்மையை எதனாலும் நியாயப்படுத்த இயலாது; முழுமையாகப் பயனற்றதல்லாத ஏதோ ஒன்றைச் செய்வது எப்போதுமே இயன்றதாகும். ஒருவனால் செய்ய இயன்ற அனைத்தையும், ஒருவன் எப்போதுமே செய்ய வேண்டும்.

நிகிலாய் செர்னிசேவ்ஸ்கி

★ ஓர் உயர்ந்த நோக்கத்தினால் தூண்டப்படாவிட்டால், ஒரு மனிதனின் செயல்பாடு பயனற்றதும், சோர்வளிப்பதும் ஆகும்.

நிகிலாய் செர்னிசேவ்ஸ்கி

★ ஒரு பணியின் நற்தன்மை, அதனைச் செய்யும் கருவிகளில் எப்போதுமே இருப்பதில்லை; ஆனால் உறுதியாக அதனைச் செய்பவரிடமே எப்போதுமே உள்ளது. மாக்சிம் கோர்கி

★ செயல்களைச் சொற்களாக மாற்றுவதைவிட, சொற்களைச் செயல்களாக மாற்றுவது கடினமானது. மாக்சிம் கோர்கி

★ ஒரு பெரிய வெற்றி என்பது எதிர்பார்க்கப்பட்ட, கணக்கிடப்பட்ட சிறுசிறு பகுதிகளின் தொகுப்பேயாகும். வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ எதனை நீ அடைய வேண்டுமென நீ அறிந்திருக்காவிடில், எந்த ஒரு செயலுமே சிறப்பாகச் செய்ய இயலாது.

ஆண்டன் மெகரன்கோ

★ நமது சமூகத்தில், திறமை என்பது அனைத்துக் குடிமக்களும் கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டிய ஒரு நற்பண்பாக ஆகி விட்டது; அது பொதுவான பழக்க வழக்கத்திற்கான ஓர் அளவு கோலாக ஆகி வந்து கொண்டிருக்கிறது.

ஆண்டன் மெகரன்கோ

★ உயர்ந்து ஒலிக்கும் சொற்களின் பின்னால் மறைத்துக் கொள் வதன் மூலம் மக்கள் பெரும்பாலும் தாங்கள் செய்ய வேண்டிய வற்றைச் செய்ய அடிக்கடித் தயங்குகின்றனர்.

என்.கே. குருப்ஸ்கயா

★ பேச்சும், சொற்களும் தேவைதான்; ஆனால் அவை ஒரு தொடக்கம் மட்டுமே. வாழ்க்கையின் உட்பொருள் என்பது செயல்களிலும், சொற்களிலிருந்து செயல்களுக்குச் செல்லும் ஆற்றலிலும், சொற் களுக்கு இணையான செயல்களிலும் இருப்பதாகும்.

திமிட்ரி மென்டலேயேவ்

★ உனது உள் மனம் குறைவாகச் சிதறலடையும் போது, உனது சிந்தனையும், சொல்லும், செயலும் அதிக நெருக்கமாக பின்னப் பட்டவையாக ஆகிவிடுகின்றன. நிகலாய் பிகரேவ்

★ உனது பணி அனைத்தையும் சரிபார்த்துப் பொருளாதாரத்தை நிறுவுவதில், உனது சொற்கள் சொற்களாக மட்டுமே இல்லாமல், நடைமுறை வெற்றிகளையும் பெற்றுள்ளதாக உள்ளதா எனக் கவனி. வி.இ.இலெனின்

★ மயிர்களைப் பிளந்து கொண்டிராதே, உனது பொதுவுடைமைக் கொள்கைபற்றி ஆரவாரம் மிக்கவனாக இருக்காதே. உனது சோம்பேறித்தனம், செயலற்ற தன்மை, ஆர்வமற்ற தன்மை, பிற்போக்கு மனப்பான்மை ஆகியவற்றை மறைக்கப் பெருஞ் சொற்களைக் கையாளாதே. வி.இ.இலெனின்

★ குறைந்த அரசியல் ஆரவாரம், மிகச் சில புருவத்தை உயர்த்தும் கலந்துரையாடல்கள், வாழ்க்கைக்கு மிக நெருக்கமாயிருத்தல், உழைப்பாளிகளும், உழவர்களும் அவர்களது அன்றாடப் பணியில் புதிய மாற்றதை உருவாக்கும் வழியில் அதிகக் கவனம் செலுத்துதல், இந்தப் புதியவை எந்த அளவு பொதுவுடமைத் தன்மையைப் பெற்றிருக்கின்றன என்பதை சரிபார்த்தல்.

வி.இ.இலெனின்

## மனிதனின் இன்றியமையாத சூழ்நிலை

★ உழைப்பும் அறிவியலும் - உலகினில் இவ் இரு ஆற்றல்களை விட உயர்ந்தது வேறெதுமில்லை. மாக்சிம் கோர்கி

★ உலகின் வியப்புகள் அனைத்துமே, மனிதனின் விடாமுயற்சியுடன் மேற்கொள்ளப்பட்ட செயல்களாலும், ஆர்வம் நிறைந்த உழைப்பாலும் உருவாக்கப்பட்டவை ஆகும். மாக்சிம் கோர்கி

★ மனிதனின் மேன்மை உழைப்பிலே, வேறெதுவிலுமின்றி உழைப்பிலேயே அடங்கியிருக்கிறது. மாக்சிம் கோர்கி

★ இலவய உழைப்பு என்பது உலகைத் தலைகீழாக மாற்றச் செய்யும் ஆர்க்கிமெடிஸின் சுழலும் அச்சாகும். மாக்சிம் கோர்கி

★ உழைப்பு, படைப்பு என்ற வீரச் செயல்களைவிடப் பெருமிதம் நிறைந்த வீரச் செயல்கள் உலகில் எதுவுமில்லை.
மாக்சிம் கோர்கி

★ உழைப்பதில் விருப்பம் கொண்ட மக்களையும், நன்கு பணியாற்றியவர்களையுமே உண்மையான வீரர்களாக என் வாழ்நாள் முழுவதும் நான் மதித்து வந்திருக்கிறேன். மாக்சிம் கோர்கி

★ உழைப்பு என்பதே பண்பாட்டின் அடித்தளமாகும்.
மாக்சிம் கோர்கி

★ ஒருவரது பண்பாட்டின் நிலை எப்போதுமே அவரது தளராத ஊக்கம் என்பதுடன் நேர் விகிதத்தில் அமைந்திருப்பது ஆகும்.
மாக்சிம் கோர்கி

★ நமது நாட்டில் உள்ள அழகு நிறைந்தவை, உழைப்பாளியால் உருவாக்கப்பட்டவை; மனிதனின் திறமையான கைகளால் உருவாக்கப்பட்டவை; நமது சிந்தனைகள், கொள்கைகள் அனைத்துமே அவற்றின் தோற்றங்களை உழைப்பின் நடைமுறையிலிருந்து பெற்றவையே. மாக்சிம் கோர்கி

★ நமது உலகம் என்பது சொற்களால் உருவாக்கப்பட்டதில்லை; ஆனால் செயல்களாலும், உழைப்பாலும் உருவாக்கப்பட்டதாகும்.
மாக்சிம் கோர்கி

★ வேலையைப் படைப்பாகக் காண நாம் கற்றுக் கொள்ள வேண்டும். மாக்சிம் கோர்கி

★ நீ செய்வது எதனையும் விருப்பத்துடன் செய்; பின்னர் உனது வேலை, கடினமானதும்கூட, படைப்பு என்ற நிலையை அடைந்து விடும். மாக்சிம் கோர்கி

★ தொகுக்கப்பட்ட, ஒன்றுபடுத்தப்பட்ட, உரிமையான உழைப்பைத் தவிர வேறு ஆற்றலால் மனிதனை மிக உயர்ந்தவனாகவும், பேரறிவாளனாகவும் ஆக்க முடியாது. மாக்சிம் கோர்கி

★ உழைப்பாளியின் உடல் ஆற்றல்களினால் வியப்புகளை விளை விக்க இயலும். மாக்சிம் கோர்கி

★ எதிர்காலம் நேர்மையாக உழைக்கும் மக்களுக்கு உரிமையானது. மாக்சிம் கோர்கி

★ அனைத்து உழைக்கும் மக்களையும் ஒன்று சேர்க்கும் ஓர் ஆற்றலாக உழைப்பு நம்மைச் செய்துள்ளது. வி.இ.இலெனின்

★ உழைப்பாளியின் உழைப்பு, உழவர்களின் பயிர் - இவை இரண்டும் வாழ்க்கையென்னும் வண்டி அதிக விரைவில் செல்ல உதவும் காலச் சகடங்களாகும். விளாடிமீர் மயாகோவ்ஸ்கி

★ சமூகத்தின் செல்வமனைத்தும், அனைத்துமே, இச் சமூகத்தின் உழைப்பாளிகளுக்குத் திரும்பச் சென்றடைய வேண்டியவை. திமிட்ரி பிசரேவ்

★ உழைக்கும் மனிதனுக்கும், அவன் உழைக்கும் சமூகத்திற்குமிடையேயான வலிமை மிகுந்த, மிகுந்த நம்பத் தகுந்த இணைப்பு உழைப்பேயாகும். திமிட்ரி பிசரேவ்

★ உழைப்பு என்பது எப்போதுமே மனித வாழ்க்கையின் பண்பாட்டின் எல்லைக் கல்லாக இருந்து வந்துள்ளது. ஆன்டன் மெகரென்கோ

★ கடின உழைப்பு, மனிதனின் உழைப்பு, அனைத்தையும் செய்து முடித்து, குறிக்கோள்கள் அனைத்தையும் எட்டச் செய்யும்; வரலாற்றின் நோக்கம் அத்தகையதாகும். திமிட்ரி மெண்டேலயேவ்

★ வெளிப்படையான ஆழ்ந்த ஊக்கமில்லையெனில், அங்கு திறமைகளோ, பேரறிவாளர்களோ இருக்கச் செய்யாது.

திமிட்ரி மென்டேலயேவ்

★ ஓர் உறுதியுடன் தனது வேலையைச் செய்பவன் அவனது வேலை அனைத்திலும் கவிதையை உட்செலுத்துகிறான்.

நிகலாய் செர்ன்சேவ்ஸ்கி

★ உழைப்பு, மூளை, உடற்தசைகளின் செயல்பாடுகள், ஓர் இயல்பான, உட்பிறந்த தேவையைக் கொண்டுள்ளது.

நிகலாய் செர்ன்சேவ்ஸ்கி

★ உடல் உழைப்பு மூளை உழைப்பை நீக்கிவிடாது. அது அதன் சிறப்புத் தன்மையை உயர்த்தி, அதனை ஊக்குவிக்கவும் செய்கிறது.

இலியோ தோல்சுதாய்

★ வேலையைத் தவிர வேறெதுவும் மனிதனை அதிக மேன்மைப் படுத்துவது இல்லை. வேலை இன்றி மனிதன் மனிதப் பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள இயலாது.

இலியோ தோல்சுதாய்

★ வேலை, எவ்வளவு கீழ்த் தன்மைத்தாயினும் அதனைச் செய்ய நீ வெட்கப்படக் கூடாது, செயலற்றுள்ள ஒரு வாழ்க்கை என்ற ஒன்றைப் பற்றியே நீ எச்சரிக்கையாக இரு.

இலியோ தோல்சுதாய்

★ உழைப்பிலிருந்து ஒருவனை விடுவிப்பது என்பதே ஒரு குற்றமாகும்.

இலியோ தோல்சுதாய்

★ மனிதனின் உறுதியும், உழைப்பும் வியத்தகு மருட்கைகளை விளைவிக்கும்.

நிகலாய் நெக்ரசேவ்

★ மனிதனுடைய செயல்கள், அவனது உழைப்பு, படைப்பு ஆகியவற்றைவிட மிகுந்த பெருந்தன்மையுடனும், முழுமையுடனும் மனிதனின் சாரத்தை வேறு எதுவும் விளக்குவதில்லை.

அலெக்சாண்டர் படயேவ்

★ எளிதாக அடையப்பட்ட எதுவும், முயற்சியின்றி அடையப்பட்ட எதுவும், அய்யம் மிகுந்த மதிப்பையே பெற்றிருக்கும்.

இலியோனிட் லியோனோவ்

★ செய்வது எந்தப் பணியாயிருப்பினும், அதனுடைய பழக்கமும், அது உண்டாக்கும் ஆற்றலும் மிகப் பெரிய பொருண்மைகளே. தான் செய்ய எதுவுமே இல்லாத போதும், தனது கைகளின் மேல் அமர்ந்து கொண்டிராதவன், செயலுக்கான நேரம் வரும் போதுதான் என்ன வேண்டும் என்பதை அறிந்திருப்பவன் ஆவான்.

விசாரியோன் பெலன்ஸ்கி

★ வேலை மனிதனை மாண்புற மேன்மைப்படுத்துகிறது.

விசாரியோன் பெலன்ஸ்கி

★ உழைப்பு, போராட்டம் தவிர வேறெதுவும், வேறுமையையும், பெருமை என்ற ஓர் உணர்வையும் உறுதியளிக்காது.

பியோடர் தோவ்தோயெவ்ஸ்கி

★ வேலை மனிதனின் படைப்பாற்றல்களை உருவாக்குகிறது.

ஏ.என். தோல்சுதாய்

★ வேலை இன்றியமையாததாக உள்ள ஒரு பாதையில் உனது வாழ்க்கையை நீ அமைத்துக் கொள்ள வேண்டும். வேலையென்பது இன்றித் தூய, மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது கற்பனை செய்து பார்க்க முடியாதது ஆகும்.

ஆன்டன் செகாவ்

★ ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும். அவர் எவராயிருப்பினும் நெற்றியில் வியர்வை வழியும் வரை வேலை செய்ய வேண்டும். ஏனெனில் இது ஒன்றுதான் வாழ்க்கை, மகிழ்ச்சி, மிகுந்த இன்பம் ஆகியவற்றின் நோக்கமும் பொருளும் ஆகும்.

ஆன்டன் செகாவ்

★ பொது நலனுக்காகப் பணியாற்றுவதில் உன்னை நீயே முன்னேற்றிக் கொள் - அதுதான் அடிப்படை விதியாகும்.

ஜானிஸ் ரெய்னிஸ்

★ சோம்பலை அழிப்பது, உழைப்பை மேன்மைப்படுத்துவது - இங்கு வரலாற்றின் நிலை பெற்றுள்ள மனப்பான்மையை நீ பெற்றிருக்கிறாய். நிகலாய் தோப்ரோலியுபோவ்

## மனிதனும், செயல்பாடும்

★ உயிர்வாழ்வதற்கு, ஏதோ ஒன்றினைச் செய்வதற்கு இயன்றவனாக நீ இருக்க வேண்டும். மாக்சிம் கோர்கி

★ வாழ்நாள் முழுவதும் ஒருவன் ஆக்கச் செயல் ஒன்றினைச் செய்து கொண்டிருக்க வேண்டும் - வாழ்நாள் முழுவதுமே.
மாக்சிம் கோர்கி

★ உன்னை நீயே தனிமைப்படுத்திக் கொள்ளாதே - அதுதான் மிகவும் பெருமை வாய்ந்ததும், அழகு நிறைந்ததுமான உண்மை ஆகும். தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொள்ளாத மனிதன் நீடு வாழ்க. மாக்சிம் கோர்கி

★ நாளை தான் என்ன செய்யப் போகிறோம் என்பதை அறியாத மனிதன் பரிவுக்குரியவன். மாக்சிம் கோர்கி

★ வேலையென்பது ஒரு கடினமான, பிடிவாதமுள்ள விலங்காகும், திறமையாக அதனைக் கட்டுப்படுத்திக் கடிவாளத்தை இறுக்கிப் பிடி, இல்லாவிட்டால் அது உன்னையே தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடும். மாக்சிம் கோர்கி

★ ஒரு பணியை நன்றாகச் செய்யவேண்டுமானால், அது அவ்வாறு செய்யப்பட இயைந்ததாக இருக்க வேண்டும். மாக்சிம் கோர்கி

★ செயலாற்றும் தந்திரத்தை நீ அறிந்திராவிடில், உனது வலிமை மிகுந்த கண்ணோட்டமே வீணானது. சோ ஆருஸ்ட் வேலி

★ நான் செய்து கொண்டிருப்பது தகுதி படைத்ததா, இல்லையா என்று உன்னை நீயே கேட்டுக் கொள்வது எப்போதும் விரைவானதாக இருக்காது. ஆண்டன் செகாவ்

★ செயல்கள் அவற்றின் நோக்கங்களினால் ஆட்சி செய்யப்படுபவையாகும். ஓர் உயர்ந்த நோக்கத்தைப் பெற்றிருக்கும்போது, அந்த செயலும் உயர்ந்து நிற்கிறது. ஆண்டன் செகாவ்

★ உன்னால் செய்ய இயலாத எதனையும், எப்போதும் ஏற்றுக் கொள்ளாதே; அந்தப் பணியை நீ குழப்பிவிடுவாய்.
நிகிலாய் செர்ன்சேவ்ஸ்கி

★ உனது ம்யற்சிகள் மீது வெற்றியென்ற மகுடம் சூட்டப்பட வேண்டுமானால், உனக்கு ஏற்றவற்றை மட்டுமே உவந்து ஏற்றுக் கொள்.
இவான் கிரிலேவ்

★ உனக்குப் ப்ழக்கமற்றது என நீயே அறிந்திருக்கும் ஒரு பணியை ஏற்றுக் கொள்ளாமல் மறுப்பதே சிறந்தது. நாசிர் கோஸ்ரோவ்

★ நீ எந்த ஒன்றைச் செய்தாலும், அதனை நன்றாகச் செய். அதனை நன்றாகச் செய்ய உன்னால் இயலாதென்றாலோ நீ விரும்பாவிட்டாலோ, அதனைச் செய்யாமலேயே இருந்துவிடு.
இலியோ தோல்சுதாய்

★ உயர்ந்தவை அனைத்துமே எவ்வித ஆடம்பரமுமின்றி, அடக்கமாக, எளிமையாகச் செய்யப்பட்டவை; உழவு செய்யவோ, கட்டிடம் கட்டவோ, கால்நடை மேய்க்கவோ, பகட்டில், பளபளப்பில், சிந்திக்கவோ, உன்னால் இயலாது. உண்மையாக உயர்ந்தது எப்போதுமே எளிமையானதாகவும் அடக்கமானதாகவும் இருக்கும். இலியோ தோல்சுதாய்

★ ஒரு முடிவு எடுக்க இயலாத நேரத்தில், செயல்பட வேகப்பட்டு, அது எவ்வளவு தேவைக்கதிகமானதாக இருந்தாலும் சரி,

ஏதோவொன்றினைச் செய்து முதல் அடியை எடுத்து வை.
இலியோ தோல்சுதாய்

★ நீ விரும்பியதைச் செய்வதில் மகிழ்ச்சி இருப்பதில்லை; நீ செய்வதை விரும்புவதிலேயே மகிழ்ச்சி உள்ளது.
இலியோ தோல்சுதாய்

★ ஆர்வமும், பெருமகிழ்ச்சியும் இன்றிச் செய்யப்படும் எந்த வேலையும் செழிப்பாகாது.
இவான் பவலோவ்

★ ஒரு கடினமான பணியைச் செய்ய முற்படும்போது, பரபரப்பு காட்டாதே. உனது ஆற்றல்களை ஒருங்கிணைப்பதற்குத் தேவையான நேரத்தை உனக்கு நீயே அளித்துக் கொண்டு, பரபரப்பைத் தவிர்த்து விடு.
இவான் பவலோவ்

★ ஒவ்வொரு செயலை மேற்கொள்ளும்போதும், அதில் மிக இன்றியமையாத பகுதி என்னவென்றால், அதனைத் தொடங்குவதற்கான தயக்கம் நிறைந்த நேரத்தை வெற்றி கொள்வது என்பதேயாகும்.
இவான் பவலோவ்

★ நீ விரும்பாவிட்டால், எந்தப் பணியுமே கடினமானதாகவே இருக்கும்; அது பயன் நிறைந்தது; இன்றியமையாதது என்பதை நீ அறிந்திருந்தால், அது எளிதானதாக இருக்கும்.
ஜி.வி.பிளக்னோவ்

★ நீ செய்யும் நல்லவை கடினமானதாக இருந்தாலும், அந்தக் கடினத் தன்மை கடந்தபின், நற்தன்மையே நிலைத்திருக்கும். நீ செய்யும் கெட்டவை மகிழ்ச்சியளிப்பதாக இருப்பினும், அந்த மகிழ்ச்சி கடந்தபின், கெட்டவையே நிலைத்து நிற்கும்.
மைக்கேல் லோமோனோசோவ்

★ சோர்வற்ற உழைப்பு அனைத்துத் தடைகளையும் கடந்து வெற்றி கொள்கிறது.
மைக்கேல் லோமோனோசோவ்

★ தேவையற்ற இடத்தில் உனது ஆர்வத்தைக் கடிவாளமிட்டு அடக்கி வை.
அபுல் காசிம் பிர்தோசி

★ தனது செயல்களை முட்டாள் தவிர வேறெவரும் நாளை வரை தள்ளி வைக்க மாட்டார்கள் - நாளை என்ன நடக்குமென்பதை, இன்று அறிந்திருக்க நம்மால் இயலாது.
அபுல் காசிம் பிர்தோசி

★ புலன்களால் உற்றறிவதே வெற்றிக்கான ஆர்வத்தை அளிப்பதாகும்.
ஐ.ஐ. திமிட்ரேவ்

★ சிறுபணியைச் செய்யத் தடுமாறி தவறு செய்பவன், பெரிய பணியைச் செய்யும் ஆற்றல் அற்றவனாவான்.
மிகலாய் லோமோனோசோவ்

## வேலை இளமையைக் கூட்டுகிறது

★ ஒரு மனிதனுக்கு அழகு மிகுந்ததும், மிகவும் விருப்பமானதும் அவனுடைய உயிரே, வாழ்க்கையே. அவனது உயிர் வாழ்க்கை பல்வேறுபட்ட, சோர்விலாத பணியினால் நிலை நிறுத்தப் பட்டுள்ளது. ஒருவனது வேலை முன்னதாக முடிவடைந்தவுடன், அவனது வாழ்க்கையும் முடிவடையத் தொடங்குகிறது.
லியோனிட் லியோனோவ்

★ தொழிலார்வம் மிக்க உள்ளுயிர் எப்போதும் தனது வணிகத்தைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்; உடலுக்குப் பயிற்சி எப்படியோ அதனைப் போன்று அதற்கும் பழக்கம் என்பது இன்றியமையாத தாகும்.
ஏ.வி.சுவரோவ்

★ ஒரு பொருள் படைத்த வாழ்க்கையின் முதற் கொள்கை பணியே யாகும். உடல் முழுவதும் வேலை செய்ய வேண்டும்.
ஏ.ஏ. போகோமெலட்ஸ்

★ அதிகப்படியான உணர்ச்சி மிகுந்த செயல்களினால் ஏற்படும் ஒரு நலமின்மைக்கு உடல் முயற்சி என்பது மிகச் சிறந்த மருந்தாகும். எனவே என் வாழ்நாள் முழுவதும் மனத்தாலும் உடலாலும் முயற்சி மேற்கொள்வதை நான் விரும்புபவன். ஆனாலும், உடல் முயற்சியைச் சற்று அதிகமாகவே விரும்புபவன் ஆவேன்.

இவான் பவலோவ்

★ வேலை செய்து கொண்டிருப்பவன் எப்போதுமே இளமையாக இருக்கிறான். உண்மையில், இன்றியமையாத உள்ளுணர்வினை அதிகரிக்கச் செய்யும் நிணநீரை வேலை படைத்தளிப்பதாகவே சில நேரங்களில் எனக்குத் தோன்றுகிறது.

என்.என். புர்டென்கோ

★ நீண்ட நல்வாழ்க்கைக்கான மறைபொருள் வேலை என்பதில் இருக்கிறது.

செர்ஜி செர்கயேவ் - ஜென்ஸ்கி

★ செயலற்று இருப்பது என்பதைப் போன்று ஆக்க இயலாமை யையும், பொறுக்கும் தன்மையின்மையையும் தோற்றுவிப்பது வேறெதுவுமில்லை.

அலெக்சாண்டர் எர்சன்

★ தொடர்ந்த பழக்கத்தினால் புத்துணர்வளிக்கப்படாத ஆற்றல்கள் முனை மழுங்கிப் போகின்றன.

திமிட்ரி பிசரேவ்

★ சோம்பேறித்தனமும், செயலற்றிருப்பதும் அறியாமையின் தந்தை யாவதுடன், நோயிற்கான காரணமாகவும் அது உள்ளது.

அவிசென்னா

★ வேலை என்பது அனைத்து நோய்களையும் குணப்படுத்தும் உயர்தன்மை மிக்கதாகும்.

நிகலாய் ஓட்ரோவ்ஸ்கி

★ எங்கு வேலை படைப்பாக மாறுகிறதோ, அங்கு இறப்பு பற்றிய அச்சம், மனவியல்படி, மறைந்து போகிறது.

ஏ.என்.தோல்சுதாய்

# வேலையே இன்பமும் மகிழ்வுமாகும்

★ வேலையென்பது நாளினை ஒரு கொண்டாட்டமாக மாற்றிவிடுகிறது.
ஜானிஸ் ரெய்னிஸ்

★ மகிழ்ச்சியென்பது உனது பணியின் நற்தன்மையாகும்.
ஜானிஸ் ரெய்னிஸ்

★ வேலையைத் தவிர வேறெதுவும் மனிதனுக்கு மகிழ்ச்சியையும், அவனது உயிர்க்குத் தெளிவினையும், இன்பத்தையும், நிறைவையும் அளிப்பதில்லை.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ அனைத்து மகிழ்ச்சிக்கும், உலகில் உள்ள சிறந்தவை அனைத்துக்கும் ஊற்றுக் கண் வேலையே.
மாக்சிம் கோர்கி

★ வேலையின் சிக்கல் நிறைந்த, உயிர் சார்ந்த, வலிமை மிக்க ஆற்றலே மனித இனத்தின் மதிப்பிற்கும், ஒழுக்க நெறிக்கும், மகிழ்ச்சிக்குமான ஒரே அடிப்படையாகும்.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ வேலை, கடினமான, மகிழ்ச்சி நிறைந்த வேலையைத் தவிர வேறெதனாலும், உள்ளுயிர்க்கு வலிமையை ஊட்ட இயலாது.
அலெக்சாண்டர் எர்சன்

★ ஒரு மனிதன் தனது நெஞ்சத்தைத் தனது வேலையில் வைக்கவில்லையெனில், அதாவது, தனது நெற்றி வியர்வை சிந்தி, ஒருவன் தனது உணவை ஈட்டாவிட்டால், பின்னர் மகிழ்ச்சியாக இருக்க அவனால் இயலாது.
திமிட்ரி பிசரேவ்

★ மிகுந்த ஆவலைத் தூண்டும் தவறுகளில் ஒன்று, மனிதன் செயலற்று அமைதியாக இருப்பதினால் மகிழ்ச்சி கொள்கிறான் என்று எண்ணுவதேயாகும்.
இலியோ தோல்சுதாய்

★ மகிழ்ச்சிக்குப் போட்டியிட இயலாத கட்டளை வேலையேயாகும். முதலில் ஒருவன் மிகவும் விரும்பும், விடுதலையான வேலை -

இரண்டாவதாகப் பசியைத் தூண்டி, ஆழ்ந்த, புத்துணர்வு அளிக்க வல்ல தூக்கத்தை அளிப்பதுமான உடல் உழைப்பு.
இலியோ தோல்சுதாய்

★ வேலை செய், வேலை செய்! வேலை செய்யும்போது நான் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறேன்! இலியோ தோல்சுதாய்

★ சில சூழ்நிலைகளில் உடல் முயற்சி என்பது 'உடல் தசைகளின் மகிழ்ச்சியாக' இருக்கிறது. இவான் பவ்லோவ்

★ வாழ்வின் மகிழ்ச்சிகளுக்கான ஒப்புதல் சீட்டு வேலை என்பது மட்டுமே. நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ வேலையென்பதே வாழ்க்கையின் மகிழ்ச்சியாகும். நிலத்தில், மேசையில், பணிப் பலகையில், உனது உடல் வியர்வையை உருவாக்கும் வேலையைச் செய், நேரத்தை மறந்து வேலை செய், உலகின் மகிழ்ச்சியெல்லாம் வேலை செய்வது என்பதில் உள்ளது.
வெலேரி பரிசுயோவ்

★ தொழிலைப் பற்றிய உனது தேர்வு மகிழ்ச்சி நிறைந்த ஒன்றாக இருக்கக் கூடுமானால், உனது வேலையில் உனது நெஞ்சத்தை வைத்துச் செய்ய உன்னால் இயலக் கூடுமானால், மகிழ்ச்சி யென்பது உன்னை வந்தடைய வழிகாட்டி எவரும் தேவை யில்லை. கான்ஸ்டின்டின் உசின்ஸ்கி

★ நீ மிகவும் விரும்பும் வேலையை நீ மணந்து ஏற்றுக் கொள்வ தென்பது ஒரு சிறப்பான மகிழ்ச்சியாகும்.
விளாடிமீர் நெமிரோவிச் டான்சென்கோ

★ பொதுவுடமைச் சமூகத்தில், இழிவான குற்றங்களுக்காக விதிக்கப் படும் தண்டனைகளில் பொறுக்க இயலாதது என்பது வேலையை விட்டு வெளியேற்றப்படுவது என்பதேயாகும்.
இலியோனிட் லியோனோவ்

# எழுத்தாளனும் கலைஞனும்

★ ஓர் உண்மையான எழுத்தாளர் என்பவர் பழங்கால வருமுன் உரைப்பவரைப் போன்றவராவார். பொது மக்களைவிட அவர் மிகத் தெளிவாகக் காண்கிறார். ஆன்டன் செகாவ்

★ போர்ப்படையில் உள்ளது போலவே, இலக்கியத்திலும் கீழ் நிலையில் உள்ளவை தவிர்க்கப்பட இயலாதது. ஆன்டன் செகாவ்

★ கலைஞர் என்பவர் அவரது நாட்டின், பிரிவின் காது, கண், நெஞ்சம் போன்றவற்றைக் கொண்ட உணர்வுக் களஞ்சியமாவார். அவரே அவரது காலச் சிந்தனையின் ஒளியாக இருப்பவரும் ஆவார். மாக்சிம் கோர்கி

★ திறமை என்பது தன்மைப் பற்றியும், தன்னுள் உள்ள ஆற்றல்கள் பற்றியும் ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கையே ஆகும். மாக்சிம் கோர்கி

★ கலைஞர் சுற்றுச்சூழலை எதிரொளிக்கும் ஆடியாவார். அவர் அவரது சமூகத்தையும், நாட்டையும், காலத்தையும் எதிரொளிக்கிறார். இலியா ரெபின்

★ கலைஞரின் வயதுக்கு உரிய மதிப்பை அளிக்கும்போது, ஒவ்வொரு கலைஞரும் நிலைத்து நிற்கவும் தமது படைப்பை உருவாக்குகிறார். நிகலாய் கரம்சின்

★ ஓர் எழுத்தாளர் எழுதும்போது, ஓர் உயர்நிலையிலுள்ள அரசியல் தலைவருக்கு இணையானவராகத் தன்மைக் கருதிக் கொள்ள வேண்டுமேயன்றி, ஒரு கற்றுக் குட்டியாகவோ, கூலியாளாகவோ கருதக் கூடாது. அலெக்சாண்டர் தோவ்செங்கோ

★ ஓர் எழுத்தாளர் பெரு மனம் கொண்டவராக இருக்க வேண்டும். அக்கறையற்ற மக்கள் அரிதாகவே எழுத்தாளர்களாக ஆகின்ற

னர். ஓர் எழுத்தாளர் என்பவர் அறிவார்ந்தவராகவும், அதனிலும் இரட்டிப்பாகக் கருணை மனம் கொண்டவராக இருக்க வேண்டும்.
பி.ஏ. பவலென்கோ

★ காலம் கனிந்து வரும்போது, திறமை என்பது தன்னைத் தானே மெய்ப்பித்துக் கொள்கிறது. ஆனால் பேரறிவோ அதன் காலத்திற்கு முன்பே தன்னை மெய்ப்பித்துக் கொள்கிறது.
பி.ஏ. பவலென்கோ

★ ஓர் எழுத்தாளர் தம் புத்தகத்தில் முழுவதுமாகத் தம்மையே உட் செலுத்திவிடுகிறார். அது போலவே இசை அமைப்பாளரும் தமது இசையில் தம்மை உட்செலுத்திக் கொள்கிறார். இங்கு அவர்கள் எஞ்சிய காலம் முழுவதும் நிலைத்து வாழ்கின்றனர். ஒரு புத்தகத்தைத் திறவுங்கள், இசையைக் கேளுங்கள், உங்களால் படிக்க முடியுமானால், நீங்கள் அவற்றின் படைப்பாளர்களால் எதிர்க்கப்படுவீர்கள். வி.ஓ.குளூசேவ்ஸ்கி

★ திறமை என்பது தன்னைத் தானே எரித்துக் கரியாக்கிக் கொண்டு, தன்னையே சுட்டெரிக்கும் பிழம்பால் மற்றவர்களுக்கான பாதையை ஒளியூட்டும் தெய்விக ஒளிப்பிழம்பாகும். வி.ஓ.குளூசேவ்ஸ்கி

★ ஒரு புத்தகம் என்பது அதன் ஆசிரியரின் ஒப்புதலறிக்கையாகும்; அதுவே மனிதனுமாகும். ஒரு புத்தகத்தின் மூலம், அதன் ஆசிரி யரை மதிப்பிட உன்னால் இயலும். மைக்கேல் கால்னின்

★ ஒன்றைப் புதிதாகப் படைக்க வேண்டுமெனின், ஒருவர் தனது சொந்தப் பாட்டையே பாடவேண்டும். மைக்கேல் கால்னின்

★ ஒரு கலைப் படைப்பின் பொருளடக்கம் என்பது அக் கலைஞரின் பகுதியையே முழுவதும் சார்ந்திருக்கிறது. கலைஞரே பொருள டக்கமாவார். அவரது உள்ளுயிரே அதன் வடிவத்தில் கோயில் கொண்டுள்ளதாகும். எம்.எம்.பிரிஷ்வின

★ அனைத்துப் படைப்புக் கலைகளின் முதல் படியென்பது தன்னைத் தானே துறந்துவிடுவது என்பதாகும். எம்.எம்.பிரிஷ்வின்

★ எழுதும் கலையில் அனைவருமே ஒருவர் மற்றொருவரிடம் பயிற்சி பெறுபவராவர்; ஆனால் ஒவ்வொருவரும் அவரது தனி வழியில் செல்கின்றவர்களாகவே உள்ளனர். எம்.எம்.பிரிஷ்வின்

★ புத்தகங்கள் என்பவை அச்சுத் தாள் கட்டடத்தில் உள்ள மக்களாவர். ஆண்டன் மெகரன்கோ

★ படைப்பாளி தான் பெற்றிருக்கும் குணநலன்களை மட்டுமே தனது படைப்பில் கொண்டு வருவதில் கவனம் செலுத்த இயலும்.
திமிட்ரி பிசரேவ்

★ ஒரு நன்கு கற்றறிந்தவர்களின் ஒப்பந்தத்தைவிடக் குறைந்திராத அளவில், ஒவ்வொரு புதினமும், அதனுடைய ஆசிரியரையும், அவரது உள் உலகத்தையும் குறிப்பிடுவதாக இருக்க இயலும். ஒரு புதினத்தையோ, கதையையோ, கட்டுரையையோ திறனாய்வையோ நாம் படிக்கும்போது, அவற்றின் ஆசிரியர்களது உள் ளார்ந்த அறிவையோ அறியாமையையோ, அவரது கண்ணோட் டத்தையும்கூட, தீர்மானிப்பது என்பது நமக்கு எளிதானதாகும்.
எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ ஒவ்வொரு கலைப்படைப்பும், அதன் படைப்பாளியின் உண்மை நிறைந்த ஓர் ஆடியாகும்; தமது இயல்பை மறைத்துக் கொள் வதில் இதுவரை வெற்றி பெற்றவர் எவருமில்லை.
வி.வி.ஸ்டாசோவ்

★ மிகச் சிறந்த நகல்களைவிட, அடக்கம் மிகுந்த நிலையான அசல் கலைப் படைப்பு என்பது மிகவும் மதிப்பு வாய்ந்ததும், இன்றியமை யாததும் ஆகும். தானாகவே எதனையும் படைக்க இயலாதவன், கலைகளைத் தொடவும் கூடாது. வி.வி.ஸ்டாசோவ்

★ பேறு பெற்ற எழுத்தாளரின் ஒவ்வொரு படைப்பும், அவரது தனித் தன்மையை எதிரொலிப்பதாகவே இருக்கும்; ஏனெனில் நோக்கத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட புறப்பொருள், ஆசிரியரின் மனநிலையினை ஒட்டியே மிகவும் தனிப்பட்ட முறையில் கையாளப்படுவது என்பது மிகச் சரியாகப் படைப்பு இலக்கியம் பெற்றுள்ளது.

வி.வி. வொரோவ்ஸ்கி

★ கலை என்பது, பொதுவான தன்மை பெற்றிருப்பது என்ற ஒன்றை விரும்பி, தோற்றங்களிலும், உணர்வுகளிலும் ஏற்பட்ட தனிப்பட்ட பட்டறிவுகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும்.

ஏ.என். தோல்சுதாய்

★ நீ எழுதுவது போல் நீ வாழ்வதுடன், நீ வாழ்வதைப் போலவே நீ எழுது; இல்லையெனில் உனது யாழில் வெளிப்படும் ஒலிகள் போலியானவையே.

கே.என். பாபுயுஷ்கோ

★ தங்களது படைப்புகளைப் போன்று உண்மை நிறைந்தவர்களாக வாழும் கலைஞர்களுக்கும், அவர்களது வாழ்வை உண்மை நிறைந்த வகையில் முறைப்படுத்தும் அவர்களது படைப்புகளுக்கும் நமது காலம் தலைவணங்கி வழிபடும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ எழுதுவதென்பது ஒரு வணிகமோ தொழிலோ இல்லை. அது ஒரு தவமாகும். சில சொற்களை, அவற்றின் சரியான ஒலியை நாம் ஆய்ந்து பார்க்கும்போது, அவற்றின் உண்மையான பொருளை நாம் காண்கிறோம். தவம் என்னும் சொல் ஒலி என்னும், முதன்மையாக நெஞ்சத்தின் ஒலி, என்ற சொல்லில் இருந்து பிறந்ததாகும்.

கான்ஸ்டான்டின் பவ்ஸ்டோவ்ஸ்கி

★ சொல்வதற்குப் புதுமையான, இன்றியமையாத, ஆர்வமளிக்கும் ஏதோவொன்றைப் பெற்றிருப்பவரால் மட்டுமே, ஓர் எழுத்தாளராக இருக்க இயலும். ஏனெனில் மற்றவர்கள் கவனிக்காத பலவற்றை அவன் காண்கிறான்.

கான்ஸ்டான்டின் பவ்ஸ்டோவ்ஸ்கி

★ ஏதோ புதுமையான ஒன்றினை நீ உணரும்போதும், மக்களுக்குத் தெளிவாக இராத ஓர் இன்றியமையாத பொருள் பற்றி நீ தெளிவாக உள்ளபோதும், ஒன்றினை வெளிப்படுத்தும் தேவை என்பது உனக்கு அமைதி அளிக்காத போதும் மட்டுமே, நீ எழுது.

இலியோ தோல்சுதாய்

★ வாழ்வைப் போலவே கலையும், வலிமை குறைந்தவர்களுக்கான தன்று. அலெக்சாண்டர் ப்ளோக்

★ பேரறிவாளன் என்பவனே மக்களின் முதலும், முடிவுமான தோழனாவான். அலெக்சாண்டர் ப்ளோக்

★ என்னைப் பொறுத்தவரை இலக்கியம் என்பது ஒரு போர்க் களமாகும். எஸ்.எம். ஸ்டெப்னிக் க்ரவ்சின்ஸ்கி

★ திறமையின் வளர்ச்சிக்கான சமூக சூழ்நிலைகள் ஆதரவாக உள்ள போதே திறமை எப்போதுமே தோற்றம் பெறுகிறது என்பதை நீண்ட காலமாகவே கண்டு வருகிறோம். ஜி.வி.பிளக்கனோவ்

★ எழுத்தாளரின் பார்வை செய்திகளின் உட்பொருளினூடே எவ்வளவு ஆழமாக ஊடுருவிச் செல்கிறது என்பதையும், வாழ்க்கையின் பல்வேறுபட்ட தன்மைகளைத் தான் வெளிப்படுத்தும்போது அதனை எவ்வளவு அகன்றதாகக் குறிப்பிடுகிறார் என்பதையும் கொண்டே அவரது ஆற்றலை மதிப்பிட ஒருவரால் இயலக் கூடும்.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ திறமை என்பது உண்மை என்ற ஓர் உணர்வாகும்.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ ஒவ்வோர் உண்மையான திறமையும், முற்றிலும் நிகரற்ற ஏதோ ஒன்றாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ திறமை என்பது எதனையும் செய்வதற்கான ஓர் ஆற்றலே தவிர வேறெதுவுமில்லை, என்ன செய்யப்பட்டது என்பதன் சிறப்பு அதன் நோக்கம் மற்றும் பொருளைச் சார்ந்ததாகும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ திறமை என்பது அரிதானதாகும். அது ஓர் ஒழுங்கு முறையுடனும், கவன நிறைவுடனும் பேணப்பட வேண்டும்.

வி.இ.இலெனின்

★ திறமை என்பது, பொய் உரைக்க இயலாத அல்லது உண்மையைத் திரித்துக் கூற இயலாத மதிப்பு மிகுந்த பண்பினைப் பெற்றிருப்பதாகும்.

இவான் கொஞ்சரோவ்

★ ஒரு மனிதனின் பரிசு என்பது ஒரு வைரமாகும். அதனைப் பெற்ற பின்பு, அதனைப் பட்டைத் தீட்டி, அதன் ஒளி வீச்சைக் காட்டு வதில் காலம் கடத்தாதே.

ஏ.வி.சுவரோவ்

★ ஒரு கொடையினை முன்னேற்றிக் கொள்வதற்கு, விடாமுயற்சியும், பொறுமையும் தேவைப்படுகின்றன.

அலெக்சாண்டர் எர்சன்

★ ஒரு கலைஞனாக ஆவதற்கு, திறமையோ கலையின் பால் விருப்பம் மட்டுமோ போதுமானதில்லை. தகுதி நிறைந்த ஏதோ ஒன்றினைப் பெற்றிருப்பதற்கு, அவற்றுடன் கடின உழைப்பும் சேர்க்கப்பட வேண்டும்.

அலெக்சாண்டர் எர்சன்

★ மிகுந்த திறமை பெற்றிருப்பதற்கு, மிகுந்த அக்கறை, ஊக்கம் வேண்டும்.

பியோடர் செய்கோவ்ஸ்கி

★ திறமை என்பது மதிப்பு மிகுந்த வைரக் கல்லைப் போன்றது, அதிக உழைப்பைச் செலுத்தி அதனைப் பட்டைத் தீட்டினால், அது இன்னமும் அழகானதாகத் திகழும்.

பியோடர் செய்கோவ்ஸ்கி

★ பேரறிவு கொண்டவர் என்ற முத்திரை குத்தப்பட்ட ஒருவரும், நரகம் போன்று துன்பமளிக்கும் தொடர்ந்த விடாமுயற்சியுடன் உழைக்காவிட்டால், பெரிதாக ஒன்றினையும் படைக்க முடியாது.
பியோடர் செய்கோவ்ஸ்கி

★ விடாமுயற்சியற்ற திறமை என்பது மிகக் குறைவாகச் சாதிக்க முடியும்; திறமையற்ற விடாமுயற்சி, அவற்றில் எவையும் நம்மை வியப்பு நிறைந்தவர்களாக்காவிடினும், அதிகப்படியானதைச் சாதிக்க முடியும். இதனால்தான் திறமை என்னும் நற்பேறு பெற்றவர்கள் தோல்வியால் கீழே விழும்போது, கடினமாக உழைக்கும் அதிகத் திறமையற்றவர்கள் பெரும் புகழ் எய்து கின்றனர்.
ஆண்டன் ரூபின்ஸ்டின்

★ தொடர்ந்த உழைப்பின்றி, உண்மையான பெரிய விளைவு எதுவும் ஏற்பட இயலாது என்பதால், கலைத் தன்மையில் நாட்டம் பெற்றிருப்பதற்கான ஒரு தேவையாக அது இருக்கிறது.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ தனது நல்வாழ்வைத் துறக்கும் அளவுக்கு இலக்கியத்தை விரும்ப இயலாதவன், அதனைத் தொடாமல் அதனை அவ்வாறே விட்டு விடுவதே சிறந்ததாகும்.
நிகலாய் லெஸ்கோவ்

★ எழுத்தாளரும், கவிஞரும் தூண்டுதல் ஏற்படும் நேரங்களில் மட்டுமே பணியாற்ற இயலுமென மக்கள் இன்னமும் நினைக்கின்றனர். இதனால்தான் அன்றோ, பல எழுத்தாளர்கள் தூண்டுதல் வரும் என்று காத்திருந்து பல ஆண்டுகளாக எதையுமே எழுதாமல் உள்ளனர்? தூண்டுதல் என்பது நமது செயலில் விளைவது என்பதைப் பற்றி உறுதிப்படுத்தப்பட்ட எண்ணத்தை நான் பெற்றிருக்கிறேன்.
நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ உலகின் எந்த இலக்கியக் கவியுமே, தனக்கு முற்பட்டவர்களின் தாக்கத்திலிருந்து, ஒரு குறைந்த அளவு கொள்வதிலிருந்தாவது, எப்போதுமே தப்பித்தது இல்லை. தாக்கம் என்பது, பட்டறி

வற்றவர் உண்மைத் தன்மை என்னும் முகட்டை அடைவதற்கான ஏணியின் படிகளைப் போன்றது. ஓவன்னஸ் தப்மேனியன்

★ உணர்வற்று, வேறு சொற்களால் மட்டுமே மறைக்கப்பட்டபடி முன்னம் இருந்த கருத்துகளையே திரும்பத் திரும்பச் சொல்வது என்பது தேவையற்றது என்பதுடன், ஏற்றுக் கொள்ள இயலாத துமாகும். இதில் உள்ள மிகப் பெரிய மறைபொருள் என்ன வெனில், விளக்கம் தேடும், வேகமான உயிர்ப்பில் புதிய ஆர்வத் தைத் தூண்டி எழுப்புவது என்பதுதான். ஜி.ஆர்.தெர்சாவின்

★ தொன்று தொட்ட வழக்கம் என்பது வெறும் திரும்பத் திரும்பச் செய்வதென்பதன்று, ஆனால் அது முன்னரே பட்டறிவுகளினால் தொகுத்தெடுக்கப்பட்டுள்ளவற்றை எடுத்துக் காட்டி வெளிப்படுத் துவது என்பதேயாகும். திமிட்ரி சொஷ்டாகோவிச்

★ ★ ★

# என்னல்

★ *ஆக்கம் நிறைந்ததாகவோ, எதிர்மறையாகவோ - மனிதனுள் உள்ள மிகச் சிறந்த அழகினையோ அல்லது அனைத்து இழி வான தன்மைகளையும் இடித்துரைக்கவோ - ஆன திறமை யினைக் கலை தவிர்க்க இயலாதபடி பெற்றுள்ளது. பார்வை யாளரின் சோர்வினை விழிப்படையச் செய்ய வேண்டி, கழிவு களை மட்டும் நீ எடுத்துக் காட்டுவாயேயானால், நான் உன்னை ஒன்று கேட்பேன்: நல்லனவற்றைப் போற்றுவதைப் போன்றதே யல்லவா இது? திறமையினைப் போற்றுவதைப் போன்றதே யல்லவா இது?*

**நிகலாய் கோகோவ்**

★ *அழகு நிறைந்தவற்றின் ஒப்பற்ற ஆழ்ந்த தன்மையினைச் சமூகத் திற்கு நீ எடுத்துக் காட்டாதவரை, சில நேரங்களில் சமூகத்தை யோ வழித்தோன்றல் அனைத்தையுமோ அழகு நிறைந்தவற் றுக்கு நடத்திச் செல்ல உன்னால் இயலாது.*

**நிகலாய் கோகோவ்**

★ *கேலி நிறைந்த சிரிப்பிற்கிடையேயும், ஆற்றல் நிறைந்த, நிலைத்து நிற்கும் அன்பின் கதிர்கள் ஒளி வீசக்கூடும்.*

**நிகலாய் கோகோவ்**

★ *உலகிற்கு வெளிப்படையாகத் தோன்றும் சிரிப்பிற்கிடையேயும், உலகினால் காண இயலாத கண்ணீர்த் துளிகளும் பெரும்பாலும் கலந்தே உள்ளன..*

**நிகலாய் கோகோவ்**

★ *மனிதரின் குறைகளையும், தவறான கோட்பாடுகளையும், ஆழ்ந்த விருப்பங்களையும் விளக்குவதென்பது, உடலைப் பகுதிகளாகப் பிரித்து ஆய்வது என்ற கொலையைவிட அதிகமாகக் கண்டிக்கக் கூடியதன்று.*

**அலெக்சாண்டர் பூஷ்கின்**

★ *மனித இயல்பில் உள்ள நல்லவை, ஒளிமிகுந்தவை, மகிழ்ச்சியளிப் பவை தவிர வேறெதனையும் எடுத்துக் காட்டாமல் உள்ளது*

என்பது உண்மையைக் குறைப்பதாகும். அதாவது முழுமையற்றதாயிருப்பதால், உண்மையற்றதை எடுத்துக்காட்டுவது என்பதேயாகும். அதன் விளைவு சோர்வளிப்பதாகவும், சலிப்பளிப்பதாகவும் இன்சுவையூட்டப்பட்டதாகவும் இருக்கும். நிழல்களை நீ காட்டாவிட்டால், ஒளியும் உன்னால் எடுத்துக் காட்டப்பட இயலாது.

இவான் கொஞ்சரேவ்

★ நல்லவைற்றை மேலும் நல்லவையாக மாற்ற நல்லனவற்றை மிகைப்படுத்திக் கூறுவதும், கெட்டவைகளில் சோர்வை உண்டாக்க அவற்றை மிகைப்படுத்திக் கூறுவதும் கலையின் நோக்கங்களாகும். மாக்சிம் கோர்கி

★ செயல்பட இயலுமானாலும், செயற்கை உறுப்புகள் எரிச்சலூட்டுதல்களுக்கு எதிர்மறை வினையாற்றவே செய்யும். நானும் எதிர்மறை வினையாற்றுகிறேன். வலிக்குக் கண்ணீராலும் கூச்சலாலும் நான் பதிலளிக்கிறேன். தீயவைக்குச் சினத்தாலும், இழிந்தவைக்கு வெறுப்பாலும் பதிலளிக்கிறேன். சுருங்கக் கூறின், இதுவே வாழ்க்கையென அழைக்கப்படுவதாக நான் காண்கிறேன்.

ஆன்டன் செகாவ்

★ தீயவை, முறையற்றவற்றைப் பற்றி, நமது வாழ்க்கை உரக்கப் பேசுவதால், அதனைக் கேட்காமலிருப்பதோ மனமயக்கங்களில் புகலடைவதோ இயலாதவையேயாகும். இத்தகையவற்றைப் பற்றி நாம் பேசித்தான் ஆகவேண்டும். கிளெப் உபன்ஸ்கி

★ பொது நலன்களுக்குப் பாடுபட ஒன்றிற்கு மேற்பட்ட வழிகள் உள்ள போதும், தீயவற்றைப் பொய்மைகளைக் குற்றங்களை வெளிப்படுத்திக் காட்டுவதும் சமமான பயன் நிறைந்ததாகும் என்பதை ஒன்றுக்கு இருமுறை உறுதிபடக் கூற என்னால் இயலும்; ஏனெனில் அது உண்மை வாய்மை ஆகியவற்றின் முழுமையான ஆதரவினைப் பெற்றுள்ளது என்பதனால்.

எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ மாபெரும் செயல்களையும், அவலங்களையும் தன் மறுப்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதையும், புகழற்ற தூண்டுதல் களையும், அற்பமானவற்றையும் தனது ஏட்டினில் நூறாண்டு காலமாக ஆயிரமாண்டு காலமாகப் பதிவு செய்து கொண்டு வருவது தான் இலக்கியமாகும். எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ தனது குற்றம் முன்னமே கண்டுபிடிக்கப்பட்டு விட்டதால், அதன் பொருட்டுக் கேலியும் கண்டனமும் ஒலிக்கத் தொடங்கிவிட்டன என்பதை அறிந்திருப்பதைவிடக் குற்றம் புரிவதைக் குறைப்பது வேறெதுவுமில்லை. எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ எள்ளல் உண்மையானதாயிருக்க, அதனுடைய நோக்கத்தை அது எட்ட வேண்டுமெனின், முதலாவதாக அதன் ஆசிரியருடைய கருத்தைப் படிப்பவர் உணர அனுமதிப்பதும், அடுத்ததாகத் தம் கணைகளை எதனை நோக்கிச் செலுத்துகிறோம் என்பதனைப் பற்றி முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்வதும் இன்றியமையாதவையாகும். எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ ஐரோப்பாவில் நிலவிய அறியாமை, மதத் தீவிரவாதமென்னும் பெருந்தீயை அணைக்க எள்ளல் என்னும் கருவியை வால்டேர் பயன்படுத்திக் கொண்டார். விசாரியோன் பெலின்ஸ்கி

★ வாழ்க்கை எவ்வாறிருந்தபோதும், ஒழுக்க நெறியாளர்களின் கட்டுக் கதைகள், சொற்பொழிவுகள் அனைத்தையும்விட அது அதிகமானவற்றை நமக்குச் சொல்லவும் கற்பிக்கவும் செய்வதால், கலையென்பது வாழ்க்கையை அது உள்ளபடியே எடுத்துக் காட்டுவதாக இருக்கவேண்டுமென நாம் வலியுறுத்த வேண்டும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ வாழ்க்கையின் இருண்ட பகுதிகளை மறைத்துவிட்டு, ஆறுதலளிப்பவற்றை மட்டும் காட்டவேண்டி வாழ்க்கையின் சுவர்களுக்கு வெள்ளையடித்து அழகுபடுத்துபவர்கள் இழிவானவர்களைத் தவிர வேறெவருமிருக்க இயலாது. விசாரியோன் பெலின்ஸ்கி

★ உரிய காலம் வரும்போது, வாழ்க்கையின் எதிர்மறைப் பகுதி களை உண்மையுணர்வுடன் எடுத்துக் காட்டும் பழக்கமே, அதே மக்களையோ அவர்களது வழித்தோன்றல்களையோ, வாழ்க்கை யின் ஆக்கம் நிறைந்த முன்னேற்றங்களையோ அதே போன்று உண்மையுணர்வுடன் எடுத்துக்காட்ட உதவுகிறது.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ உணர்வுகளைத் தூண்டிவிடும் கலையைவிடச் சிரிப்பைத் தூண்டி விடும் கலையானது கடினம் மிகுந்ததாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ கடித்துக் குதறும் எள்ளலென்பது, அறநெறிக் கோட்பாடுகள் நிரம்பியதாயிருக்கும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ சமூக முறைகேடுகளைக் கண்டவுடன் கலைஞனிடமிருந்து வெளிப் படும் சினம் மிகுந்த கிறீச்சிடுதலும், அழகினைக் கண்டு அவன் வெளிப் படுத்தும் அமைதி நிறைந்த சிந்தனையைப் போன்றே மதிப்பு நிறைந்ததாகும். திமிட்ரி பிசரேவ்

★ சமூக முன்னேற்றத்தைத் தூண்டிவிடுவதை அல்லது அதன் தீராத தீவிரமான நோய்களை எடுத்துக் காட்டுவதை நிறுத்திக் கொண்ட அந்தக் கணமே சமூகத்தை நேர்மையற்றதாகச் செய்யும் ஒரு மாபெரும் சமூக ஆற்றலாக விளங்குவது இலக்கியமாகும்.

திமிட்ரி பிசரேவ்

★ அறிவார்ந்த மக்களால் கடுமையாகவும் கேலியாகவும் சிரித்தொ துக்கப்படும் துன்பமளிக்கும் நோய் போன்றவை மக்களது வாழ் வில் இருக்கவே செய்கின்றன, தனது செரிமானத்திற்கு உதவுவ தற்காக மட்டுமே வெறுமையாக அவற்றைக் கண்டு நகைப்பவன், பொது மக்களின் கவனத்தைத் திசைதிருப்பி, பொது மக்களின் பெருங் கோபத்தைத் தணித்து, மனிதனின் தூய தனித்தன்மை யைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்பவனாவான்.

திமிட்ரி பிசரேவ்

★ பொருள் படைத்ததாக இருக்கும்போது மட்டுமே எள்ளல் என்பதும் நன்மை பயப்பதாயிருக்கும். திமிட்ரி பிசரேவ்

★ இனியும் உயிர்வாழ்ந்திருக்கத் தகுதியற்ற எது ஒன்றிற்கும் எதிராகப் பயன்படுத்தப்படும் கருவிகளில் பயன் மிகுந்தது சிரிப்பேயாகும். அலெக்சாண்டர் எர்சன்

★ ஓர் எள்ளலில் தன்னை அடையாளம் கண்டுகொள்ள எவருமே அக்கறைப்படுவதில்லை. இவான் க்ரைலோவ்

★ ★ ★

# செயல்படுதலும் செயல்பாடுகளும்

★ பண்பாடு என்பது ஓர் அகன்ற கோட்பாடாகும், முகம் கழுவுவதி லிருந்து, மனித சிந்தனை என்னும் முகடுகள் வரை பரந்துள்ள தாகும்.

மைக்கேல் கால்னின்

★ ஒருவர் தெளிவான மனம் கொண்டவராகவும், ஒழுக்கத்தில் தூயவ ராகவும், புறத் தூய்மை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

ஆன்டன் செகாவ்

★ மனிதருள் அனைத்துமே, அவரது முகம், உடைகள், உள்ளுயிர், சிந்தனையாவுமே அழகு நிறைந்தவையாக இருக்க வேண்டும்.

ஆன்டன் செகாவ்

★ அழுக்கு கொண்ட ஒரு ஈயினால் ஒரு சுவர் முழுவதும் தூய்மை யற்றதாக ஆக்கப்பட இயலும், அதுபோலவே ஓர் இழிவான சூழ்ச்சியினால் முழுமையான ஒரு நல்ல நோக்கத்தினையே தூய்மையற்றதாக்கிக் கெடுத்துவிட இயலும்.

ஆன்டன் செகாவ்

★ ஒரு நல்மனத்தையும், நல் நெஞ்சத்தையும் பெற்றிருக்கும் ஒருவன் மட்டுமே முழுவதும் நல்லவனாகவும், நம்பிக்கைக்கு உகந்தவ னாகவும் இருப்பான்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ ஏதோ ஒன்றினை நீ செய்ய விரும்பும் ஒவ்வொரு நேரமும், அதனை செய்வதற்கு முன் நின்று சிந்தனை செய்: அது அறிவுடமை யல்லவா?

லியோ தோல்சுதாய்

★ ஒரு செயலைச் செய்ய ஆராயும் முன் தயக்கம் காட்டலாம், ஆனால் அதனைச் செய்ய முடிவெடுத்தபின், எந்தத் தயக்கமுமின்றி செயல் படு.

லியோ தோல்சுதாய்

★ நீ நன்கு சிந்தனை செய்வாயேயானால், உனது சிந்தனைகள் நற் செயல்களாகவே கனியும். இலியோ தோல்சுதாய்

★ ஒவ்வொரு மனிதனிலும், அவனது செயல்களிலும் இருந்து, ஒருவனால் எப்போதும் தன்னைப் பற்றி அறிந்து ஏற்றுக் கொள்ள இயலும். இலியோ தோல்சுதாய்

★ மற்றவர்களின் செயல்களைப் பற்றி பேசும் போது, திறனாயும் உன்னுடைய செயல்களையும் நினைவில் வைத்துக் கொள்.
இலியோ தோல்சுதாய்

★ மிகுந்த இழிவான பின்விளைவுகளுக்கு வழிவகுக்கும் தூண்டுதல் களிலேயே மிகப் பொதுவானது "ஆனால் அனைவரும் அதனைச் செய்கின்றனரே" என்று கூறுவதற்கான தூண்டுதலே.
இலியோ தோல்சுதாய்

★ உனது செயல்கள் ஒவ்வொன்றும் மற்ற மக்களின் மீது எதிரொலிக் கின்றது; உன்னையன்றி, உன்னருகில் மற்றவர்களும் உள்ளார்கள் என்பதை எப்போதுமே மறந்துவிடாதே.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ ஒரு மிகைப்படுத்தப்பட்ட செயலானது, சோர்வுற்ற மனப்பாங்கின் உடன்பிறந்ததுவாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ மிகைப்படுத்தப்பட்டவை அனைத்துமே கேடு பயப்பவை. நல்லவை பயன் நிறைந்தவை. அனைத்தும் மிகைப்படுத்தப்பட்ட நிலைக்குச் செல்லுமானால், ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்த பின், கேடு நிறைந்தவையாகவும், துன்பம் தருவதாகவும் அவை மாறவே செய்யும். வி.இ.இலெனின்

★ ஒரு மனிதனின் தவறுகள், அவனது திறமைகளின் ஒரு தொடர்ச்சி யாக இருப்பவை, இருந்து இருப்பவை. ஆனால் அத் திறமைகள், அவை தேவைப்பட்ட காலத்திற்கு மேல் தொடரப்பட்டாலோ அவை

தேவைப்படாத போதும் மேற் கொள்ளப்பட்டாலோ, அவை தவறு களாக ஆகிவிடுகின்றன. வி.இ.இலெனின்

★ ஒவ்வொரு கெட்ட செயலும், அதனைச் செய்பவர்க்குத் தீமை யினால் கருவுற்றதைப் போன்றதாகும். வி.ஏ.குளுசோவ்ஸ்கி

## பணிவு, பண்பாடு, பாராட்டு, நன்றியுணர்வு

★ உண்ணும் போது துணி மீது சாற்றை ஊற்றிவிடாமலிருப்பது மட்டுமே நல்ல பண்பாகாது; மற்றொருவர் அவ்வாறு ஊற்றிவிடும் போது அதனைக் கண்டு கொள்ளாமலிருப்பதே நற்பண்பாகும். ஆண்டன் செகாவ்

★ உண்மையான, சிறந்த பண்பு என்பது உண்மையின் அடிப்படை மீது அமைவதாகும். உண்மையான பண்பு என்பது மற்றொருவர் மீது கொண்டுள்ள மதிப்பின் தோழனாகும்; அஃதின்றேல், அது ஒரு புதினமாகவே இருக்கும். என்.வி.செல்குனேவ்

★ மகிழ்ச்சியுடன் இருக்க வேண்டுமென விரும்பும் காரணத்தினாலேயே, அத்தகையவர்கள் எப்போதுமே மகிழ்ச்சியற்றவர்களாகவே உள்ளனர். யவ்கெனி வக்டாங்கோ

★ முரட்டுத்தனமாக, கடுமையாக இருப்பதென்பது, ஒருவர் தனது தகுதியைப் பெருமையை மறந்துவிடுவது போன்றதாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ முரட்டுத்தனமாக, கடுமையாக இருப்பதை எந்தக் காரணத்தினா லும் அறநெறிப்படுத்த இயலாது. டாராஸ் செவ்செனகோ

★ முரட்டுத்தனமான, கடுமை என்பது ஒரு சவப் பெட்டியைப் போல் அழகற்றதும், அருவருப்பூட்டுவதுமாகும். மாக்சிம் கோர்கி

★ கடுமையான சொற்கள் எப்போதும் வலுவான தருக்கத்தை உருவாக்குவதில்லை. வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ நன்றி கூறப்படுதல் என்பது அதனைப் பெறுபவரின் உரிமையன்று; ஆனால் நன்றி கூறுபவரின் கடமையாகும். நன்றியைக் கோரிப் பெறுவதென்பது முட்டாள்தனமானது; நன்றியுணர்வற்றிருப்பது என்பதோ இழிவானது. வி.ஏ.குளூசேவ்ஸ்கி

★ வலிமைக்குக் கடுஞ்சொற்கள் எப்போதும் தேவைப்படுவதில்லை. பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ ஒரு மனிதனைத் திட்ட சிறிதளவு நேரமே ஆகும்; அதனால் சிறிதளவு பயனும் கூட இருப்பதில்லை. திமிட்ரி பிசரேவ்.

★ ஒருவருக்கு ஒரு உதவியைச் செய்தபின், அதனைப் பற்றி, எவரிடமும், உனது நண்பன் அல்லது பகைவன், எவரிடமும் பேசாதே. அப்தல் காசிம் பிர்தோசி

## பெருந்தன்மை உணர்வு

★ ஒரு மனிதன் தன்மான உணர்வு படைத்தவனாக இருக்க வேண்டும். மாக்சிம் கோர்கி

★ தன்மான உணர்வு அற்ற ஆழ்ந்த உணர்வுப் பெருக்கு என்பதை கற்பனை செய்தும் காண இயலாது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தன்மானமற்றவரிடம் ஒழுக்கத் தூய்மையோ, உணர்வுப் பெருக்கோ இருக்காது. தன்மானம், மதிப்பு, பெருமை போன்ற நுட்பமான உணர்வுகளைக் கூராக்கும் சாணைக் கல்லாகும் அது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ ஆண்களின் பெருமை என்பதில், மற்றவரைச் சார்ந்திராமல்,

ஒட்டுண்ணியாக இல்லாமல் இருப்பதும் அடங்கியதாகும்.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தன்மான உணர்வு அற்றவர் எந்த விதமான அடையாளமும் அற்றவரே. தன்மான உணர்வு என்பது பூமியைச் சுழலச் செய்யும் ஆர்க்மெடீசின் அச்சு போன்றது. இவான் டர்கனேவ்

★ தன்னைத் தானே நேசிப்பதென்பது தற்கொலைக்கு ஒப்பாகும். தன் உணர்வு மிக்கவன் ஒரு தனியான, பயனற்ற மரம் போன்றவன். ஆனால் நிறைவுக்குப் பாடுபடும் செயல்பாடு நிறைந்த தன்மானம் என்பதோ, மாபெரும் நிலைக்கு வழிகோலுவதாகும்.
இவான் டர்கனேவ்

★ வெளி உலகிற்கும், நமது உள்ளுணர்வுகளுக்குமிடையேயான போராட்டம் பெரிதாக உள்ளபோது, நின்று உன்னையே நீ கேட்டுக் கொள். என்னிடமே சிலவற்றை நான் ஒப்புக் கொள்ள வெட்கப்படுவேனானால், நான் என்னவாக இருக்க இயலும்?
நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ மற்றவரின் மனிதப் பெருமையை மக்கள் இழிவுபடுத்துவது, மனித இனத்துக்கே ஒரு இழுக்காகும்; தங்கள் சொந்தப் பெருமையை அவர் மதிக்கவில்லையெனில், அதனால் விளையும் இழுக்கும், தீங்கும் இரு மடங்காகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ வெட்கமற்ற தற்பெருமைக்காரன் வெறுக்கத்தக்கவனே; ஆனாலும், தன்மான உணர்வோ அல்லது வலிமை பற்றிய உணர்வோ அற்ற ஒருவனும் அதனிலும் குறைவாக வெறுக்கத் தக்கவனல்ல.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ வேடிக்கைக்கேனும், பொய்யுரைத்து எவரையும் பாராட்டி மயக்காதே. நீ எவ்வாறு இருக்க வேண்டுமென அவர்கள் எப்படி வேண்டுமானாலும் விரும்பி நினைத்துக் கொள்ளட்டும்; ஆனால் நீ நீயாகவே இரு. விசாரியோன் பெலின்ஸ்கி

★ தன்னைத் தானே மதிக்கத் தெரியாதவனால் பிறரையும் மதிக்க இயலாது; இரு நிலைகளிலும் தனது சிந்தனையின் இழி தன்மையையே அவன் வெளிக்காட்டிக் கொள்கிறான்.
என்.ஐ. நோவிகோவ்

★ தன்னிடமே தன்னைப் பற்றிய மதிப்பு அற்றவன், பிறரின் மதிப்பை எப்போதுமே பெறமாட்டான். நிகலாய் கரம்சின்

★ தவறுகளே அற்ற மனிதன் தகுதி படைத்தவனாக ஆக மாட்டான், ஆனால் பண்புகள் பெற்றவனே தகுதி படைத்தவன் ஆவான்.
வி.ஓ.குளூசேவ்ஸ்கி

★ சோர்வளிக்கும் எச்சரிக்கை உணர்வு மிகுந்த விடைகள், வினாக்களின் உயிர்த்தன்மையையே கொன்றுவிடு பவையாகும்; அவை மனதை சரியான பாதையிலிருந்து விலகிச் செல்லச் செய்கிறது.
அலெக்சாண்டர் எர்சன்

★ உன்னைப் போன்றே மக்களையும் வடிவமைத்து உருவாக்குவது என்பது, குறுகிய மனப்பான்மை கொண்ட கொடு மனம் படைத்ததாகும். திமிட்ரி பிசரேவ்

★ தகுதியற்றவரைப் புகழ்வது, புகழ்பவரை உயர்த்தாது என்பது மட்டு மன்றி, அவரைத் தாழ்த்தவும் செய்யும்.
பி.ஏ.வியாஜெம்ஸ்கி

★ புகழுரை என்பது எப்போதுமே புனிதமானது.
பியோடர் தோவ்ஸ்தோயேவ்ஸ்கி

★ அளவு கடந்த புகழுரையை நஞ்சாகவே நான் காண்கிறேன்.
இவான் கிரிலோவ்

★ மற்றவரைப் பற்றி உன்னிடம் இழிவாகவும், உன்னைப் பற்றியே உன்னிடம் உயர்வாகவும் பேசுபவர் பேச்சுக்கு செவி சாய்க்காதே.
இலியோ தோல்சுதாய்

# பேசும் கலை

★ ஒரு சொல் என்பதே ஒரு செயலாக மாறுவதாகும்.

இலியோ தோல்சுதாய்

★ நீ நன்கு அறிந்திருப்பவை பற்றி மட்டுமே நீ பேசு; இல்லையெனில் எதனைப் பற்றியுமே பேசாமலிரு. இலியோ தோல்சுதாய்

★ மக்கள் பேசக் கற்றுக் கொள்கின்றனரேயன்றி, எப்போது எவ்வாறு பேசவேண்டும் என்பதைப் பற்றி கற்றறிந்து கொள்பவர்களாக இருப்பதில்லை. இலியோ தோல்சுதாய்

★ ஒரு நீண்ட பேச்சுக்குப்பின் நீ சொன்னது அனைத்தையும் நினைவுப் படுத்திப் பார்த்தாயேயானால், எவ்வளவு ஆழமற்றதாக, தேவையற்றதாக, சில சமயங்களில் அழகற்றதாகவும் அது இருந்தது என்பதைக் கண்டு நீ வியப்படையவே செய்வாய்.

இலியோ தோல்சுதாய்

★ வெகு விரைவாகவும் நேரிடையாகவும் ஒரு கருத்து ஒலிக்கபபடும் போது, பெரும்பாலும் அது மேலோட்டமானதாகவும் மாற்றத் துக்கு உட்பட்டதாகவுமே இருப்பதாகும்.

நிகலாய் தோப்ரோலியுவோம்

★ நீ எடுத்து வைக்கும் அடியினைவிட உனது சொற்களை அளந்து பேசுவது, எந்த விதத்திலும் குறைந்த இன்றியமையாத தன்மையைப் பெற்றிருக்கவில்லை என்பதால், உனது நலன் கருதி, பேசுவதில் எச்சரிக்கையுடன் இரு. என்.வி.செல்குனேவ்

★ ஓர் அற உணர்வற்ற, கடுமையான, அக்கறையற்ற சொல் காயப் படுத்தி, துன்பமளித்து, மனத்தை வருத்தி, திகைக்கச் செய்து அல்லது அழிக்கவும் கூடும் என்பதால் அதனைக் கையாளுவதில் எச்சரிக்கையுடன் இரு. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ பிறர் பேசுவதைக் கேட்பதில் முதல்வனாகவும், நீ பேசுவதில் இறுதி யானவனாகவும் இரு. பெண்டி கபியேவ்

★ பேசாமலேயே அமைதி காத்துக் கொண்டே, ஒருவரால் அதிகப் படியானவற்றைக் குறிப்பால் உணர்த்தவும், செய்யவும் இயலும்.

பெண்டி கபியேவ்

★ குறைந்த அளவே பேசுபவர், அறிவு நிறைந்தவராகக் காணப்படு கின்றார். மாக்சிம் கோர்கி

★ தனதென்று சொல்வதற்கு ஏதுமற்றவன், பேசாமலேயே இருந்து விடுவது மிகவும் சிறந்ததாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ நான் எது ஒன்றினைப் பற்றியும் அறியாதவனாக இருந்து எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தால், நான் அறியாதவனென நான் கருதுவதில்லை; அறியாதவன் என்பவன், தான் அறிந்திராத வற்றைப் பற்றிப் பேசுபவனேயாவான். எம்.எம்.பிரிஷ்வின்

## வழிகாட்டி, ஆலோசனை, புகழுரை

★ எச்சரிக்கையான பதில்கள் நியாயமான கேள்விகளைக் கொன்று விடுவதுடன், சரியான பாதையிலிருந்து மனத்தை விலக்கிச் செலுத்துவும் செய்கிறது. அலெக்சாண்டர் ஹெர்சன்

★ உன்னைப் போலவே மக்களையும் வடிவமைக்க விரும்புவது, குறுகிய அறிவார்ந்த கொடுங்கோன்மைக்கு வழிகோலுவதாகும். திமிட்ரி பிசரேவ்

★ தகுதியற்றவரைப் புகழ்வது, புகழப்படுபவரை உயர்த்தாதது மட்டுமன்றி, புகழ்பவரை இழிவுபடுத்துவதுமாகும். பி.ஏ.வியாஜெம்ஸ்கி

★ புகழ்தல் என்பது எப்போதுமே தூய்மையானதாக இருப்பதாகும். பியோடர் டோஸ்டோயேவ்ஸ்கி

★ மிகைப்பட்ட புகழுரையை நான் நஞ்சாகவே காண்கிறேன். இவான் கிரிலோவ்

★ விளையாட்டிலும்கூட பொய்யுரைத்து, இச்சகம்பேசாதே; நீ எவ்வாறு இருக்கவேண்டுமென, எவ்வாறு இருக்கிறாயென, அவர்கள் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ள விட்டுவிடு. விசாரியோன் பெலின்ஸ்கி

★ மற்றவரைப்பற்றி புறங்கூறி, உன்னை உயர்த்திப் பேசுபவரின் பேச்சுக்கு செவி சாய்க்காதே. லியோ தோல்ஸ்தோய்

# கலையும் வாழ்வும்

## உண்மையும் கதையும்

★ வாழ்வின் உண்மைத் தன்மையினை வெளிப்படுவதில் உள்ள இலக்கியத்தின் முதன்மையான நோக்கத்தைக் காணும் போது, அதில் ஒரு தனிப்பண்பு இருக்க வேண்டுமென நாம் விரும்பு கிறோம்; அது இல்லாமல் இலக்கியம் எந்தவிதத் திறமைகளும் பெற்றதாக, அதாவது, உண்மை நிறைந்ததாக இருக்க இயலாது.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ ஒரு கலைப் படைப்பில் உண்மையென்பது ஓர் இன்றியமையாத மூலக் கூறாக உள்ள போதும், அது அதன் திறமையாக இருப்ப தில்லை. ஆசிரியரின் பார்வையின் அகன்ற மனப்பான்மை, அவரது முறையாகப் புரிந்து கொள்ளும் தன்மை, அவர் எழுதும் செய்தி களைப் பற்றி உயிர்த்தன்மையுடன் வரைவது ஆகியவற்றைக் கொண்டே ஒரு கலைப் படைப்பின் திறமையை நாம் அளவிடு கிறோம்.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ வரலாற்று வகையான கலைப் படைப்புகளில் உண்மை என்பது அடிப்படையாக இருக்க வேண்டும், கதைகளில், நிகழ்வுகள் கற்பனையில் உருவாக்கப்பட்டுள்ள இடங்களில், அது மெய் யியல் உண்மையால் மாற்றியமைக்கப்படுகிறது. அதாவது நடைபெற்றுக் கொள்ளும் நிகழ்வுகளின் நடைமுறைகளை ஒட்டியதாகவும் அதே நேரத்தில் ஒரு முறைமையான அளவில் நடைபெறக் கூடியதாகவும் இருப்பதாகும்.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ உண்மையிலேயே பெரிய கலையென்பது பொய்மைகளால் துன்புறுவதில்லை.

கான்ஸ்டான்டின் ஸ்டேனிஸ்லேவ்ஸ்கி

★ பொதுவறம் உண்மைத் தன்மையின் இலக்கியத்திற்கும், மக்களின் வாழ்க்கையின் பகுதியாக இருக்கும்; மக்களுக்குத் தொண்டாற்றும் இலக்கியத்திற்கும், வாழ்க்கையின் உண்மையென்பதே எப்போதும் விதியாக இருந்து வந்துள்ளது; இருக்க வேண்டும்.
காான்ஸ்டான்டின் பெடின்

★ சுருங்க விளக்குவதாயின், பொதுவறம் உண்மைநிலை என்பது வாழ்க்கை முன்னேற்றமடையும்போது அதனைப் பற்றிய ஓர் உண்மை நிறைந்த வெளிப்படுத்துதல், எடுத்துக் காட்டுதல் என்பதே யாகும். பொதுவறமென்ற உணர்வு படைத்த மக்களுடன், இலக்கியத்தின் கல்விப் பணி கொண்டிருக்கும் தொடர்பினை உடன்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுவது என்பதாகும் அது.
அலெக்சாண்டர் பெடயேவ்

★ கடந்த காலம் நாம் பங்கேற்றுக் கொண்டிருக்கும் படைப்பில் ஒன்றை நிகழ்காலம் என்ற உண்மைகளை மட்டுமே நாம் அறிந்திருக்க வேண்டுமென்பதில்லை. எதிர்காலம் என்பது பற்றிய ஒரு மூன்றாம் நிலையையும் நாம் அறிந்திருக்க வேண்டும். அதுவன்றி, பொதுவற உண்மை நிலையின் நடைமுறையை நாம் எப்போதுமே புரிந்து கொள்ள முடியாது. நீ எதனை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறாய் என்பதைத் தெளிவாகவும் சரியாகவும் அறிந்து கொள்ள, உனக்கு என்ன தேவை என்பது பற்றி நீ அறிந்திருக்க வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ நமது எதிர்கால குறிக்கோள்கள் என்னும் மலைக் கொடு முடிகளில் இருந்து, நமது கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் காண நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ கடந்த காலத்தைத் தெளிவாகக் காண உதவும் எதிர்காலத்திற்கான ஒரே நேர்ப் பாதையை நமக்குக் காணச் செய்யும் ஒரு மிகவுயர்ந்த அறிவுக் கொடுமுடியை அறிவியல் பொதுவறம் நமக்காக உருவாக்கித் தந்துள்ளது.
மாக்சிம் கோர்கி

★ இலக்கியம் அதனுடைய மேன்மைக்கு, அதன் உண்மை நிறைந்த தன்மைக்குக் கடமைப்பட்டுள்ளது. மாக்சிம் கோர்கி

★ உண்மை எளிமையை விரும்பும்போது, பொய்மை குழப்பத்தையே விரும்புகிறது. இது இலக்கிய வரலாற்றினால் மிகத் தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மாக்சிம் கோர்கி

★ ஓர் எழுத்தாளனாக இருக்க முயற்சி செய்பவர், எப்போதும் முற்றிலும் உண்மையானவனாக இருக்கவேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ இலக்கியப் பாசறையில் உள்ள மிகவும் இன்றியமையாத கருவிகளில் ஒன்று கற்பனை என்பதாகும்; அது கற்பனைக் காட்சியை உருவாக்குகிறது. மாக்சிம் கோர்கி

★ கற்பனை இன்றி கலைத்தன்மை என்பது இயலாததே ஆகும்.
மாக்சிம் கோர்கி

★ கலை, கண்டுபிடிப்புகளின் மீது வாழ்ந்து வளர்கிறது; அறிவியல் அதனை நடைமுறையில் அமைக்கிறது. மாக்சிம் கோர்கி

★ தூரிகை, சிற்பியின் உளி, சொல் ஆகியவற்றின் மூலம் வாழ்க்கையினைக் கலை வெளிப்படுத்துவதில், கண்டுபிடிப்பு என்பது எந்த வெளிப்பாட்டினை மேம்படுத்தி, அதனை மிகவும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக ஆக்கி, அதனுடைய பொருளை ஆழமுள்ள தாக்கி, அது சமூகப்படி உண்மையானதும் தவிர்க்க இயலாததும் எனக் காட்டுமேயானால், அது மிகப் பொருத்தமானதும் பயன் நிறைந்ததுமாகும். மாக்சிம் கோர்கி

★ அறிவியலுக்கும், கதைக்குமிடையே பல பொதுவாக உள்ளன. இரண்டிலுமே முதன்மையான பணியென்பது உற்று நோக்குதல், ஒப்பிடுதல், ஆய்வு செய்வது என்பவையேயாகும். அறிவியலாளரைப் போலவே எழுத்தாளரும் கற்பனையும், ஊகங்களின்

தந்திரத்தை, அதாவது உள்ளுணர்வையும் பெற்றிருக்க வேண்டும். மாக்சிம் கோர்கி

★ நிகழ்ச்சியென்பதே அனைத்து உண்மைகளாக இருப்பதில்லை. அது ஒரு கருப்பொருள் மட்டுமே. அதிலிருந்து உண்மையான கலையென்பது நுகர்ந்தறியப்பட வேண்டும் அல்லது பிரித்தெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மாக்சிம் கோர்கி

★ எந்த ஓர் எல்லாக் குறுகிய தன்மையும் பொதுவறக் கலைக்கு அயன்மையானது. எப்போதுமே வரலாற்றையோ உலக இலக்கியத்தையோ, தொன்மத்தையோ, கதையை யோ, அதனுடைய ஆர்வமெனும் எல்லையை விட்டு அது விலக்கி விடுவதில்லை.
திமிட்ரி கபாலேவ்ஸ்கி

★ வாழ்க்கையின் அழகையும் உண்மையையும் ஒன்றாகவே வேர் தேடிப் பெறவேண்டும். வாழ்வின் உண்மை எளிமையானதாகவும், கடுமையானதாகவும், சில நேரங்களில் கவர்ச்சியற்றதாகவும் இருக்கும்; ஆனால் நீ அவற்றைக் கற்றறிந்து புலமை பெறுவதில் வெற்றி பெற்றால், அதனுடைய அழகும்கூட மிக வெகுகாலம் நீடித்திருப்பதாக இருக்கும்.
விளாடிமிர் கோரோலென்கோ

★ கலைவடிவமான உண்மை என்பதே கலையின் உடனடியான குறிக்கோளாகும். இவான் கொஞ்சரேவ்

★ கற்பனையென்பது எப்போதுமே கலைஞனின் உதவியாளனாக இருப்பதாகும். இவான் கொஞ்சரேவ்

★ கலையில் அறிவுக் கூர்மையென்பது கற்பனையுடன் இணைந்து செல்வதாக இருக்க வேண்டும். இவான் கொஞ்சரேவ்

★ கலையென்பது உண்மையென்பதாகும். உண்மை ஒன்றே ஏற்றுக் கொள்ளச் செய்ய இயல்வதும், மாற்ற இயலாததும்

ஆகும். எங்கு உண்மை என்பது இல்லாமல் இருக்கிறதோ, அங்குக் கலையென்பதும் கூட இல்லாமல் போகும்.

மைக்கேல் கால்னின்

★ எவ்வளவு கசப்பானதாக இருந்தபோதும், உண்மையைப் படிப்பவரின் முகத்திற்கெதிரே நேரடியாகச் சொல்ல இயன்றவராக எழுத்தாளர் இருக்க வேண்டும். அதனால்தான், ஒவ்வொரு கலைப் படைப்பையும் மதிப்பிடும்போது, முதலில் அதன் உண்மை நிறைந்த தன்மை, ஏற்றுக் கொள்ள இயன்ற தன்மை என்ற நிலையிலிருந்து நாம் அதனை அணுக வேண்டும்.

மைக்கேல் சோலோகோவ்

★ எந்தக் கலையுமே உண்மை என்பதன்றி நிலைத்திருக்க இயலாது.

மைக்கேல் கிளிங்கா

★ திறமையின் ஆற்றல் என்பது உண்மையில் இருப்பதாகும், ஒரு தவறான நடைமுறை, வலிமை மிகுந்த திறமைகளை அழித்து விடும்.

நிகலாய் செர்னசேவ்ஸ்கி

★ ஒரு கலைஞன் உண்மையைக் காண மறுத்து மறுபுறம் திரும்பிய அந்தக் கணமே, அவன் உடனடியாக வெறுமையானவனாக ஆகிவிடுவதுடன், அந்த நிமியத்திலேயே அவனது அனைத்துத் திறமைகளையும் இழந்துவிடுபவனாக ஆகிவிடுகிறான்.

பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ எழுதும் அல்லது பேசும் கலைகளில் போலியானவற்றைவிட அருவருக்கத் தகுந்தது வேறெதுவுமில்லை. நீ என்ன எழுதுகிறாயோ அது உண்மையானதாக இருக்க வேண்டும்.

அலிகர் நவோவ்

★ கலைஞன் உண்மை நிறைந்தவனாக இருந்து, தனது கதை மாந்தரை உண்மையான வாழ்க்கையிலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் உண்மையாக இருப்பதைக் கற்பனையாக மாற்றிக் காட்டும் எழுத்தாளன் பொய்யனே.

ஏ.வி. லுனாசர்ஸ்கி

★ உண்மையென்பதின் உண்மையான அடையாளமே எளிமையும் தெளிவும்தான். ஒரு பொய் எப்போதுமே சிக்கல் நிறைந்ததாகவும், பம்மாத்து நிறைந்ததாகவும், வாயாடித்தனமானதாகவும் இருக்கும்.
இலியோ தோல்சுதாய்

★ நீ சொல்ல வேண்டியதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், உண்மையாகப் பேசுவதுடன், அதனை உண்மையாகச் சொல்ல, உனக்குச் சிந்தனை வந்தவுடன் பேசு. இலியோ தோல்சுதாய்

★ மனவியலைத் தவிர வேறு எது ஒன்றினை வேண்டுமானாலும் கண்டுபிடிக்கலாம். மக்களின் மனநிலையின் அடிப்படையில் அவர்கள் எதனைச் செய்ய மாட்டார்கள் என உறுதியாக நம்பு வதை அவர்கள் செய்வதைப் புதினங்களிலும், கதைகளிலும் காட்டப்படுவது அதிர்ச்சித் தருவதாக இருக்கும். கலையில், பொய்மையென்பது நிகழ்வுகளுக்கிடையேயுள்ள பிணைப்பு களை அழிப்பதால், அனைத்துமே தூள்களாக மாறிப் போகின்றன.
இலியோ தோல்சுதாய்

★ உண்மையாக இருப்பது என்பது கலைக்குத் தேவையான முதன்மையான கட்டுப்பாடுகளில் ஒன்றாகும். என்.பி. ஓகரேவ்

★ கலைகளின் எந்த ஒன்றின் மிக உயர்ந்த பண்பு என்பது உண்மை யாக இருப்பது என்பதேயாகும். செர்ஜி நச்சமானினோவ்

★ எழுத்தாளர் தம்மைத் தாமே எதனில் நிறைவு செய்து கொள் கிறார் என்ற அவரது ஒப்புதல் என்பதே மிக உயர்ந்ததாக இருக்க இயல்வதாகும். அலெக்சாண்டர் ப்ளோக்

★ கலையில் உண்மை நிலைக்கு நம்பிக்கையற்ற அனைத்துமே ஒரு பொய்யாகவும், திறமையைப் பற்றியல்லாமல் தோல்வியைப் பற்றிப் பேசுவதாகும். விசாரியோன் பெலன்ஸ்கி

★ நீ காண்பதைப் பற்றிய இயல்புத் தன்மையில் அடங்குவது என்ப தாக மட்டுமே உண்மை நிலை என்பது இருப்பதில்லை, இன்னமும்

அதிகப்படியான இயல்புத் தன்மையிலும், எளிமையிலும் ஆனால் ஒரு நிகழ்வின் மூலக் கருத்திலிருந்து நீ என்ன அறிந்து கொள்கிறாய் என்பது பற்றிய ஆழத் தன்மையிலும் இருப்பதாகும் அது.

பி.பி. சிஸ்டியாகோவ்

★ உண்மை நிலை என்பது கருவி. அதனை ஒரு சொல்லுக்குப் பயன்படுத்தினால், உண்மை நிலையாளரின் சொல் பொய்யானதில்லை என்பதைக் குறிக்கிறது; ஆனால் உண்மையென்னும் மூலக் கருத்தினால் நிரப்பப்படுகிறது. ஓர் உண்மை நிலை கொண்ட எழுத்தாளர், ஓர் உண்மை நிறைந்த எழுத்தாளர் ஆவார்.

எம்.எம். பிரிஉஷ்வின்

★ கண்டுபிடிப்பற்ற உண்மையென்பது எரியாற்றலற்ற வானூர்தி போன்றதாகும். உண்மை என்பது வணங்கத்தக்கது. அதனுடைய எண்ணெய்த் தொட்டிகள் நிரப்பப்பட்டவுடன், உண்மை நமது நிலத்தின் நடுக் கோடுகளையும் நிலக்கோடி(துருவங்)களையும் கடந்து பறக்கிறது. கண்டுபிடிப்பு இல்லாமல் உண்மையென்பது எதுவுமேயில்லை. அதற்கு மாறாகக் கண்டுபிடிப்புகள் உண்மையைக் காப்பதுடன், உண்மை ஒன்றிற்காகவே வாழ்கின்றன.

எம்.எம். பிரிஉஷ்வின்

★ கண்டுபிடிப்பது என்பது இயன்றதற்கும், நிகழக் கூடியதற்கும் நெருக்கமாக உள்ளபோது, அனைத்திலும் அதிகச் சிறப்பானதாகவும், மதிப்பு வாய்ந்ததாகவும், இன்பமளிப்பதாகவும் இருக்கிறது.

எம்.எம். பிரிஉஷ்வின்

★ நான் ,காணும்படி, ஓர் உண்மையான உண்மை நிலையாளன் என்பவன், ஒளிமிகுந்ததையும் அதே போன்று இருண்டதையும் கண்டாலும், ஒளிமிகுந்ததை நோக்கிக் கவரப்படுவதுடன், ஒளி மிகுந்ததை நோக்கிப் பயணம் செய்த பாதை மட்டுமே உண்மையானது எனக் கருதுபவன் ஆவான்.

எம்.எம். பிரிஉஷ்வின்

★ இன்னமும் சிறந்த ஏதோவொன்றில் நான் கொண்டிருந்த நம்பிக்கையின் ஆற்றலாக நான் முன்னேற்றப் பாதையில் செலுத்தப்படும்போது, அதற்கான பாதையினை எனது ஐயங்களால் தெளிவானதாக்கிக் கொள்கிறேன். எம்.எம். பிரிஷ்வின்

★ கலைநயம் நிறைந்த உண்மை என்பது, தனக்காகத் தானே பேசுவதாக இருக்க வேண்டுமேயன்றி, திறனாய்வுகள், விளக்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் பேசுவதாக இருக்கக் கூடாது.

எம்.இ. சால்டிகோ செசட்ரின்

★ நிறைவு பெற்றதும், முழுமையானதுமான கலை என்பது இயற்கையின் உயிரற்ற நகலாக இருப்பதன்று; எந்தக் கலையும் உள்ளுயிர், மனித ஆர்வத்தின் ஒரு படைப்பாக இருப்பதாகும்.

பி.பி. சிஸ்டயகோவ்

★ வரலாற்றிலிருந்தோ வாழ்க்கையிலிருந்தோ ஒரு காட்சியை எழுதுவது என்பதுவே அனைத்துமாக இருப்பதில்லை. அது ஆசிரியரின் மெய்யியல் தேட்டத்தினால் ஒளியூட்டப்படாவிட்டால், வாழ்க்கையின் ஆழ்ந்த கருத்தை எந்த வடிவத்திலேயாவது, அது எத்தகையதாக இருப்பினும், கொண்டு செல்லாதவரை அது ஒரு பொதுவான புகைப்படமாக, ஓர் ஆய்வாகவே இருக்கும்.

இலியா ரெபின்

★ மிகப் பழமையான மனப்பான்மை கொண்ட மக்களே கதை என்பது உண்மை நிலைக்கு எதிரானதாகும் என நினைக்கின்றனர்.

கான்ஸ்டான்டின் பாஸ்டோவ்ஸ்கி

★ ஒரு கதையை உருவாக்குவது கண்டுபிடிப்பல்ல, ஆனால் உண்மை நிலையே. என்றாலும் ஒரு கண்டுபிடிப்பு என்பது உண்மை நிலையைவிட அதிகப்படியான உண்மையாக இருப்பதாகும்.

மைக்கேல் ஸ்பெட்லோவ்

★ உண்மையைவிட அழகு நிறைந்தது, ஆற்றல் மிக்கது எது ஒன்றினையும் ஓர் எழுத்தாளர் எப்போதும் கண்டுபிடிக்க இயலாது.

யூரி டினியானோவ்

★ கதை வரலாற்றிலிருந்து வேறுபடுவது எந்த மிகைப்படுத்திக் கூறப்படுவதாலும் ஏற்படுவதில்லை; ஆனால் மக்களையும் நிகழ்வு களையும் பெரிய, நெருங்கிய, அதிகமாக இன்றியமையாத புரிந்து கொள்ளுதலாலும், அவர்களைப் பற்றிய அதன் அதிகப் படியான அக்கறையாலும் ஏற்படுவது. யூரி டினியானோவ்

## கலையின் பொருளும் நோக்கமும்

★ கலையென்பது மனித இனம் தன்னைப் பற்றியும், தனது சுற்றுச் சூழலைப் பற்றியும் புகழ்ந்துரைக்கும் மாபெரும் பாராட்டாகும். ஏ.வி.லூனாசர்ஸ்கி

★ நாம் வளம் நிறைந்தவர்களாக வளரும்போது, ஒரு பெரிய சமூகக் கலை வடிவில் மட்டுமே, மக்கள் கூட்டத்தின் வாழ்வில் மிக அகன்ற தாகக் கலை நுழைவதில்லை, ஆனால் உழைப்பாளிகள், உழவர் களின் குடியிருப்புகளிலும் அது ஊடுருவி அவர்களை மகிழ்ச்சி யால் நிறைவு செய்கிறது. ஏ.வி.லூனாசர்ஸ்கி

★ பெரும் புரட்சியின் ஆற்றல்களைப் பற்றி வெளிப்படுத்தும் ஒரு பெரும் கலை என்பது அப் புரட்சியின் ஒரு வலிமை மிகுந்த போராளியாகும். ஏ.வி.லூனாசர்ஸ்கி

★ வாழ்க்கையின் பொருள், நோக்கம் பற்றிய புதுமையான கண் ணோட்டம், புதிய சிந்தனை ஆகியவற்றின் சிறந்த தோற்றங்களை வெளிப்படுத்துவதாகவும் உள்ளடக்கியதாகவும் நம் காலத்துக் கலைகள் உள்ளன. விசாரியோன் பெலின்ஸ்கி

★ கலை பற்றிய கேள்வியிலிருந்து ஒழுக்கநெறி பற்றிய கேள்வியை இனியும் பிரித்துக் காண இயலாது, அதனைவிட நெருப்பி லிருந்து ஒளியையும், வெப்பத்தையும், அழுத்தத்தின் தீவிரத்தைப் பிரித்து விடலாம். விசாரியோன் பெலின்ஸ்கி

★ கலை என்பது கற்பனைகளில் விளையும் சிந்தனையாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ சிந்தனையற்ற கலையென்பது உள்ளுயிரற்ற மனிதனைப் போன்றது. சிந்தனையும் கருத்தும் ஒரு கலைப் படைப்பின் வாழும் உள்ளுயிராயும் உண்மையான பொருளடக்கமும் ஆகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ உண்மையான கலைஞனுக்கு, எங்குக் கவிதை உள்ளதோ அங்கு வாழ்க்கை இருக்கும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ கலையென்பது உண்மையை வெளிப்படுத்துவதாகும். உண்மைத் தன்மையென்பது ஒரே மகத்தான உண்மையாகும். அதற்கு வெளியே உள்ள அனைத்தும், அதாவது, விளக்கமளிக்கும் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்ட அனைத்து உண்மைத் தன்மைகளும் ஒரு பொய் யாகவும், உண்மை பற்றிய ஒரு வீண் பழியுமாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு கலைஞனின் புதுமையில் ஒரு பெரிய திறமை உள்ளது.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ மனிதனுக்குக் கலையென்பது உண்பது, அருந்துவது போன்று இன்றியமையாததாகும்.
பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ உண்மையான கலையென்பது இன்றுவரையிலானவற்றைப் பெற்றதாகவும், இன்றியமையாததாகவும், பயன் நிறைந்த த்ாகவும் இருப்பதாகும்; அதுவே அதன் சிறப்புத் தன்மையாக உண்மையிலேயே இருப்பதாகும்.
பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ கலையென்பது மக்களை நல்லவர்களாக்கி, மனித உள்ளுயிரை வடிவமைக்கிறது.
கான்ஸ்டான்டின் பவ்ஸ்டோவ்ஸ்கி

★ மனிதனின் பார்வைக்குக் குறைந்தது ஒரு துளி அளவேயான உள் நோக்கையேனும் சேர்க்காதவன் எழுத்தாளனே அல்லன்.
கான்ஸ்டான்டின் பவ்ஸ்டோவ்ஸ்கி

★ புத்தகங்கள் மனிதர்களைச் சிறந்தவர்களாக்குகின்றன. கலையின் இன்றியமையாதவற்றில் ஒன்றான, சிறப்பானதுமான, ஒரே நோக்கம் அதுவேயாகும். இவான் கொஞ்சரேவ்

★ கலைகள் என்பவை தகவல் தொடர்புக் கருவிகளில் ஒன்றாகும். இலியோ தோல்சுதாய்

★ கலையென்பது மனித வலிமையின் மாபெரும் வெளிப்பாடாகும். இலியோ தோல்சுதாய்

★ கலை, அறிவியலைப் போலவே, வாழ்வின் அறிவாகும். இலியோ தோல்சுதாய்

★ அழகு நிறைந்தது அறிவற்றதாக இருக்க இயலும் என்று சிந்திப்பதே ஒரு மாபெரும் தவறாகும். இலியோ தோல்சுதாய்

★ ஒரு கலைப் படைப்பு என்பது மனித வாழ்வின் அன்றாட நிகழ்வுகளில் ஒரு புதிய உணர்வை உட்புகுத்தாதவரை, கலைப் படைப்பாக இருப்பதில்லை. இலியோ தோல்சுதாய்

★ ஓர் உண்மையான கலைப் படைப்பின் அடித்தளத்தில், முற்றிலும் புதியதானதொரு சிந்தனையோ ஒரு புதிய உணர்வோ இருக்க வேண்டும், ஆனால் அது உண்மையான அடிமை போன்று மிகச் சரியாக நுண்ணிய அன்றாட விளக்கங்கள் வரை வெளிப்படுத்த வேண்டும். இலியோ தோல்சுதாய்

★ கலையெுன்பது இயற்கை மனிதனுடன் இணைந்ததாகும். கே.ஏ.திமிரியாசேவ்

★ கலையின் அனைத்துப் பணிகளுக்கும் தவிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளப்படும் கலையின் முதன்மையான நோக்கம் என்பது இயற்கையையும், வாழ்க்கையையும் மறுபடியும் உருவாக்குவது என்பதேயாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ கலையின் அடிப்படையிலான இன்றியமையாமை என்பது, மனிதனுக்கு ஆர்வம் அளிக்கும் அனைத்தையும் மறுபடியும் உரு வாக்குவது என்பதேயாகும். அடிக்கடி, குறிப்பாகக் கவிதையில், வாழ்வினையும் அதன் உண்மைத் தன்மை பற்றிய மதிப்பினை யும் விரிவாக எடுத்துக் கூறுவது என்பதும் முன்னணியில் இருப்பதாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ அந்தக் காலத்தின் கட்டாயத் தேவைகளுக்கு மதிப்பளிக்கும் இன்றி யமையாத, வலிமையான கருத்துகளின் செல்வாக்கின் அடிப் படையில் வடிவமைக்கப்பட்ட இலக்கிய ஆற்றல்களினால் மட்டுமே ஒளிமயமான நிலைக்கு உயர இயலும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ இலக்கியம் எப்போதுமே நாடுகளின் முன்னேற்றத்தின் மீது ஒரு செல்வாக்கைப் பயன்படுத்துகின்றன என்பதுடன் வரலாற்றுப் பயணத்தில் அதிக அல்லது குறைந்த அளவில் இன்றியமை யாத ஒரு பகுதியாகச் செயலாற்றவும் செய்கிறது.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ கவிதையும் கலையும் வெளிப்பாடு பற்றி மட்டுமல்லாமல் பட்டறி வாற்றலின் ஒரு தனிப்பட்ட வடிவமாக இருப்பவையாகும்.

ஜானிஸ் ரெய்ன்ஸ்

★ கவிதையும், கலைகளும் அறிவியலையும் போலவே, பொதுவாக வாழ்க்கைக்கேற்றபடி இயற்றப்பட்டதாகும்; ஆனால் வாழ்க்கை யோ கவிதைக்கேற்றபடி இருப்பதில்லை. வாழ்க்கைக்கு மாறுபட்ட தாக, கவிதையில் உள்ள அனைத்துமே, அதாவது, அது வாழ்க்கை யிலிருந்து நேரடியாகவும் இயல்பாகவும் வழிவதாக இல்லாமல் இருப்பின், அது பொருளற்றதும் அழகற்றதுமே ஆகும்.

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ ஒரு காலத்தின் அல்லது மக்களின் எதிர்பார்ப்புகளை எந்த அளவுக்கு ஓர் எழுத்தாளரோ ஒரு கலைப்படைப்போ வெளிப்படுத்துகிறது என்பதே அவர்களின் திறமையனை அளவிடுவதாகும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ இலக்கியத்தின் மதிப்பு அது எதனை எவ்வாறு பரப்புகிறது என்பதைப் பொறுத்ததாகவுள்ளபோது, அது ஒரு பணியாளனாக இருப்பதாகும்; அதனுடைய இன்றியமையாத தன்மை என்பது கருத்துகள் பற்றி அது மேற்கொள்ளும் பரப்புதலில் உள்ளதாகும். நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ குறிக்கோள் என்பதே கலையின் நோக்கமாகும்.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ கலையென்பது வாழ்விலும், மனித ஆற்றல்களிலும் நம்பிக்கை ஊட்டுவதாக இருக்க வேண்டும். அலெக்சாண்டர் எர்சன்

★ மனிதன் தன்னைப் புரிந்து கொள்ளவும், தன்னுள்ளே உள்ள தன்னம்பிக்கையினை உறுதிப்படுத்திக் கொள்ளவும், உண்மைக்கான ஏக்கத்தைப் பாதுகாத்து வளர்க்கவும், மக்களிடையே உள்ள கேடுகளுடன் போரிடவும், அவற்றில் உள்ள நல்லனவற்றைக் கண்டறியவும், அவர்களின் உள்ளுயிரில் உள்ள வெட்கம், சீற்றம், வீரம் ஆகியவற்றைத் தட்டியெழுப்பவும், மக்களைப் பெருமைப் படும்படி வலிமையுடையவர்களாக ஆக்கவும் மனிதனுக்கு உதவுதல் என்பதே இலக்கியத்தின் நோக்கமாகும்.
மாக்சிம் கோர்கி

★ கலை என்பது மக்களைப் பெருமை மிக்கவர்களாக ஆக்க வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ அறிந்தோ, அறியாமலோ அனைத்துக் கலைகளும் மக்களின் உணர்வுகளை எழுப்புவது, வாழ்க்கையின் ஒரு குறிப்பிடப்பட்ட சூழ்நிலையின் மீது ஒருவகையாகவோ மற்றொருவகையாகவோ மனப்பான்மையை உண்டாக்கி வளர்ப்பது என்ற நோக்கத்தை தாங்களாகவே படைத்துக் கொள்கின்றன. மாக்சிம் கோர்கி

★ நமது கலை உண்மை நிலையைவிட மேம்பட்டதாக உயர வேண்டும்; அது மனிதனை உண்மை நிலையிலிருந்து பிரித்து விடாமல் அவனை அதற்கு மேலே உயர்த்தவேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ உருசிய இலக்கியம் மிகுந்த வலிமை கொண்ட மக்களாட்சியை வலியுறுத்துவதாகும்; சமூக அமைப்பின் பாடுகளைத் தீர்க்கும் தணியாத விருப்பத்தில், மனித நேயத்தை வேண்டும் அதன் கோரிக்கையில், எளிய மக்களின் வாழ்வில் கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறையில், பெண்களைத் தூய்மையுடையவர்களாக நடத்துவதில், அனைத்துலக, அனைத்தையும் ஒளிரச் செய்யும் உண்மைக்கான தேடுதலைத் தொடர்வதில் அது வலிமை மிக்கதாக உள்ளது.

மாக்சிம் கோர்கி

★ இலக்கியம் என்பது சமூகப்பிரிவுகளின், குழுக்களின் கோட்பாடுகள், உணர்வுகள், கருத்துகள், நோக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை, கற்பனையுடன் வெளிப்படுத்துவதாகும்.

மாக்சிம் கோர்கி

★ ஓர் எளிமையான பொதுவான உண்மையை எடுத்துக் கொண்டு, அதன் ஆழ்ந்த இன்றியமையாத சமூகத் தன்மையையும், வாழ்க்கையின் அடிப்படைகள், அதன் பொதுவான சூழ்நிலைகளை அதிகமாகச் சார்ந்திருப்பதையும் எடுத்துக் காட்டுவதிலிருந்து உண்மையான கலையின் ஆற்றல் பெறப்படுகின்றது.

மாக்சிம் கோர்கி

★ கலை, உண்மையான நடைமுறை ஆகியவற்றினிடையே யான நெருங்கிய தொடர்பு, அந்தக் காலத்தின் வாழ்க்கையில் இலக்கியத்தின் செயல்பாடு நிறைந்த ஈடுபாடு ஆகியவை தற்போது ஒரு முதன்மையான தேவையாக ஆகிவிட்டது.

மாக்சிம் கோர்கி

★ கலையென்பது ஒழுக்க நெறியுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதாகும்.

அலெக்சாண்டர் ப்ளோக்

★ இலக்கியமென்பது அன்றாட உணவு போன்றதாக இருக்க வேண்டும்.

அலெக்சாண்டர் ப்ளோக்

★ அந்தந்தக் காலங்களின் ஓட்டத்தினுடன் நடைபோட உன்னால் இயலாவிட்டால், உன்னால் எழுதவும் இயலாது.

அலெக்சாண்டர் ப்ளோக்

★ கலைஞனின் இன்றியமையாத கடமை என்பது எடுத்துக்காட்டுவதே தவிர, மெய்ப்பிப்பதன்று. அலெக்சாண்டர் ப்ளோக்

★ தீவிர வகைக் கலை மக்களை உயர்த்துவதுடன், அவர்கள் உயர்ந்து நிற்கவும், தங்கள் உணர்வுகளை உறுதியாகக் கைக் கொண்டிருக்கவும் உதவ வேண்டும். இவான் கரம்சோகி

★ இலக்கியத்துடைய கீழான காட்டுகளால் எங்குமே அது மதிப்பிடப்படுவதில்லை, ஆனால் சமூகம் முன்னேறிச் செல்ல உண்மையாக வழி நடத்தும் அவற்றின் படைப்பாளர்களின் தகுதிகளின் அடிப்படையிலேயே மதிப்பிடப்படுகின்றன.

எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ இலக்கியம் என்பதும் பரவுகை என்பதும் ஒரே செய்தியைப் பற்றிய ஒன்றேயன்றி வெவ்வேறானவையில்லை.

எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ இலக்கியம் வாழ்வைக் காட்டும் ஆடியென நாம் சொன்னால், அது ஒரு வியப்பான, தந்திரமான ஆடி என்பதையும் நாம் சேர்க்க வேண்டும். அது வாழ்வைக் காட்டுவது மட்டுமின்றி, அதனுடைய ஒளியாலும், செழுமையாலும் வாழ்வை வளப்படுத்துவதுடன், அதற்கு ஓர் உயர்வான, பெருமை மிகுந்த அடையாளத்தையும் அளிக்கிறது. கோவான்னஸ் டெனமனியான்

★ இலக்கியமென்பது வரலாற்றுப் போராட்டத்தைக் காட்டும் ஆடியாக மட்டும் இருப்பதன்று; ஆனால் அந்தப் போராட்டத்திற்கான ஒரு படையாகவும் இருப்பதாகும் அது.

விளாடிமிர் மாயாகோவிஸ்கி

★ வாழ்வதற்காகச் சொல் நமக்குத் தேவை. பயனற்ற கலைகளை ஏற்க நாம் மறுக்கிறோம். விளாடிமிர் மாயாகோவிஸ்கி

★ வாழ்வின் பொருளையும், விலையையும் புரிந்து கொள்ள மக்களுக்கு உதவுவதே திறமையின் மகத்தான பணியாகும்.

வி.ஏ. குளுசேவ்ஸ்கி

★ வாழ்வில் உள்ள புதுமையைக் கண்டு கொள்ள இயன்றவராக இருந்து, திறமைகளைப் பெற்றிருந்து, இப் புதுமைகளைத் தங்கள் பணிகளில் பொறிக்க இயன்றவர்கள் மட்டுமே கலையில் ஒரு புதிய சொல்லை ஒலிக்க விதிக்கப்பட்டவர்களாவர்.

திமிட்ரி கோபலேவ்ஸ்கி

★ புதுமையென்பது நமது படைப்பு முயற்சிகளின் மையத்தில் இருப்பதாகும். திமிட்ரி கோபலேவ்ஸ்கி

★ கலை நினைவாற்றலின் பணியை ஆற்றுகிறது, காலமெனும் ஓடையின் தொடக்கத்திலிருந்து, மிகத் தெளிவாகவும், உணர்ச்சியைக் கிளர்ச்சியை ஊட்டுவதாகவும், குறிப்பிடத் தகுந்ததாகவும் இருப்பவற்றை அது தேர்ந்தெடுத்துப், புத்தகங்கள் என்னும் பளிங்கில் தீட்டுகிறது. ஏ.என்.தோல்சுதாய்

★ மிகுந்த உணர்ச்சியன்றி, இடர்பாட்டை எதிர்கொள்ளும் துணிவின்றி, சோர்வளிக்கும்படியாக, அதனைவிட இழிவாக, வாழ்வென்று நாம் அமைக்கும் சட்டி கொதித்துக் கொண்டிருக்கும் போது, நிகழ்வுகளின் விளிம்பிற்கு வெளியே தங்களது மூக்கினை வைத்திருப்பது போன்று எழுதுவதைத் தேர்ந்தெடுக்கும் எழுத்தாளர்களைப் புகழ் பெற்றவர்களையும்கூட, நாம் பெற்றிருப்பது வியப்பிற்குரியதே. ஏ.என்.தோல்சுதாய்

★ சுருங்கக் கூறின், கலையென்பது ஒரு செயல் இயக்கமாகும்; மேலானவற்றிற்கான, தற்போதுள்ளவற்றைவிட மேலானவற்றுற்கான ஓர் ஏக்கத்தில் அது தொடங்குவதாகும். எம்.எம்.பிரிஷ்வின்

★ அந்தந்தக் காலங்கள் பற்றிய உணர்வுகளைப் பெற்றிராத ஒரு கலைஞன் ஏற்றுக் கொள்ளப்படாதவனாகவே தொடர்ந்து இருப்பான். எம்.எம்.பிரிஷ்வின்

★ கலைஞன் நிலைத் தன்மையை உணர வேண்டும்; ஆனாலும் அந்தந்தக் காலங்களுடன் இணைந்து நடக்கவும் வேண்டும்.

எம்.எம்.பிரிஷ்வின்

★ கலைக்காகவே கலையென்ற எதுவும் இருப்பதில்லை; கலை யென்பது வாழ்க்கைக்காக இருப்பதேயாகும்.

திமிட்ரி பர்மனோவ்

★ கலையென்பது மக்களுடன் உரையாடுவதற்கான ஒரு கருவியே யன்றி, அது ஒரு நோக்கமாக இருப்பதன்று.

எம்.பி.முசோர்க்ஸ்லி

★ 'கலை கலைக்காகவே' என்பது தங்களது மூளையைப் பயன் படுத்தாத மக்களுக்கும், ஒரு தொழிலையும் கற்றுக் கொள்ளாமல், முட்டாள்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் இருப்பவர்களுக்கு மானதாகும். அவ்வாறு கூறுவது முட்டாள்தனமானதும், அறிவற்ற துமாகும். பி.பி.சிட்ஸ்யாகோவ்

★ கலைஞர்களின் சமூகச் சூழ்நிலைகளிலிருந்து அவர்கள் பிரித்தறி யப்படும் இடங்களிலெல்லாம் கலை கலைக்காகவே என்பது பற்றிய ஈர்ப்பு விளைகிறது. ஜி.வி.பிளக்னோவ்

★ ஓர் எழுத்தாளன் வாழ்க்கை மற்றும் போராட்டத்திலிருந்து விலகி தனியே நிற்கக் கூடாது. நிகலாய் ஒல்ட்ரோல்ஸ்கி

★ வாழ்வின் இயக்கத்திலிருந்து ஓர் எழுத்தாளன் விலகிச் செல்வா னேயானால், மக்கள் அவனைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

மைக்கேல் கிளிங்கா

★ கலைஞன் என்பவன் சமூக வாழ்க்கையிலிருந்து தன்னைத் தானே தொடர்பறச் செய்து கொள்ள இயலாது. என்.பி. ஒகரேவ்

★ உண்மையான உணர்வுகளுக்கும் சிந்தனைகளுக்கும் மதிப்பளிப் பதே கலையெனப்படுவது, அது இன்றி ஒருவன் செல்ல இயன்ற இனிதான ஒரு பாலையல்ல அது. வி.வி.ஸ்டாசோவ்

★ புதுமையென்பது கலையில் கடினம் மிகுந்ததும் அழகு நிறைந்தது மாகும். வி.வி.ஸ்டாசோவ்

★ ஒவ்வொரு கலைப் பணியும் அந்தந்தக் காலங்களின் அடையாளத்தைத் தவறாமல் பெற்றிருக்க வேண்டும்.

**பியோடர் செய்கோவ்ஸ்கி**

★ புதுமையென்ற ஓர் உணர்வற்ற கலையென்ற ஒன்று இருப்பது இல்லை.

**செர்ஜி கோனென்கோ**

★ கலைஞன் அவனது காலத்தைய கருத்துகளுடன் இணைந்து நடை பயில்பவனாக இருக்க வேண்டும்.

**அலெக்சாண்டர் இவனோவ்**

★ அவனது காலத்து உணர்வுகளுக்குப் பணியத் தவறுபவனாக இருக்க எந்தக் கலைஞனாலும் இயலாது.

**அலெக்சாண்டர் செரோவ்**

★ புதுமையானவை அனைத்தும் நிலைத்து நிற்பவையல்ல; ஆனால் நிலைத்து நிற்பவை அனைத்தும் எப்போதுமே புதுமையாக இருப்பவை.

**யெப்கெனி வக்டான்கோ**

★ பழமையான மதிப்பீடுகளைப் பாதுகாத்துப் புதியவற்றை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் நாடான நம் நாட்டைப் பாராட்டிப் புகழ்வதே, இலக்கிய வரலாற்றாசிரியப் பணியில், வரலாற்றுப் புதின எழுத்தாளர்களின் முதன்மைப் பணியாகும்.

**யூரி டினியானோவ்**

★ எந்தத் தனி மனிதனாலும், அவன் எழுத்தாளனாயினும், பாடல், இசை இயற்றுபவராயினும், அறிவியலாளனாயினும், பண்பாட்டுப் பணியாளனாயினும் சரி, சமூகத்திலிருந்தும், வாழ்விலிருந்தும் தன்னைப் பிரித்துத் தனிமைப்படுத்திக் கொள்ள இயலாது. கருத்துகள், மகிழ்ச்சிகள், தூண்டுதல்கள், பட்டறிவு ஆகியவையின்றி எந்தப் படைப்பும் இருக்க இயலாது.

**திமிட்ரி சோஸ்டாகோவிச்**

★ ★ ★

# நிறைமனம், தகுதியுடைமை இடையேயான ஒத்திசைவு

★ சிந்தனை சொல் ஆகியவற்றின் ஒத்திசைவு என்பது மிகவும் இன்றியமையாததும், அடிக்கடி வாழ்வின் திருப்புமுனையாவதும் ஆகும். சில நேரங்களில் ஓர் இழிவாகச் சிறிய சிந்தனை ஒளிவீசும் உடைகளில் மறைக்கப்பட்டுள்ளது. அதனின் சிறுமையான பயனற்ற மடிப்புகளில் சிக்கிக் கொண்டு, திரும்ப எடுக்க இயலாதபடி ஆகிவிடுகிறது. சில நேரங்களில் ஓர் அசலான, ஆழ்ந்த சிந்தனை வெளிப்படுத்தப்பட்டாலும், அது ஒரு மலரைப் போல வாடி உதிர்ந்து, ஒரு வலுவான கால்களினால் நசுக்கப்பட்டு விடுகிறது.

வி.ஏ. குளூசேவ்ஸ்கி

★ ஒருவர் என்ன எழுதுகிறார் என்பதை அவர் புரிந்து கொள்ளாமல் இருக்கும்போது மட்டுமே, அவர் விரிவாக எழுதுகிறார்.

வி.ஏ. குளூசேவ்ஸ்கி

★ வடிவம் என்பது அழகானது. அதாவது, ஒரு சமன்படுத்தப்பட்ட முழுமையாகத் தொடுக்கப்பட்ட பகுதிகளின் ஒத்திசைவாகும் அது.

மைக்கேல் கிளிங்கா

★ ஓர் ஆழ்ந்த சிந்தனை என்பது நிறைவு செய்யப்பட்ட வடிவில் சுற்றப்படும்போது கவர்வதாக இருக்கிறது. அதனுடைய வடிவத்தின் மூலம் அது மாபெரும் இன்றியமையாத தன்மையைப் பெறுகிறது. உயர்ந்த நோக்கங்களின் மீது கீழான வழிகளில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அருவருக்கத்தக்கவை.

இலியா ரெபின்

★ பேரறிவு படைத்திருந்தபோதும், முழுமையான தூய வடிவை அடைய ஒருவர் மிகக் கடினமாகப் பணியாற்ற வேண்டும். கடின வேலையின் மீது இவ்வாறு மேற்கொள்ளப்படும் தன்னடக்கமுள்ள ஈடுபாடு பேரறிவிற்கான அடித்தளமாகும்.

இலியா ரெபின்

★ ஒரு பெரிய ஆழ்ந்த சிந்தனையை ஆதரிப்பதாக உள்ள போதும், உணர்வுகளின் மீதான பாதிப்பைத் தூண்டுவதாகவும், நேரடியாகத் தெரிவிக்கப்படுவதாகவும் உள்ள உருவில் படைப்பத் தனது செய்தியை வெளிப்படுத்தாவிட்டால், அது ஒரு கலைப்படைப்பாக இருப்பதில்லை. ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ தகுதி படைத்த ஒவ்வோர் உண்மையான ஆசானும் சந்திக்கும் அறை கூவல் என்னவென்றால், தனது எழுத்தில் உள்ளவற்றை மிகவும் நிறைவளிக்கும் வண்ணமும், தாக்கம் ஏற்படுத்துமாறும், எளிய முறையில் வெளிப்படுத்துவது என்பதேயாகும்.
ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ ஒருவரிடம் தகுதியுள்ள பொருள் ஒன்று இல்லாதபோது, அவர் வடிவத்திற்காகப் பணியாற்றத் தொடங்குகிறார்.
ஏ.வி. லூனாசார்ஸ்கி

★ மிகப் பெரிய கலைப்படைப்புகள் அவற்றின் உடனடியான ஆற்றலுக்காக அதிகமாக மதிக்கப்படுவதில்லை, ஆனால் இந்த ஆற்றல் வெளிப்படுத்தப்படும் தூய வடிவிற்காகவே அதிகமாக மதிக்கப் படுகிறது. பியோடர் சைகோவ்ஸ்கி

★ ஒரு தகுதிபடைத்த கருத்திற்கு உருவம் அளிக்கும் ஒரு கலைப் படைப்பு, அதனுடைய வடிவம் அந்தக் கருத்துடன் முற்றிலும் ஒத்ததாக உள்ளபோது மட்டுமே, கலை வடிவம் பெறுகிறது.
நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ முதன்மைத் தன்மை மீது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கவனமான முயற்சியும் மலிவான பகட்டு நிறைந்த விளைவுகளையே அளிக்கிறது. நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ நன்றாக எழுதுவது என்பதற்கு, விலக்க இயலாத தவிர்க்க இயலாத பொருத்தமான சொற்கள் தேவைப்படுகின்றன; அது தேவையான குறைந்த சொற்களையே விரும்புகிறது. நல்ல

எழுத்து என்பது பொருட்செறிவுள்ள சுருங்க உரைப்பது என்பதேயாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ வடிவத்தின் முடமான, முன்னேற்றம் செய்யப்படாத பண்பு, இயலாத பொருளின் முன்னேற்றத்தினை நோக்கி அடியெடுத்து வைக்க எந்த வகைத் தீவிர முயற்சியும் மேற்கொள்வதில்லை, அது வெட்கம் நிறைந்த ஒரு தேக்கத்தை உண்டாக்கி, ஆற்றல் வீணாவதற்கான வழி வகுத்து, சொல்லிற்கும் செயலுக்குமிடையே ஒரு வேறுபாட்டை உருவாக்குகிறது. வி.இ. இலெனின்

★ படிப்பவரையும், ஆசிரியரையும் இருவரையும் தவறாகச் செலுத்தும் ஏமாற்றுதல், அலங்காரம் இன்றி எழுதுங்கள்.
வி.இ. இலெனின்

★ படைப்பு முயற்சி என்பது ஒரு ஆழ்ந்த உணர்ச்சி. ஆனால் வடிவம் என்பதில் அது அழிந்து போகிறது. எம்.எம். பிரிஷ்வின்

★ மரபு முறையென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கேடாகும், ஆனால் வடிவம் என்பது நற்தன்மை கொண்டது. அடிக்கடி, அறிந்தோ, இல்லாமலோ நமது எழுத்தாளர்களில் பலர் மரபு முறைக்கெதிராக போரிடுதல் என்ற சாக்கில் வடிவத்தை துடைத்தெறிந்துவிடுகின்றனர். எம்.எம். பிரிஷ்வின்

★ செய்திகளை ஓர் எளிய முறையில் வரிசைப்படுத்துவதும், ஒழுங்கு முறையைப் பதிய வைப்பதும் ஒத்திசைவினை அளிப்பதுடன், அதன் விளைவாக ஏற்படும் வடிவம் நிறைவளிக்கிறது.
எம்.எம். பிரிஷ்வின்

★ மரபுமுறை உள்ளவிடத்தில் வழிமுறைகளே நோக்கங்களென நடை போடச் செய்யப்படுகின்றன. இவை கலையில் மட்டும் இருப்பதல்ல. ஆனால் மற்ற எல்லா இடங்களிலும், இலக்கிய ஆர்வம் கொண்டவர், ஒரு தோண்டும் கருவியை, அது எவருக்காகப் பணியாற்றுகிறது என்று கூறாமல் கருவியை விளக்குமிடத்திலும் அது உள்ளது. எம்.எம். பிரிஷ்வின்

★ எவ்வளவு மக்களுக்கு இயலுமோ அவ்வளவு பேருக்கும் தெளிவானதாகவும், உரக்க ஒலிப்பதாகவும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் நமது சொல் இருக்க வேண்டும்.

எம்.எம். பிரிஷ்வின்

★ அறிவியலும் கலையும் உண்மை நிலையென்னும் தங்கத்தைக் கழுவிவிட்டு, அதனை அறிவுக் கூர்மையுடைய வடிவங்களாக அடித்து மாற்றிவிட்டன. விசாரியோன் பெலின்ஸ்கி

★ அழகு என்பது கலைக்குப் பொதுவிதியாகும் என்பதும், அழகின்றி எந்தக் கலையும் இல்லை என்பதும் ஒரு பழமொழியாக உள்ளது.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ கலையில் எதுவுமே தெளிவற்ற குழப்பமானதாகவும், அறிவுக் கூர்மையற்றதாகவும் இருக்கக் கூடாது.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ வடிவம் என்பது பொருளடக்கத்தைப் பற்றி ஒரு வெளிப்பாடாக இருக்கும்போது, பொருளடக்கத்தை வடிவத்திலிருந்து பிரிப்பது பொருளடக்கத்தை அழிப்பது என்பது போல அவை ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கியபடி தொடர்புபடுத்தப்பட்டுள்ளன, அதே போன்று பொருளடக்கத்தை வடிவத்திலிருந்து பிரிப்பது வடிவத்தை அழிப்பதாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ வடிவங்களைப் போற்றி, உள்ளடக்கத்தைப்பற்றி அக்கறையற்ற எழுத்தாளர்களின் கலைப் படைப்புகளும்கூட சில கருத்துகளை வெளிப்படுத்துவதாகவே கட்டாயம் இருக்க வேண்டும்.

ஜி.வி.பிளக்கனேவ்

★ அழகு என்பது வடிவு என்பதை உள்ளடக்கத்துடன் தொடர்பு படுத்துவதாகும். ஜி.வி.பிளக்கனேவ்

★ கலையில் உள்ள உண்மையான அழகு நிறைந்தவை மீது காலம் என்பது எந்த ஆற்றலையும் பெற்றிருக்கவில்லை.

அலெக்சாண்டர் செரேவ்

★ தொழில் நுணுக்கம் என்பது ஒரு கருவியே, அது ஒரு நோக்க மாகப் பயன்படுத்தப்படும்போது, அது ஒரு மிகுந்த இழிவான செப்பிடு வித்தை என்ற எளிய நிலைக்குக் குறைக்கப்பட்டுவிடு கிறது. அலெக்சாண்டர் செரேவ்

★ ஒவ்வோர் இலக்கியப் படைப்பிலும் மூன்று மூலக் கூறுகளை நாம் வேறுபடுத்திக் காணவேண்டும். மிகவும் இன்றியமையாதது உள்ளடக்கமாகும். பின்னர் தான் எடுத்துக் கொண்ட பொருளின் பால் ஆசிரியரின் ஈடுபாடு. இறுதியாக வருவது தொழில்நுட்பம். உள்ளடக்கம், ஈடுபாடு ஆகியவற்றின் ஒத்திசைவு அந்தப் படைப்புக்கு முழுமைத் தன்மையை அளிக்கிறது. ஆனால் மூன்றாவது மூலக் கூறான தொழில்நுட்பம் வழக்கமாகத் தனக்குத் தானே முயன்று ஒரு குறிப்பிட்ட முழுமையை அடைகிறது.
இலியோ தோல்சுதாய்

★ வியப்பானதாக அது தோன்றினாலும், அறிவியலைவிட அதிகப் படியான துல்லியம் கலைக்குத் தேவைப்படுகிறது.
இலியோ தோல்சுதாய்

★ சுருக்கமாயிருத்தல், படிக்க இயன்றதாயிருத்தல் என்பவை மக்களால் ஆவலுடன் படிப்பதற்கான ஏதோ ஒன்றிற்கான ஒரு தேவையான கட்டளையாக உண்மையில் இருப்பதில்லை. நான் காணும் வரை, முட்டாள்தனமான, பொருத்தமற்ற குப்பையான வற்றுக்கு எதிராகத் தடை ஏற்படுத்துவதற்கானவையாகும் அவை. இலியோ தோல்சுதாய்

★ கலையில் உள்ள இன்றியமையாத ஒன்று என்னவெனில், தேவைக்கு அதிகமாகச் சொல்லாமல் இருப்பது என்பதுதான்.
இலியோ தோல்சுதாய்

★ தவறான குறிப்புகளும், அளவைப் பற்றிய ஓர் அறிவு அற்றிருப் பதும் ஒரு கலைப் படைப்புக்கு அச்சந்தரும், தீங்கு நிறைந்தவை யாகும். இலியோ டால்ஸ்டாய்

★ சொல்லுக்கும், ஒலிக்கும், வண்ணத்துக்கும் வடிவமும் பண்பும் அளிக்கும் கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர், தனது கற்பனை ஆற்றல்களுக்கும் மெய்யியல் ஆற்றல்களுக்கிடையேயும், உள்ளுணர்விற்கும் பகுத்தறிவுக்கிடையேயும் சமன்பாட்டை உருவாக்க முயல வேண்டும். மாக்சிம் கோர்கி

★ அனைத்துக்கும் மேலாக, கலையினுடைய இன்றியமையாத் தன்மை மிகப் பெரியதானதினால், மையப் பொருளிலிருந்து விலகிச் செல்ல அனுமதிக்காமலிருக்க, கலையென்பது தெளிவாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும். மாக்சிம் கோர்கி

★ என்னைப் பொறுத்தவரை, வடிவமும் உள்ளடக்கமும் ஒன்றே. ஒன்றில்லாமல் மற்றொன்று என்னவாயிருக்கும் என்பதை எப்போதும் நான் அறிந்திருக்கவில்லை. துல்லியமான சிந்தனையென்பது, துல்லியமான வெளிப்பாட்டைக் கட்டுபடுத்துகிறது; உண்மையில் அதுவே துல்லியமான வெளிப்பாடாகும்.
மாக்சிம் கோர்கி

★ ஒட்டுண்ணியை அழிப்பது போல், நீ தேவையற்ற சொற்களையும் முற்றிலும் அழித்துவிடு. மாக்சிம் கோர்கி

★ துப்பாக்கி என்பது படைவீரனுக்கான கருவி போல், மொழியென்பது எழுத்தாளனின் படையாகும்; படை சிறந்ததாக இருக்கும் போது, போராளியும் வலிமை மிக்கவனாக இருப்பான்.
மாக்சிம் கோர்கி

★ கலைநயம் மிக்கதென்ற பட்டத்தை ஓர் இலக்கிய படைப்புக்காகப் பெற, அதற்கு அறிவார்ந்த இலக்கிய வடிவம் அளிக்கப்பட வேண்டும். ஒரு கதை அல்லது புதினம் எளிய, துல்லியமான, தெளிவான, சுருக்கமான மொழி மூலமே இந்த வடிவத்தை அடைகிறது.
மாக்சிம் கோர்கி

★ மனிதன் இறந்தாலும், அவனது சிந்தனைகள் தொடர்ந்து வாழ்கின்றன. கருத்துகளின் இந்த நீண்ட வாழ்க்கை, மக்கள்

தங்களது தெளிவற்ற உணர்ச்சிகளைச் சொற்களிலும் சிந்தனை களிலும் வடிக்கும் போது, தங்களை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள மக்களை ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும். மாக்சிம் கோர்கி

★ எழுத்தாளனைப் பொறுத்தவரை, வடிவம் என்பது உள்ளடக்கத் திலிருந்து பிரிக்க இயலாதபடி அதனுடன் தொடர்புபடுத்தப்பட்ட துடன், அதனால் புரிந்து கொள்ளவும் முடிந்தது. இவான் புனின்

★ தொழில்நுட்பப்படி மெருகேற்றுதல் என்னும் படைப்பு முடிப்ப தென்பது எப்போதுமே அதனுள்ளேயே உள்ள மதிப்பாகக் காணப் படுவதில்லை. என்றாலும் இந்த மெருகேற்றி முடிப்பது என்பது கவிதையைப் படித்து இன்புறுவதற்கான தகுதி படைத்ததாக்கு கிறது. விளாடிமிர் மாயாகோவஸ்கி

★ நமது சொற்களை நாம் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வோர் இயக்கத்தையும் தெளிவாகவும் சுருக்கமாகவும் எடுத்துக் காட்டும் பேச்சை நாம் கோர வேண்டும். அதனால் சொற்கள் இப்போது ஒரு குண்டினைப் போல் வெடிக்க வேண்டும், ஒரு புண்ணைப் போன்ற வலியையும் அளித்து, வெற்றி பெற்ற ஒரு பெருங்கூச்சலைப் போன்று தற்போது எதிரொலிக்கவும் வேண்டும். விளாடிமிர் மாயாகோவஸ்கி

★ கலைத் திறன் பற்றிய கோட்பாடு என்பது வடிவத்தின் எல்லைக் கும் உள்ளடக்கம் என்ற எல்லைக்கும் சம அளவில் ஈடுபடுத்தப் படுகிறது. திமிட்ரி கோபலேவ்ஸ்கி

★ எந்த ஒரு கலையையும் போலவே, துன்பத்தையேற்றுப் படைப் பதும், விடாமுயற்சியும் இலக்கியத்திற்குத் தேவைப்படுபவை யாகும். வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும், அதனுடைய தொழில் நுட்பத்தில் திறமை பெறுவது என்பது எண்ணம் தீட்டுவது அல்லது இசைப்பதை விடக் கடினம் மிகுந்ததேயாகும்.
இவான் துர்கனேவ்

★ எழுத்தாளரின் கலை, முடிவில் அவரது நடையினால் மதிப்பிடப் படுகிறது. ஏனெனில் நடையென்பது மொழியின் முதன்மையான தாகும். காண்ஸ்டாண்டின் பெடின்

★ துல்லியமாகச் சொற்களைப் பயன்படுத்துவது என்பது நல்ல நடைக்கும், சுவைக்கும் மட்டுமேயான ஒரு தேவையல்ல; ஆனால் அறிவின் தேவைகளில் அது முதன்மையானதாகும்.
காண்ஸ்டாண்டின் பெடின்

★ எழுதுவது என்பதின் கலை எழுதுவதில் அடங்கி இருப்பதில்லை, ஆனால் மட்டமாக எழுதப்பட்டவற்றை நீக்கிவிடுவதில்தான் கலை உள்ளது. ஆண்டன் செகர்வ்

★ நன்கு எழுதும் கலையென்பது தேவையற்றதை நீக்கும் கலையுமாகும். ஆண்டன் செகாவ்

★ சுருக்கம் என்பது திறமையின் உடன்பிறந்தவளாகும்.
ஆண்டன் செகாவ்

★ எழுத்தாளரின் மாபெரும் திறமையென்பது தேவையற்றதை நீக்கும், நுண்ணிய திறமைதான். பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ குழப்பமாகத் தெளிவற்று எழுதுபவர்கள் ஒன்று தங்களது அறியாமையினைத் தாங்களே விரும்பி வெளிப்படுத்திக் கொள்கின்றனர், அல்லது அதனைப் பயனற்ற முறையில் மறைத்துக் கொள்ள முயலுகின்றனர். குழப்பமாக எழுதுபவர்கள் தங்களுக்குக் குழப்பமாகக் காணப்படுபவை பற்றி எழுதுகின்றனர்.
மைக்கேல் லோமானசோவ்

★ அறிவற்றது என்பதில் இரண்டு வகை உள்ளது. ஒன்று, சொற்களுக் கேற்ற உணர்வுகளும் சிந்தனைகளும் அற்று இருப்பதனால் விளைவதாகும். மற்றொன்று அதிகப்படியான உணர்வுகளும் சிந்தனைகளும் பெற்றிருந்து அவற்றை வெளிப்படுத்தப் போதிய சொற்களற்று இருப்பதனால் விளைவதாகும். அலெக்சாண்டர் பூஷ்கின்

★ உண்மையான நற்சுவையென்பது ஒரு சொல்லையோ, சொற்றொடரையே முற்றிலும் மறுத்தொதுக்குவதில் இருப்பதில்லை; ஆனால் அளவு, தகுதி ஆகியவை பற்றிய ஓர் அறிதலிலேயே உள்ளதாகும். அலெக்சாண்டர் பூஷ்கின்

★ வெளிப்படுத்துவதற்கும், சொற்றொடர்களைக் கையாள்வதற்கும் வளமை நிறைந்துள்ள மொழியே, ஒரு திறமை வாய்ந்த எழுத்தாளருக்கு நன்மை பயப்பதாகும். அலெக்சாண்டர் பூஷ்கின்

★ ஓர் எழுத்தாளனின் எழுத்தில் பலவகைக் கூறற்று இருப்பது அவருடைய ஒரு தலைச் சார்பான கருத்தைப் பேசுவதாகவே இருந்தாலும், ஆழ்ந்த மனத்தினதாகவும் இருக்கக்கூடும்.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ துல்லியம், சுருங்கவுரைத்தல் என்பவை உரைநடைக்குத் தேவையான முதன்மையான திறமையாகும். அது மேலும் மேலும் சிந்தனைகளை விரும்புகிறது. அவையின்றி மிகுந்த வெளிப்பாடென்பது பொருளற்றதாகும். அலெக்சாண்டர் பூஷ்கின்

★ ஒவ்வொரு சிந்தனையும் எளிய தெளிவான முறையில் வெளிப்படுத்தப்பட இயலும். அலெக்சாண்டர் எர்சன்

★ இலக்கியக்கொடையென்பது, கொடையற்றவர் இழிவாக வெளிப்படுத்துவதையோ சொல்வதையோ, நன்றாக வெளிப்படுத்துவதற்கு சொல்வதற்கான ஓர் ஆற்றலாகும்.
பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ இலக்கியத் தன்மை என்பதன் அடிப்படையான கட்டளை சுருங்க உரைப்பதேயாகும். பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ இலக்கியச் சொல் சார்பு என்பது அனைத்து சொல் சார்புகளிலேயே அய்யமற்றவாறு அருவருக்கத்தக்கவையாகும்.
எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ சுருக்கமென்பது, பொதுவாக ஒரு துண்டுத் தாளில் சுருக்கமாக எழுதப்படுவது என்பதை உள்ளடக்கியதன்று. ஆனால் ஆழமற்ற சொற்கள் இல்லாதபடி சில சொற்களில் மிகுதியானவற்றைக் கூறும் பொருட்செறிவுள்ள கருத்துக் கூட்டங்களை உள்ளடக்கியதாகும்.
ஜி. ஆர்.டெர்சாவின்

★ வாழ்க்கை போலவே, இலக்கியத்திலும் ஒருவர் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டிய விதி: மக்கள் எப்போதுமே தாங்கள் அதிகமாகப் பேசிவிட்டதற்காக ஓராயிரம் முறை வருந்துகிறார்களேயன்றி, அவர்கள் எப்போதுமே தாங்கள் குறைவாகப் பேசியதற்காக வருந்துவதில்லை.
ஏ.எப். பிசெம்ஸ்கி

## மக்கள்பால் கலையின் பரிவும் குறிக்கோள் பொறுப்பும்

★ கலையும் மக்களும் ஒன்றாக இணைந்தே பயன்பெற்று உயர்வடைகின்றனர்.
மாக்சிம் கோர்கி

★ மக்களெனப்படுபவர் பொருளியலான மதிப்பீடுகளை உருவாக்கும் ஆற்றலாக இருப்பவர் மட்டுமல்லர், உள்ளுயிர் மதிப்பீடுகளுக்கான வற்றாத ஒரே ஊற்றாக இருப்பவருமாவர். காலம், அழகு, பேரறிவு ஆகியவற்றைக் கொண்ட முதல் கவிஞரும், மெய்யியல் ஆசிரியரும் அனைத்துப் பெரிய கவிதைகளை இயற்றுபவர் ஆவர். (உலகின் அனைத்து அவலங்கள், அனைத்திலும் மிக உயர்ந்ததான உலகப் பண்பாட்டு வரலாறு பற்றியது.
மாக்சிம் கோர்கி

★ நமது புத்தகங்களின் முதன்மையான கதைத் தலைவனைப் போன்ற பணியை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அதாவது, நம் நாட்டில் புதிய தளவாடங்களின் ஆற்றலைப் பின்புலமாகப் பெற்றிருக்கும் பணி நடைமுறைகளினால் அமைப்பாக உருவாக்கப்

படும் தனி மனிதன், தனது பங்களிப்பாக, அவனது பணியை எளிமையானதாக்கி, படைப்பைப் பெருக்கி, ஒரு கலையின் வடிவத்தை அதற்களிக்கிறான். பணியை ஒரு படைப்பாகக் காண நாம் கற்றுக்கொள்ள வேண்டும். மாக்சிம் கோர்கி

★ சுருங்கக் கூறின், கலையென்பது ஆதரவாகவோ, எதிர்த்தோ மேற் கொள்ளப்படும் ஒரு போராட்டமாகும். அக்கறையற்ற கலையென்று எதுவுமேயில்லை, இருக்கவும் இயலாது. ஏனெனில் மனிதர்களாகிய நாம் ஒளிப்படக் கருவி போன்றவர்களல்லோம், உண்மை நிலையைப் படம் பிடிக்க நம்மால் இயலாது. நாம் ஒன்று உண்மை நிலையை ஏற்றுக் கொள்கிறோம் அல்லது மாற்றுகிறோம் அல்லது அதனை அழித்துவிடுகிறோம்.
மாக்சிம் கோர்கி

★ மக்களால் புனிதமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு, காலங்காலமாகக் காப்பாற்றிக் கொண்டுவரப்பட்ட நாட்டுப்புறக் கலையென்பதே மிக போற்றப்பட்ட, பேரறிவுக்கு நெருக்கமான, மிக உயர்ந்த வகையான கலையாகும். மைக்கேல் கால்னின்

★ இலக்கியமென்பது மக்களின் உள்ளுணர்வும், அதன் உள்ளுயிர்ப்பும் உலகின் மலரும், கனியுமாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ இலக்கியமென்பது உலகில் மறைக்கப்பட்டுள்ள மனிதர்களின் சிந்தனை ஊற்றின் இறுதியான மேன்மையான வெளிப்பாடாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ இலக்கியமென்பது ஆற்றல் நிறைந்ததாகவும் எல்லையற்றதாகவும் முடிவற்றதாகவும் இருக்க வேண்டுமெனின், அது அனைத்து வகைகளிலும் மக்களுடையதாகவும், மக்களுக்கானதாகவும் இருக்க வேண்டும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரே நேரத்தில் அனைத்துலகிற்குமானதாக இருக்கும் இலக்கியம் மட்டுமே தேசிய இலக்கியமாகும், அனைத்துலக மனித நேயத்திற்

கான இலக்கியம் மட்டுமே, மக்களின் ஓர் இலக்கியமாகும்.
**விசாரியோன் பெலின்ஸ்கி**

★ பொது நலனுக்குப் பணியாற்றும் உரிமையைக் கலைக்கு மறுப்பதென்பது, அதனுடைய மதிப்பைக் குறைப்பதாகும், உயர்த்துவதாகாது. ஏனெனில் அதனுடைய உயிர்ப்புத் தன்மையே அதற்கு மறுக்கப்படுகிறது என்பதால். அதாவது, சிந்தனையில் அது ஆகுலமான இன்ப நுகர்ச்சியின் ஒரு பொருளாகவும், பயன்படுத்தப்படாமல் வீணாக்கப்படும் ஒரு விளையாட்டுக் கருவியாகவும் ஆகிவிடுகிறது. **விசாரியோன் பெலின்ஸ்கி**

★ மக்களது வாழ்வின் ஆணிவேரிலிருந்து வளராத கலைகள், எப்போதுமே பயனற்றதாகவும் தகுதியற்றதாகவும் இருந்த போதும், எந்த வகையிலும் ஆண்மையற்றதாக இருக்கும் என்பது மட்டும் உறுதியானதே. **வி.வி. ஸ்டாசோவ்**

★ பார்வையாளர்கள் தாங்கள் தங்கள் இல்லத்தில் இருப்பதைப் போல் உணர்ந்து, அந்தச் செயல்பாட்டின் பகுதியாகத் தாங்கள் இருப்பதாகக் கருதுமிடத்தில் மட்டுமே கலை உண்மையானதாக உள்ளது. **வி.வி. ஸ்டாசோவ்**

★ கலையென்பது மக்களால் உருவாக்கப்பட்ட குறிக்கோள்களைக் காண நம் கண்களைத் திறக்கச் செய்வதாக இருக்க வேண்டும்.
**கான்ஸ்டான்டின் ஸ்டெயின்ஸ்லேவ்ஸ்கி**

★ கலையின் மிகப் பெரிய நோக்கங்கள், அனைவரும் எட்டியடையும் தூரத்தில் அவை இருப்பதாலும், அனைவரும் எளிதில் புரிந்து கொள்ள இயன்றதாக இருப்பதாலும் மட்டுமே, அவை பெரிய நோக்கங்களாக விளங்குகின்றன. **இலியோ தோல்சுதாய்**

★ கலையென்பது நாட்டின் வெற்றி பெறும் பண்புகளில் பெரும்பாலானவற்றைத் தன்னுள் ஏற்றுக் கொள்வதால், உண்மையில் அது மனித இனத்திற்கு விலைமதிப்பற்றதாகும்.
**விளாடிமிர் நெமிரோவிச் - டான்செங்கோ**

★ சோவியத்து எழுத்தாளரின் படைப்பு, நமது காலத்தின் பெரிய, அனைத்துலக நோக்கங்களினால் ஒளியூட்டப்படவில்லையெனில், எந்தப் பொருளுமற்றதாகும். அலெக்சாண்டர் பெதயேவ்

★ கலையில் தேசிய வடிவம் என்பது எதனைக் குறிக்கிறது? முதன்மையாகப் பழங்குடிப் பேச்சு என்பதையே அது குறிக்கிறது. நாட்டின் தனித்தன்மை கொண்ட, பல நூற்றாண்டுகளாக நாடு நாட்டுப் புறக் கதைகளைத் தன்னுள் ஏற்றுக் கொண்ட, பேச்சு நடைமுறை உணர்வு ஆகியவற்றையும் அது குறிக்கிறது.

அலெக்சாண்டர் பெதயேவ்

★ கலையென்பது அறிவியல் போன்றதன்று. அது நாட்டுணர்வைக் கொண்டிராவிடின், வற்புறுத்தல் நிறைந்ததாக இருக்க அதனால் இயலாது. உலகக் கலையென்பது என்னவென நீ கேட்கலாம். ஆம். ஆனாலும், அதனுடைய அனைத்துலகத் தன்மை, தவிர்க்க இயலாதபடி தேசிய உடைகளால் போர்த்தப்பட்டுள்ளது.

இவான் குரம்சோகி

★ குறுகிய மனப்பான்மையற்ற பரந்த மனப்பான்மையென்பது அறிவற்றதாகும். அத்தகையவன் எதுவுமற்றவன், எதுவுமற்றவனை விடக் கீழானவன். தேசிய அடையாளமற்ற கலை, உண்மை, வாழ்க்கை என்று எதுவுமே இருக்க இயலாது.

இவான் துர்கனேவ்

★ மக்களின் விருப்பங்களின் எடுத்துக் கூறும் பேச்சாளனாக இருப்பதுடன் மக்களின் தலைவனாகவும், பாதுகாவலனாகவும் எழுத்தாளன் இருக்க வேண்டும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ கவிஞன், சிற்பி, கலைஞன் போன்றே இசையமைப்பவனும் மனிதனுக்கும் மக்களுக்கும் தொண்டாற்ற வேண்டுமென்ற கோட்பாட்டை நான் கொண்டிருக்கிறேன். மனித வாழ்க்கையை அவன் அழகுபடுத்திப் பாதுகாக்க வேண்டும். கலையில் அவனது முதன்மையான கடமையென்பது ஒரு குடிமகனாக இருப்பதென்பதேயாகும். சொஜி புரோகோபிவ்

★ தனது கதைமாந்தர்களின் கவர்ச்சியினால், இலக்கியம் மனிதனின் செயல்பாடு, உழைப்பு ஆகிய அனைத்துத் துறைகளுக்கான பாதையை ஒளிமயமாக்குகிறது. இந்தக் கருத்தினடிப்படையில், மக்கள் தங்கள் தொழிலைத், தங்கள் வாழ்க்கைப் பணியைக் காண அவர்களுக்கு உதவி அவர்களை இயக்க வல்லதாக இருப்ப தாகும் அது. அலெக்சாண்டர் பர்தோவ்ஸ்கி

★ கலைஞருக்கு, அறிவியலாளருக்குத் தாளிகையாளருக்கு, ஒவ்வொரு வருக்கும், அனைவருக்கும், பொதுவான ஒரு பெரிய விதி உள்ளது. கருத்து முதலில் வருகிறது, இந்த விதியை மீறுபவர்கள், மக்களுக்குப் பயன் நிறைந்தவர்களாக இருப்பதற்கான ஆற்றலை உடனே இழந்துவிடு வதுடன், அருவருக்கத்தக்க ஒட்டுண்ணிகளாக மாறி விடுகின்றனர். திமிட்ரி பிசரேவ்

★ புதிய கருத்துகளினூடே மட்டுமே நன்மை பயக்க இலக்கியத் தினால் இயலும். அதுவே அதனுடைய உண்மையான தொழி லாகும். இதில் எந்த ஒரு போட்டியாளரையும் அது பெற்றிருக்க வில்லை. திமிட்ரி பிசரேவ்

★ சோவியத்துப் படிப்பாளி என்பவர் பேரறிவு, அறிவுக் கருத்துகளைப் புத்தகங்களில் தேடிப் பெறும் ஒரு படிப்பாளியாவார்.
ஆன்டன் மெகரன்கோ

★ சிந்தனை மனப்பாங்கென்பவை தொழில் நுட்பத்திற்குத் தீங்கே தும் விளைவிக்காததுடன், அதனுடைய முன்னேற்றத்தைத் தூண்டவும் செய்கின்றன. வி.வி.வெரெசெச்சாகின்

★ கலைஞன் வரலாற்றாசிரியனாக, மெய்யியல் ஆசிரியராக, அரசியல்வாதியாக, அமைப்பாளராக, வருமுன் உரைப்பவராக இருக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம். கலைஞன் மனித இனத்தின் உள்ளுயிர் உலகை வடிவமைக்கும் கட்டிடக் கலைஞ னாவான். ஏ.என்.தோல்சுதாய்

★ கருத்தென்பது ஒரு கலைப் பணியின் உள்ளுயிர்ப்பாகும்.
விளாடிமிர் கோரோலென்கோ

★ ஒரு கருத்தின்றி உயிர்வாழ்ந்திருக்க கலையினால் இயலாது.
ஜி.வி.பிளக்கனோவ்

★ எந்தவொரு கலைக் கொடையும், நமது காலத்தின் பெரிய உயர் வளிக்கும் கருத்துகளைத் தன்னுள் ஏற்றுக்கொண்டால், அதனுடைய ஆற்றலை ஒரு மிகப் பெரிய அளவிற்கு அது வளர்த்துக் கொள்ளும்.
ஜி.வி.பிளக்கனோவ்

★ தங்களது காலத்திய சமூகக் கண்ணோட்டங்களைக் காணாமல் கலைஞர்கள் குருடர்களாக இருந்தால், அவர்களது படைப்பு களில் அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துகள் பற்றிய உள்ளார்ந்த மதிப்பீடுகள் மிக அதிக அளவில் போற்றப்படமாட்டா.
ஜி.வி.பிளக்கனோவ்

★ நீண்டகாலமாகப் பழக்கத்திலுள்ள பொதுவானவற்றைக் காணா மல் திரும்பிக் கொள்வதென்பது கலைக்கு ஆக்கம் அளிப்பதே. ஆனால் மாபெரும் வரலாற்று இயக்கங்களின் முன்னும் அது முகம் திருப்பிக் கொள்ளுமேயானால், அதுவும் பயனற்ற சாதாரண மானதென்பதற்கான உட்கூறுகளைப் பெற்றதாகிவிடுகிறது.
ஜி.வி.பிளக்கனோவ்

★ எழுத்தாளனது சிந்தனை, ஆற்றல் என்ற திறமைகளினால் அவன் ஒரு புதிய வாழ்க்கையை உருவாக்க வேண்டும்.
லியோனிட் ஆன்டரேயேவ்

★ நீ என்ன எழுதுகிறாயோ, அது நேரிடையாகவோ, மறைமுகமாக வோ இயக்கம் முன்னேறிச் செல்வதற்காகத் தொண்டாற்ற வேண்டும்.
திமிட்ரி பர்மனோவ்

★ ஒரு புத்தகம் எவ்வளவுக்கெவ்வளவு நன்றாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நிகழ்வுகளை முந்திச் செல்வதாக அது இருக்கும்.
விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ ஒரு பெரிய எழுத்தாளர் என்பவர் ஓர் அரசியல்வாதி ஆவார். எழுத்தாளனின் படைப்புகளின் அரசியல் பற்றிய அடையாளத்தை ஓர் உருப்பெருக்கி ஆடியாலும் கூடக் காட்ட இயலாதெனத் தோன்றக் கூடுமானாலும், அவனும்கூட, உண்மையிலேயே ஓர் அரசியல் வாதிதான். ஏ.வி. லூனாசர்ஸ்கி

★ நமது சோவியத்து இலக்கியம் கூட, பொதுவறத்தை உருவாக்கு வதில் ஒரு வலிமை பொருந்திய உயர்ந்த தகுதிபடைத்த இணைந்து செயலாற்றுவதாக இருக்க வேண்டும். ஏ.வி. லூனாசர்ஸ்கி

★ அழகு நிறைந்தவை மட்டுமே தனித்தன்மை மிக்கவை என்பதால், எந்தக் கலைப்படைப்பும் உயர்ந்த சிந்தனையை ஈர்ப்பதாய் இருக்க வேண்டும். ஏ.எப். கோனி

★ தீவிரமான ஒன்றே அழகு நிறைந்ததாக இருக்கும் என்பதால், கலைப் பணிகள் சில மாபெரும் சிந்தனைகளுக்கு இடமளிப்பதாக இருக்க வேண்டும். ஏ.எப். கோனி

★ உலகைப் பற்றிய ஒரு தெளிவற்ற கண்ணோட்டமே கலைஞனின் படைப்பாற்றலைப் பயனற்றதாக்கிவிடும் ஒரு மாபெரும் குறை பாடாகும். எம்.இ. சால்டிகோ செசட்ரின்

★ தெளிவுடன் உருவாக்கப்பட்ட ஒரு கருத்தற்ற கலைப் படைப்பு பொருத்தமற்ற மாறுபாடுகளின் அழகற்ற கலவையாகவே இருக்கும். எம்.இ. சால்டிகோ செசட்ரின்

★ சிந்திப்பவை அனைத்தும் உயர்ந்ததாகட்டும் - துணிவுடனும், தன் அடக்கம் நிறைந்ததும் வலிமையைப் பற்றி கவலைப்படா மலும் எழுத்தாளர் மாபெரும் பணிகளையே தனக்குத் தானே விதித்துக் கொள்ள வேண்டும். அலெக்சாண்டர் பிளோக்

★ சோவியத் எழுத்தாளரின் படைப்பானது, நமது காலத்தின் அனைத்துலகிய மாபெரும் நோக்கங்களினால் ஒளியூட்டப்படாத

வரை, பொருளற்றதும் உணர்வற்றதும் ஆகும்.

அலெக்சாண்டர் பதயேவ்

★ கவிதைக்கு ஆர்வம் தேவை; அதற்கு உனது கருத்தும், தவிர்க்க இயலாதபடி உணர்வுப் பெருக்குடன் சுட்டிக் காட்டும் விரலும் தேவை. எத்தகைய நாட்டமுமின்றி உண்மை நிலையை ஆடி போல் எதிரொளிக்கச் செய்வது அதற்கு மாறாகத் தகுதியற்றதும் பயனற்றதும் ஆகும். பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ உழைக்கும் மக்களின் பொது நோக்கத்தின் ஒரு பகுதியாகவே இலக்கியம் ஆகிவிட வேண்டும். வி.இ.இலெனின்

★ ★ ★

# குடும்பம், பெற்றோர், குழந்தைகள்

## குடும்பமும் சமூகமும்

★ குடும்ப அன்பு என்பது மிகவும் பரந்ததும், நீடித்து நிற்பதுமான உணர்வாகும். அதனால், மக்கள் வாழ்க்கையின் மீது செல்வாக்குப் பெற்றிருக்கும் உணர்வில், அதுதான் மிகவும் இன்றியமையாததும், இரக்கமுள்ளதுமாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ தனது குடும்பத்திற்காக மட்டுமே வாழ்வது என்பது, விலங்குத் தன்மை கொண்ட தன்னலமாகும். ஒருவருக்காக மட்டுமே வாழ்வது என்பது தவறானது. ஆனால் தன் ஒருவனுக்காக மட்டுமே வாழ்வதென்பது இழிவானதாகும். நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ தனது வீட்டை தனது நெஞ்சத்தினால் கட்டுபவன் மட்டுமே, அதனை ஓர் எரிமலையின் உச்சியில் கட்டுவான்.
அலக்சாண்டர் எர்சன்

★ தனது வீட்டின் எல்லைகளுக்கு அப்பால் வெளியே உள்ள எதனைப் பற்றியும் அறியாத குடும்ப வாழ்க்கை என்பது, அது எவ்வளவு நன்கு அமைக்கப்பட்டிருந்த போதும், இழிநிலையானதேயாகும்.
அலக்சாண்டர் எர்சன்

★ வாழ்வின் மகிழ்ச்சி அனைத்தையும் ஒருவர் மீதே மையப்படுத்தி கவனம் செலுத்துமாறு ஒருவர் மீது மட்டுமே காட்டப்படும் அன்பு, மற்ற அனைத்தையும், ஒரு சுமையாகவும், துன்பமாகவும் ஆக்குவது. இத்தகைய அன்பு இருவருக்குமே தீங்கு பயக்கும் நஞ்சு நிறைக்கப்பட்டதாகும். பெலிக்ஸ் ஜெர்ஜின்ஸ்கி

★ நமது வாழ்வின் நோக்கம் முற்றிலும் நமது தனிப்பட்ட மகிழ்ச்சியைக் கொண்டதாகவும், நமது தனிப்பட்ட மகிழ்ச்சி முற்றிலும் அன்பின் அடிப்படையில் அமைந்ததாகவும் இருப்பின், பின்னர் அந்த வாழ்க்கை ஒரு வண்ணமற்ற பாலைவனமாகிவிடும். அதனால், நிலையான அற உணர்வு, கவலைப்படுகிற இறையருள் ஆகியவற்றைப் போற்றுவாயாக! உள்ளத்துள் உறைந்திருக்கும் உலகமன்றி, ஒவ்வொரு மனிதனுக்கும், சமூக நலனுக்கான வரலாற்றுச் சிந்தனை, செயல்பாடு கொண்ட வாழ்க்கை எனும் பேருலகம் ஒன்றும் உள்ளது. விசாரியோன் பெலின்ஸ்கி

★ வாழ்க்கை என்பது முழுமையான நிறைவை அளிப்பதாக இருப்பதில்லை, அன்பில் முழு நிறைவைக் காண்பவன் இழிவானவன். எந்த ஒன்றினாலும் மனிதனின் பல தேவைகளை நிறைவேற்ற இயலாது என்பது அதனைத் தொடர்வதாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ தன் கணவனின் அன்பாலும் குழந்தைகளின் அன்பாலும் பிணைக்கப்பட்ட ஒரு பெண், வேறு எதனையும் புரிந்து கொள்ளாமலும், வேறு எதற்காகவும் பாடுபடாமலும் இருப்பது என்பது, ஒரு மனிதனின் திறமைகள் தன் மனைவி, குழந்தைகளிடம் அன்பு செலுத்துவது என்ற அளவில் மட்டுமே கட்டுப்படுத்திக் கொள்ளப்பட்டதைப் போன்றே, ஆணின் அன்புக்குத் தகுதியற்றபடி கேலிக்கிடமான, பரிவுக்குரிய ஒன்றாக இருப்பதாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

## குழந்தை வளர்ப்பு

★ பெற்றோர்களுக்குக் குழந்தைகளை வளர்ப்பது என்பது தங்களைத் தாங்களாகவே வளர்த்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

என்.கே.குருப்ஸ்கயா

★ குழந்தைகளே நமது எதிர்காலம் - நமது நோக்கங்களுக்காகப் போராட அவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

என்.கே.குருப்ஸ்கயா

★ இளம் வயது முதலே பிற குழந்தைகளுடன் வாழ்விலும், விளை யாட்டிலும், பணியிலும் தன் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் சூழ்நிலைகளில் குழந்தைகள் வைக்கப்பட வேண்டும்.
என்.கே.குருப்ஸ்கயா

★ ஒரு குழுவில் மட்டுமே குழந்தையின் தனித்தன்மை, ஆளுமை முழு அளவில், இணக்கமாக வளர இயலும்.
என்.கே.குருப்ஸ்கயா

★ குழந்தைகளின் கூட்டு வாழ்க்கை மகிழ்ச்சியான செயல்பாடுகளால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்; அப்போதுதான் அது வலிவுடன் வளர்க்கப்பட்ட சமுதாயச் சிந்தனையை, உணர்வைப் பதிக்கச் செய்கிறது.
என்.கே.குருப்ஸ்கயா

★ கல்வி கற்பதில், கற்பித்து உருவாக்குபவரின் தனிப்பட்ட ஆளுமைத் தன்மை என்ற நிலைக்கே அனைத்துச் செய்திகளும், பொருள் களும் கொண்டு செல்லப்படுகின்றன.
திமிட்ரி பிசரேவ்

★ ஒரு தனிப்பட்ட மனிதரின் தனிப்பட்ட ஆளுமைத் தன்மையை உண்மையாக மதிப்பவர், தன் நான் என்பதை உணர்ந்தவராக ஆகி, சூழ்ந்துள்ள உலகுடன் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் அந்த நிமியம் முதல் அவரை அவரது குழந்தைப் பருவம் முதலே மதிக்க வேண்டும்.
திமிட்ரி பிசரேவ்

★ ஒரு குழந்தை திட்டப்படும்போது, அடிக்கப்படும்போது, துன்புறுத்தப் படும்போது, அதன் இளமைப் பருவம் முதல் தனிமையையே அது உணர்கிறது.
திமிட்ரி பிசரேவ்

★ குழந்தை வளர்ப்பு வெற்றி நிறைந்ததாக இருக்க வேண்டு மெனின், அனைத்து வளர்ந்தவர்களும் தங்களது வளர்ச்சியை யும் முடிவற்று மேற்கொள்வதில் அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.
இலியோ தோல்சுதாய்

★ அனைத்துச் செயல்களிலும், மிகவும் குறிப்பாகக் குழந்தைகளை வளர்ப்பதிலும், பல்வேறுபட்ட வழிமுறைகள் கையாளப்பட வேண்டும்.
இலியோ தோல்சுதாய்

★ ஒரு குழந்தையிடமும் உண்மை நிறைந்தவனாக இரு. உனது வாக்குறுதிகளைக் காப்பாற்று; இல்லையெனில், பொய் உரைப்பதற்கு அதற்கு கற்றுக் கொடுத்தவனாக நீ ஆவாய்.
இலியோ தோல்சுதாய்

★ கடுமையாக இருப்பதென்பது குழந்தைகளை நம்மிடமிருந்து விலகச் செய்வதில்லை; ஆனால், நம்மிடமுள்ள பொய்களே அவர்களை நம்மை விட்டு விலகச் செய்கிறது. இலியோ தோல்சுதாய்

★ எடுத்துக்காட்டின் பொதுவான ஆற்றலைவிட குழந்தைகளின் இளம் உள்ளுயிரை அதிகமாகப் பாதிப்பவற்றை வேறெதுவும் பெற்றிருக்கவில்லை; என்றாலும் இத்தகைய அனைத்து எடுத்துக் காட்டுகளிலும் பெற்றோர்களுடையதைவிட வேறு எது ஒன்றும் ஓர் ஆழ்ந்த நீடிக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.
என்.ஐ.நோவிகோவ்

★ குழந்தைகளின் தவறுகளோ, தகுதிகளோ பெரும்பாலும் அவரது பெற்றோரின் தலைகள், மனச்சான்றின் மீதே விழுகின்றன.
பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ பெற்றோரால் தம் ஒவ்வொரு விருப்பமும் நிறைவேற்றப்பட நச்சரிக்கும் குழந்தைகள் பண்பு குறைந்தவராகவும், வலிவற்ற நெஞ்சுறுதி கொண்ட தன் உணர்வு மிக்கவராகவுமே வளர்வர்.
பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ பெற்றோர் என்ற தங்களின் நிலையைத் தகுதியைப் பயன்படுத்தி தங்களது கோட்பாடுகளையும், கருத்துகளையும் தங்கள் குழந்தைகள் மீது திணிக்க முயல்பவர், குழந்தைகளுக்கு எத்தகைய தீங்கை இழைக்கிறோம் என்பதை அறியாதவராகவே உள்ளனர்.
பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ தங்களைத் தாங்களே விரும்புவதைவிட, பிறமக்களை விரும்ப உனது குழந்தைகளுக்குக் கற்றுக் கொடு; இவ்வாறு செய்ய பெற்றோராகிய நீங்களும், பிற மக்களை விரும்ப இயன்றவராக இருக்க வேண்டும். பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ அச்சுறுத்திக் கட்டாயப்படுத்துதல் என்பது குழந்தையிடம் இழிந்த தன்மை, நேர்மையின்மை, வெளிவேடம், இழிவான கோழைத்தனம் போன்றவற்றைத் தவிர வேறெதனையும் போற்றி வளர்க்காது. பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ அதிகப்படியாகக் கடுமையாக இருப்பது, குருட்டுத்தனமான ஒழுக்க நடைமுறை குழந்தைகளுக்கேற்ற நல்ல ஆசிரியராக இருக்க இயலாது. பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ தன்னிடம் அன்பு காட்டும் ஒருவரையே குழந்தையும் விரும்பி அன்பு காட்டுகிறது; அது நல்ல முறையில் வளர்க்கப்பட இயன்ற ஒரே வழி அன்பு மட்டும்தான். பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ நமது கருத்துகளை, செயல்களை நல் ஆய்வு செய்து, மதிப்பிடும் வருங்கால நடுவர் நமது குழந்தைகளே; இந்த அகண்ட உலகில் நுழைந்து வாழ்வில் புதிய வடிவங்களைப் படைக்கும் மாபெரும் பணியை மேற்கொள்ளும் மக்களும் அவர்களே. மாக்சிம் கோர்கி

★ ஒவ்வொரு பெட்டைக் கோழியும் தனது குஞ்சுகளை நேசிப்பதாக இருக்க இயலும். ஆனால், குழந்தைகளை முறையாக வளர்ப்பது என்பது, அயலானதொரு திறமையைப் பெற்றிருந்து வாழ்வைப் பற்றிய ஓர் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருப்பது, நாட்டின் நலனிற்கு இன்றியமையாத ஒன்றாகும். மாக்சிம் கோர்கி

★ அனைத்துத் தந்தையருமே தங்கள் குழந்தைகளின் நன் மதிப்பை ஈட்ட இயன்றவராக இருப்பதில்லை. மாக்சிம் கோர்கி

★ கெட்ட குழந்தைகளின் கெட்ட செயல்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர் அவற்றின் பெற்றோரே. மாக்சிம் கோர்கி

★ வாழ்வை முற்றிலும் அறிந்து போற்றுதலுக்கு, அதாவது மகிழ்வுடன் வாழ்வதற்கு, தேயம், நாட்டின் மீதான மாபெரும் பற்று, மனித நேயம், அற உணர்வின் ஆற்றல் மீதான நம்பிக்கை, மனித உள்ளுயிர் அழகின் மீதான பெருமிதமான மகிழ்வு ஆகியவற்றைக் குழந்தைகளுக்கு நன்கு கற்றுத் தருவது இன்றியமையாதது. இது, இது ஒன்று மட்டுமே, மக்கள் மீதும் அவர்களது ஆளுமை மீதும் உண்மையான மதிப்பை அவர்களுள் பதிக்கச் செய்ய இயலும். மாக்சிம் கோர்கி

★ அனைத்திலும் மிகக் கடினமானது குழந்தைகளை வளர்ப்பது தான் என நீ எண்ணுகிறாய்; ஆனால் தற்போது அவ்வாறில்லாதபடி முடிவடைந்துவிட்டது; ஆனால் அது ஒரு தொடக்கம் மட்டுமே. மைக்கேல் லேர்மென்டோவ்

★ வழிபாட்டு மேடையிலிருந்து மதபோதனை செய்வதோ, மேடையிலிருந்து கவர்வதோ சொற்பொழிவாற்றுவதோ, ஒரு குழந்தையை வளர்ப்பது என்பதைவிட எளிதானது. அலெக்சாண்டர் எர்சன்

★ குழந்தையை வளர்ப்பது என்பதில் எதுவுமே அற்பமானவையாக இருப்பதில்லை. நிகலாய் பிரோகோவ்

★ குழந்தை வளர்ப்பு என்பது தொட்டிலிலிருந்து தொடங்கப்பட வேண்டுமென்ற முடிவுக்கு அனைத்து சிந்தனையாளர்களும் வந்து விட்டதாக நான் உணர்கிறேன். நிகலாய் பிரோகோவ்

★ ஒரு குழந்தையை அற உணர்வுடனும், சரியாகவும், மதிப்பிட, அதனை அதன் உலகத்திலிருந்து நமது உலகத்திற்கு மாற்றாமல், அதற்கு மாறாக நம்மையே அதன் உள்ளுயிர் உலகிற்கு மாற்றிக் கொள்ள வேண்டும். நிகலாய் பிரோகோவ்

★ குழந்தை வளர்ப்பை, கல்வி என்பதுடன் பெற்றோர் அடிக்கடி குழப்பிக் கொள்கின்றனர்; சில குறிப்பிட்ட பாடங்களைக் கற்றுக் கொடுத்ததன் மூலம் தங்களது குழந்தைகளைத் தாங்கள் வளர்த்ததாகக் கருதுகின்றனர். அதனால்தான் பின்னால் தங்கள்

குழந்தைகளின் மூலம் அவர்கள் ஏமாற்றத்தை அடிக்கடி சந்திக்க நேர்கிறது. ஆண்டன் ரூபின்ஸ்டின்

★ குழந்தைகளிடம் காணப்படும் குறைகளையும் தவறுகளையும் களைவதிலான கவனத்தைக் குறைத்துக் கொண்டு, வளமான அன்பினால் அவர்களை நிறைவடையச் செய்வதில் அதிக கவனம் செலுத்து, அன்பு எங்கு இருக்கிறதோ, அங்கு தவறுகள் இருக்க மாட்டா. நல்லதை விதைக்காமல், கெட்டதைக் களைய முயல்வது பயனற்றது. அது ஒரு வெற்றிடத்தை உருவாக்கு கிறது, ஒரு வெற்றிடம் எப்போதும் வெறுமையினாலேயே நிரப்பப்படும், ஒன்றை வெளியேற்றினால், அதற்கு மாற்றாக வேறொன்று வரும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ குழந்தை வளர்ப்பின் தொடக்கத்தில் அது ஓர் அலுவலராகவோ, கவிஞராகவோ, கலைஞராகவோ காணப்படாமல், மனித உயிராகவே காணப்படுவதுடன், பிற்காலத்தில் மனிதப் பிறவி என்ற நிலையை இழக்காமல், அதுவாகவோ இதுவாகவோ, ஏதோ ஒன்றாகவோ குழந்தை ஆகும்படியே காணப்படவேண்டும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ குழந்தையின் சேட்டைகள் துன்பமளிக்காதவாறும், அதன் சிறு மூஞ்சித்தனத்தால் உடல் அல்லது ஒழுக்கம் களங்கப்படுத்தப்படா மல் உள்ளவரை, குழந்தை குறும்பு செய்வதாகவும், முறை தவறி நடப்பதாகவும் இருந்தாலும் விட்டுவிடு. சோம்பல் அல்லது இயக்கமற்றதை விட இழிவானது வேறெதுவுமில்லை என்ப தால், குழந்தை முட்டாளாகவோ மந்தமாகவோ இல்லாதவரை, அது குறும்புக்காரனாகவும், மூர்க்கமானவனாகவும் இருந்தாலும் இருக்கட்டும், விட்டுவிடு. விசாரியோன் பெலின்ஸ்கி

★ தனது குழந்தையின்பால் ஒரு தாயின் நடவடிக்கை, பழக்க வழக்கம் சரியானதாக இருக்கத் தேவையான கல்வியைத் தாய் பெற வேண்டும். இவ் உலகில் உள்ள அனைத்து நல் எண்ணங் களையும் அன்பையும் அறியாதவளாய் இருக்கும் ஒரு தாய் மிக வறிய ஒரு வழிகாட்டியாகவே இருப்பாள்.

இலியா மெச்சின்கோ

★ ஒரு குழந்தைக்குச் சரியான தந்தையாக இருப்பதைவிட, ஒரு குழந்தைக்குத் தந்தையாவது மிகவும் எளிதானது.
வி.ஓ.குளுசேவ்ஸ்கி

★ என்னதான் சிறந்த பள்ளிக் கல்வி அளிக்கப்பட்டாலும், நல்ல தந்தை இல்லாதபோது நல்ல வளர்ப்பு என்பதும் இருக்காது.
நிகராய் கரம்சின்

★ குழந்தைகளின் அனைத்துத் தேவைகளையும் எதிர்பார்த்து, அனைத்துச் சிந்தனைகளிலும், செயல்களிலும் அதற்கு வழிகாட்டுவது என்பது, வாழ்வதற்கே தகுதியற்றதாக அதனைச் செய்து விட நேரும்; அத்தகைய குழந்தைகளும் செயலாக்கம் மிக்க மக்களாகக் கூட ஆகக் கூடுமென்றாலும், இழப்புக் கேடாக அவர்கள் தன்னலம் மிகுந்தவராகவும், அளவுக்கதிகமான தன்னம்பிக்கை கொண்டவராகவும் கூட இருப்பர்.
பியோடர் லெஸ்காப்ட்

★ வெகுசில இழிவுகளால் துன்புற்ற குழந்தைகளே, தங்களைப் பற்றிய மிகுந்த மான உணர்வுடன் வளர்வர்.
நிகராய் செர்னிசேவ்ஸ்கி

★ அறிவற்ற கருணையும்கூட, தேவையற்ற கடுமையைப் போன்றே அறிவற்ற மடமையானது.
ஏ.எப்.பிசெம்ஸ்கி

★ ஒழுக்கம் பற்றிய செல்வாக்கின் ஆற்றலே, மற்ற பிற ஆற்றல்களை விட வலிமை படைத்தது.
நிகலாய் கோகோல்

★ தனது அன்பினாலும், கருணையினாலும் எதனையும் செய்து முடிக்க இயலாதவரால், கடுமையாக இருப்பதால் மட்டும்கூட எதனையும் செய்து முடிக்க இயலாது.
ஆன்டன் செகாவ்

★ குழந்தைகளை வளர்ப்பது என்பதே, குடும்ப வாழ்வின் சிறப்பான நோக்கமும், குறிக்கோளும் ஆகும். கணவன் மனைவியிடையேயும், தந்தை தாய்க்கிடையேயும் உள்ள உறவு முறையே, குழந்தைகளின் முக்கியமான பள்ளிக் கூடமாகும்.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ "நீ செய்யலாம்", "நீ செய்ய வேண்டும்", "நீ செய்யக் கூடாது" என்பவை பற்றிய எண்ணங்களை நமக்கு நாமே தெளிவாக விளக்கிக் கொள்ளவும், நமது விருப்பங்களைக் கட்டுப்படுத்தவும், குழந்தைப் பருவத்திலிருந்தே நமக்குக் கற்பிக்கப்படவில்லை என்ற உண்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவையாக நமது பல தொல்லைகள் உள்ளன.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உன் குழந்தைகளைப் பற்றி மக்கள் கெட்டபடி பேசினால், உன்னைப் பற்றி கெட்டபடி அவர்கள் பேசுவது என்பதையே அது குறிப்பதாகும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ குழந்தைப் பருவம் என்பது ஒரு முடிவற்ற விடுமுறையாக இருக்கக் கூடாது. குழந்தை செய்யக் கூடிய வேலை குழந்தைக்குக் கொடுக்கப்படாவிட்டால், வேலை அளிக்கும் இன்பத்தை அது பெறுவதைத் தவிர்த்துவிடுவதாகும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ காவலாளியிலிருந்து அமைச்சர் வரை எந்தப் பணியாளரும், அவரைவிடச் சிறந்தவராலோ மோசவானவராலோ மாற்றி அமர்த்தப்படலாம். ஒரு நல்ல தந்தை என்பவர், அவரைப் போலவே நல்லவராக உள்ள, வேறு ஒரு தந்தையால் மாற்றி அமைக்க இயலாது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தன்னைச் சூழ்ந்துள்ள உலகத்தின் கருத்துகள், எண்ணங்கள் என்னும் ஆர்வமளிக்கும் நீரோடையைத் தன்னுள் உள்வாங்கிக் கொள்ள வழிவிடும் மாபெரும், ஒளி படைத்த சாளரம் என்பது விளையாட்டே. ஆவல், துணிவான முயற்சி என்னும் ஒளிப் பிழம்பை ஏற்றி வைக்கும் தீச் சுடர் விளையாட்டேயாகும்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தண்டனை அளிக்கும் குச்சியைப் பயன்படுத்துபவனைக் குழந்தை வெறுக்கிறது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ சிறு கொடுமையோ, பெருங்கோபமோ, வேண்டுகோளோ, தூண்டுதலோ இன்றி, அமைதியான தீவிரமான படிப்பினை

என்பதே குடும்ப ஒழுக்க நுட்பத்தின் வெளியே தோன்றும் வெளிப்பாடாக இருக்க வேண்டும். கூட்டமைப்பின் ஏற்கப்பட்ட ஒரு மூத்த உறுப்பினர் என்ற உரிமையில், அறிவுரைகள் வழங்க நீ உரிமை பெற்றிருக்கிறாய் என்பது பற்றிய அய்யப்பாடு உனது மனத்திலோ, குழந்தைகளின் மனத்திலோ எழக் கூடாது.

ஆண்டன் மெகரன்கோ

★ தங்களின் குழந்தைகளைக் கெட்ட வகையில் வளர்த்து வரும் பெற்றோர்களும், பொதுவாகக் கற்பிக்கும் கலை பற்றிய எந்தத் தந்திரத்தையும் அறிந்திராத மக்களுமே, கல்வித் தலைப்புகளைப் பற்றிய பேச்சுகளின் இன்றியமையாத தன்மையை மிகைப் படுத்திக் கூறுபவர்கள். ஆண்டன் மெகரன்கோ

★ பெற்றோரின் வாழ்க்கை, பணி, அவர்களது சமூக அடையாளம், அவர்களின் நடவடிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவையே பெற்றோர்களின் அதிகாரத்திற்கான அடிப்படைகளாகும்.

ஆண்டன் மெகரன்கோ

★ உன் குழந்தைகளுக்குச் சொற்பொழிவாற்றும் போதும், அறிவுரைகள் வழங்கும்போதும் மட்டுமே நீ குழந்தைகளை வளர்ப்பதாக எண்ணாதே. உனது வாழ்வின் ஒவ்வொரு கணமும் நீ வளர்த்து வருகிறாய். குரல் ஒலியில் ஏற்படும் சிறிய மாற்றத்தையும் குழந்தை அறிந்து கொள்ளும். உனது சிந்தனையின் அனைத்துத் திருப்பங்களும், குழப்பங்களும், நீயே அறிந்திராத கண்ணுக்குப் புலப்படாத பாதைகளில் அவர்களை அடைந்து விடும். ஆண்டன் மெகரன்கோ

★ தங்களின் குழந்தைகளை இன்று வளர்ப்பதன் மூலம், பெற்றோர்கள் நமது நாட்டின் வருங்கால வரலாற்றையும், அதன் மூலமாக உலக வரலாற்றையே படைப்பவர்கள் ஆகின்றனர்.

ஆண்டன் மெகரன்கோ

★ நம் குழந்தைகளே நமது முதுமைக் காலமாகும். ஒரு நல்ல வளர்ப்பு என்பது ஒரு மகிழ்ச்சி நிறைந்த முதுமைக் காலத்தைத்

தருவதாகும். ஒரு கெட்ட வளர்ப்பு என்பது, நமது எதிர்காலத் துன்பம், நமது கண்ணீர், மற்ற மக்கள் முன் நாட்டின் முன் நமது தவறுகள் ஆகியவற்றைத் தரும். ஆண்டன் மெகரன்கோ

★ ஒரு நிறைவான, உண்மையான, மனிதநேயம் கொண்ட சமூக வாழ்க்கையை வாழும் ஒரு தாயினால் மட்டுமே, குழந்தைகளுக்குக் கற்பித்துத் தன்னையே ஓர் எடுத்துக்காட்டாகப் படைத்துக் கொண்டு, அன்பினையும், பாராட்டுதலையும் கோரிப் பெற்று, தன்னைப் போலிருக்க ஒரு விருப்பத்தை ஏற்படுத்தும் ஓர் உண்மையான தாயாக இருக்க இயலும். தன் குழந்தைகளுக்காக வேலை செய்வது என்ற நிலைக்குத் தனது கடமைகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட ஒரு தாய், அவர்களை வளர்க்கும் ஒரு தாயில்லை; ஆனால் அவளின் குழந்தைகளின் அடிமையே ஆவாள். ஆண்டன் மெகரன்கோ

★ உனது பெற்றோரின் அன்பு அனைத்தையும் ஒரு குழந்தையின் மீதே செலுத்துவதன் மூலம், அஞ்சத்தக்க தவற்றை நீ செய்து கொண்டிருக்கிறாய். ஆண்டன் மெகரன்கோ

★ ஒரு முதியவருக்கு வேலை என்பது எப்படியோ, அப்படியே ஒரு குழந்தைக்கு விளையாட்டு என்பது இன்றியமையாதது ஆகும். குழந்தை அதன் விளையாட்டில் எப்படி இருக்கிறதோ, அப்படியே முதியவர் தனது வேலையில் இருக்கிறார். அதனால்தான், ஒரு தனிப்பட்ட எதிர்கால மனிதனை வளர்ப்பது சிறப்பாக விளை யாட்டில் நிகழ்கிறது. ஆண்டன் மெகரன்கோ

★ குழந்தைகளை வளர்ப்பது என்ற கலை ஏறக்குறைய ஒவ்வொரு வருக்கும் நன்கு தெரிந்தும், அறிமுகமானதுமாகத் தோன்றுவது என்னும் சிறப்பான வேறுபாட்டைப் பெற்றுள்ளது, சிலருக்கு அது மிக எளிதானதாகவும் தோன்றுகிறது. உண்மையில், அதனைப் பற்றிக் கோட்பாட்டிலும், நடைமுறையிலும் அதிக அறிமுகமற்ற வர்களே அதனைப் பற்றி நன்கு அறிந்தவர்களாகவும், அறிமுக மானவர்களாகவும் உள்ளனர். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ உன்னால் கடை பிடிக்க முடியாத உறுதிமொழியை ஒரு குழந்தைக்கு எப்போதும் அளிக்காதே; அதே போன்று எப்போதும் அதை ஏமாற்றாதே.
காான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ ஒரு குழந்தையின் சிந்தனையைப் போலவே, அதன் உணர்வு களும், எந்தவித வற்புறுத்தல்களுமின்றி வழி நடத்திச் செல்லப்பட வேண்டும்.
காான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

# திருமணம்

★ உண்மையின் அன்பான நிலை திருமணமாகும். முற்றிலும் முதிர் வடைந்த ஒரு உள்ளுயிரினாலன்றி உண்மையான அன்பு செலுத்த வேறெதனாலுமியலாது. அன்பானது திருமணத்தில் தனது உயர்ந்த பரிசைக் காண்பதுடன், திருமண முடியின் ஒளியில் தனது தனிச் சிறப்பு எதனையும் இழந்துவிடுவதில்லை, அதற்கு மாறாக அது இன்னமும், கதிரவனின் ஒளியில் மலரும் மலரைப் போன்று, மலர்ந்து மணக்கிறது.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ என்னுள் ஆழமாக வேர் கொண்டுள்ள கோட்பாட்டின்படி ஒரு திருமண உறவு என்பது பொதுவான ஒரு காட்சியாக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும், ஏனெனில் அது இரு மக்களைப் பற்றியது மட்டுமே என்பதால்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு மனைவி என்பவள் ஒரு வைப்பு அல்ல, ஆனால் ஒரு நட்பும் தோழமையும் ஆகும். ஆண்டுகள் கடந்தபின் அவள் வயது முதிர்ந்த வளானபோதிலும், அன்பு செலுத்தப்பட வேண்டியவள் என்ற சிந்தனையை வளர்த்துக்கொள்ள நாம் பழகிக் கொள்ள வேண்டும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ உனது நெஞ்சம் நிறையும் வண்ணம் அன்பு செலுத்துவதைக் குறிக் கோளாகக் கொண்டாலும், நமது மகிழ்வுக்கானது போலவே

இனத்தைப் பெருக்கிப் பாதுகாக்க இயற்கை அன்பெனும் மகத்தான நிலையை நமக்குப் பரிசாக அளித்துள்ளது என்பதையும் நீ காண வேண்டும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு பெண் அழகு நிறைந்தவள், இளையவள் என்பதனால் மட்டுமே அவளுடன் தனது வாழ்வு அனைத்தையும் பிணைத்துக் கொள்வதை விட ஆபத்து நிறைந்தது வேறெதுவுமில்லை.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒருவர் மற்றவர் மீது அன்பு பரிமாற்றம் செய்து கொள்ளப்படு மானால், குடும்ப வாழ்வினால் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்க இயலும்.
என்.கே.குருப்சுகயா

★ அன்பு என்பது விரும்பப்படுவதெனினும், ஒருவர் மற்றவருடன் வாழப் பொதுவான ஒரு கண்ணோட்டம் இருக்க வேண்டும். அது இன்றி உண்மையான மகிழ்ச்சி நிறைந்த குடும்ப வாழ்வு என்பது இருக்க இயலாது. என்.கே.குருப்சுகயா

★ வீட்டில் மகிழ்ச்சியுடன் இருப்பவன் மட்டுமே உண்மையில் மகிழ்வுடன் இருப்பவனாகும். இலியோ தோல்சுதாய்

★ சமைப்பது, தைப்பது, தோய்ப்பது, குழந்தை வளர்ப்பது ஆகியவை பெண்களுக்கான தொழில்களென்ற வியப்பான, ஆழப்பதிந்த தவறான கருத்து அங்குள்ளது. ஓர் ஆணுக்கு அவை இழிவு செய் 'வதாகவும்கூட உள்ளன. என்றாலும் அதற்கு மாறானதுதான் இழிவுபடுத்துவதாகும், சோர்வடைந்த, பெரும்பாலும் வலிமை யிழந்த கருத்தரித்த பெண் சமைக்கவும், துவைக்கவும் அல்லது நோயுற்ற குழந்தையைப் பேணவும் தனது ஆற்றல் அனைத்தை யும் வலிந்து செலவிடும்போது தனது நேரத்தை அதிக மதிப்பற் றவற்றில் அல்லது எதுவுமே செய்யாமல் இருப்பது என்பவை யே ஓர் ஆணை இழிவுபடுத்துவதாகும். இலியோ தோல்சுதாய்

★ பல ஆண்கள், தங்களுக்குச் சிறிதும் தகுதியற்ற நற்பண்புகளை தங்கள் மனைவிகளிடம் எதிர்பார்க்கின்றனர். இலியோ தோல்சுதாய்

★ திருமணம் செய்து கொள்வதென்பது ஆர்வமளிப்பதானாலும், அது அன்பு கொண்டவர்க்கு மட்டுமே ஆனதாகும். பார்க்க கவர்ச்சியாக ஒரு பெண் இருக்கிறாள் என்பதற்காக மட்டுமே அவளை மணம் செய்து கொள்வதென்பது, கவர்ச்சியாக இருக்கிறதென்பதற்காக பயனற்ற ஓர் அணிகலனை வாங்குவது போன்றதாகும். ஆன்டன் செகாவ்

★ நீ அன்பு செலுத்தாத ஒருவரை மணந்து கொள்வது என்பது ஒழுக்கக் கேடானதாகும். திமிட்ரி பிசரேவ்

★ குடும்ப வாழ்வென்பது முடிவற்ற தொடர்ந்த கொண்டாட்டமாகவே எப்போதும் இருப்பதில்லை. மகிழ்வினை மட்டுமின்றி துன்பத்தையும், வருத்தத்தையும், இழப்புக் கேட்டையும் பகிர்ந்து கொள்ளக் கற்றுக் கொள். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ நீ தன்னலம் படைத்தவனெனின், ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ளாமலிருப்பதே மேலானது. மகிழ்வான அன்பெனும் உணர்வு கொடுப்பதிலேயே இருப்பதாகும். தன்னை மட்டுமே விரும்பும் ஒருவனால் எதனையும் கொடுக்க இயலாது, அவன் மற்றவரிடமிருந்து எதனையும் எடுத்துக் கொள்பவன் மட்டுமேயென்பதால், அதன் மூலம் அவன் அன்பின் சிறப்பான பகுதியைத் தவிர்க்க இயலாதபடி நஞ்சாக்கிவிடுகிறான். ஓர் உடல் ஊனத்தைப் போலவே, தன்னலமும் ஓர் இடையூறேயாகும்.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உனது நெஞ்சிற்கினிய இல்லாள் உன்னுடனுள்ளவரை குடிசையும் கூட விண்ணுலகமேயென்னும் சொற்றொடரில் மயக்கம் கொள்ளாதே, ஆறுதலடையாதே. திருமணமென்பது உணர்வு நிறைந்த ஒன்று மட்டுமல்ல; ஆனால் அது ஒரு பருப்பொருள் ஒப்பந்தமுமாகும். ஒரு குடும்பத்தைப் பற்றித் திட்டமிடுமுன், பொருளாதார நிலையில் நீ தன்னிறைவு பெற்றவனாகவும், உனது மனைவிக்கு உணவளிக்க, உடையளிக்க, வீடளிக்க

இயன்றவனாகவும் நீ உள்ளாயா என்பதை உறுதி செய்து கொள். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தனது கணவனின் நலன்களனைத்திலும் ஆர்வம் காட்டுவதை தடுக்கப்பட்ட, அவற்றிலிருந்து விலகி நிற்கும், அவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத ஒரு மனைவி உலகின் உயர்ந்த உணர்வின்'படி முழுமையான ஒரு மனைவியாக இல்லாமல், பொதுவான ஒரு வைப்பாகவும், வீட்டை பாதுகாப்பவளாகவும், குழந்தை வளர்ப்பவளாகவும் மட்டுமே இருப்பவளாவாள்.

அலெக்சாண்டர் எர்சன்

★ குடும்பமென்பது குழந்தைகளுடனேயே தொடங்குவதாகும்.

அலெக்சாண்டர் எர்சன்

★ வயதானவன் நிறைந்த இளமையின் எழுச்சியைத் தன்னுள் பெற்றிராதவனே யாவான். அவிசென்னா

★ பழைய தோல் மதுக் குடுவையினால் இனிமையான மதுவை பாதுகாக்க இயலாது; வயதான நெஞ்சங்களினால் இளமையான உணர்வுகளைத் தாங்கிக் கொள்ள இயலாது.

எஸ்.டி.அக்சகோவ்

★ மதிப்பென்பதே திருமண ஒத்திசைவின் உள்ளுயிராகும்.

டெனிஸ் போன்விசின்

★ ஓர் உள்ளுறை கோட்பாட்டிலிருந்து பொங்கி வழிவதும், பிறர் தலையீடற்ற, அறிவார்ந்த திருமண உறவில் ஈடுபட்டவர்களின் விருப்பத்தினால் நியாயப்படுத்தப்படுவதுமான குடும்ப, பொது உறவுகளினால் மட்டுமே வலிமை படைத்தவையாக இருக்க இயலும். நிகலாய் தோப்ரோலியோவ்

★ ஒரு பெண் அவளின் கணவனால் எவ்வாறு நடத்தப்படுகிறாள் என்பதைப் பொறுத்தே சமூகத்திலும் அவளது நிலை இருக்கும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ சில இழிவான மக்கள் நம்மை நம்பச் செய்தது போல, அன்பென்பது திருமண காலத்திற்கு முன்பு மட்டுமே இருவரிடையே நிலவும் ஒன்றன்று, மணமக்களின் வாழ்வு முழுவதும் வாழ்ந்து, நிலை பெற்று வளரும் ஓர் உணர்வாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ மிகவும் இன்றியமையாத ஒன்று என்னவென்றால், சமூகத்தில் ஆக்கமுள்ள உழைப்பில் பெண்களைப் பங்கேற்றுக் கொள்ளச் செய்வதும், வீட்டு அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிப்பதும், சமையலறைப் பணி, குழந்தை வளர்ப்புப் பணி போன்ற முடிவற்ற சோர்வு நிறைந்த பணியால் முட்டாள்தனமாகவும், இழிவுபடுத்தப்படுமாறும் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதிலிருந்து விடுவிப்பதும் ஆகும். இப் போராட்டம் மிக நீண்ட ஒன்றாக இருப்பதாகும். சமூகத் திறமைகள், ஒழுக்க நெறிகள் இரண்டையும் தீவிரமாக மாற்றியமைக்கக் கோருவதாகும். ஆனால் கம்யூனிசத்தின் முழுமையான வெற்றியுடன் அதுவும் நிறைவடைந்துவிடும்.

வி.இ.இலெனின்

★ மணமுறிவென்பது குடும்ப பிணைப்புகளை முற்றிலும் அழித்து விடுவதில்லை; ஆனால் அதற்கு மாறாகப் பண்பட்ட சமூகத்தில் நீடித்து நிலைக்க இயன்ற ஒரே அடிப்படையான மக்களாட்சி அடிப்படையில் அதனை வலுப்படுத்தவே செய்கின்றது.

வி.இ.இலெனின்

★ மகிழ்வற்ற ஒரு திருமண வாழ்விற்குத் திருமண ஒப்பந்தத்தை மீறாமல் இருப்பதைவிட, மணமுறிவே சிறந்ததென எனக்குத் தோன்றுகிறது, ஏனெனில் அது ஏமாற்றத்தை, ஏமாற்றுவதைத் தவிர்த்துவிடுகிறது என்பதால். ஆண்டன் ரூபன்ஸ்டின்

★ குழந்தைகளே சமூகத்தின் இன்றியமையாத ஆற்றலாகும். குழந்தைகளற்ற சமூகமென்பது உணர்வும் உயிருமற்றதுமாகும்.

ஆண்டன் மெகரன்கோ

★ நம் நாட்டில் பெண்கள் முற்றிலுமாக உயர்வளிக்கப்பட்டுள்ளனர். ஆணைப் போன்ற அதே அற உணர்வு கொண்ட முழுமையான

நிலையில் அவள் வைக்கப்பட்டுள்ளாள். ஆனால் முற்றிலும் முறைமையான இந்தச் சூழ்நிலையிலிருந்து, பத்துமுறை மணந்து கொள்ளவும், அத்தனை முறை உனது வாழ்க்கைத் துணையை விட்டுப் பிரியவும் உன்னால் இயலக் கூடுமென்ற முடிவிற்கு எக் காரணத்தைக் கொண்டும் நாம் வந்துவிடக் கூடாது.

மைக்கேல் கால்னின்

★ ஒருவன் இன்று மணமுடித்துக் கொண்டு, நாளை மணமுறிவு பெற்றுக் கொள்ள இயலுமென்ற கருத்தை எவர் ஒருவராவது ஏற்றுக் கொள்ளும்போது, அதனைச் சிறு உடைமைதாரரின் தனிப் பட்ட தன்மையென நாம் அழைக்கிறோம். அது ஒளிவு மறை வற்ற வெளிப்படையான தனித்தன்மை என்பதுடன் பண்பாட்டுக் குறைபாட்டுக்கான ஓர் அடையாளமும் ஆகும். ஒருவன் அதிக மாகப் பண்பட்டவனாக இருந்தால், உறுதியாக அவன் பொறுப்பு மிகுந்தவனாகவும், தனது வினைப்பாடுகளிலும், தனது நடத்தை யிலும் மிகுந்த நேர்மையானவனாகவும் இருப்பான்.

மைக்கேல் கால்னின்

## பெற்றோரும் குழந்தைகளும் - ஒருவர் மீது மற்றவரின் பரிவு

★ வினாவுக்கு இடமின்றி, பெற்றோர் மீதான அன்பும் மதிப்பும் தூய்மையானதாகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு தாயின் அன்பைவிட தூய்மையான, தன்னலமற்றது வேறெது வுமில்லை, அதனுடன் ஒப்பிடும்போது, அனைத்து அன்பும், பற்றும், ஆழ்ந்த உணர்வும் வலிமை குறைந்ததாகவோ தன்னலம் கொண்டதாகவோ உள்ளன. விசாரியோன் பெலின்ஸ்கி

★ தாயும் தந்தையும் இத்தகைய தூய்மை நிறைந்த சொற்களுக்கு அருகில் அனைத்துப் புகழ்ச்சியும் வெறுமையானவையே, குழந்தை களின் அன்பு, நன்றியுணர்வுகளுக்கு அருகில் அனைத்து ஒலி

மிகுந்த பாராட்டுதல்களும் பொய்யானவையாகவும், அற்பமான வையாகவும் உள்ளவை ஆகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ உனது பெற்றோர்கள் மகிழ்வுடனிருக்க வேண்டுமெனின், நீ நேர்மையுடன் வாழ்ந்து, பள்ளியிலும் உனது பணியிலும் மனத்தைச் செலுத்தி முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டும். உனது வீட்டுக்கு மகிழ்ச்சியினைக் கொண்டு வா.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ மனிதன் பெற்றுள்ள மூன்று பெருந் துன்பங்கள் - இறப்பு, முதுமை, கெட்ட பிள்ளைகள். முதுமைக்கும் இறப்புக்குமாகத் தனது வீட்டுக் கதவுகளை எவரும் மூடி வைத்திருக்க இயலாது; ஆனால் அவனது வீட்டை, அவனது கெட்ட பிள்ளைகளிடமிருந்து, பிள்ளைகளா லேயே காக்கப்பட இயலும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தாயும் தந்தையும் உனக்கு வாழ்வளித்தவர்கள்; உனது மகிழ்ச்சிக் காகவே வாழ்பவர்கள். எனவே அவர்கள் உடல் நலத்துடனும் மன அமைதியுடனும் இருக்குமாறு பார்த்துக்கொள். அவர்களுக்கு எந்த விதத் துன்பத்தையும் அளிக்காமல் நீ கவனமாக இரு.
வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உனது தாயுடனும், தந்தையுடனும் உண்மை நிறைந்தவனாக இரு. அவர்கள் ஒப்புதலின்றி நீ செய்யக் கூடாத செயல்களில், அவர் களது விருப்பத்தையும் ஒப்புதலையும் கேள். மகன், மகளின் உண்மையான உரிமை என்பது, கீழ்ப்படிந்திருப்பதிலேயே உள்ளது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ நீ ஒரு குழந்தையாக இருந்தபோது, உனது தாயின் கண்களை உற்று நோக்கி, அவள் கவலையுடன் உள்ளாளா, அமைதியாக உள்ளாளா, தெளிவாக உள்ளாளா, குழப்பமடைந்து உள்ளாளா என்று அறிந்து கொள்ள நீ கற்றிருக்கவில்லையெனில், எஞ்சிய உனது வாழ்நாள் முழுவதும் ஒழுக்கத்தைப் பற்றி ஏதும் அறியா தவனாகவே நீ இருப்பாய், இவ்வாறு ஒழுக்கம் பற்றிய

அறியாமை, அன்பில் கொண்டுள்ள வெறியினைப் போலவே, மக்களுக்கு அதிகத் துயரத்தையும், சமூகத்திற்கு அதிகத் தீங்கையும் விளைவிப்பதாகும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ அனைத்து உயிர்களிலும் அற்புதம் நிறைந்ததும், நாம் பெற்றுள்ள அனைத்துக்கும் கடன்பட்டவர்களாக இருப்பதும் - நமது தாயே.
நிகலாய் ஒய்ட்ரோவ்ஸ்கி

★ உனது உணர்வுகளில் உனது தாயும் உனது உறவாவது, அரிதான நற்பேறாகும். மாக்சிம் கார்கி

★ உலகத்தில் அனைத்துப் பெருமைகளும் நமக்கு நமது தாய்களிட மிருந்தே வருகின்றன. ஞாயிற்றின் ஒளியின்றி மலர்கள் மலராது. அன்பின்றி மகிழ்ச்சி குடி கொண்டிருக்க இயலாது, பெண்ணின்றி அன்பு நிலைத்து வாழ இயலாது, ஒரு தாயின்றி எந்தக் கவிஞனோ கதை மாந்தனோ இருக்க இயலாது. மாக்சிம் கார்கி

★ யாருடைய அன்பு எந்தத் தடையையும் பொருட்படுத்தவில்லை யோ, யாருடைய மார்பு இந்த உலகம் முழுதையும் வளர்த்ததோ, அந்தப் பெண்ணை, அந்தத் தாயைப் போற்றி வணங்கு! மனிதனுள் உள்ள அழகு நிறைந்தவை அனைத்தும், செங்கதிர்களிலிருந்தும் தாயின் அன்பான அரவணைப்பிலிருந்தும் பெறப்படுபவை ஆகும்.
மாக்சிம் கார்கி

★ தனது முன்னோர்களிடம் மதிப்பற்று இருப்பது என்பது கயமையின் ஓர் இன்றியமையாத அறிகுறியாகும்.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ ஒரு வளரும் குழந்தை தனது பெற்றோரையும், உடன் பிறந்தோரை யும், தனது பள்ளியையும், தனது நாட்டையும் நேசிக்கக் கற்றுக் கொள்ளவில்லையெனில், ஆழ்ந்த பேராசை படைத்த தன்னலம் அவனது குணநலன்களில் பதிந்திருக்குமேயானால், அவன் தேர்ந்தெடுத்த பெண்ணின் மீது ஆழ்ந்த அன்பைச் செலுத்த இயலாதவனாகத் தான் இருக்க முடியும். ஆன்டன் மெகரன்கோ

★ ஓர் இளைஞன் தனது பெற்றோர், தோழர்கள், நண்பர்களிடம் அன்பு செலுத்தாதவனாக இருந்தால், அவன் அவனது மனைவி யிடமும் அன்பு செலுத்தாதவனாகத்தான் இருப்பான். பாலியலற்ற அவனது அன்பு எவ்வளவு அகன்றதாக உள்ளதோ, அவ்வளவு பெருந்தன்மை கொண்டதாக அவனது பாலியல் அன்பு இருக்கும்.

ஆன்டன் மெகரன்கோ

★ நமது குழந்தைகளிடம், நமது அன்பைப் பற்றி, பேரறிவுடன் அடிக்கடி அதிகமாகப் பேசாமல் இருக்கும் அளவுக்கு, அவர் களின் வருங்கால அன்பு அதிக அழகு நிறைந்ததாக இருக்கும்; ஆனால் நமது இந்த அரிதான அன்பு வெளிப்பாடு, குழந்தைகளின் பழக்க வழக்கங்களை அடிக்கடி கண்காணிப்பது என்பதுடன் கைகோர்த்துச் செல்வதாக இருக்க வேண்டும்.

ஆன்டன் மெகரன்கோ

★ முதலில் நமது குழந்தைகளுக்குக் கற்றுத் தந்து, பின்னர் அவர் களிடமிருந்து கற்றுக் கொள்கிறோம். இதில் ஆர்வம் அற்று இருப் பவர்கள், காலத்தால் பின் தங்கிவிடுபவர்கள் ஆவர்.

ஜானிஸ் ரெய்னிஸ்

★ தன் குழந்தைகளின் வாழ்க்கையை அவர்களுக்காக ஏற்பாடு செய்ய முயலும் ஓர் அன்பான தாய், பெரும்பாலும் அவளது குறுகிய கருத்துகளினால் அவளது விருப்பங்களின் குறுகிய கண்ணோட்டத்தினால், கேட்கப்படாத அவளது கவனிப்பு என்னும் உற்சாகத்தினால், அவர்களின் கைகால்களைக் கட்டிவிடுபவளாக ஆகிவிடுகிறாள்.

திமிட்ரி பிசரேவ்

★ வாழ்க்கையின் இன்றியமையாத நேரங்களில், தந்தைக்கும் தாய்க்கும் ஆதரவளிக்கும் ஒருவராக இருப்பது சிறந்ததாகும், ஆனால் அவர்களின் சிறுமையான, பொருளற்ற கோரிக்கை களின் மீது அதிகக் கவனம் செலுத்துவது, ஓர் இன்றியமையாத, விடுதலையான, துணிவான திறமையைக் குறைத்துவிடவே செய்யும்.

அலெக்சாண்டர் கிரிபோயேடோவ்

# குப்பைக் கூலப் புத்தகங்கள்

★ பெரும்கலை என்பது அதன் எல்லைகளைக் கடந்தது; ஆனால் பொதுவான கலை என்பதோ அதன் எல்லைகளுக்குள்ளேயும் பொருந்த இயலாதவை ஆகும். ஜேனீஸ் ரெயின்ஸ்

★ படிப்பவரை நீ சோர்வடையச் செய்தால், நீ எவ்வளவு கடினமாக முயன்ற போதும், நீ எப்போதுமே அவனை இந்த உலகத்தை உணர்வால் அறிந்து கொள்ளச் செய்ய முடியாது.

ஏ.என்.தோல்சுதாய்

★ உணர்ச்சி வேகம் என்பது தீமை நிறைந்தது ஆகும். எவ்வளவு ஆழ்ந்த உணர்ச்சி எழுது தாளில் வடிக்கப்பட்டாலும், அதனால் பயனில்லை. புத்தகத்தில் உள்ள அனைத்துமே விரைவாகவும், நல்லாய்வற்றும், முடிக்கப்படாததாகவும் உள்ளன என்ற காரணத்தினால் மட்டுமே, அது ஒளிவிட்டு, ஒரு பரபரப்பை உருவாக்கிப் பின்னர் மறக்கப்படும் நிலைக்குச் செலுத்தப்படுகிறது.

ஏ.என்.தோல்சுதாய்

★ செயற்கைத் தன்மை என்பது, அது தொடும் அனைத்தையுமே மதிப்பற்றதாகவும், ஆதரவற்றதாகவும் ஆக்கிவிடுகிறது.

திமிட்ரி பிசரேவ்

★ குப்பை எழுத்துத் தவிர்க்க இயலாதபடி, கொள்கைகளை முற்றிலும் தவிர்ப்பதாகவே இருப்பதாகும்; அது எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றி அக்கறையின்மையை உருவாக்கி, கடினமான பொருள்களைக் கையாளாமல் ஒதுங்கிச் சென்று விடுகிறது. விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ ஓர் ஆசிரியரின் அச்சடிக்கப்பட்ட ஒரு குப்பைப் புத்தகம், தாங்கள் இதனைவிட மோசமாக எழுத இயலாது என்ற எண்ணத்தை மற்ற இருவரிடம் உருவாக்குகிறது. எழுதப்பட்டுவிட்டதாலும்,

அச்சடிக்கப்பட்டுவிட்டதாலும், இவ் இருவர் மற்ற நால்வரின் பொறாமையைத் தூண்டுகின்றனர். விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ தகுதி நிறைந்த எழுத்துகளை, வணிகக் குப்பைகளில் இருந்து பிரித்தறிவதில் நாம் மிகுந்த திறமை படைத்தவர்கள் அல்லர். இரண்டுமே காண்பதற்கு ஒரு புத்தகம் போன்ற தோற்றத்தைப் பெற்றுள்ளன. உண்மையில், குப்பைப் புத்தகங்களே பெரும்பாலும், நல்ல புத்தகங்களைவிட, மிக அதிகப்படியான பொருட்செலவில் அச்சடிக்கப்படுகின்றன. அலெக்சாண்டர் பிளோக்

★ மிகக் குறைந்த புத்தகங்களே இருக்கட்டும், ஆனால் அவை ஒளி மிக்கவையாக இருக்கட்டும். ஓர் ஒளி மங்கிய புத்தகம், புத்தகப் பேழையில் இருப்பதற்கான எந்தத் தகுதியையும் பெற்றிருக்கவில்லை. ஒரு நேர்மையான உழைப்பாளியின் நேரம் வீணாக்கப்படக் கூடாது. நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ ஒரு கீழ்த்தரமான மனிதன் அனைத்துச் செல்வச் செழிப்புகளையும் நுகர்வதைக் காண்பது போலவே, மிகுந்த பொருட்செலவில் உண்டாக்கப்பட்ட ஒரு கீழ்த்தரமான, ஆழமற்ற புத்தகத்தைக் காண்பதும் அருவருப்பூட்டுவதாகவே உள்ளதாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஆழ்ந்த சிந்தனை கொண்டவர் வேகப்படுவதில்லை. அழகு பெருமிதத் தோற்றம் கொண்டதாக இருக்க வேண்டும்.

அலெக்சாண்டர் பூஷ்கின்

★ மனித இனம் தகுதியற்ற குப்பைப் புத்தகங்களை படிப்பதிலிருந்து அனைத்து வகைகளிலும் காப்பாற்றப்பட வேண்டும்.

எஸ்.ஐ.வாவிலோவ்

★ ★ ★

# கோட்பாடு, திறனாய்வு, தவறு

## தவறான மதிப்பீடும் புறங் கூறலும்

★ நற்பேறாகத் திறனாய்வு என்பதே திறனாய்வுக்கு உட்படாமல் உள்ள போது, ஓர் அச்சம் தரக் கூடிய படையாக இருக்கக் கூடும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ புறங்கூறுதல் என்பது எப்போதுமே வெறுப்பின் ஒரு செயலாக இருப்பதில்லை. பெரும்பாலும் சளசளவென்ற பேச்சில் ஈடுபடும் அறியாமை மிகுந்த ஆவலில் இருந்தும், சில நேரங்களில் அழகற்றதைப் போன்றே உண்மையானதுமான நல்நோக்குடன் காட்டப் படும் பரிவிலிருந்தும் அது விளைகின்றது.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ வாழ்வின் நிழல் படர்ந்த பகுதியை மட்டுமேயன்றி, வேறு ஒன்றினையும் சித்திரிக்காதது என்பது புறங்கூறுவது என்பதாகாது; ஆனால் அது ஒரு தலைக் காட்சியாகும். புறங்கூறுவது என்பது இல்லாத தவறுகளுக்காக, இருப்பதன் மீது பழி சுமத்துவது என்பதேயாகும்..
விசாரியோன் பெலின்ஸ்கி

ழ நயமற்ற குழப்பவாதிகளே வழக்கமாக அதிகமாக விரும்பப்படும் திறனிகள் ஆவர். எதனை, எவ்வாறு செய்வதென்று அறியாமல், இயன்ற மிக எளிதானதைக் கூட செய்ய இயலாத அவர்கள், மற்றவர்களிடமிருந்து செய்ய இயலாதவற்றை எதிர்நோக்குகின்றனர்.
வி.ஏ. குளூசோவ்ஸ்கி

★ அதிக அறிவு பெற்றவர், மதிப்பீடு செய்து கருத்தை வெளிப்படுத்தும் போது தவறு நேர்ந்துவிடாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் எவ்வாறு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதை அறிந்துள்ளார். செயற்கையான மேம்போக்கானவனே, அனைத்

தையும் பொதுவற்ற அசட்டுத் துணிவில் மதிப்பீடு செய்பவன் ஆவான்.
இலியோ தோல்சுதாய்

★ எட்டிப்பழம் நாவிற்கு எதனைப் போன்றதோ, அதனைப் போன்று செவிக்குப் புறங்கூறல் ஆகும். சோட்ஆ ருஸ்ட்எவெலி

★ துப்பாக்கிகளைப் போன்றே புறங்கூறல் என்பதுவும் ஓர் அஞ்சத் தக்க படையாகும். ஆன்டன் ரூபின்ஸ்டின்

★ பொய்க் குற்றச் சாட்டு என்பது மெய்ப்பிக்கப்படாவிட்டாலும், எதனை அது விட்டு விட்டாலும், எப்போதுமே நிலைத்திருக்கும் சில அடையாளங்களை மட்டும் விட்டு விடு வதில்லை.
அலெக்சாண்டர் பூஷ்கின்

★ பொய்களும், புறங்கூறலும் பண்பற்றவரின் சட்டப்படி அனுமதிக்கப் பட்ட படையாகும். தங்கள் மீது சேறு இறைக்கப்படாமல் தப்பிய மாமனிதர்கள் இவ் உலகில் அரிதானவர்கள். மாக்சிம் கோர்கி

★ பண்பற்றமை என்பது படரும் ஒரு கொடிமுந்திரிக் கொடியைப் போன்றது; எல்லை யற்ற வகையில் பன்மடங்கு பெருக அதனால் இயலும். தனது வழியில் தான் சந்திப்பவை அனைத்தையும் தனது கைகளால் நெறிக்கவே அது விரும்புகிறது.
மாக்சிம் கோர்கி

★ பண்பற்றமை என்பது ஒரு பெருங் கேடாகும். ஓர் ஆற்று அணை நீரைப் போல் தேங்கியிருப்பதைத் தவிர வேறு எந்த நோக்கத்தையும் அது நிறைவேற்றுவதில்லை, எந்தப் பயனையும் விளைவிப்பதில்லை. ஆன்டன் செகாவ்

## தவறு பற்றிய மனநிலை

★ செயலாற்றாதவன் தவறே செய்வதில்லை என்றாலும் உறுதியாக, இதுவே அவனது மாபெரும் தவறாக அமைந்திருப்பதாகும்.
ஏ.என்.தோல்சுதாய்

★ தங்களின் ஒரே தகுதி என்பது எதையுமே செய்யாமல் இருப்பது எண்ணும்படியாக இருப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர்.
வி.ஏ.குளூசெவ்ஸ்கி

★ கற்கும்போது உனது பாடங்களை நினைவில் வைத்திருப்பதற்காக நீ அவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்லிப் பார்த்துப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் நீதியியலில் உனது தவறுகளைத் திரும்பத் திரும்ப நீ செய்யாமல் இருக்க அவைகளை நீ நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.
வி.ஏ.குளூசெவ்ஸ்கி

★ தவறுகளைப் பற்றி அச்சம் கொண்டிராதே. ஏனெனில் அவை தவிர்க்க இயலாதவை என்பதால்.
மாக்சிம் கோர்கி

★ உன்னைக் கண்டு நீயே நகைக்கத் தயங்காதே, தூய்மைப்படுத்திக் கொள்வதைப் போல, தன் திறனாய்வும் இன்றியமையாததே.
மாக்சிம் கோர்கி

★ தவறுகள் மனத்திற்குப் படிப்பினைகளைக் கற்றுத் தருகின்றன.
இலியோ தோல்சுதாய்

★ ஒரு தவறு நேர் செய்யப்பட இயலாததாக ஆகிவிடுவதைவிட, அதனை ஒப்புக் கொள்வதே மிகவும் சிறந்ததாகும்.
இலியோ தோல்சுதாய்

★ மற்றவர்களிடம் சொல்லப்படும் ஒரு பொய், செய்திகளைக் குழப்ப மட்டுமே செய்யும் என்பதுடன், ஒரு தீர்வினைத் தாமதிக்கவும் செய்யும். உன்னிடம் நீயே உண்மையைப் போல் மறைத்து கூறிக் கொள்ளும் ஒரு பொய், உனது வாழ்க்கையையே அழித்துவிடும்.
இலியோ தோல்சுதாய்

★ தவறுகள் என்பவை படிப்பினைகள் ஆகும். அவை நமக்குக் கற்பிக்கின்றன. அவை உண்மைக்குக் கொண்டு சேர்க்கும் பாதையாகும். தவறுகளுக்காக அஞ்சுவதென்பது தவறானது. அவற்றிலிருந்து படிப்பினைகளை நாம் கற்றறிந்து கொள்ள வேண்டும்.
எம்.என்.ஸ்டெபடோவா

★ நேற்றையத் தவறுகளைப் பகுத்தாய்வதன் மூலம், இன்றும் நாளையும் தவறுகளைத் தவிர்க்க நாம் கற்றுக் கொள்கிறோம்.

வி.இ. இலெனின்

★ நமது தவறுகளை ஒப்புக் கொள்ள நாம் அஞ்சவில்லையெனில், அவற்றை நேர் செய்யத் தொடர்ந்த முயற்சிகளை மேற்கொள்ள நாம் அஞ்சவில்லையெனில், நாம் உறுதியாக மிக உயர்ந்த நிலையை அடைவோம்.

வி.இ. இலெனின்

★ ஒரு சிறு தவறு தொடர்ந்து செய்யப்பட்டால், அதனை மெய்மைப் படுத்த ஆழ்ந்த முயற்சி மேற் கொள்ளப்பட்டால், அதனுடைய மெய்யியல் முடிவுக்கு அது எடுத்துச் செல்லப்பட்டால், எப்போதுமே அது அஞ்சத்தக்க அளவை -அடைந்துவிட இயலும்.

வி.இ. இலெனின்

★ மனிதன் தவறு செய்யலாம். ஒரு தவறு என்பது ஒரு பொய் ஆகாது. பல தவறுகளால் கூட ஒரு நல்ல நோக்கத்தை இடிந்து போகச் செய்ய இயலாது. அனைத்தும் அதன் மீது கட்டப்பட்ட கருத்து மட்டுமாவது கறைபடாமல் நிலைத்து நிற்க முடியும். உனது முதல் முயற்சி தோல்வியுற்றாலும், உனது இரண்டாவது முயற்சி வெற்றி பெறவே செய்யும்.

பியோம் தோஸ்தோயெவ்ஸ்கி

★ ஒரு தவற்றை எப்போதுமே செய்யாமல் இருப்பது என்பது ஒரு பொருட்டில்லை; ஆனால் தவறுகளை ஒப்புக் கொண்டு, உனது மனச் சான்றின்படி துணிவுடனும் பெருந்தன்மையுடன் பின்பற்றி நடந்து செல்வது என்பதே இன்றியமையாதது.

விசாரியோன் பெலன்ஸ்கி

★ தனிப்பட்டவன் தனது தவறுகளையும், வலிமைக் குறைவு களையும் மிகுந்த துணிவுடன் காண்பானேயானால், அந்த அளவுக்கு அவன் வலிவுடையவனாவதுடன், அவனது அறக் கோட்பாடுகளும் உயர்ந்தவையாகவும் இருக்கும்.

விசாரியோன் பெலன்ஸ்கி

★ ஒரு மனிதன் தன்னிடமே எதனையும் மறைக்காமல் இருந்தால் மட்டுமே, அவனில் அவன் நம்பிக்கை கொண்டவனாக இருப்பான்.

பி.ஏ.பவரெங்கோ

★ வலிவானவன் தவிர வேறெவரும் தனது தவறுகளை ஒப்புக் கொள்ள மாட்டார்கள், நயமானவர்களாக இருக்க மாட்டார்கள், மன்னிப்பவர்களாக இருக்க மாட்டார்கள். அவனது சிரிப்பு பெரும் பாலும் கண்ணீருடன் இணைந்ததாக இருந்தாலும், வலிவான வனைத் தவிர வேறெவராலும் சிரிக்க இயலாது.

அலெக்சாண்டர் எர்சன்

★ தங்களது தவறுகளை ஒப்புக் கொள்ளத் தயங்குபவர்கள், நாளடை வில் வெட்கமின்றி மாபெரும் கேடான தங்களது அறியாமையை நிலைநாட்டிக் கொள்வர். ஜி.எஸ். ஸ்கோவோரோடா

★ நேர்மையான தன் திறனாய்வு என்பது மனசான்றின் குரலாகும்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

## நோக்கமும் கருத்தும்

★ ஒருவரது வாழ்க்கையின் நோக்கம் என்பது ஒருவரது மனிதப் பெருமை மற்றும் மகிழ்ச்சியின் சுழல் அச்சாணியாகும்.

கான்ஸ்டாண்டின் உசின்ஸ்கி

★ ஒரு மனிதனின் ஒவ்வொரு விருப்பத்தையும் நீ நிறைவேற்றி னாலும், வாழ்வின் அவனது நோக்கத்தை நீ மறுப்பாயானால், அவன் மகிழ்ச்சியற்றவனாகவும் இழிவானவனாகவுமே இருப்பான்.

கான்ஸ்டாண்டின் உசின்ஸ்கி

★ எளிய மக்களின் துன்பத்தைக் குறைத்தல், மகிழச்சியினை அதிகரிக்கச் செய்யல் என்ற இந்த நோக்கத்தினாலேயே அனைத்து அறிவார்ந்த, நேர்மையான மக்களனைவரும் அறிந்தோ, அறியா

மலோ நேரடியாகவோ, மறைமுகமாகவோ கவர்ந்திழுக்கப்படு கின்றனர். திமிட்ரி பிசரேவ்

★ தனிப்பட்டவரின் வாழ்க்கைப் போராட்டம், உறுதியான ஒரு குறிக் கோளுக்காக முழு மனத்துடன் பாடுபடுதல் என்று மாறும்போது, அவன் தான் மகிழ்வுடன் இருப்பதாகக் கருதிக் கொள்ள இயலும்.
திமிட்ரி பிசரேவ்

★ வாழ்வின் பொருளே அதன் அழகிலும், ஒரு குறிக்கோளுக்கான விழைவிலுமே உள்ளது; அதனால் ஒவ்வொரு கணமும் அதனுடைய மிகவுயர்ந்த குறிக்கோளைப் பெற்றிருக்க வேண்டுமென்பது இன்றி யமையாததாகிறது. மாக்சிம் கோர்கி

★ மனிதன் தனக்கான மிகவுயர்ந்த குறிக்கோள்களைப் படைத்துக் கொள்ள வேண்டும். மாக்சிம் கோர்கி

★ வாழ்வின் நோக்கமே முன்னேறிச் செல்வதென்ற பயணமேயாகும்.
மாக்சிம் கோர்கி

★ நான் காண்பதைப் பொறுத்தவரை, தனக்காகப் பெரிய நோக்கங் களைப் படைத்துக் கொண்டு, அவற்றுக்காக முதன்மையாகத் தன்னால் இயன்ற அளவிலும் போரிடுபவன் மட்டுமே மகிழ்வுடன் இருக்க இயலும். மைக்கேல் காலனின்

★ மிகவுயர்ந்த குறிக்கோள்களுக்காகப் பாடுபடுபவர்களின் உடைமையே வீரம் என்பது. அபுல் காசிம் பிர்தோசி

★ மனிதர்கள், அவர்கள் தங்களுக்காகப் படைத்துக் கொள்ளும் குறிக் கோள்களினாலேயே, அளவிடப்படுகின்றனர்.
என்.என்.மிக்வகோ - மகாலி

★ ஒரு மனிதன் ஏதோ ஒன்றினுக்காகத் தனது உயிரையும் இழக்க அணியமாய் இருக்கவில்லையென்பது நன்றன்று.
இலியோ தோல்சுதாய்

★ மக்கள் நீண்ட நெடுங்காலமாக இவ் உலகை ஒரு புயல் நிறைந்த தொரு பேரழியாகவே கருதி வந்திருந்த போதும், அதனில் ஒரு திசை காட்டியுடன் பயணம் செய்பவனுக்கு அது ஒரு பொருட்டே யில்லை. நிகலாய் கராம்சின்

★ வாழ்க்கையில் உனக்கென ஒரு குறிக்கோளை, நீ படைத்துக்கொள்ள வேண்டும். ஆனால், உறுதியாக, உன்னால் அடைய இயன்ற ஒன்றைப் படைத்துக் கொள்ளத் தேவையான நல்லறிவை நீ பெற்றிருப்பாயாக! நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ மனிதர்களிலேயே கீழானவன் எந்த எதிர்பார்ப்புகளையும் பெற்றி ராதவனேயாவான். அபாய் குனாள்பயேவ்

★ ஆர்வமின்றேல் எந்த நோக்கமும் இல்லை, நோக்கமின்றேல் எந்த செயல்பாடுமில்லை, செயல்பாடின்றேல் வாழ்க்கை என்பதே இல்லை. ஆர்வம், நோக்கம், செயல்பாடு ஆகியவை சமூக வாழ்க்கை யிலேயே தங்களது தோற்றத்தைப் பெற்றுள்ளன.
விசாரியோன் பெலன்ஸ்கி

★ ஆக்க நிலையிலான குறிக்கோள்களை உனக்காகப் படைத்துக் கொள். ஏதோவொன்றினை எதிர்த்து மட்டுமல்லாது, நன்மை யான ஏதோவொன்றிற்கு ஆதரவாகவும் நாம் போரிட வேண்டும்.
இ.ஐ. மார்ட்சினோவ்ஸ்கி

★ ஒரு பாதை குறிக்கோளுக்கு அழைத்துச் செல்லுமேயானால், அதன் நீட்சி ஒரு பொருட்டேயன்று. இ.ஐ. மார்ட்சினோவ்ஸ்கி

★ ஒரு விருப்பமான எதிர்பார்ப்பு, ஒரு தூய்மையான தோற்றத்தி லிருந்து உருவாகுமேயானால், அது தனது குறிக்கோளில் முழுமை யான வெற்றியடையாமல் குறைவுபட்டதாக இருந்தபோதும், அது மாபெரும் நன்மைகளை விளைவிக்கவே செய்யும்.
இவான் துர்கனேவ்

★ தனக்கென ஒரு பெரும் குறிக்கோளைப் படைத்துக் கொண்டவர்,

தன்னைப் பற்றிய அனைத்துச் சிந்தனைகளையும் கைவிட்டு விடவே வேண்டும். இவான் துர்கனேவ்

★ இன்றியமையாதவாறு மாறுபட்டுள்ள நிலைகளுக்கிடையே மிகச் சரியாக வேறுபடுத்திக் காண்பது, அவை நிகழ்ந்த சூழ்நிலை களை மனத்தெளிவுடன் ஆய்வது என்பவை ஒருவரது முடிவான குறிக்கோளினைக் கால வரையற்றுத் தள்ளி வைப்பதென்றோ, ஒன்றின் முன்னேற்றத்தை வேண்டுமென்றே தாமதிக்கச் செய்வ தென்றோ பொருளளிக்காது. வி.இ. இலெனின்

★ கெடுதலான, இழிவான சூழ்நிலைகளில் ஓர் உயர்ந்த குறிக்கோள் வார்க்கப்படின், இழிவான, முட்டாள்தனமான விளைவுகளையே அதனால் உருவாக்க இயலும். வி.ஏ. குளூசேவ்ஸ்கி

★ குறிக்கோளிலிருந்து குறைவுபடுவது மட்டுமே இலட்சியமற்ற தில்லை, ஆனால் குறிக்கோளை மீறியடைவது என்பதுவுங்கூட குறிக் கோளற்றதுதான். வி.ஏ. குளூசேவ்ஸ்கி

## புறக்கணிப்பு

★ மனிதத் தன்மை என்பது எந்த ஒரு மனிதனுக்கு அயன்மையாக இருக்கிறதோ, தனது நாட்டின் அல்லது பிற மக்கள் வெள்ளத் தின் நலன் பற்றி எவன் ஒருவன் அக்கறையற்று இருக்கிறானோ, அவனை விட தொல்லை நிறைந்தவன் வேறெவனும் இருக்க முடியாது. எம்.இ. சால்டிகோவ் செசட்ரின்

★ ஒரு நேர்மையானவரின் கன்னத்தில் அறையப்பட்டால், அனைத்து நேர்மையான முகங்களும் அந்த வலியை, அந்த மானக்கேட்டைக் தீங்கிழைக்கப்பட்ட மனிதப் பெருமையின் மனக் கவலையை வேதனையை உணர வேண்டும்.
இலியோனிட் ஆண்டிரியேவ்

★ புறக்கணிப்பு என்பது உள்ளுயிரின் ஓர் இயக்கமற்ற தன்மையும், உரிய காலத்திற்கு முன்னதாக ஏற்படும் இறப்பும் ஆகும்.
ஆன்டன் செகாவ்

★ புறக்கணிப்பைப் பற்றி மிக்க விழிப்புணர்வுடன் இரு. ஏனெனில் அது உள்ளுயிர்க்கு அழிவை ஏற்படுத்துவது ஆகும்.
மாக்சிம் கோர்கி

★ புறக்கணிப்பு என்பது வலிமை படைத்தவர்களுக்கு, ஆள்பவர்க்கு மறைமுக ஆதரவு அளிப்பதாகும். வி.இ. இலெனின்

★ ஒருவர் விரும்ப இயன்றது போல, வெறுக்க இயலாதவாறு வாழ்க்கை தீயகுணம் மிகுந்த கலைநுணுக்கம் நிறைந்ததாக உள்ளது.
மாக்சிம் கோர்கி

★ தீயவற்றில் ஈடுபடுவது என்பது நற்தன்மையைப் பற்றிய புறக்கணிப்பின் மிக நெருக்கமாக அழைத்துச் செல்வதாகும்.
நிகலாய் லெஸ்கோவ்

## ஆர்வமும், ஊக்கமும்

★ பொதுவுடைமைக் கருத்துகளை உன்னுள் விதைத்துக் கொள்ள நீ ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். மைக்கேல் கால்னின்

★ ஆர்வமின்றி வரலாற்றில் எந்தப் பெரிய முன்னேற்றமும் எட்டப் பட்டதில்லை. அது ஒழுக்க வலிமையைப் பன்மடங்காக்குவதுடன், மனிதத் திறன்களைக் கூர்மைப்படுத்துவதால், ஒரு பெரும் முன்னேற்ற ஆற்றலாகத் திகழும் உரிமையினை அது பெற்றுள்ளது.
ஜி.வி.பிளக்னோவ்

★ அமைக்கப்பட்டுக்கொண்ட குறிக்கோளின்பால் கொண்ட ஆற்றலே, ஊக்கம் என்பது. பி.ஏ.பவலென்கோ

★ உறுதியான தீவிரமான ஆர்வம், ஒருவன் நாட்டின்பால் காட்டப் படும் தணியாத நேயம், துணிவு, ஊக்கம், ஆர்வம் ஆகியவற்றி லிருந்து பிறப்பதே வெற்றியாகும். இது ஒரு தனிப்பட்ட செயல் பாட்டினால் மட்டுமே பெறப்படுவதில்லை. ஆனால் அனைத்து ஆற்றல்களையும் நெருக்கமாக ஒன்றிணைப்பதன் மூலமும், மெல்லவேனும் மலைகளை உறுதியாக நகர்த்தும் ஒரு நிலை யான ஈகத்துடனும், இதுவரை கண்டறியப்படாத இருண்ட பகுதி களில் நுழைந்து, அவற்றைப் பருதி ஒளிக்கதிர்கள் வீசுவதற்காகத் திறந்து வைப்பதானாலும் கூட, அதனைவிட மேலாக வெல்லப் படுவதாகும். மைக்கேல் லோமோனோசோவ்

★ விழைவு என்பதுவே ஒரு பழக்கமாக மாறும்போது தீயொழுக்க மாக மாறுகிறது. அதுவே பழக்கத்திற்கடிமையாகாமல் கட்டுப் படுத்திக் கொள்ளும் போது, ஒரு திறமையாக ஆகிறது.
வி.ஏ.குளூச்செனோவ்ஸ்கி

★ ஒளிரும் விழைவுகளின் அடியில், பெரும்பாலும் நாம் ஒரு வலு விழந்த மனஉறுதியைத் தவிர வேறெதனையும் காண்பதில்லை.
வி.ஏ.குளூச்செனோவ்ஸ்கி

★ ஆர்வம் என்பது வாழ்க்கையின் கவிதையும் நறுமண மலரு மாகும், ஆனால் நெஞ்சம் உறுதியற்றதாயிருந்தால், அதனால் ஏற்படும் நன்மைதான் என்ன? விசாரியோன் பெலன்ஸ்கி

## குற்றங்காணல்

★ திறனாய்வு செய்வது என்பது ஒரு புரட்சியாளரின் கடமையாகும்.
வி.இ. இலெனின்

★ புரட்சிகரமான உழைப்பாளிகளின் கட்டமைப்புத் தன்னைப் பற்றியே வெளிப்படையாகக் குறை கூறும் வலிமை படைத்ததாய் உள்ளது என்பதுடன் தவறுகளையும், வலிமைக் குறைவுகளையும்

அவற்றின் சரியான பெயரிட்டுத் தெளிவாக அழைக்கவும் தயக்கம் காட்டாது. வி.இ. இலெனின்

★ ஒவ்வோர் உயிர்ப்புள்ள, விரைவு நிறைந்த கட்சிக்கும் தன்னைத் தானே திறனாய்வது என்பது அடிப்படையில் இன்றியமையா தது. ஆக்க நிலையான திறனாய்வை வெறுத்து ஒதுக்கி எல்லாம் நன்மைக்கேயென நிறைவடைவதைவிடச் சோர்வளிப்பது வேறெதுவும் இல்லை. வி.இ. இலெனின்

★ வருத்தமளிக்கும் கசப்பான உண்மையை நேரடியாகப் பேச அஞ்சுபவர்களாக நாமில்லையெனில், நமது துன்பங்கள், இடையூறுகள் அனைத்தையும் கடக்க நாம் தவறாமல், உறுதியாகக் கற்றறிந்து கொள்ளவே செய்வோம். வி.இ. இலெனின்

★ தற்போதுள்ள கேடுகளை மூடி மறைக்காதே. ஆனால் அதற்குக் கட்சியின் கவனத்தை அழைத்து வந்து, அந்தக் கேட்டினை நீக்குவதற்காக பணியாற்றுமாறு அனைத்துக் கட்சி உறுப்பினர்களையும் கேட்டுக் கொள். வி.இ. இலெனின்

★ தவறுகளால் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது. அது தீமை நிறைந்ததாகும். வி.இ. இலெனின்

★ கசப்பான, அழகுபடுத்தப்படாத உண்மையை அதன் முகத்திற்கெதிரே துணிவுடன் நாம் காண வேண்டும். வி.இ. இலெனின்

★ ஒரு கேட்டினை மிக உறுதியுடன் போரிட்டு அழிக்க, அதனை அச்சமின்றி ஒப்புக்கொள்ள நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.
வி.இ. இலெனின்

★ விளம்பரமென்பது ஒரு கத்தியைப் போன்றது; ஏனெனில் அது ஏற்படுத்திய புண்களை அதுவே ஆற்றுகிறது.
வி.இ. இலெனின்

★ முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுவிட்ட தவறுகளை மறுபடியும் திரும்ப நினைவுப்படுத்திக் கொள்வதென்பது, அதற்காகக் குறிப்பிட்ட ஒரு காரணம் இருந்தாலன்றி, தவறானது.

வி.இ. இலெனின்

★ ஒருங்கிணைந்து பணியாற்றுவதென்பது, குறை கூறப்படுவதைப் சரியான உணர்வுடன் ஏற்றுக் கொள்வதும் மற்றவர்களின் தவறுகளைப் பற்றி குறைகூறத் தயங்காததும் ஆகும்.

என்.டி.ஜெலன்ஸ்கி

★ ஒரு நோயை நீ குணப்படுத்த வேண்டுமெனில், முதலில் அதன் காரணத்தைச் சரியாகக் கண்டறிந்து அதனை வெளிப்படுத்த வேண்டும், அதுதான் தீவிரம் மிகுந்த, பயன்மிக அளிக்கக்கூடிய வழியாகும்.

பெலிக்ஸ் ஜெர்சென்ஸ்கி

★ ஒரு கேட்டின் காரணத்தைக் கண்டறிவதென்பது, அதற்கு மாற்றைக் கண்டு கொள்வது போலவே நெருங்கிய நன்மை பயப்பதாகும்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஏதோவொன்றில் ஒரு குறையைக் கண்டுபிடிப்பதென்பதனால் மட்டுமே, இந்த ஒன்று தவறானது என்று கூற இயலாது.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ மற்றொருவரின் செயல்களைப் பற்றி கடுமையாக திறனாய்பவர், அதனை இன்னமும் நன்றாகச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ என்னுள்ளே இல்லாத, மற்றவர்களிடமாவது இருக்கக் கூடிய ஒரு தவறான கருத்தினைப் பொறுத்துக் கொள்வதை, ஏற்றுக் கொள்ள என்னால் இயலுமென்றாலும், இழிதன்மையைப் பொறுத்துக் கொள்வது என்பதை மட்டும் என்னால் எப்போதுமே ஏற்றுக் கொள்ள முடியாது.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ அனைத்துமே அமைதியாகவும், முறையாகவும் இருந்து, பண்பாடு கொண்ட பாராட்டுகளையும், தலையசைப்பையும் பெற்றிருந்தால், அங்கு நேர்மையின்மை, ஏமாற்று, அறியாமை ஆகியவை நிறைந்திருக்க எல்லையற்ற வாய்ப்பு இருக்கவே செய்யும்; குற்றம் சாட்டப் படவோ, உண்மையென்னும் எச்சரிக்கை சொல்லைப் பற்றிப் பேசவோ அங்கு எவரும் இருக்க மாட்டார்கள்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ முகத்திற்கெதிரே தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு அனைத்துக் கேடுகளையும் நீக்கியதாக இருக்க வேண்டும். அதுவே நமது தூய்மை, வலிமையின் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

விளாடிமீர் மாயாகோவ்ஸ்கி

★ குறைகூறி திறனாய்வது என்பது நல்ல உடல்நலம் மிக்க குருதி ஓட்டத்தைப் போன்றது. அது இல்லையெனில் வீக்கம் நிறைந்த உடல்நலமின்மை என்பது தவிர்க்க இயலாதபடி அங்கு இருக்கவே செய்யும்.

நிகலாய் ஓஸ்ட்ரோவ்ஸ்கி

★ திறனாய்வு என்பது தவற்றின் ஓர் இடரான எதிரியும், புரட்சிகரமான அறிவுரையென்றாலும், ஏமாற்றுதல் என்பதின் எதிரியும் ஆகும்; உண்மை என்னும் நம்பிக்கை மிக்க தூணாகும் அது. அது, அதன் தாயும், செவிலியும், நண்பனும் பாதுகாவலரும் ஆகும். உண்மை யென்பது திறனாய்வு என்பதன் மீதே நிலைத்து வாழ்வது ஆகும்.

ஜி.வி.பிளக்கனோவ்

★ திறனாய்வு என்பது செயல்களின் சாதனைகளையும் குறைகளையும் வெளிப்படுத்துவதால், பேரறிவாளருக்கும் அது தேவையானதே.

என்.ஏ. பெஸ்குசேவ்

★ அழுகிய மனம் படைத்தவன் மட்டுமே திறனாய்வினால் தொடப்பட அஞ்சுவான். காற்றடிக்கும்போது மண்ணில் வீழும் எகிப்திய பதப்படுத்தப்பட்ட பிணம் போன்றவன் அவன்.

திமிட்ரி பிசரேவ்

★ பொய்மையை வளர்க்கும் சூழ்நிலைகளைப் புறக்கணித்துவிட்டு உண்மையை வேண்டுவதென்பது, நன்கு அமைக்கப்படாத தொரு சாலையில் மழை கொட்டும்போது சேறு இருக்கக்கூடாது என்று வேண்டுவது போன்றதாகும். திமிட்ரி பிசரேவ்

★ தவறுகள் பற்றிய திறனாய்வு, கட்டுமானம் என்பதனால் ஆளப்படுவது. நமக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் நாம் இன்னமும் செங்குத்தாக ஏறி உயரே செல்ல வேண்டுமென்பதுதான். நமது கட்டுமானப் பணிகள் அனைத்து வகையான எதிர்மறைச் சிந்தனை, செயல்களால் உருமாற்றம் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதாலேயே நாம் குறை கூறுகிறோம்.

மைக்கேல் கால்னின்

★ நீ அறிந்துள்ளது போல், நமது நாட்டில் தவறுகளைப் பற்றித் திறனாய்ந்து குறை கூறுவது என்பது கட்டுப்பாடற்ற உரிமை பெற்றதாக இருப்பதுடன் இன்றியமையாத தேவையாகவும் இருக்கிறது. உறுதியாக அது உண்மை என்பதின் அடித்தளத்தின் மீதே அமைந்திருக்க வேண்டும். மைக்கேல் கால்னின்

★ தீயவை அனைத்தும் போரிட்டு அழிக்கப்பட வேண்டும். அவை பொறுத்துக் கொள்ள இயலாதவை. அவற்றுடன் உடன்பாடு செய்து கொள்வதென்பது ஒழுக்கக் கேடாகும்,

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ பல ஆண்டு காலமாக வேலை செய்து கொண்டே இருந்ததால் ஏற்பட்ட துன்பங்களைத் தாங்கிக் கொள்வது என்பது, துன்பங்களைத் தாங்கிக் கொள்வதிலேயே குறிப்பிடத் தகுந்த ஒரு வகையாகும். தவறுகளைப் பற்றி அறிவார்ந்த முறையில் ஊளையிடுவது ஏதுவும் அதற்குத் தேவையில்லை. முழக்கங்கள் செய்வதும் சொற்களை வீசுவதும் மதிப்பற்றவை. பேசுவதைவிடச் செயலாற்றுவதே மேலானது. வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ மனிதன் உண்மையிலேயே எதனைப் போன்று இருக்கிறான் என்று அவனுக்கு நீ காட்டும்போது, அவன் தான் நன்றாக இருப்பதாக உணர்கிறான். ஆன்டன் செகாவ்

★ உண்மை என்பது பரிவிரக்கத்துக்கு அப்பாற்பட்டது.
மாக்சிம் கோர்கி

★ அனைத்து மக்களும் உண்மையைப் பேச இயன்றவர்களாக இருப்பதில்லை.
மாக்சிம் கோர்கி

★ திறனாய்வு செய்வதற்கான உரிமையை நீ பெற்றிருக்க, சில உண்மைகளில் நீ நம்பிக்கை கொண்டவனாக இருக்க வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ 'இது சரியானதில்லை' என்று சொல்வது மட்டும் போதாது; 'இங்கு, இவ்வாறு அது சரியில்லை' என்று நீ சேர்த்துக் கூற வேண்டும்.
மாக்சிம் கோர்கி

★ உண்மையில் அன்பு செலுத்துபவனால் மட்டுமே கண்டனம் செய்யவோ, திட்டவோ இயலவும் கூடும்.
இவான் துர்கனேவ்

★ தகுதியற்ற, ஒவ்வாத ஓர் உண்மையென்பது ஒரு பொய்யைவிட இழிவானது. அதைப் போன்றே பொருத்தமற்ற கேள்வியும் குழப்பத்தை உண்டாக்கி, தாக்கம் ஏற்படுத்த மட்டுமே செய்யும்.
இவான் துர்கனேவ்

★ அனைத்து எதிர்மறையான எண்ணங்கள், உணர்வுகளுடன் வளரும் மனம் பாலையாக வறண்டு போய்விடும்.
இவான் துர்கனேவ்

★ மற்றவர்களிடம் உண்மை பேசுவதற்கு நீ கற்றுக்கொள்ள வேண்டுமெனின், முதலில் நீ உன்னிடமே உண்மை பேசுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.
இலியோ தோல்சுதாய்

★ தான் மெய்ப்பிக்கும் தவறுகளை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதை எடுத்துக்காட்டாதவரை, திறனாய்வென்பது தகுதியற்றதேயாகும்.
இலியோ தோல்சுதாய்

★ மனித மனத்தின் தவறான கண்ணோட்டங்களைப் பெருந்தன்மையான ஆர்வத்துடன், ஆனால் சீற்றம் இன்றி எடுத்துக்காட்டு.
நிகலாய் கராம்சின்

★ தவறுகளைக் குறிப்பிடுவதனால் சிறிதளவே பயன் இருக்கும்; ஒரு தகுதி படைத்த மனிதன் அதற்குப் பதிலாக, மேலான ஏதோ ஒன்றினை அளிக்க வேண்டும். மைக்கேல் லோமனசோவ்

★ மற்றவர்கள் உன்னிடம் கடுமையாக இருப்பதை நீ விரும்பவில்லை யெனில், நீ உன்னுடனேயே கடுமையாக இரு.
இலியோனிட் லியோனோவ்

★ மற்றவர்களின் தவறுகளை மன்னிக்க இளமையிலேயே கற்றுக் கொள்; ஆனால் உனது தவறுகளை எப்போதுமே மன்னிக்காதே.
ஏ.வி. சுவரோவ்

★ சில மக்களுக்கு உண்மையின் ஒவ்வொரு சொல்லுமே, அது மிகைப் படுத்தப்படாததாக உள்ளபோது, கடுமையானதாக ஒலிக்கும்.
நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

## கோட்பாடு, குறிக்கோள்

★ ஒரு கோட்பாட்டுடன் வடிமைக்கப்பட்ட நிறைந்த நோக்கங்கள் கொண்ட வாழ்க்கை, பொது நலன் என்பதுடன் பிணைக்கப்பட் டிருப்பின், இவ் உலகில் மிகச் சிறந்ததும், ஆர்வம் மிக்கதுவுமான வாழ்க்கையாக அது இருக்கும். மைக்கேல் கால்னின்

★ வாழ்க்கையில் எந்த குறிக்கோளையோ, நோக்கத்தையோ கொண்டி ராதவன் பரிவுடன் நோக்கும் காட்சிக்கு உரியவன் ஆவான்.
இவான் துர்கனேவ்

★ ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தான் நேசிப்பதற்கு ஏதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். தான் நம்பிக்கை கொள்ள இயன்ற ஏதோ ஒன்றினைப் பெற்றிருக்கவேண்டும். அவனது வாழ்க்கைக்குப் பொருள் அளிக்கக்கூடிய ஏதோ ஒன்றினைப் பெற்றிருக்க வேண்டும். லினாய்ட் ஆன்ட்ரயேவ்

★ மனிதன் ஒரு குறிக்கோளை, நோக்கத்தைப் பெற்று இருக்க வேண்டும். ஆனால் இயற்கையுடன் ஒட்டியதான, இயல்புக்கு ஏற்றதான ஒரு மனிதநேயம் கொண்ட நோக்கமாக இருக்க வேண்டுமே யன்றி, இயல்புக்கு மாறுபட்ட ஒன்றாக இருக்கக் கூடாது.

வி.இ. இலெனின்

★ கருத்துகள் மக்களை ஆட்கொண்டுவிடும்போது, அவை ஒரு ஆற்றலாக ஆகிவிடுகின்றன.

வி.இ. இலெனின்

★ பெரும்பாலும் மக்களின் கோட்பாடுகள், அவர்களது நாக்குத் தோலை விட அதிகமான அளவில் அவர்களில் ஆழமாகப் பதிந்திருப்பதில்லை.

வி.இ. இலெனின்

★ ஒரு குறிக்கோள், நோக்கம் என்பது வழிகாட்டும் ஒரு துருவ விண்மீனாகும். அது இல்லாமல், மேற்கொள்ளப்பட ஒரு சரியாக அமைக்கப்பட்ட பாதை இருக்க இயலாது. அத்தகைய பாதையின்றி வாழ்க்கை என்பதே வாழ்வதற்குத் தகுதியுள்ளதாக இருக்க இயலாது.

இலியோ தோல்சுதாய்

★ முன்னம் இருந்த நோக்கத்தைவிட உயர்ந்த ஒன்று மனித இனத்தின் முன் படைக்கப்பட்ட அந்தக் கணமே, அதற்கு முன்பிருந்த அனைத்து நோக்கங்களும் செங்கதிர்க்கு முன் விண்மீன்களைப் போல தங்களது ஒளியையும், கவர்ச்சியையும் இழந்துவிடுகின்றன. மக்களும் செங்கதிரைக் காணத் தவற இயலாதது போன்றே அத்தகைய உயர்ந்த நோக்கத்தை ஏற்றுக் கொள்ளத் தவற இயலாது.

இலியோ தோல்சுதாய்

★ எந்த ஒரு நோக்கத்தையும் பெற்றிராமல் இருப்பது என்பதும் ஏதோ ஒரு வகையில் முன்னேற்றம் பெற வேண்டுமென்ற தெளிவற்ற ஒரு ஆவல்கூட இல்லாமல் இருப்பது என்பதும், ஒரு முன்னேற்றமான உலகத்தை எப்போதுமே உருவாக்க இடமளிக்காது.

மாக்சிம் கோர்கி

★ மனிதன் தனது இரு கால்களாலும், இரு கைகளாலும் இயங்கி நடந்து செல்லும் ஆற்றலை அவனுக்கு இயற்கை அளிக்க மறந்து விட்டபோது, நோக்கமெனும் ஓர் ஊன்றுகோலை அவன் சார்ந்து கொள்ள அளித்துள்ளது. அப்போது முதற் கொண்டே அவன் தன் நினைவின்றி ஒரு முன்னேற்றமான உலகைப் படைக்கப் பாடுபடத் தொடங்கிவிட்டான். மாக்சிம் கோர்கி

★ நோக்கத்தினால் கடையப்பட்ட பின்னும், இன்னமும் உருப்பெறாத நிலையில் இருந்தாலும், அடைய இயலக் கூடியதாக மனத்தினால் முன்னமேயே கற்பிக்கப்பட்டுக், காட்சியாக்கப்பட்டுள்ள பழுதற்ற நிறைவினையே வாழ்க்கை தேடுகிறது.

மாக்சிம் கோர்கி

★ நோக்கத்தின் மீது கொண்டுள்ள நேயம் என்பது ஈகம் என்பதை நோக்கி எல்லையற்றுத் தீவிரமாகச் சார்ந்திருக்கும் ஒரு துடிப்பான உணர்வாகும். மாக்சிம் கோர்கி

★ ஒரு நோக்கத்தினால் தூண்டப்பட்டதாக இல்லையெனின், ஒரு மனிதனின் பணி இழிவானதாகவே இருக்கும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ தெளிவான, உள்ளுணர்வு கொண்ட கோட்பாடுகள் ஒரு மனிதனுள் சமூகத்தின் செல்வாக்கினாலோ இலக்கியத்தின் துணையினாலோ உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ ஒரு தனிப்பட்ட மனிதன் வலிமை மிகுந்த கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகைய கோட்பாடுகள் எதுவுமற்றவர்களைத் தவிர அனைத்து இதர மக்களும் தங்கள் கோட்பாடுகளை வளர்த்துக் கொண்டு பரப்பச் செய்கின்றனர். அத்தகைய கோட்பாடு எதுவுமற்று நீ இருப்பதற்கு ஒன்று நீ மூடனாக இருக்க வேண்டும் அல்லது நேர்மையற்றவனாக இருக்க வேண்டும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ *நீ சரியாகச் செயல்பட்டுப் பயன்நிறைந்தவனாக இருப்பதற்கு நேர்மையானவனாக இருந்தால் மட்டும் போதாது, ஆனால் நிலையான, தொடர்ந்த சிந்தனையினை நீ பெற்றிருக்க வேண்டுமென்பதும் இன்றியமையாததாகும்.* நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ *பெருந்தன்மையான நோக்கங்களின்றி மனித இனம் நிலைத்து உயிர் வாழ்ந்திருக்க இயலாது.* பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ *அன்பு என்பது இல்லாவிட்டால், மனித இனத்தின் அனைத்து எதிர்பார்ப்புகளிலும், அனைத்து உழைப்பிலும் ஏற்படக் கூடிய பயன் என்னவாக இருக்க முடியும்?* மைக்கேல் லெர்மோன்தோவ்

★ *ஒரு நோக்கத்தைப் பெற்று உயிர்வாழ்ந்து இருப்பவன், அவன் தன் நோக்கத்தை கைவிட்டு விட்டாலன்றி, பயனற்றவனாக இருக்க இயலாது.* பெலிக்ஸ் ஜெர்ஜென்ஸ்கி

★ *உனது கோட்பாடுகளைத் தெரிவிப்பதற்குத் தேவையான துணிவைப் பெற்றிடு.* இவான் செச்சனோவ்

★ *ஒரு கோட்பாடு என்பது உன்னுடையது என்பதற்காக அன்றி, அதன் பல்வேறுபட்ட தன்மைகளுக்காகப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும்.* விசாரியோன் பெலின்ஸ்கி

★ *தனது கருத்துகளுக்காக உறுதியாக நிற்க முடியாதவன், அவனது மனசான்றுக்கு ஓர் இரண்டகனாவான்.* விசாரியோன் பெலின்ஸ்கி

★ *மக்கள் உண்மையான, ஆழமாய்ப் பதிந்த, தன்னலமற்ற கோட்பாடுகளைப் பெற்றிருக்க இயலும் என்பதை நீ மறுப்பாயேயானால், நீயே உன்னுள் எத்தகைய கோட்பாடுகளையும் பெற்றிருக்கவில்லையென முடிவு மேற்கொள்வதற்கான அனைத்துக் காரணங்களையும் நான் பெற்றிருப்பேன்.* நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ *தமது கருத்துகளை மற்றொருவரை மகிழச் செய்ய மாற்றிக் கொள் பவர், நம்மைப் பொறுத்த வரையில், தமக்கென எந்தவிதக் கோட் பாடுகளுமற்ற தகுதியற்ற ஒரு பிறவியேயாவார்.*

நிகலாய் தோப்ரோலியுபோவ்

★ *செயல்களாக மாற்றம் செய்யப்படாத வரை, கோட்பாடுகள் என்பவை கோட்பாடுகளேயல்ல.* வாசிலி சுக்கோம்லின்ஸ்கி

★ *கோட்பாடுகளின் மிக இயல்பான தன்மையினால், கோட்பாடுகள் செயல்பாடற்ற ஓர் உள்ளுயிர் உணர்வாக இருக்க இயலாது.*

வாசிலி சுக்கோம்லின்ஸ்கி

★ *இயல்பாக வலுவிழந்த பல மக்கள், அவர்கள் தாங்களாகவே இருக்கவும், ஓர் அயன்மையான கூட்டிசையில் சேர்ந்து பாடு வதைத் தவிர்க்க இயன்றவர்களாக இருக்கவும் ஆற்றலைப் பெற்றிராததினால், அவர்கள் மொத்தத்தில் கீழானவர்களாகவே ஆகிவிடுகின்றனர்.* திமிட்ரி பிசரேவ்

★ *கோட்பாடுகளற்ற ஒரு மனிதன் வெறுமையானவன், கொள்கை களற்ற அவன் வெறுக்கத்தகுந்த ஒரு வீணானவனாவான்*

இலியா ரெபின்

★ ★ ★

# சட்டமும், தன்னுரிமையும்

## சட்டம்

★ சோவியத்து அரசின் சட்டங்களும், அறிவுரைகளும் உண்மையாகப் பின்பற்றப்படுவதுடன், அனைவரும் அவற்றுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றி கவனம் எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.
வி.இ.இலெனின்

★ சோவியத்துச் சட்டம் ஒழுங்கு முறையில் மிகச் சிறிய அளவிலான சட்ட மீறலோ, சட்ட மறுப்போ கூட உழைக்கும் மக்களின் எதிரிகள் உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஓர் இடைவெளியாகவே இருக்கும்.
வி.இ.இலெனின்

★ சட்ட மீறலை ஒரு பெருமையாகவோ, மரியாதைக்குரியதாகவோ கருத இயலாது.
அலெக்சாண்டர் காஸ்பெகி

★ சட்டங்களை மிக நன்றாக எழுதுபவர்கள், மற்றவர்கள் அதனைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறார்களே அன்றி, தாங்களின் மீதே அவற்றைத் திணித்துக் கொள்ளும் தேவையை உடையவர்களாக இருப்பதில்லை.
ஜி.எஸ்.சொவரோடா

★ மக்களின் மீதும், நாட்டு நடவடிக்கைகளின் மீதும் சட்டம் அதிகாரம் செலுத்தாமல், சூழ்நிலையிலுள்ளவர்கள், தலைவர்கள், நீதி மன்றங்கள் மட்டுமே அதிகாரம் செலுத்தும் ஒரு நாட்டை உருவாக்கச் சூளுரை செய்; உறுதி கொள்.
எம்.ஐ. குருசோவ்

## தவறிழைத்தலும், குற்றங்களும்

★ போக்கிலிகளில் மூன்று வகையினர் உள்ளனர். கரவற்ற போக்கிலிகளின் போக்கிலித்தனம் உறுதியாகப் பெருந்தன்மை கொண்டவையாகும். தங்களின் போக்கிலித்தனத்தினால் வெட்கப்பட்டாலும், அதனைச் செய்து முடிப்பதில் உறுதியாயிருப்பவர். முடிவில் உள்ளவர், தங்கள் அரத்தம் முழுவதுமே போக்கிலித்தனம் நிறைந்துள்ளவர்கள். **பியோதர் தோஸ்தோயெவ்ஸ்கி**

★ ஒரு பெரும் பள்ளத்தில் நீ வீழ்வதைப் போலவே, துன்பத்திலும் நீ வீழ்ந்துவிடுகிறாய், ஆனால் குற்றம் புரிவதிலோ, நீ படிப்படியாகவே இறங்குகிறாய். **ஏ.ஏ.பெஸ்டுசேவ் மார்லின்ஸ்கி**

★ பயங்கரமான குற்றங்கள், பயங்கரமான பின்விளைவுகளையே விளைவிக்கும். **அலெக்சாண்டர் எர்சன்**

★ தனது தவறுகளை ஒப்புக் கொள்ளாதது என்பதுவே, அதனை அதிகப்படுத்திக் கொள்வது என்ற பொருளைத் தருவதாகும். **இலியோ தோல்சுதாய்**

★ நீ ஒரு போக்கிலியாக இருந்தால், நீ அசலானவனாக இருப்பதாகக் கூறிக் கொண்டு, உன்னை நீயே மகிழ்ச்சிப்படுத்திக் கொள்ளாதே. **மாக்சிம் கோர்கி**

## தன்னுரிமையும் கட்டுப்பாடும்

★ மிகவும் முன்னேற்றமடைந்த ஒரு நாடு என்பது, தனி மனிதனின் உரிமை எங்கு முழுமையானதாக இருக்கிறதோ, தனிமனிதன் மற்றவர் ஒருவரின் ஆளுகைக்கு ஆளாகாமல் பாதுகாப்பாக எங்கு இருக்கிறானோ அதுவேயாகும். **திமிட்ரி பிசரேவ்**

★ ஒழுங்குமுறை இல்லையேல், ஒற்றுமை என்பது இருக்க முடியாது. ஒற்றுமை என்று ஒன்று இல்லையேல் அமைப்பு என்ற ஒன்று இருக்கவும் முடியாது. திமிட்ரி பிசரேவ்

★ உரிமை என்ற கருத்து எப்போதும் உண்மை என்ற கருத்துடன் கலப்பதாக இருப்பதாலும், பொது நலத்திற்குப் பாடுபட வேண்டிய பொறுப்பினை அது தூண்டிவிடுவதாலும், ஒரு நாட்டின் பொருளுள்ள உரிமை மிக அதிகமாக மதிக்கப்படு வதாகவும், சட்டத்தின் ஆட்சி வலிமை மிகுந்ததாகவும் - மக்கள் தாங்கள் சமூகக் கடமைகளை மிக முழுமையாக ஆற்றுபவர்களாக வும் இருக்கச் செய்யும். மைக்கேல் குட்டோர்கா

★ நமது சமுதாயத்தில் ஒழுக்கம் என்பது ஓர் அறமாகவும் பின்னர் அதே நேரத்தில் ஓர் அரசியல் கோட்பாடாகவும் உள்ளது. ஆண்டன் மக்காரென்கோ

★ சட்டத்திற்குக் கீழ்ப்படியவும், ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வும் சமநீதி சமுதாயத்தின் நடைமுறைச் சட்டங்களைப் பின்பற்றவும் கற்றுக் கொள். உலகின் மிக உயர்ந்த மனிதநேய சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது என்பது, உரிமை உணர்வை மிகச் சிறந்த முறையில் வெளிப்படுத்துவது ஆகும். வாசிலி சுகோம்விங்ஸ்கி

★ உண்மையில் உரிமையராக இருப்பவர் யார்? யார் தங்களது விருப்பு, வெறுப்புகளை மற்றவர் மீது திணிக்க முற்படாமல் உள்ளனரோ அவர்தாம். பியோடோர் கிளின்தா

★ தூய சுதந்திரம் என்பது விடுதலையாகாது. ஆனால் அது மற்றவர்களையே எப்போதும், எதற்காகவும் சார்ந்து இருக்காம லிருக்கும் ஒரு கலையேயாகும். பி.ஏ.பெடோடோவ்

★ பொதுவான வரையறைகளிலிருந்தும், வெறுப்புகளிலிருந்தும் ஆக்க நிறைவான சிந்தனையை விடுவிப்பது என்பதே இந்தப்

புரட்சி நமக்களித்த மிகச் சிறந்த முதன்மையான ஒன்றாகும்.

விளாடிமிர் நெமிரோவிச் டன்செங்கோ

★ மூன்று வகையான கொடியவர் உள்ளனர். தங்களது கொடிய தன்மையினைப் பெருந்தன்மையானதாக நினைப்பவர், தங்களது கொடுந்தன்மையைப் பற்றி வெட்கப்படுபவர், என்றாலும் அதனை முழுமையாகச் செய்யத் திடமான தீர்மானம் செய்து கொண்டவர். இறுதியாக வருபவர் உடல் முழுதும் கொடுந்தன்மை கொண்டவர்.

பியோடர் தோஸ்தோயெவ்ஸ்கி

★ ★ ★

# தவறுகள், வலிமைக் குறைகள், தோல்விகள்

## இழிமையும் கொடுமையும்

★ *அனைத்து வகையான மக்களும் உள்ளனர்; அனைத்து வகையான உணர்வுகளும் உள்ளன. ஆனால் சிலரில், எடுத்துக்காட்டாக, அனைத்து உணர்வுகளும், அவர்களது அனைத்து இயல்பான தீச் சுடரும், கடும் கோபத்தைக் கொண்டதாக இருக்கும். எவரோ ஒருவர் மீதோ ஏதோ ஒன்றின் மீதோ, தங்களின் பற்களை அவர்கள் பதிக்கும்போது மட்டுமே, அவர்கள் அறிவு நிறைந்தவர்களாக வும், திறமை படைத்தவர்களாகவும், சில நேரங்களில் நலம் படைத்த வர்களாகவும் இருப்பர்.* விசாரியோன் பெலின்ஸ்கி

★ *மிகப் பெரிய, தூய மக்களின் மீது அவர்களது கருத்துகளுக் காகவும் எண்ணங்களுக்காகவும் சேற்றை வாரி இறைக்கும் தங்களது இழி தன்மையால் பழி வாங்குவதைவிட வஞ்சகர்களுக்கு அதிக மான மகிழ்ச்சியளிப்பது வேறெதுமில்லை.* விசாரியோன் பெலின்ஸ்கி

★ *கெட்டவர்களுக்குக், கெட்ட செய்தியைக் கேட்டறிவதே அனைத்து மகிழ்ச்சிகளிலும் மிகச் சிறந்ததாகும்.* சோட்-ஆருஸ்த்-ஆவேலி

★ *நியாய உணர்வற்றவர் எவ்வாறு கயவராக இருப்பாரோ, அதே போன்று கயவரும் நியாய உணர்வற்றவராக இருப்பவர் ஆவார். இவை இரண்டும் ஒன்றுடன் மற்றொன்று இணைந்தே செல்வன வாகும்; அதில் ஒன்று இல்லாதபோது, அடுத்ததை அது செய லிழக்கச் செய்கிறது.* என்.வி.செல்குனேவ்

★ *இரக்கமற்ற மனம் கொண்ட மக்கள், மற்றவரின் இழப்புக் கேட்டில் மகிழ்ச்சி பெறுபவர்கள் ஆவர்.* வாழா பாசவேலா

★ *போக்கிலிகள் எப்போதுமே முரட்டுக் குணம் கொண்டவர்கள்; ஆனால் கதைத் தலைவர்களோ எப்போது பெருந்தன்மை படைத்த வர்களாக உள்ளனர்.* ஐ.ஐ. திமிட்ரியேவ்

★ சீற்றம் என்பது மென்மையான மனிதத் தன்மையின் ஒரு வகையாகும். ஆன்டன் செகாவ்

★ மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு எள்ளி நகைப்பது எப்போதுமே மன்னிக்கப்பட்க கூடாது. ஆன்டன் செகாவ்

★ தவிர்ப்பின்றி, கேடுகள் அனைத்துமே நேர்மையின் ஆதரவுடன் நடைபயில்வனவேயாகும். எம்.எம்.பிரிஷ்வின்

## இறுமாப்பு, சீற்றம், பொய்யுரைத்தல்

★ உண்மையான செருக்கு என்பது பொதுமக்களின் மதிப்பீட்டிற்கு மிக அஞ்சி விலகுவதாகும். என்.வி. செல்குனேவ்

★ நிறைந்த செருக்கு என்பது தவறுகள் நிறைந்த ஓர் உள்ளுயிரின் அடையாளமாகும். இவான் துர்கனேவ்

★ செருக்கு என்பது தன்னைச் சுற்றி ஒரு பனிச் சுவரை வளர்த்துக் கொள்வதாகக், காணப்படுவதால், வேறு எந்த உணர்வினாலும் இத் தடையை மீறி ஊடுறிவிச் சென்றடைய இயலாது. இலியோ தோல்சுதாய்

★ தன்னம்பிக்கையென்பது ஒரு வியக்கத் தகுந்த பக்கத்தையும் பெற்றுள்ளது. ஒரு மனிதனின் திறமைகள் என்னவாக இருப்பினும் - அவனது அறிவாற்றல், கல்வி அறிவு, அனைத்து வகையான நற்பேறுகளும், அவனது நல் நெஞ்சும் கூட - அவன் மிகுந்த தன்னம்பிக்கையைப் பெற்றிருந்தால் தோல்விகளாகவே மாறிவிடுகின்றன. இலியோ தோல்சுதாய்

★ தன்னைப் பற்றியே அதிகமான மகிழ்ச்சி கொண்டிருப்பவன், அவனது மகிழ்ச்சிக்குக் காரணமானவற்றைக் குறைவாகப் பெற்றிருப்பவனே ஆவான். இலியோ தோல்சுதாய்

★ தன்னுடைய மதிப்பீட்டில் ஒரு மனிதன் எவ்வளவு உயர்ந்து நிற்கிறானோ, அவனது நிலை அவ்வளவு நம்ப இயலாததாக ஆகிவிடும். இலியோ தோல்சுதாய்

★ தன்னையே அதிகமாக விரும்பிக் கொண்டிருப்பவன், அவனது போட்டியாளர்களாக இருக்க விரும்பாத அவர்களது திறமையினால், மற்றவர்களால் விரும்பப்படமாட்டான்.
வி.ஏ.குளுசேவ்ஸ்கி

★ அளவுக்கதிகமான தன் மீதான அன்பும், தன்னிறைவும் தனது மதிப்பு என்பதுடன் பொதுவான எதனையும் பெற்றிருக்கவில்லை.
பியோதர் தோஸ்டோயெவ்ஸ்கி

★ போக்கிலிகள் மட்டுமே பொய்யுரைப்பர்.
பியோதர் தோஸ்டோயெவ்ஸ்கி

★ கோழைமைத் தன்மையிலும் வலிவற்ற தன்மையிலும் த்னது ஆணிவேர்களைக் கொண்டிருக்கும் பொய்யுரைக்கவே எப்போதும் நான் அதிக அளவில் வெட்குவதாகும். அலெக்சாண்டர் குப்ரின்

★ பொய்யுரைகள் உள்ளுயிர்க்கும் உடலுக்கும் முடிவற்ற துன்பத்தை அளிப்பவையேயாகும். சோட் ஆருஸ்தி-எவேலி

★ தன்னிடமே பொய்யுரைப்பது என்பது, மனிதன் வாழ்விற்கு எவ்வாறு அடிமையாயிருக்கிறான் என்பதைக் காட்டும் மிக அதிக அளவில் பரவியுள்ள கீழ்மையான வடிவமாகும்.
இலியோனிட் ஆன்ட்ரயேவ்

★ ஒரு பொய் என்பது கட்டாயப்படுத்துதல் என்பதைத் தொடர்ந்து அதனுடன் செல்வதாகும். கான்ஸ்டான்டின் பெடின்

★ பொய்யுரைப்பது என்பது குடிப்பழக்கம் போன்ற வெறிமையாகும். பொய்யர்கள் அவர்கள் இறக்குந் தருவாயிலும் கூட பொய்யுரைப்பவர்களாகவே இருப்பார்கள். ஆன்டன் செகாவ்

★ *நிலத்தினை ஒட்டுண்ணிப் புல் உண்கின்றது, துரும்பு இரும்பை உண்கின்றது; அதுபோலவே பொய்களும் உள்ளுயிரை உண் பவையாகும்.* **ஆன்டன் செகாவ்**

★ *ஒரு பொய் என்பது வாழ்வில் உள்ள ஒரு வறிய துணையேயாகும்.* **என்.கே.குருப்ஸ்கயா**

★ *பொய்யுரைக்கும் பழக்கம் கொண்டவன் எப்போதுமே கூர்ந்த நினைவாற்றலைப் பெற்றவனாக இருக்க வேண்டும். இல்லையெனில் அவன் அவனது பொய்யையே மாற்றியுரைக்க நேரிடும்.* **என்.ஐ.நோவிகோவ்**

## குடிப் பழக்கம்

★ *எத்துனை அற்புதமான நிறுவனங்களும், எத்துணை அற்புத மான மக்களும், தீய பழக்கங்களினால் அழிக்கப்பட்டுள்ளனர்.* **கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி**

★ *நன்கு ஒளியூட்டப்பட்ட ஒரு தெரு கூட, ஒரு குடிகாரனுக்கு இருண்டதாகவே இருக்கும்.* **கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி**

★ *மகிழ்ச்சிக்காகவே அருந்தப்பட்டாலும், மனித இனத்துக்கு மகிழ்ச்சியை விட; அதிகத் துயரம் அளிப்பதாகும்; மதுவினால் எவ்வளவு எண்ணிக் கையான வலிமை படைத்த, திறமை படைத்த மனிதர்கள் அழிந்தும், அழிந்து கொண்டும் இருக்கின்றனர்.* **இவான் பவலோவ்**

★ *மது அருந்தாமல், உனது நெஞ்சத்தை புகையினால் தீங்கு செய்யாமல், நீ இருப்பாயே ஆனால், நீயும் பெரியார் (டைடியான்) போல் நீண்ட காலம் வாழ்வாய்.* **இவான் பவலோவ்**

★ *தனிப்பட்ட மனிதனுக்கும், சமூகத்துக்கும், நாட்டிற்கும் மது அருந் துவது என்பது மாபெரும் கேடுகளில் ஒன்றாகும்.* **பவல் கொவலேவ்ஸ்கி**

★ *மது அருந்துபவன் ஒவ்வொருவனும் ஒரு குடிகாரனாக இருப்ப தில்லை. ஆனால், மதுவின் சூழ்ச்சியான தந்திரம் என்னவென் றால், குடிக்க ஆரம்பித்த ஒருவன் வெகு எளிதாகக் குடிகாரனாக மாறிவிட இயலும் என்பதுதான்.* பவல் கொவலேவ்ஸ்கி

★ *மதுவுக்கு அடிமையாவது என்பது, எப்போதுமே மிகைப்படுத்தி கூறப்பட இயலாத, ஒரு சமூகக் கேடாகும்.* விளாடிமீர் பெக்டரேவ்

★ *குடிப்பழக்கம் வளர்வது என்பதுடன், உண்மையில் இன்றியமை யாதபடி, மக்களின் உடல், மன ஆற்றலும், உழைக்கும் ஆற்றலும் குறைந்து போவது இணைந்து செல்வதாக இருப்பதால், அதன் விளைவாக நாட்டின் பொருளாதார வலிமை குறைவதுடன், குற்றங்கள் அதிகரிப்பதால் ஒழுக்க நெறிகள் வீழ்ச்சியடையவும் செய்கிறது என்பதால், குடிப்பழக்கம் என்றறியப்படும் பெருங் கேடு நாட்டின் மீது கெட்ட தாக்கத்தை ஏற்படுத்தும்.*

விளாடிமீர் பெக்டரேவ்

★ *மது மக்களின் உடல்நலத்தையும், மன ஆற்றல்களையும், குடும்ப நல்வாழ்வையும் அழித்துவிடுகிறது. அனைத்திலும் மிக இழி வானது என்னவென்றால், அது மனிதர்களின் உள்ளுயிர்ப்பை யும் அழித்து விடுகிறது.* இலியோ தோல்சுதாய்

★ *மதுவைப் பயன்படுத்துவதன் மூலம், மனிதன் முரடனாகவும், மனச் சோர்வு அடைந்தவனாகவும், இழிந்தவனாகவும் ஆகிவிடுகிறான்.*

இலியோ தோல்சுதாய்

★ *சில திருடர்களும், கொலைகாரர்களும் மதுவினால் மயக்கமடைந்த ஒரு நிலையிலேயே அக் குற்றங்களைச் செய்கின்றனர்.*

இலியோ தோல்சுதாய்

★ *மதுவின் ஆளுகையில் இருக்கும்போது மட்டுமே, கெட்ட செயல் களில் பெரும்பாலானவை செய்யப்படுகின்றன.*

இலியோ தோல்சுதாய்

★ ஒரு குடிகாரன் அறிவு நிலையிலோ, ஒழுக்க நிலையாலேயோ எப்போதுமே முன்னேற்றம் பெறுவதில்லை.

இலியோ தோல்சுதாய்

★ மது உடலின் பகுதிகளைப் பாதுகாப்பது போலவே குடிகாரனின் உள்ளுயிரையும் மனதையும் மாறுதலற்று மருத்துப் போகச் செய்கிறது.

இலியோ தோல்சுதாய்

★ மனிதத் தன்மையை இழிவுபடுத்தும் பத்துக் குற்றங்களில், ஒன்பது குற்றங்கள் மதுவின் செல்வாக்கினாலேயே இழைக்கப்படுகின்றன.

இலியோ தோல்சுதாய்

★ வாழ்வில் மக்களுக்கு அதிகமாகத் தேவைப்படுவதாக காண்பது அவர்களது அற உணர்வுதான்; ஆனால் மிகப் பலர், பொதுவாக மகிழ்ச்சிக்காகவே, புகையிலை, மது ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அந்த அற உணர்வை இறந்து போகச் செய்யத் தயங்குவதே இல்லை.

இலியோ தோல்சுதாய்

★ மக்கள் தங்கள் மனத்தைச் சோர்வடையச் செய்து கொள்வதையும், தங்கள் உடல்களை மதுவின் மூலம் நச்சுத் தன்மை படைத்தவைகளாக ஆக்கிக் கொள்வதையும் நிறுத்திவிட்டால், எத்தகைய மகிழ்ச்சி நிறைந்த ஒரு மாற்றம் ஏற்படும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பதும் கடினமானதாகவே உள்ளது.

இலியோ தோல்சுதாய்

★ நாம் குடிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்றும், மற்றவர்களுக்கு மது அளித்து விருந்தளிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்றும் நம்மிடம் நமது மனமும், மனசான்றும் கோருகின்றன.

இலியோ தோல்சுதாய்

★ ஒரு மனிதன் மதுவிலிருந்து மீட்கப்படுவது, அது அவனுக்கு எட்டும் தூரத்தில் வைக்கப்படும்போது அன்று; ஆனால் அவனிருக்கும் அறையிலேயே மது இருந்து, அவனால் அதனை நுகர

இயன்றும், கைக்கெட்டும் தூரத்தில் அது இருந்தபோதும், அவன் அதை மறுக்கும் போது மட்டுமே அவன் அதனின்றும் மீட்கப்படுகின்றான்.
இலியோ தோல்சுதாய்

★ குடிப்பதையும், புகைப்பதையும் நிறுத்திவிடும் ஒரு மனிதன், அனைத்தையும் ஒரு புதிய உண்மையான வெளிச்சத்தில் காண ஒப்புதல் அளிக்கும் தெளிவான, அமைதியான மனநிலை பெறுகின்றான்.
இலியோ தோல்சுதாய்

★ குடிக்கும், புகைக்கும் பழக்கத்தைக் கைவிடுவது கடினமானது என்று சொல்லப்படுவது ஒரு தவறான கருத்தும், ஒரு மயக்கும் ஆய்வும் ஆகும் என்பதால், அதற்கு இரையாகாதே.
இலியோ தோல்சுதாய்

★ குடிக்குக் கணவனாக இருக்கும் மது, அவர்களின் மனைவியர், குழந்தைகள் சிந்தும் கண்ணீருடன் ஒப்பிடத் தகுந்ததாகும்.
நிகலாய் செமாச்கோ

★ குடிப்பழக்கம் பண்பாடு என்ற இரண்டும், நீரும் நெருப்பையும் போலவும், ஒளியையும் இருளையும் போலவும் ஒன்றினுடன் ஒன்று சேராதவையாகும்.
நிகலாய் செமாச்கோ

★ உடல் நலமும் குடிப்பழக்கமும், ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும்.
நிகலாய் செமாச்கோ

★ மது ஒரு மனிதனின் உடலை நஞ்சாக்குவதன் மூலம் அவனது உடல் நலத்தை அழிப்பது மட்டுமல்லாமல், குடிப்பவனை மற்ற அனைத்து வகையான நோய்களுக்கும் கூட ஆட்படுத்துகிறது.
நிகலாய் செமாச்கோ

★ நடுங்கும் கைகளும், மங்கிய கண்பார்வையும், கேட்கும் திறன் பாதிக்கப்பட்டும், மூச்சு விடவும் துன்பமடையும் ஒரு குடிகாரன் வலிமை இழந்த உழைப்பாளியாகவே இருப்பவன் ஆவான்.
நிகலாய் செமாச்கோ

★ குடிப்பழக்கம் என்பது பொதுஅறச் சமுதாயத்தை உருவாக்குவதற்கான உடனடியாக ஓர் அச்சுறுத்தல் ஆகும்; அதனால்தான், ஒவ்வோர் உழைப்பாளியும் ஒவ்வொரு நாகரிகம் படைத்த குடிமகனும் அதனுடன் இடைவிடாது போராட வேண்டும்.
நிகலாய் செமாச்கோ

★ குடிப்பழக்கம் என்பது அறிவுடைமையோ, திறமையோ ஆகாது.
ஜி.எஸ். ஸ்கோவரோடா

★ மது வண்ணமற்றது; ஆனால் அது மூக்கைச் சிவப்பாக்கி, நற்பெயரைக் கருப்பாக்குகிறது. ஆன்டன் செகாவ்

★ மது தெளிவான சிந்தனையை இழக்கச் செய்து, மறக்கப்படும் நிலையை உருவாக்கி, செயற்கையான உற்சாகத்தை ஏற்படுத்தினாலும், அது எரிச்சலையே ஊட்டுகிறது. மக்கள் குறைந்த அளவு முன்னேற்றம் பெற்றுள்ள போதும், பொதுவான குறுகிய உயிர்வாழ்தல் என்ற ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள போதும், இவ்வாறு சிந்தனையை இழக்கச் செய்வதும் எரிச்சலூட்டப்படுவதும் அவர்களுக்கு இன்னும் அதிகக் கவர்ச்சி அளிப்பவையாக உள்ளன. அலெக்சாண்டர் எர்சன்

★ மது மனிதர்களைப் பன்றிகளாக்கி, அவர்களை வன்முறையாளர்களாக்கி, ஒளி படைத்த சிந்தனைகளிலிருந்து அவர்களைத் திசை திருப்பி, அவர்கள் மனத்தைச் சோர்வடையச் செய்கின்றது.
பியோடர் தோஸ்டோயெவ்ஸ்கி

★ உனது மன ஆற்றல்களைக் குறைத்துக் கொள்ள நீ விரும்பினால், மது என்பதே முற்றிலும் நம்பிக்கைக்குரிய ஒரு கருவியாகும்.
வாசிலி தேனிலேவ்ஸ்கி

★ மது ஆன்மாவின் நுண்ணிய, உயர்ந்த இயக்கங்களைச் செயலிழக்கச் செய்கிறது; முதன்முதலாக வெட்க உணர்வு என்பதனையே அது அவ்வாறு செயலிழக்கச் செய்கிறது. இவான் சிர்கோர்ஸ்கி

★ மது என்பது ஓர் இரக்கமற்ற கொலையாளி; கொலைகாரர்கள், நஞ்சு அல்லது கடுங்குளிர் இவைகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமான மனித உயிர்கள் மதுவினால் இழக்கப்பட்டிருப்பது என்ற உண்மையே இக் கூற்றுக்கான சரியான சான்று ஆகும். இவான் சிர்கோர்ஸ்கி

★ மதுவுக்கடிமையானவர்கள், சோம்பலுக்கு இறையாக்கப்பட்ட சோம்பேறிகள் ஆவர். இவான் சிர்கோர்ஸ்கி

★ அனைத்து மக்களுமே உண்ணவும், குடிக்கவும் செய்கிறார்கள்; ஆனால் நாகரிகமற்றவர்களே மிக அதிகமாக உண்ணவும் குடிக்கவும் செய்கின்றனர். விசாரியோன் பெலின்ஸ்கி

★ அதிகமாகக் குடிப்பது என்பது எந்த நன்மையையும் அளிப்ப தில்லை என்பதுடன், அது மூளைக்குக் கேட்டையும், உடல்நலத்திற்குத் தீங்கையும், பொருளிழப்பையும், விரைந்த இறப்பையும் விளை விப்பதுமாகும். ஐ.டி.போசோகோவ்

★ தொடர்ந்து குடிப்பது தீமை நிறைந்தது; அது கல்லீரல், மூளை ஆகியவற்றின் இயல்பைக் கெடுக்கிறது என்பதுடன், நரம்பு களைத் தளர்வுறச் செய்து, நரம்புக் கேடுகளை உருவாக்கித் திடீ ரென்று இறப்பையும் கொண்டு வருவதாகும். அவிசென்னா

★ ஒரு சிறிது மது மருந்தேயானாலும், அதிகமான மது இறப்பை அளிக்கும் நஞ்சாகும். அவிசென்னா

★ குடிப்பது என்பது சூதாடும் இடங்களுக்கும், கையூட்டுகளுக்கும், கையாடல்களுக்கும், பாலியல் ஒழுக்கக் கேடுகளுக்கும், வன்முறைக் கும் கொண்டு செல்லும் பாதைகளின் தொடக்கத்துக்கான ஒரு மையமாகும். எமலயேன் யாரோஸ்லாவ்ஸ்கி

★ அனைத்து வகையான குற்றங்களும், போக்கிலியின் பெருங் கூச்சலும், பொதுவாக வாழ்வின் அனைத்தையும் களங்கப்படுத்

துவதும் - இவை அனைத்தையும் அளவிட இன்று இங்கு ஒரு வழியுள்ளது, அது குடிக்கப்பட்ட மதுவின் அளவேயாகும்.

விளாடிமிர் மாயாகோவ்ஸ்கி

★ எப்போதோ சிறிது குடிப்பது என்ற பழக்கமே, சிறிது சிறிதாக வளர்ந்து, தொடர்ந்து குடிப்பழக்கத்துக்கு வழி கோலுவதுடன், மீட்கப் பட இயலாத குடிப் பழக்கத்திற்கடிமை என்ற விளைவை ஏற்படுத்திவிடும்.

செர்ஜி கோஸ்ரோகோவ்

★ வாழ்க்கை என்னும் பயிர் மது என்னும் நீரினால் வளர்க்கப்படா விட்டால், மதுவின் ஆற்றலினால், அத்துடன் வெறுக்கத் தகுந்த வகையில் மலரும் அனைத்துத் தீமைகளென்னும் களைகளும் விளைச்சல் செய்யப்படுவதும் நிறுத்தப்பட்டுவிடக்கூடும்.

ஏ.வி. லூனாசெர்ஸ்கி

★ மனிதனே பழக்க வழக்கங்களை ஆட்சி செய்கிறானேயன்றி, அவை அவனை ஆட்சி செய்வதில்லை.

நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ ஒரு நாட்டின் குடிமக்களின் வாழ்விலும், உடல் நலத்திலும் அக்கறையற்று இருப்பதை, மக்களாலேயே ஆட்சி செய்யப்படும் ஒரு நாட்டினால் பொறுத்துக் கொள்ள இயலாது, பொறுத்துக் கொள்ளவும் கூடாது. மக்களுக்குத் தேவையற்றபடி தீங்கு இழைக்கும் ஒவ்வொன்றையும், அனைத்தையும் எதிர்த்து அது போரிட வேண்டும்.

மாக்சிம் கோர்கி

## கோழைத் தன்மையும் வலிவற்ற நெஞ்சும்

★ மனித இயல்பில் ஏற்படும் அனைத்து மனநிலைகளிலும், மாபெரும் துயரளிப்பது அச்சமே என்பது வெளிப்படையாகத் தோன்றுவதாகும்.

திமிட்ரி பிசரேவ்

★ மனித உணர்வுகள் அனைத்தையும் சோர்வுபடுத்துபவற்றில் எல்லாம் மிக்க வலிமை படைத்தது அச்சமேயாகும்.
கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ தவறுகளுக்கும் ஒழுக்கக் கேடுகளுக்கும் ஆழம் மிகுந்த காரணமாக இருப்பது அச்சமேயாகும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ நமது நாட்டில், கோழையான ஒருவன், அருவருக்கத்தக்க ஒரு பிறவியேயாகும். இன்று ஒரு தீவிரவாதிக்கு அடுத்தபடியாக, அய்யமற்ற வகையில் போர்க்களத்தில் அவன் ஓர் இரண்டகன் ஆவான். நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ ஒரு மனிதன் தனது செயல்கள் அனைத்திலும் வீரம், துணிவு நிரம்பப் பெற்று இருக்க வேண்டும்.
அலெக்சாண்டர் காஸ்பெகி

★ நிலையற்ற இயல்பைக் கொண்ட ஒரு மனிதன், மனிதர்களில் நஞ்சு நிறைந்த ஓர் உயிராகும். விசாரியோன் பெலின்ஸ்கி

★ அதிகத் துணிவுடன் வாழு. ஒரு கோழைக்கு மட்டுமே, அனைத்துமே அச்சமூட்டுவதாகவும், கடினமானதாகவும் இருக்கும்; துணிவு நிறைந்தவர்க்குக் கடினமானதும் கூட எளிதானதாகத் தோன்றுகின்றது. பியோடர் கிளாட்கோவ்

## சிடுசிடுப்பு, நற்சமூக உறவின்மை, முரண்படுதல்

★ சீற்றம் என்பது மற்றவர்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லையெனினும், அதனை வெளிப்படுத்துவர் மீது அது கடினமாகவே உள்ளது. வெஞ்சினத்தில் தொடங்கியது, வெட்கத்தில் முடிவடைகிறது. இலியோ தோல்சுதாய்

★ நான் எப்போதுமே எனது சீற்றத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஒரு சச்சரவில் விட்டுக் கொடுத்து, அதன் மூலம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவே செய்துள்ளேன்; அதனால் புழுதியெல்லாம் அடங்கியபின், சிக்கல்கள் எல்லாம் தாங்களாகவே தங்கள் சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டன. அந்தச் சச்சரவு தொடங்கப்பட்டவுடனே நிறுத்தப்படாததற்கு வருந்தத்தக்க ஒரு நிலைக்கு ஒருவர் வருவது பெரும்பாலும் தவிர்க்க இயலாததாகும்.

இலியோ தோல்சுதாய்

★ நமது சீற்றம் தணிந்தபின், நமக்கே வேடிக்கையாகத் தோன்றுபவை, பற்றி நம்முன் சீற்றத்தை உருவாக்கியவரை, சீற்றத்தின் வேகத்திலேயே நாம் குற்றஞ்சாட்டுகிறோம்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ முட்டாள்தனமாக இருக்கும் ஒரு நிலையும், கட்டுப்படுத்த இயலாத சீற்றமும், முட்டாள்தனமாக ஓர் இரக்கம் அல்லது மென்மைத் தன்மையைப் போன்றே அழிவைத் தருவனவாகும்.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ கடும்சினம் என்பது எப்போதுமே முறையற்றது; பெரும்பாலும் ஒரு தகுதி படைத்த நோக்கத்திற்குப் பாடுபடுவதை அது இருளாக்கி, அனைத்தையுமே குழப்பமடையச் செய்யும். நிகலாய் கோகோவ்

★ அமைதியாயிருத்தலே பெருஞ் சீற்றத்தைவிட வலிமை படைத்ததாகும். மைக்கேல் ஸ்வட்லோவ்

## செயல்படாமை

★ செயல்படாமை என்னும் வழக்கமானது, அனைத்துப் பெருங் கேடுகளிலும் மிக இழிந்ததாகும். இலியோ தோல்சுதாய்

★ ஒரு நாளேனும் பணியாற்றாமல் நான் இருக்க நேர்ந்தால், என்னை நானே கொன்று கொள்வேன். இலியோ தோல்சுதாய்

★ சோம்பியிருத்தலை ஒரு நற்பேறாகவும் பணியாற்றுதலை ஒரு தண்டனையாகவும் கருதுவது, வியப்பான கேடு நிறைந்த தவறான கருத்தாகும். இலியோ தோல்சுதாய்

★ பயனற்ற வெட்டிப் பேச்சைவிட, சோம்பலை ஊக்குவிப்பது வேறெது வுமில்லை. இலியோ தோல்சுதாய★

★ எதுவுமே செய்யாமல் இருப்பவன் எப்போதுமே பல உதவி யாளர்களைப் பெற்றிருக்கிறான் இலியோ தோல்சுதாய்

★ கீழ்மையானவர்களும், எப்போதுமே எதனையுமே நன்றாகச் செய் யாதவர்களும் மக்களின் நல்வாழ்விற்கு ஊறு விளைவிப்பவர் ஆவர். அலெக்சாண்டர் பிளோக்

★ செயல்படாமல் வாளாவிருப்பதில் எந்த மகிழ்ச்சியும் இருப்பதில்லை. பியோடர் தோஸ்டோயெவ்ஸ்கி

★ எதனையுமே செய்யாமல் இருப்பது என்பதைவிட அதிகக் கடின மான ஆய்வு வேறெதுவுமில்லை. அலெக்சாண்டர் எர்சன்

★ சோம்பலும் அறிவற்ற தற்புகழ்ச்சியும் மக்களை மிக இழிவுபடுத் தும் ஒரு தாக்கத்தைப் பெற்றுள்ளன. திமிட்ரி பிசரேவ்

★ சோம்பலே மன - உடல் தொய்விற்குக் காரணமாகும். திமிட்ரி பிசரேவ்

★ ஒருவன் பணியாற்றாத வரை, முன்னேற்றமடைய இயலாமல், நிமிர்ந்து நிற்க இயலாமல் பின் தங்கிச் செல்லவே நேரிடும். கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

★ நேர்மையற்ற சோம்பலில் மூழ்கியிருப்பவர், கெட்ட நாற்றத்தையும் அருவருக்கத் தக்க பாம்புகளையும் தவிர வேறெதனையும் கொண்டிராத ஒரு சேற்று நிலத்தில் தேங்கி நிற்கும் அழுக்கு நீரைப் போன்றவர்.
மைக்கேல் லோமனசோவ்

★ ஆர்வமற்றிருப்பதும் சோம்பியிருப்பதும் உண்மையில் உடலையும் உள்ளுயிரையும் உறைய வைப்பதாகும்.
விசாரியோன் பெலின்ஸ்கி

★ ஒரு சோம்பல் நிறைந்த வாழ்க்கையென்பது எப்போதுமே தூய்மையானதாக இருக்க இயலாது.
ஆண்டன் செகாவ்

★ பணியாற்றிய பின் பெறும் ஓய்வைவிட இனிமை மிகுந்த ஓய்வு வேறெதுவுமில்லை.
ஆண்டன் செகாவ்

★ சோம்பலே அனைத்து வகையான கேடுகளுக்கும் மூலமாகும்.
ஏ.வி. சுவரோவ்

★ சோம்பலே அனைத்துக் குற்றங்களுக்கும் தாயாகும்.
மைக்கேல் டூடின்

★ பணியாற்றிக் கொண்டிருப்பவன் சலிப்பென்பதையே அறியாதவன் ஆவான்.
மாக்சிம் கோர்கி

இளைப்பாறுவது என்பது செய்தொழிலின் ஒரு மாற்றமேயாகும்.
இவான் பவலோவ்

## தற்பெருமை, அகந்தை, தற்புகழ்ச்சி

★ எந்த ஒரு சூழ்நிலையிலும், அகந்தை கொண்டவனாகவோ, ஏமாறுபவனாகவோ இருக்க உன்னை நீ ஒப்புக் கொள்ளாதே.
ஆண்டன் செகாவ்

★ தற்பெருமை பேசுவது என்பது எப்போதுமே இழிவானதாகும்.
பியோடர் செய்கோவ்ஸ்கி

★ ஒருவன் தன்னை உடலால் உயர்த்திக்கொள்வதைவிட அதிகமாக அவன் உயர்ந்திருக்க இயலாது, இதற்கு மாறாகத் தன்னைப் பற்றித் தானே புகழ்ந்துரைத்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் எம் முயற்சியும், மற்றவர் பார்வையில் அவனை இழிவுபடுத்துவதாகவே இருக்கும்.
லியோ தோல்சுதாய்

★ தன்னிடம் மறைந்திருப்பதாகத் தனது தற்பெருமையால் பிதற்றிக் கொள்ளும் ஆற்றல்களைப் பற்றிய ஓர் அடிமைப்படுத்தும் பாராட்டுரையினை, ஒரு வலிவற்ற வெற்று மனிதன் கேட்கும் போது, அவன் ஏமாற்றுதலுக்கு ஆட்பட்டுத் தன்னையும் தனது செயல்களையும் நுணுக்கமாக மதிப்பிட அவனிடமிருந்த சிந்தனை ஆற்றலையும் இழந்துவிடுகிறான்.
திமிட்ரி பிசரேவ்

★ சமூகத்தைப் பொறுத்தவரை, அறிவற்ற, தன்னையே நிறைவு செய்து கொள்ளும் ஒருவன், வளர்ந்துவிட்ட ஒரு புற்றுநோயினைப் போன்றவன்.
மாக்சிம் கோர்கி

★ அனைவரது கவனத்தையும் தன்பால் ஈர்க்க ஒரு மனிதன் மேற்கொள்ளும் முயற்சிகள் அவனுக்குக் கேடு பயப்பவையேயாகும், ஏனெனில் வியந்து, தான் பாராட்டப்பட வேண்டுமென்ற விருப்பத்தைப் போல் வேகமாக ஒருவனது உள்ளுயிரை அழிப்பது வேறெதுவுமில்லை என்பதால்தான்.
மாக்சிம் கோர்கி

★ உள்ளுறை பண்பற்றதன்மை, பெரும்பாலும் வெளியே தோற்ற மளிக்கும் பண்புடமை என்ற ஒரு பூச்சினால் வெகு திறமையாக மறைக்கப்படுவதாகும்.
மாக்சிம் கோர்கி

★ வீரத்தைப் பற்றி அதிகமாகப் பேசுபவர்களாகக் கோழைகளும், பண்பாட்டைப் பற்றி அதிகமாகப் பேசுபவர்களாக போக்கிலிகளுமே உள்ளனர்.
இலியோ தோல்சுதாய்

★ தேவையின்றி உன்னைப் பற்றி நீயே பேசாதே. முன்பு எப்படி இருந்தது. இப்போது எப்படி இருக்கிறது. இனி எப்படி இருக்கும் என்று எப்போதும் பிதற்றிக் கொண்டிராதே.

கான்ஸ்டான்டின் உசின்ஸ்கி

## தன்னலம்

★ தன்னலத்தில் மகிழ்ச்சி பெறுவது என்பது இயல்பற்றது; தன்னலங் கொண்ட அனைத்துமே, ஒரு துளியளவேனும் பொறாமைப்பட ஏற்றதன்று. தன்னலத்துடன் இருப்பது மன நோயாளியாக இருப்பது போன்றதாகும்; மனநோய் என்பது மகிழ்ச்சியற்றதும், சோர்வளிப்பதுவுமாகும்.

நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ தனக்காக மட்டுமே உழைப்பவன், தனது வயிற்றை நிரப்பிக் கொள்ளும் ஒரு விலங்கைப் போன்றவன். மனித இனத்திற்காக உழைப்பவனே தகுதி படைத்தவன் ஆம். அபாய் குணான்பயேவ்

★ தன் ஒருவனுக்காக மட்டுமே வாழ்வது என்பது, வெட்கம் நிறைந்த செயலாகும். நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ ஒரு மனிதனுள் சமூகத்தைப் பற்றிய இடம் சிறியதாகவும், தன்னைப் பற்றிய இடம் அதிகமாகவும் ஒருவன் எடுத்துக் கொள்ளும் போது, அவனது தனிப்பட்ட வாழ்வின் தோல்வி முழுமையான ஓர் அழிவாகவே இருக்கும். நிகலாய் ஒஸ்ட்ரோவ்ஸ்கி

★ தன் ஒருவனைப் பற்றியே, தன் ஒருவனின் நலன்களைப் பற்றியே சிந்திப்பவன், ஓர் பன்றியைப் போல் இருப்பவன் ஆவான்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உள்ளுயிர்ப்பின் புற்று நோய்க்கான முதன்மையான காரணம், தன்னலம் என்பதேயாகும். வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ தன்னலம் என்பது கொடிய மனப்பான்மை என்பதின் தந்தையாகும்.

மாக்சிம் கோர்கி

★ தன்னலம் என்பது பொதுவானவை அனைத்தையும் வெறுப்பதுடன், மனித நேயத்தைக் காண மறுத்து முதுகைத் திருப்பிக் கொண்டு, தன்னை ஒரு தனிப்பட்ட நிலையில் வைத்திருப்பதாகும்; அது, அதனைக் கொண்டிருக்கும் மனிதனுக்கு மட்டுமே இல்லாமல், மற்ற அனைத்துக்கும் எதிரானவை.

அலெக்சாண்டர் எர்சன்

★ தன்னுணர்வு முனைப்பு மிக்கவர்களில் மூன்று வகையினர் உண்டு - தானும் வாழ்ந்து, மற்றவரையும் வாழவிடுபவர். தான் மட்டுமே வாழ்ந்து, பிறரை வாழ விடாதவர், தானும் வாழாமல், பிறரையும் வாழ விடாமல் இருப்பவர்.

இவான் தூர்கனேவ்

★ தன்னலம் படைத்த மக்கள் ஆழ்ந்த விருப்பு வெறுப்புகளைக் கொண்டு, கடமை ஆற்றுவதிலிருந்து விலகிச் செல்பவர்கள் ஆவர், சில கடமைகளுடன் தங்களைப் பிணைத்துக் கொள்வதில் ஒரு நிலையான, கோழைத்தனமான தயக்கத்தையே தங்களுள் கொண்டிருப்பவர்கள் அவர்கள்.

பியோதர் தோஸ்ட்ரோயெவ்ஸ்கி

★ நீ நேசிப்பது அனைத்தும் உன்னைப் பற்றியதாகவே இருந்தால், பின்னர் உனது வாழ்வில் ஏற்படும் கசப்பான ஆய்வுகள், உனது விதியைப் பற்றி நொந்து போகவும், கொடிய துன்பத்தை நுகரவும் உன்னைச் செய்துவிடுகிறது.

பெலிக்ஸ் ஜெர்ஜேன்ஸ்கி

★ எங்கு அன்பு உள்ளதோ, அங்கு எந்தத் துன்பத்தினாலுமே ஒரு மனிதனை அழித்துவிட இயலாது. தன்னலம் என்பது மட்டுமே உண்மையில் ஒரு மாபெரும் இழப்புக் கேடாகும்.

பெலிக்ஸ் ஜெர்ஜேன்ஸ்கி

# பிதற்றல்

★ சொல்வதற்கு எதையுமே பெற்றிராதவனே மிக அதிகமாகப் பேசுபவனாவான். இலியோ தோல்சுதாய்

★ வெற்றுப் பேச்சைவிட, சோம்பலை ஊக்குவிப்பது வேறொன்றுமில்லை. இலியோ தோல்சுதாய்

★ அனைத்துக் கட்டுப்பாடுகளுக்கும் முயற்சி தேவைப்படுகிறது என்றபோதும், அத்தகைய அனைத்து முயற்சிகளிலும், மிகவும் கடினமானது தனது நாவைக் கட்டுப்படுத்துவதேயாகும். அதுவே மிகவும் தேவையானதுமாகும். இலியோ தோல்சுதாய்

★ ஏதோ ஒன்றை சொல்லத் தவறியதற்காக ஒவ்வொரு முறையும் நீ வருந்தும்போதும், நீ பேசியதற்காக நூறு முறை வருந்த வேண்டியிருக்கும் என்பதை நினைவில் கொள். இலியோ தோல்சுதாய்

★ ஒரு பேரறிவாளனின் நாக்கு அவனது நெஞ்சில் உள்ளபோது, ஒரு முட்டாளின் நெஞ்சம் அவனது நாக்கில் உள்ளது.
என்.வி.செல்குனேவ்

★ கற்றறிந்து கொள்ளும் ஆவலைவிட, பேசும் ஆவல் எப்போதுமே மிகுதியானதாகவே இருக்கும். திமிட்ரி பிசரேவ்

★ எந்த ஒரு தனிப்பட்ட நோக்கமுமின்றி, தனது நண்பர்களிடமும் கூட ஏதோ ஒன்றை விவரிப்பது என்பது, ஒரு செயல்பாடற்ற தற்பெருமை கொண்டவனின் திறமையாகும். திமிட்ரி பிசரேவ்

★ தற்பெருமை என்னும் ஆற்றல் எப்போதுமே செயல்பாடற்ற மக்களிடையே ஆர்வத்தையும் வியப்பையும் எழுப்புவதாகும்.
நிகலாய் தோர்ரோலியோவ்

★ சோம்பேறிகளே இந்த உலகில் மிக அதிகமாகப் பேசுபவர்களாக இருப்பவர்கள் ஆவர். பி.ஏ.பவலென்கோ

★ நீ அறிந்திருப்பவை பற்றி எப்போதும் பிதற்றிக் கொண்டிருப்ப வனாக இல்லாமல், அமைதியில் பெருமைபடைப்பவனாக இரு.
பி.ஏ.பவலென்கோ

★ பன்னிப் பன்னிப் பேசுவதென்பது மந்தமதி படைத்தவரின் திறமை யாகும்.
ஏ.பி.சுமோரோகோவ்

★ ஒரு கூர்மையான நாக்கென்பது ஒரு கொடையாகும், ஆனால் ஒரு நீளமான நாக்கென்பதோ மாபெருங் கேடாகும்.
டி.டி.மினயேவ்

★ தனது பங்கிற்கு, அளவுக்கு மேல் அதிகமாகப் பேசிவிட்டவன், பின் எப்போதுமே சிறு தவறொன்று செய்துவிட்டதைப் போல் உணர் பவனாகவே இருப்பான்.
இவான் துர்கனேவ்

★ சளசளவென பேசிக் கொண்டிருப்பது பொய்களை மறைத்து விடும், ஆனால் பொய்களோ, நாம் அறிந்துள்ளபடி, அனைத்துத் தீய பழக்கங்களுக்கும் தாயாக இருப்பனவாகும்.
எம்.இ.சால்டிகோவ்-செகட்ரின்

★ கட்டுப்பாடற்ற நாக்கு தனக்குத் தானே துன்பத்தை விளைவித்துக் கொள்வதாகும்; அது நூற்றுக்கணக்கான தவறுகளையும் துன்பங் களையும் கொண்டு வருவதாகும்.
நவோய்

★ நாக்கு என்பது ஒரு எரிபொருளைப் போன்றது; சொற்களோ தீப்பொறி போன்றவை. பேசுபவனே, எச்சரிக்கையுடனிரு!
பெண்டி கபியேவ்

## பொறாமையும் பேராசையும்

★ நேர்மையான ஒருவன் எவர் ஒருவரையும் கண்டு பொறாமைப் படுவதில்லை.
மாக்சிம் கோர்கி

★ பொதுவாகவே, மக்கள் தாங்கள் பெற்றிருப்பவற்றில் மிகக் குறைந்த மகிழ்ச்சி அடைபவர்களாகவும், அவர்கள் பெற்றிரா தவைக்காகப் புலம்புபவர்களாகவும் உள்ளனர்.

விசாரியோன் பெலின்ஸ்கி

★ பொறாமை என்பது ஒரு பெருங்கேடு. உனது அண்டை வீட்டுக் காரனின் வெற்றியைக் கண்டு பொறமைப்படாமல், மகிழ்ச்சி யடைந்து கொண்டாடு. ஆனால் அவ்வாறு நீ மகிழ்ந்து கொண் டாடும்போதே, அவனைக் கடந்து வெற்றி பெறப் பாடுபடு.

வாசிலி சுகோம்ல்ன்ஸ்கி

★ தன்னலம் என்பது ஒரு மாபெரும் கேடாகும். தன்னலம் படைத்த வர்கள், உண்மை நிறைந்தவர்களாகவோ, நேர்மை கொண்டவர் களாகவோ, வீரம் பெற்றவர்களாக்வோ, அவர்களது கடமைக்கும் உண்மையாக இருப்பவர்களாகவோ இருப்பதில்லை. குழந்தைப் பருவம் முதல் தன்னலமற்று வாழக் கற்றறிந்து கொள்.

வாசிலி சுகோம்ல்ன்ஸ்கி

★ நீ போற்றிப் பாதுகாக்க வேண்டியது என்னவென்றால் 'என்னுடையது' என்பதல்லாமல் 'நமது' என்பதாகவே இருக்க வேண்டும். அதாவது, அனைவரின் இன்பத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சமூகத்தினால் உருவாக்கப்பட்ட, அனைத்துச் சமூகத்திற்கும் சொந்த மான மதிப்பு வாய்ந்தவையேயாம்.

வாசிலி சுகோம்ல்ன்ஸ்கி

★ திறமையின்மை என்பது பெருந்தன்மை என்பதை ஏற்றுக் கொள்ளாது. வி.வி. வொரோவ்ஸ்கி

★ பொறாமையின் கொட்டு நஞ்சு நிறைந்தது என்பதால், பொறாமை படைத்தவர்களிடமிருந்து விலகியே இரு. மக்தும் குலி

★ பெருஞ்செல்வத்துக்குப் பேராசைப்படுபவன், தனது பேராசை யினால் தன்னைத் தானே சிறுமைப்படுத்திக் கொள்வதால், அறி வற்றவனே ஆவான். சோட்-ஆகுஸ்ட்-ஏவேலி

★ பணம் உனக்குத் தேவைப்படாமல் இருக்கச் செய்வதற்கான எளிய வழி என்னவென்றால், உனது தேவைக்கு மேல் நீ ஈட்டாமல் இருப்பதுவும், உன்னால் ஈட்ட இயன்றதற்குக் குறைவாக நீ செலவழிப்பது என்பதுமேயாகும். வி.ஏ.குளுசேவ்ஸ்கி

## போலித்தனம், அடிமைத்தனம், காலத்திற்கேற்ப மாறுதல்

★ போலித்தனம், அடிமைத்தனம், காலத்திற்கேற்ப மாறுதல் என்பவை ஒரு பெரிய கேடாகும். பல முகங்களில் இவை படிந்திருப்பதைக் கண்டு கொண்டு, அவற்றைப் பொறுத்துக் கொள்ளாதவனாவும், ஏற்றுக் கொள்ளாதவனாகவும் இருக்க கற்றறிந்து கொள்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ ஒரு தனி மனிதரைப் பற்றி, செயலைப் பற்றி அல்லது நிகழ்வு பற்றி உன் மனத்தில் உள்ளதை வெளிப்படையாகப் பேசு. நீ என்ன சொல்ல வேண்டுமென வேறொருவர் எதிர்பார்க்கிறார் என்பதை ஊகித்தறிய எப்போதுமே முயலாதே. ஏனெனில், அது உன்னை போலியாகவும், பின்பு அண்டிப் பிழைப்பவனாகவும் அதுவும் முடிவில் ஒரு போக்கிலியாகவும் மாற்றிவிடும் என்பதால்தான்.

வாசிலி சுகோம்லின்ஸ்கி

★ உனது தோல்விகளையும், தவறுகளையும் மட்டுமே காண்பவர்களைத் தவிர்த்துவிட்டு, ஒன்று அவர்களை மன்னிக்கவோ ஏற்றுக்கொள்ளவோ செய். அத்தகைய மக்கள் ஒன்று பொய்யாகப் புகழ்ந்துரைப்பவர்களாகவோ கோழைகளாகவோ பொதுவாக முட்டாள்களாகவோ இருப்பவர்கள் ஆவர். துன்பத்திலோ வருத்தத்திலோ அவர்களிடமிருந்து எந்த உதவியையும் எதிர் பார்க்காதே. ஜி.எஸ்.ஸ்கோவோரோடா

★ வஞ்சகப் புகழ்ச்சியென்பது கீழ்படிதல் என்ற போர்வையில் ஆட்சி செய்யப் பயன்படுத்தப்படுவதாகும். நிகலாய் செர்னிசேவ்ஸ்கி

★ இழிவான வஞ்சப்புகழ்ச்சியாளராகவோ, போலியான வேடதாரியாகவோ இருப்பதைவிட வெளிப்படையான எதிரியாக இருப்பது சிறந்தது; முன்னவர்கள் மனித இனத்திற்கே களங்கத்தை விளைவிப்பவர். பீட்டர்

★ பொய்யாகப் புகழ்தலென்பது எவ்வளவு தவறானது, கேடானதென எத்துணை முறை இவ் உலகிற்குச் சொல்லப்பட்டும், என்ன பயன்! இவ்வாறு புகழ்ந்துரைப்பவன் தன் நெஞ்சில் எப்போதுமே ஒரு நோக்கத்தைக் கொண்டிருப்பான். இவான் கிரிலோம்

★ அண்டிப்பிழைப்பவர்கள் என்ற ஒரு தனிப்பட்ட உயிரினம் உருவாகியுள்ளது; பொய்யுரைத்தல், கட்டுப்பாடுகளை மீறுதல் ஆகிய நோக்கங்களை அது பெற்றுள்ளது.
எம்.இ.சால்டிகோவ் செசட்ரின்

★ ★ ★